உ




# மஹா கும்பாபிஷேக
# சிறப்பு மலர்

04.04.2004

## நூல்

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | சுழிபுரம் பறாளாய்<br>ஸ்ரீ சிவசுப்பிரமணியசுவாமி திருக்கோவில்<br>மஹா கும்பாபிஷேக மலர் - 04.04.2004 |
| தொகுப்பாசிரியர் | : | சுழிபுரம் பிரம்மஸ்ரீ பால.கோபாலகிருஷ்ணசர்மா<br>- ஜேர்மனி - |
| பக்கங்கள் | : | (i - iii) (1 - 92) |
| அச்சிட்டோர் | : | வாக்மி அச்சகம், 258/3, டாம் வீதி, கொழும்பு-12<br>தொ.பே. 011-2421987 |
| அட்டைப்படம் | : | பிரம்மஸ்ரீ.வே.சிவசுப்பிரமணியக் குருக்கள்<br>பரம்பரை ஆலய அர்ச்சகர், பிரபல ஓவியர் |

சுழிபுரம் - பறாளாய்

# ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி திருக்கோவில்

## மகாகும்பாபிஷேக சிறப்புமலர்



உ

குகமயம்

சுழிபுரம்

பறாளாய்

ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி திருக்கோயில்
மகா கும்பாபிஷேக விழா மலர்

# சமர்ப்பணம்

எமது ஆலய வளர்ச்சியில் மனப்பூர்வமாக பக்தி சிரத்தையுடன் பாடுபட்டுவரும் அனைவருக்கும் நல் அருள் கிடைக்க வேண்டி பறாளாய் புரியுறை ஸ்ரீ வள்ளி தேவசேனா சமேத ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி பெருமான் திருக்கமல பொற் பாதங்களில் இம் மலரை சமர்ப்பிக்கின்றோம்.

ஸ்ரீ சிவசுப்பிரமணிய தேவஸ்தானம்

பறாளாய்

சுழிபுரம்

10.06.2004

# பதிப்புரை



எமது பரம்பரை குலதெய்வமான பறாளைபுரியுறை வள்ளிதேவசேனா சமேத ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி பெருமானது மஹா கும்பாபிஷேகம் கண்டு இன்புற்ற பல்லாயிரம் அடியார்களில் யானும் ஒருவன். நாட்டின் சமாதான நிலைமையில் ஆரம்பிக்கப்பட்ட இவ்வாலய திருப்பணி வேலைகள் நிறைவேறும் சமயத்தில் சிறிய சலசலப்பு ஏற்படும் அறிகுறிகள் ஆங்காங்கே தோன்றியிருந்தாலும் கலியுகவரதன் கந்தன் அருளினால் யாதொருதீங்குமின்றி குறித்த தேதியில் குறித்த சுபமுகூர்த்த வேளையில் இக் கும்பாபிஷேக புனித கைங்கரியம் சிறப்பாக நிறைவுபெற்றது. இந்த கும்பாபிஷேக நிகழ்வினை முன்னிட்டு ஓர் அழகிய மலர் வெளியிட வேண்டுமென பல அன்பர்கள் விரும்பியமையினால் பலருக்கும் பயன்தரத்தக்க வகையில் இம்மலர் வெளியிடப்படுகின்றது. இம்மலர் வெளியிட ஏற்பாடுகளை மேற்கொண்ட வேளையில் அதற்கான கட்டுரைகளை எழுதி அனுப்பிவைத்த பெருமதிப்புக்குரிய "பிரதிஷ்டா சிரோண்மணி", "வியாகரண சிரோண்மணி" பிரம்மஸ்ரீ பூரண.தியாகராஜக்குருக்கள் B.A அவர்களுக்கு யான் என்றென்றும் நன்றிக்கடன் பட்டிருக்கின்றேன். எமக்கு பல ஆலோசனைகளை அவர் வழங்கியிருந்தார். அத்துடன் இம்மலரின் அட்டையினை அலங்கரிக்கும் வர்ண ஓவியத்தினை எனது வேண்டுகோளுக்கிணங்க மிகக் குறுகிய காலத்தில் மிகச் சிறப்பாக வரைந்து கொடுத்த எம் மதிப்பிற்குரிய பிரம்மஸ்ரீ வே.சிவசுப்பிரமணியக் குருக்கள் அவர்களுக்கு நன்றியறிதலை கூறக் கடமைப்பட்டுள்ளேன். அவர் தந்த அறிவுரைகள், ஆலோசனைகள் இம் மலர் சிறப்பாக வெளிவர உதவியுள்ளது. இம்மலருக்கான ஆசிச் செய்தியினை தந்த கும்பாபிஷேகக் குரு "பிரதிஷ்டா சிரோண்மணி" நவாலியூர் சாமி விஸ்வநாதக் குருக்கள் மற்றும் மஹோற்சவ குரு, அரியாலை சு.முரளிதரக்குருக்கள் மற்றும் தமிழகம் காஞ்சி ஸ்ரீ சங்கரமடத்தினது ஆதீன முதல்வர் அனைவருக்கும் எம் நன்றிகள் உரித்தாகுக. இம்மலரில் வெளிவரும் ஆக்கங்கள், கட்டுரைகள் அனைத்தும் எவ்வித மாற்றங்களுமின்றி எமக்குக் கிடைத்தபடியே வெளிவருகின்றன. "அயலகத்திலிருந்து" என்ற தலைப்பில் வெளிவரும் கட்டுரைகளை பல நூல்களிலிருந்து தொகுத்து வழங்கியுள்ளோம். அவற்றின் "மூலம்" கட்டுரையின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது. சில கட்டுரைகளை திருவாவடுதுறை ஆதீனம் கொடுத்து உதவியுள்ளது. அவர்களுக்கு எம் நன்றிகள் உரித்தாகுக. இம்மலரின் அச்சுப்பதிவை சரிபிழை பார்த்து கொடுத்து உதவிய ந.ஷண்முகநாதசர்மாவுக்கும் அழகாக அச்சிட்டுக் கொடுத்த வாக்மி அச்சக உரிமையாளர்கள், பணியாளர்களுக்கும் மலரில் வெளியிட பழைய படங்களைக் கொடுத்து உதவிய பரம்மபரை அர்ச்சகர் மதிப்புக்குரிய பிரம்மஸ்ரீ ந.இராமச்சந்திர சர்மா அவர்களுக்கும் எம் நன்றிகள். சகல விதத்திலும் ஒத்துளைத்த சகோதரர் பா.ஜெகந்நாதசர்மா, அன்பு மைத்துனர் சண்முகநாதசர்மா இருவருக்கும் எனது மனப்பூர்வமான நன்றிகள். இம்மலர் எனது சிறு முயற்சியின் விளைவே, பல குற்றம் குறைகள் இருக்கக்கூடும். வாசிப்பவர்கள் குற்றம் பொறுத்து எம்மை வாழ்த்த வேண்டுகின்றேன்.

- நன்றி -

**பா.கோபாலகிருஷ்ணசர்மா**
"தேவஸ்தானம்"

சிவமயம்

Kriyakalapa Mukthamani, Sivagamasiromani, Prathisdaratnam, Kriya Pooshanam, Vethagama Kiriya Soodamani, Prathisda Kalanithi, Jothidakala Pooshanam, Prathisda Siromani, Vaitheeka Vidyasagaram, Saiva Siththantha, Prathisda Chakkaravarthi

**SIVA SRI S. KUNCHITHAPATHA KURUKKAL**

CHIEF PRIEST

**SRI PONNAMBALAWANESWARAR THEVASTHANAM**

38, Sri Ramanathan Street, Colombo 01300, Sri Lanka.

கிரியாகலாபமுக்தாமணி, சிவாகம சிரோமணி, பிரதிஷ்டாரத்தினம், கிரியா பூஷணம், வேதாகம கிரியா சூடாமணி, பிரதிஷ்டாகலாநிதி, ஜோதிடகலாபூஷணம், பிரதிஷ்டாசிரோமணி, வைதிகவித்தியா சாகரம், சைவசித்தாந்தப் பிரதிஷ்டா சக்கரவர்த்தி

**சிவஸ்ரீ சி. குஞ்சிதபாதக் குருக்கள்**
*பிரதம சிவாச்சார்யர்*
ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் தேவஸ்தானம்

38, ஸ்ரீ இராமநாதன் வீதி,
கொழும்பு 01300
இலங்கை.
தொலைபேசி : +94(011) 2436328
E-mail : dasan@mailcity.com
skkuru@sltnet.lk

# முருகன்

முருகன் கலியுகவரதன்.எங்கும் நிறைந்தவன். அன்பினால் தன்னைவழிபடும் அடியார்கள் மனதில் குடிகொள்பவன். குறிஞ்சிநிலக்கடவுளாக நூல்கள் வர்ணிக்கின்றன. தேவர்கள் துன்பம் தீர்க்க சிவபிரானிடமிருந்து தோற்றப்பட்டுக் கார்த்திகைப் பெண்களால் வார்க்கப்பட்டவன். சிவனிடமிருந்து ஏகாதசருத்திரர்களை அஸ்திரங்களாகவும், உமாதேவியாரிடமிருந்து வேலையும் பெற்றுத் தேவர்களைக் காப்பதற்கு சூரபத்மாவை சங்கரிக்க அவன் இரு கூறாக, அவனின் ஆணவத்தை அடக்கி, ஒரு கூறை சேவற்கொடியாகவும், மற்றைய கூறை வாகனமாகவும் கொண்டவன். பிரமனின் செருக்கையடக்கிச் சிறைவைத்தான். தானும் பரப்பிரமம் என்பதைக்காட்ட சிவனுக்கு பாலகுருசாமியாக உபதேசம் செய்தவன்.

முருகன் வதியும் இடங்கள் பலவானாலும் அவற்றுள் சுழிபுரம் பறாளாய்பதியும் ஒன்று. சென்ற 04.04.2004இல் இம் முருகனுக்கு கும்பாபிஷேகம் நடைபெற்றது. கொழும்பு பொன்னம்பலவாணேஸ்வரர் கோயிலில் முன்பு ஸ்தானிகராய் இருந்த பிரம்மஸ்ரீ வேதாரணியேஸ்வரக் குருக்கள் அவர்களின் புத்திரர்கள் வழி நடத்த பிரம்மஸ்ரீ நவாலி விஸ்வநாதக் குருக்கள் தலைமையில் மகாகும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது. நித்திய, நைவேத்தியங்களில் மிகவும் ஈடுபாடு கொண்டவர் பிரம்மஸ்ரீ பாலகுருசாமி சர்மா, கோபாலகிருஷ்ண சர்மா என்பவர்கள். பொதுவாக சுழிபுரம் பிராமணோத்தமர்கள், வெளிநாடுகளில் தொழில் புரிபவர்களும் கூட இக் கும்பாபிஷேக கைங்காரியத்திலீடுபட்டமை சிறப்பான அம்சமாகும். இக்கும்பாபிஷேக வைபவத்தைத் தொடர்ந்து சிறப்பு மலர் வெளியிட வேண்டுமென்று முருகன்அருளால் உன்னியவர் பிரம்மஸ்ரீ பாலகுருசாமிசர்மா, கோபலகிருஷ்ணசர்மா ஆகியோராவர். இவர்கள் பறாளாய் முருகனின் பேரன்பு மிக்கவர்கள்.

"பறாளாய் முருகன் அபயகாத்தால் அஞ்சல்மின் அஞ்சல்மின்
என்றும் வாதகாத்தால் காத்துக் கொள்வேன் காத்துக்கொள்வேன்" என்று கூறுகிறார்.

எமக்கு இனிமேல் கவலையில்லை, எந்த இடரிலும் பறாளாய் முருகன் காப்பாற்றுவான் என்ற நம்பிக்கையுடன் வழிபடுவோம்.

முருக தொண்டின் சீரடியார் நன்குவாழ்வார்கள், நாமும் தொழுது முருகன் அருளுடன் வாழ்வோம். பாலகுருசாமி சர்மா முதலிய சகல பிராமணோத்தமர்களும் வாழ முருகன் அருள்வார்.

வாழ்க ஏனைய முருகன் அடியார்கள்.

தீயவை புரிந்தாரேனும் குமரவேற் திருமுன்னுற்றால்
தூயவராகி மேலைத்தொல்கதியடைவர் என்னக்
ஆயவும் வேண்டும் கொல்லோ அடுசமர் இந்நாட் செய்த
மாயையின் மகனுமன்றோ வரம்பிலா அருள் பெற்றுய்ந்தான்.

சக்தி வேல் சரணம்!

சுழிபுரம் - பறாளாய்

## ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி திருக்கோவில்

## மகாகும்பாபிஷேக சிறப்புமலர்



# ஆசிச் செய்திகள்

## பறாளை அருள்மிகு
## ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்
## பரம்பரை அர்ச்சகர்களில் ஒருவராகிய
# பிரம்மஸ்ரீ. மு. பாலகுருசாமிசர்மா
## அவர்களின் ஆசியுரை



அகில அண்டங்களையும் இரட்சித்து சகல ஜீவராகிசளுக்கும் அருள் புரிந்து ஆட்கொள்ளும் சிவன், தான் வழங்கிய வரங்களினால் பலமுற்ற அரக்கர்கள் தம்மிலும் பலவீனமான தேவர்களை அடக்கி, பயமுறுத்தி, துவசம் செய்தவனைக் கண்டு அத்தேவர்களினதும், முனிவர்களினதும் இடைவிடாத பிரார்த்தனைகளின் பயனாக அத்தேவர்களைக் காக்கும் பொருட்டு முருகப் பெருமானை தோற்றுவித்தார். இவ்வாறு பின்பு தோன்றிய முருகப் பெருமான் பரமசிவனுக்குரிய ஸ்த்யோஜாதம், வாமதேவம், தத்புருஷம், ஈசானம், அகோரம் என வெளிப்படத் தெரியும் ஐந்து முகங்களோடு பரமஞானிகளின் உள்நோக்குக்கு மாத்திரமே புலப் படும் உள்முகமாக ஆறாவது திரு வதனம் அதே முகம் என்ற ஆறு முகங்களோடு தோற்றம் பெற்றார். இவ்வாறு பரம சிவனின் ஆறுமுகங் களிலுமுள்ள திருக்கோலம் தாங்கிய பெருமான் தோன்றும் போது சிவனின் நெற்றிக் கண்ணிலிருந்து அருட்பெருஞ்சோதி பொறியாக ஒவ்வொன்றும் தோன்ற அப்பொறிகள் அளவுகடந்த வெப்பத்துடன் அண்டமெல்லாம் பரவியது எனவும் அவ்வெப்பத்தை தாங்காது ஜீவராசிகள் கவலையுற்று, நடுக்கமுற ''இறைவன் பெருங்கருணையினால் அப்பொறிகள் எவரையும் நாசம் செய்யாது எல்லோரும் பரமசிவனை வணங்கி வழிபடுங்கள்" என தேவர்களிடம் முனிவர்கள் கூற அவர்களும் வணங்கி வழிபட்டனர். இறைவனும் வாயுதேவன், அக்கினி தேவன் இருவரையும் அழைத்து ''இந்த அக்கினிப் பொறிகளை கொண்டுபோய் கங்கையில் விடுங்கள் கங்கை அவற்றை சரவணப் பொய்கையில் கொண்டு சேர்க்கும்" என அருளினார். அவ்வாறு சரவணப் பொய்கையிலிருந்து தோன்றியவர் தான்முருகப் பெருமான். கருணைவெள்ளம் பொழியும் ஆறு திருமுகங்களும், பன்னிரு திருக்கரங்களும் கொண்டு உலகமெல்லாம் உய்யும் வண்ணம் தோன்றினார் முருகக்கடவுள். வேறு யாருக்கும் இல்லாத ஆறு அருட்குணங் களையுடைய சிவமூர்த்தமே ஆறுதிரு முகங்களாக வந்தன என்று கூறும்படி எம்பெருமான் முருகன் ஆறுமுகங்களைக் கொண்டு தோன்றினார். ஆறு அருட் குணங்களாவன சருவஞ்ஞதை, திருப்தி, அநாதிபோதம், அநந்தசக்தி, அலுப்பசக்தி, சுவந்திரத்வம் (தமிழில் முற்றறிவு, வரம்பில் இன்பமுடைமை, பாசாங்குகள் நீங்குதல், முடிவில் ஆற்றலுடைமை, பேரருள் உடைமை, தம்வயமுடைமை என்பதாம்) முருகனின் அவதாரதத்துவத்தை நோக்கினால் உலகத்தின் நன்மைகளைக் கடவுள் பஞ்சபூதங் களின் படிப்படியாக வெளி, காற்று, கனல், புனல், மண் இவற்றின் வழியே தோற்றம் பெறுகிறார் என்பது முருகன் அவதாரதத்துவம். இறைவன் நெற்றிக்கண்ணிலிருந்து புறப்பட்ட பேரொளிச்சுடர் வானத்திலே நின்று காற்றின் கைபுகுந்து தீயை சென்றடைந்து அங்கிருந்து கங்கையாகிய நீரில் தவழ்ந்து நிலத்தில் எய்தியது. முருகனுக்கும் தமிழுக்கும் நெருங்கிய தொடர்புண்டு தமிழ் மொழியில் உயிர் எழுத்துக்கள் பன்னிரண்டு ஆறுமுகனின் தோள்கள் பன்னிரண்டு, முருகனின் திருமுகங்கள் ஒவ்வொன்றிலும் மூன்று கண்களாக மொத்தம் பதினெட்டு நயனங்கள். தமிழில் மெய்யெழுத்து பதினெட்டு இறை அவதாரங்களில் சிவன் பார்வதி, விநாயகர், முருகன் யாவரும் முக்கண் பெற்றவர்கள் இதனை ''ஷட்வக்த்ரம் த்வாதச புஜம் அஷ்டாதச விலோசனம் ரூபம் அங்கீக்ருதம் சுபம் லோகாநாம்'' என்ற வடமொழி ஸ்காந்தத்திலிருந்து அறியலாம். முருகனின் முகங்கள் ஆறு. தமிழில் இன எழுத்துக்கள் ஆறு. வல்லினம், மெல்லினம்

இடையினம் என்றவை மூன்றும் ஆறு எழுத்துக்களைக் கொண்டுள்ளது. குறிப்பிட த்தக்கது. மு - ரு - க என்ற எழுத்துக்களில் ஒவ்வொன்றும் மெய்யெழுத்தில் ஒவ்வொரு எழுத்துக்களை கொண்டிருப்பதை உணரலாம். கந்தன் கரத்தில் உள்ள வேல் வேறு எந்த தெய்வத்திற்கும் இல்லாத சிறப்புடைய ஆயுதம். வேல் என்ற தமிழருக்கு பெயரிருப்பது மரபு. வேறு எந்த ஆயுதங்களின் திருநாமங்களை மக்களுக்கு இடுவதில்லை. வேறு எந்த மொழியிலும் இல்லாத ஆயுத எழுத்து தமிழ் மொழியில் தான் உண்டு. ஆயுத எழுத்தான ∴. இச்சை, கிரியை, ஞானம் என்ற மூன்று சக்திகளும் மூன்று புள்ளிகளாக சேர்ந்தது. இதுவே வேலின் உருவினை ஒத்ததாக கருதப்படுகின்றது. எனவே முருகன் தமிழ்க்கடவுளாகப் போற்றப்படுவதில் வியப்பில்லை. இவ்வாறு தமிழர்களினால் வழங்கப்பட்ட முருகனுக்கு இந்தியாவின் தமிழ்நாட்டில் ''அறுபடைவீடு'' எனப்படும் புகழ்பெற்ற ஆறு திருத்தலங்கள் உண்டு. இதில் சிறப்புப்பெற்ற திருச்செந்தூர் முருகன் கோவிலில் கந்தசஷ்டி விரத வழிபாடு சிறப்புப் பெற்றது. தேவராயசுவாமிகளினால் இவ் ஆலயத்தின் மேல் பாடப்பட்ட ''கந்தசஷ்டிகவசம்'' பல அடியாா களினாலும் பாடி பரவி சிறப்பிக்கப்படுகின்றது. இதேபோல கந்தசஷ்டியானது இலங்கையிலும் பல முருகன் ஆலயங்களில் பிரதான திருவிழாவாக நடைபெறுகின்றது. இதில் குறிப்பிடக்கூடிய ஆலயமாக எமது பறாளாய் முருகன் ஆலயமும் ஒன்றாகும். பலநூறு ஆண்டுகளுக்கு முன் கடம்பமரநிழலில் சிறிய மடாலயத்தில் வேல் வைத்து வணங்கப்பட்டு படிப்படியாக வளர்ச்சியடைந்து 1796ல் சேதுகாவல முதலியாரும், முத்தம்பலவாண முதலியாரும் தற்போதைய ஆலயத்தை முருகைக்கற்களால் அமைத்து மயூராரூடராக வள்ளி தேவசேனா சமேதரான தற்போதைய விக்கிரகத்தை அமைத்து சிவஸ்ரீ வேதக்குட்டிக்குருக்கள் தலைமையில் கும்பாபிஷேகம் நடாத்தி அவ்வாண்டிலிருந்து வைகாசி மாதம் தோறும் மகோற்சவமும் நடைபெறலாயிற்று. இவ்வாறு தோற்றம் பெற்ற இத்திருக்கோவில் ஆலய அர்ச்சகர்களினதும் முருகன் அடியார்களினதும் விடாமுயற்சியினால் படிப்படியாக வளர்ச்சியடைந்து தற்போது ஆலயதர்மகர்த்தா சபையினரது முயற்சியினால் பல அடியார்களிடமும் வசூலிக்கப்பட்ட பெருந்நிதியினைக் கொண்டு மகாகும்பாபிஷேகம் கடந்த சுபானு வருட பங்குனி மாத உத்தர நட்சத்திரத்தன்று 04.04.2004 ஞாயிற்றுக்கிழமை நவாலியூர் ''பிரதிஷ்டா சிரோண்மணி'' சாமி விஸ்வநாதக்குருக்கள் தலைமையில் சிறப்பாக நிறைவுற்றது. இக்கும்பாபிஷேக விழாவினை முன்னிட்டு பிரம்மஸ்ரீ.பா.கோபாலகிருஷ்ண சர்மாவினால் தொகுக்கப்பட்ட ''கும்பாபிஷேக மலர்'' வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகின்றேன். இம்மலர் பல அரிய கட்டுரைகளைத் தாங்கி வருகிறது. இம்மலர் வெளியிட உறுதுணையாக இருந்த அனைவருக்கும் ஸ்ரீ ஷண்முகப் பெருமான் அருள்புரிந்து காக்க எல்லாம் வல்ல பறாளைபுரியுறை ஸ்ரீ சுப்பிரமணியப் பெருமான் பாதாரவிந்தம் தொழுது பிரார்த்திக்கின்றேன்.

சுபம்!

**மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு**
**தானஞ்செய் வாரின் தலை.**

ஒருவன் தன் உள்ளத்தோடு பொருந்த உண்மையைச் சொல்வானானால், அவன் தவமும் தானமும் ஒருங்கே செய்பவரைவிடச் சிறந்தவனாவான்.

# ஆலயத்தின் மூத்த அர்ச்சகர்களில் ஒருவரான
# பிரம்மஸ்ரீ.வே.சிவசுப்பிரமணியக்குருக்கள் தரும்
# ஆசிச்செய்தி



மூர்த்தி, தலம், தீர்த்தம் போன்ற பெருமைகளை உடையது நம் பறாளைத் தலம். இங்கு மூர்த்தியாக வீற்றிருக்கும் மயூராரூட சுப்பிரமணியர் பல நூற்றாண்டுக்காலம் பழமை வாய்ந்த அற்புத மூர்த்தியாகும். இங்கு அர்ச்சகராகக் கடமையாற்றிய அந்தணவுத்தமர்களினால் பிரதிஷ்டை செய்யப்பெற்ற இம்மூர்த்தி அழகிலும் அம்சத்திலும் சிறப்பு வாய்ந்தது. வேண்டுவோர் வேண்டும் வரங்களை வழங்கி அவர்தம் முற்பிறவிப் பாவங்களை நீக்கி இம்மையிலும் மறுமையிலும் பேரானந்தப் பெருவாழ்வு வாழ அருள்புரிவார். அதே போல இத்தலமானது சில முருகபக்தர்களினால் சிறிய மண்டபத்தில் கடம்ப மர நிழலிலே வேல் வைத்து வணங்கி வழிபட்டு வந்ததாகவும் அதுவே பின்னர் சேதுகாவலமுதலியார் பரம்பரையினரால் ஆலயமாக நிர்மாணிக்கப்பட்டு பின் படிப்படியாகத் தற்கால ஆலயம் உருவானதாகவும் அறியக்கூடியதாக இருக்கின்றது. ஆலயத்தின் தல விருட்சமாக வெள்ளரச மரமும் வேம்பும் இணைந்து சிவசக்தி சொரூபமாக காட்சிதருவதும் இதன் வயது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதாக இருக்கும் என தொல்பொருள் ஆராச்சியாளர்கள் தெரிவித்திருப்பதிலிருந்து நாம் ஆலயத்தின் மகிமையினை அறிந்து கொள்ளலாம். ஆலயத்தின் தீர்த்தமாக ஆலயத்தின் மேற்குப் புறத்தே சில மைல் தூரத்தில் அமைந்துள்ள இராமர் பாதம் பதிந்தமையினால் "திருவடிநிலை" எனப் பெயர் பெற்ற சமுத்திரக்கரை அமைந்துள்ளது. ஆலய மகோற்சவ காலத்திலும், சிவராத்திரி, ஆடிஅமாவாசை போன்ற விசேட தினங்களிலும் முருகப் பெருமான் இங்கு எழுந்தருளி தீர்த்த சங்கிராந்தி விழா சிறப்பாக நடைபெறும். இதனை விட ஆலயத்தின் வடக்கு வீதியில் ஒரு அழகிய தாமரைக்குளம் பிரமாண்டமான அளவில் அமைந்துள்ளது. இப்படி பல சிறப்புக்களையும் தன்னகத்தே கொண்ட இவ் அலயத்தின் மகா கும்பாபிஷேக பெருஞ்சாந்தி விழா கடந்த 04.04.2004 ஞாயிற்றுக்கிழமை பங்குனி உத்தர தினத்தன்று எனது மதிப்பிற்குரிய மைத்துனர் நவாலியூர் சாமி விஸ்வநாதக் குருக்கள் தலைமையில் மிகவும் சிறப்பாக நடந்தேறியது. இவ்விழாவினை முன்னிட்டு ஒரு கும்பாபிஷேக மலர் வெளிவருவதையிட்டு அகம் மிக மகிழ்கிறேன். இம் மலருக்கான அட்டைப்படத்தினை வரைந்து தருமாறு இம்மலரைக் கொடுத்து அன்புக்குரிய பா.கோபாலகிருஷ்ணசர்மா அவர்கள் வேண்டிக் கொண்டதன் பேரிலும் அதனை செய்ய வேண்டிய உரிமை இருப்பதாலும் அப்படத்தினை வரைந்து கொடுத்துள்ளேன். இம்மலரை வெளியிடுவதற்கு பெரும் முயற்சிகளை மேற்கொண்ட அனைவருக்கும் முருக பெருமானின் திருவருள் கிடைக்க வேண்டி பிரார்த்திக்கின்றேன். முருகன் அடியார்கள் அனைவரும் இம்மலரை பெற்று பயனடைவீர்களாக.

சுபம்!

*பறாளாய் ஸ்ரீ சிவசுப்பிரமணிய தேவஸ்தான புனராவர்த்தன மகாகும்பாபிஷேக மலருக்கு*

*ஆசிச்செய்தி*

**பிரதிஷ்டா சிரோன்மணி**

## பிரம்மஸ்ரீ சாமி விஸ்வநாதக்குருக்கள்

*நவாலியூர்.*



கலியுகத் தெய்வமாகிய பறாளாய் பதியில் அமர்ந்து பக்த கோடிகளுக்கு அனுக்கிரகம் புரிந்துவரும் ஸ்ரீ வள்ளி தேவசேனா சமேத சிவசுப்பிரமணியப் பெரு மானுக்கு (04.04.2004) பங்குனித் திங்கள் சுபானு வருஷம் 22ம் திகதி பங்குனி மாதம் நடைபெற்ற ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகத்தினை அரும்பெரும் நிகழ்ச்சியாக பக்தப் பெருமக்கள் மனம் குளிர பக்திப் பரவசத்துடன் நிகழ்ந்த மகாகும் பாபிஷேகப் பெருஞ்சாந்தி விழா "அவன் அருளாளே அவன்தாள் வணங்கி" அருள்பெறும் அதி உன்னத மகா சாந்தி விழாவாகவும் மகாகும்பாபிஷேகப் பெரும் சாந்தி விழாவும் சிறப்புடன் நிகழ்ந்த அற்புத காட்சியாக அமைந்தது. எனவே இந்த அற்புத காட்சியையும் பஞ்சதள ராஜ கோபுரத்தின் அமைப்பு சிற்ப கலாநிதி பாலகுமாரசர்மாவின் கைவண்ணம் ஜொலிக்கும் அற்புத இராஜகோபுர காட்சியையும் கும்பாபிஷேக யாகசாலையின் அமைப்பும் ஆலய புனருத்தாரண வேலை சிறந்து விளங்கும் அழகிய சிறபக்கலை வண்ணம் கொண்டு பக்தர்கள் ஈர்க்கும் சக்தி கொண்ட இராஜகோபுர அமைப்பும் ஆலய ஸ்தூபிகள் இராஜகோபுர அமைப்பும் மக்களுக்கு தெய்வீக தத்துவத்தை உணர்த்தும் நிலையை எமது வார்த்தையால் கூற முடியாது. எனவே சித்திர வேலைகளை அவன் அருளாலே அவன்தாள் வணங்கி என்ற உன்னதமான திருவருள் சக்தியை கண்டு மன எழச்சியை ஊட்டுவதாக இருப்பதும் முருகப் பெருமானின் திருக்கருணையை வெளிப் பட்டு இருப்பதை எம்மால் போற்ற தகுதியான நிலையை வெளிப்படுத்துவதையும் எமது கண்களினால் பார்க்க கிடைத்தது நாம் செய்த தவம் என்றே கூறக்கூடிய நிலையை முருகப் பெருமானின் காட்சி அமைகிறது. எனவே இந்த கும்பாபிஷேகத்தை முன்னிட்டு மலர இருக்கும் சிறப்பு மலர் பிரம்மஸ்ரீ பா.கோபாலகிருஷ்ணசர்மா அவர்களின் விடாமுயற் சியால் அமைக்கப்பெற்ற கும்பாபிஷேக மலர் அதி சிறப்பு வாய்ந்ததாக அமையவேண்டி எமது பிரார்த்தனையும் ஆசியும் அன்புடன் முருகப் பெருமானின் திருப்பாதங்களில் ஆசியுடன் சமர்ப்பிக்கின்றோம்.

"வாழ்க சைவம் வளர்க இறைதொண்டு"

## பிரம்மஸ்ரீ சு. முரளீதரக் குருக்களின்

# ஆசியுரை

ஒரு ஊரின் சிறப்பையும் மக்களின் வாழ்க்கையையும் பிரதிபலிப்பவற்றில் அவ்வூரில் அமைந்துள்ள வழிபாட்டுத்தலங்கள் முக்கிய இடம் வகிக்கின்றன. யாழ்ப்பாணத்து மக்களின் சமய, கலை கலாச்சார பாரம்பரியங்களை எடுத்தியம்புவனவாக அமைந்துள்ளன. அவ்வகையில் சுமார் பல வருடங்களுக்கு மேலாக பறாளாய் முருகன் கோயில் (இந்தியாவில் இருந்து சங்கமித்தை இலங்கைக்கு வருவதற்கு முன்பாக) கட்டப்பட்டது. சக்தியும் சிவமுமாகிய தன்மையே இவ்வுலகமெலாம் என்று சைவசித்தாந்தம் உண்மையைக் கூறி வைக்கிறது. கடவுள் உண்மைப் பொருள் என்றும் உண்மைக்காகவே இருக்கும் என்றும் அதற்கு அழிவு நேருவதில்லை உலகம் தோன்றி நின்று மறையும் தன்மையது என்றும் நிச்சயப் பொருளாகிய இறைவன் சக்தி பின் மனிதனாக காணப்படுகின்றான். அதனால் தான் மக்கள் பலபல கோயில்களைக் கட்டி வணங்குகிறார்கள். "திருக்கோயில் இல்லாத திருவிலூரும் அடவிகாடே" என்று திருமுறை கூறுகின்றது. இதனால் போலும் "கோயில் இல்லா ஊரில் குடி இருக்க வேண்டாம்" என்று பெரியோர்கள் கூறியுள்ளார்கள். நாம் நித்தமும் சென்று வழிபடும் இடம்புனிதமாகவும் அழகாகவும் இருந்தால் எம்மனம் இலகுவில் அமைதியுறும். அது அங்ஙனம் அமைய நாம் ஒவ்வொருவரும் முயற்சிக்க வேண்டும். குடமுழுக்குப் பெருவிழாவில் இயற்றுவோர் இயற்றுவிப்போர் காண்போர் எல்லோரும் பாக்கியவான்களே. இதுவே மானுட ஜென்மம் எடுத்த எமக்கு பெரிய வரப்பிரசாதம். ஆலய வழிபாட்டிற்கு எவ்வாறு செல்ல வேண்டும். எப்படி ஆலயத்தில் நடந்து கொள்ள வேண்டும். என்பது விதி. ஆண்கள் மேலாடையுடனும் பெண்கள் தலைவிரிகோலமாகவும் செல்லுதல் கூடாது. எமக்கு இறைவன் தந்த இந்த உடம்பு இறைவனுக்கு தொண்டு செய்வதற்காகவே. ஒரு மின்சார நிலையத்தில் உட் செல்வோர் எப்படி கவனமாகச் செல்ல வேண்டுமோ அதே போல் திருவருள் திகழுகின்ற ஆலயங்களில் வழிபடச் செல்வோரும் அந்தக் கட்டுப்பாட்டுடன் செல்ல வேண்டும். "காயமே கோயிலாகக் கடிமனம் அடிமையாக வாய்மையே தூய்மையாக மன மணிலிங்கமாக நேயமே நெய்யும் பாலாய் நிறைய நீர் அமைய ஆட்டி பூசனை ஈசனார்க்குப் போற்றுவிக் காட்டினோமே" எனவே ஆலய வழிபாடுகள் முறைப்படியாக வணங்க வேண்டும். மூர்த்தி, தலம், விருட்ஷம், தீர்த்தம் பெருமை கொண்ட பறாளாய் முருகனை வணங்கி நாம் எல்லோரும் சமாதானம், சந்தோஷமாக வாழ்வோமாக.

ஆயுர் நஸ்யபதி பஷ்யதாம் ப்ரதிதினம்
யாதிக்ஷயம் யௌவனம் ப்ரத்யாயந்தி
கதா புணர்திவசகா காலோ யகத் பக்ஷககா
லஷ்மிஸ்தோய தரங்க பங்க சபலா
ஷித்யுத் ஜலம் ஜீவிதம்
தஸ்மாத் மாம் சரணாகதம் சரணதத்வம்
ரத்ந ரஷ்ச ரஷ்சாதுனா.

# மஹா கும்பாபிஷேக விளக்கமும் ஆசியுரையும்



வியாகரண சிரோமணி
சிவாசார்ய கலாநிதி
**சிவஸ்ரீ.பூரண.தியாகராஜக்குருக்கள்**
B.A. Hons(Cey)
*திருகோணமலை வில்லூன்றி கந்தசுவாமி தேவஸ்தான பிரதான சிவாச்சாரியார், மட்டக்களப்பு சிவாநந்த வித்தியாலய முன்னாள் சுமஸ்கிருத, இந்து நாகரிக விரிவுரையாளர்.*

**சைவசமயம் மொழி, கலை கலாச்சாரமலிந்த யாழ் நகரின் பாகத்திலே சுழிபுரம் பறாளாய் என்னும் தலத்திலே எழுந்தருளி அருள்மழை பொழியும் வள்ளிதேவசேனா சமேத ஸ்ரீ சிவசுப்பிரமணியப் பெருமானுக்கும் தேவியருடனிணைந்துள்ள ஸ்ரீஷண் முகப் பெருமானுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும், பஞ்சதள ராஜகோபுரம் புதிதாக அமைத்து மஹாகும்பாபிஷேகம் 04.04.04 ஞாயிறு நிகழவுற்றமையால் எழுந்ததே இக்கட்டுரை யாகும்.**

எல்லாம் வல்ல இறைவன் நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன், யஜமானன் எனும் அட்டமூர்த்திகளாக உலகினில் காட்சி தருகின்றார். பரமாகாசம் என்னும் அண்டவெளியினிலே எங்கும் நீக்கமற நிறைந்துள்ள இறையருட்சக்தியான வேத மந்திர ஒலி மூலம் வாயு பகவானிடமும் அங்கிருந்து பலவிதமான மூலி கைகள், தானியங்கள், மந்திர உச்சாடணங்கள் மூலம் ஓமம் செய்து வளர்க்கப்படும் அக்கி னியிலும் பூஜிக்கப்படுகின்றது. அக்கினியிலிருந்து நூல், தர்ப்பை, ஆகியவற்றால் அமைந்த நாடி சந்தானம் எனும் தொடர்பு வழியாக கும்ப நீரினைச் சென்று பொலிவு பெறுகின்றது. ஓம அக்கினியில் பூசிக்கப்பட்ட திருவருட்சக்தியினை கும்பத்தில் ஒடுக்கிச் சேர்த்து அக்கும்பத்தினை வீதிவலமாக எழுந்தருளச் செய்து மூலஸ் தானத்திலே (கருவறை) ஸ்தாபிக்க ப்பட்டுள்ள பிரிதிவி (நில) சம்பந்தமான விக்கிரகங்களிலே (திருவுருவங்களில்) அபிஷேகம் செய்யும் போது அத்திருமேனிகள் தெய்வீக சக்தி என்னும் உயிர்ச் சக்தி நிறைந்து விளங்குகின்றன. இதனையே மஹாகும்பாபிஷேகம் எனும் பெருஞ்சாந்தி விழா தெளிவுபடுத்துகின்றது.

சிற்பக் கலா நிபுணர் களான ஸ்தபதிகள் ஆகம முறைப்படி கல் (சிலை) லினாலும் (தாம்ர) பஞ்சலோகங்களினாலும் பேசும் சிற்பங்களை வடிக்கிறார்கள்.

ஆலயங்களிலே அடியிலே உரிய யந்திரங்களை வைத்து அவற்றின் மேல் அத்திருவுரு வங்களை வைத்து பிரதிஷ்டை செய்கிறோம். யாகசாலையில் வேதாகம வல்லுனர்களான சிவாச்சார்யர்களினால் மந்திர ஒலி மூலம் திருவருட்சக்தி ஏற்பட்ட கும்பநீரினை அத்திருவுருவங்கள் மீது சொரிந்து அபிஷேகஞ் செய்யும் போது அவை திருவருட்சக்தி பெற்று பேசும் சிலைகளாக உயிரூட்டப் படுகின்றன. "உருவேறத் திரு வேறும்" என்பதற்கமைய நாடோறும் அங்கு நிகழ்த்தப்படும் பூசைகள் வேதமந்திர உச்சா டணம், திருமுறைகள், பக்தர்களின் பாவனைகள் முதலியவற்றால் அருட்பொலிவு பன்மடங்காகி தெய்வீக சக்தி மிக்கனவாக மிளிர்கின்றன. இவ்வாறு பல உயர் தத்துவக் கருத்துக்கள் மிக்க மஹாகும்பாபிஷேகத்தை தரிசித்தல் மிகப் பெரும் புண்ணியப் பேறாகும்.


குழந்தையைப் பெற்று விட்டால் போதாது அக்குழந் தையை நல்ல முறையில் சீராக வளர்த்து ஓர் உன்னத நிலை யடையச் செய்து பலருக்கும் பயன்படக் கூடிய வகையில் உயர் பணிபுரிந்து புகழ்பெறுங்கால் அவனால் பெற்றோருக்கும் பிறந்த பொன்னாட்டுக்கும் பெருமை தருமன்றோ! அஃதேபோல் ஆலயம் திருத்தி அமைத்து விட்டதும் திருப்பணி நிறைவுறா அங்கு நாடோறும் நித்திய நைமித்திய விசேஷ பூசை ஆராதனை, அபிஷேக விழாக்கள் மட்டின்றி நிகழவும், சமயப் பணிகள் திருமுறை வகுப்புக்கள் ஆகியன நிகழ்ந்து நம்வருங்காலச் சந்ததியினருக்கு சமய அறிவூட்டும் நிலையமாகவும் ஆகி, யாவும் சீரான முறையில் ஒழுங்கு கட்டுப்பாட்டுடன் நிகழ்தல் அவசியம். அவ்வாறு நிகழ்ந்து ஒரு முன்மாதிரியான ஆலயமாகத் திகழ அறங்காவலர்கள் அடியார்கள் அன்பர்கள் அனைவரும் முழுமனதுடன் பணி புரிதல் பெரும் புண்ணியம் தரும் செயலாகும்.

இச் சிறந்த நற்றிருப்பணியில் இரவுபகலாக ஓய்வின்றி அயராது ழைத்த ஆலய பரம்பரைச் சிவாச்சாரியார்கள், அந்தணர்கள், சரீர உதவி, பொருளுதவி முதலான பலவழிகளிலும் பணிசெய்த செய்து கொண்டிருக்கும், செய்யவிருக்கும் அனைத்து அன்பர்களுக்கும் பறாளாய் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமியார் நலன்களையும் விரும்பிய பேறுக ளையும் பரிபூரணமாக அருள்புரி வாராக என முருகனைப் பிரார்த் தித்து குரு என்ற முறையில் எமது உளமார்ந்த ஆசிகளை வழங்கு கின்றோம்.

"லோகாஸ் சமஸ்தாஸ்
ஸுகிநோ பவந்து"
உலக மாந்தரனைவரும்
இன்புற்று வாழ்க.

**சுபம்!**

உ
முருகன் துணை



சிவாகம கிரியா சிரோண்மணி

## சிவஸ்ரீ பி.பா.தியாகராஜக் குருக்கள் கணேஷரஞ்ச சர்மா

538/6, Alluthmawatha Road,
Colombo-15.

Muehle Bach Str - 23,
4716, Wel Schenrohr,
Switzerland.

பல வளங்களுடன் சீர்பூத்துத் திருவும் தழைத்தோங்கும், இயற்கை அழகும், வான் நோக்கி வளர்ந்த பனை மரங்களும் பச்சைப் பசேல் என காட்சியளிக்கும் வயல் வெளிகளும் நிறைந்த சைவ நற்சிந்தனையும் தமிழ் பண்பாடும் நிறைந்த மக்களையும் கொண்ட, மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பனவற்றை ஒருங்கே அமையப்பெற்றதாகிய சுழிபுரம் பறாளாய் எனும் பகுதியில் கோயில் கொண்டு வீற்றிருப்பவர் வள்ளி தேவசேனா சமேத ஸ்ரீ சுப்பிரமணியப் பெருமான். இப்பெருமான் மனமுருகி வேண்டுபவர்களின் வேண்டுதல்களையெல்லாம் அருந்தளிக்க வல்லவன். அடியார்களின் பொற்பதமாய் பொன்னிறமாய் அற்புதமாய் அழகுற விளங்குபவன் இப்பெருமானுக்கு ஆகமவிதிகளுக்கு அமைய புதிதாக திருத்தி அமைக்கப்பெற்ற ஆலயத்திலே பங்குனித் திங்கள் 22ம் திகதி (04.04.04) பங்குனி உத்திரத்தன்று மஹாகும்பாபிஷேகமும், முருகனுக்கு பஞ்சதள இராஜகோபுரமும் அமைத்து ராஜகோபுர கும்பாபிஷேகமும் நடைபெறுவதையிட்டு மிகவும் மகிழ்ச்சி கொண்டுள்ளோம். இவ் கிரியைகள் அனைத்தும் இனிதாகவும் இடையூறுகள் இன்றி நல்ல படியாகவும் நடைபெறுவதற்கு இறைவனை வேண்டுகிறேன்.

மற்றும் இக்கும்பாபிஷேகத்தையும்அதற்கு முன், பின் நடைபெறும் கிரியைகளிலும் கலந்து சிறப்பித்த அனைத்து சிவாச்சாரிய பெருந்தகைகளுக்கும், அந்தணப் பெருந்தகைகளுக்கும் ஆலய அர்ச்சகர்கள், மற்றும் ஆலயத்தை திருத்தி அமைப்பதற்கு இரவு பகலாக பாடுபட்டு உழைத்த ஆலய தர்மகர்த்தா சபையினர் மற்றும் சிற்பசாரியார்கள், உதவியாளர்கள், நிதி உதவிகள் புரிந்த வெளிநாட்டு, உள்நாட:டு அன்பர்கள் மற்றும் அனைத்து முருக பெருமானின் பக்தர்களுக்கும் எங்களுடைய நல்லாசிகளையும். வாழ்த்துகளையும் எமது பெற்றோர் சார்பிலே கூறிக்கொண்டு எல்லா மக்களுக்கும் முருகப் பெருமானின் பேரருள் கிடைக்க வேண்டும் என பிரார்த்தித்துக் கொள்கின்றேன்.

முருகன், கந்தன், வேலன், விசாகன், வள்ளிமணாளன், சூரசம்ஹாரன், சுவாமி நாதன், குகன் என பல்வேறு பெயர்களினால் அழைக்கப்படும் எமது சுப்பிரமணியப் பெருமான் சூரபத்மன் என்ற அசுரனை அழிக்கத் தோன்றிய அவதாரமே தேவர்களின் குறைதீர்க்க சிவபெருமான் தனது ஸத்யோஜாதம், வாமதேவம், தத்புருஷம், ஈசானம், அகோரம் முதலிய ஐந்து முகங்களோடு ஞானிகளுக்கு மட்டும் புலப்படும் அதே முகத்தையும் கொண்டு ஆறு வதனங்களுடன் திகழ்ந்தார். அப்போது ஒவ்வொரு திருமுகத்திலுள்ள நெற்றிக்கண்ணிலிருந்தும் ஜோதிப்பொறி தோண்றியது. இவை அனைத்தையும் சிவன் ஒரே தனற்பிழம்பாகியும் அக்கினி வாயுதேவனையும் அழைத்துக் கொடுத்து கங்கையில் சேர்க்க கட்டளையிட்டார். கங்கையும் அப்பொறிகளை இமயமலைச்சாரலில் சரவணப் பொய்கையில் தாமரை மலர்களில் விடஅவை ஆறுமுகக் குழந்தைகளாகத் தோன்றியது. இக் குழந்தைகளை பாசத்துடன் அன்னை பார்வதி வாரி அணைக்கவே அவை ஆறு முகங்களும் பன்னிரண்டு கைகளையும் கொண்ட முருகப் பெருமான் தோன்றினார் என புராணக்கதைகள் கூறுகின்றன.

பங்குனி உத்தரம், வைகாசி விசாகம் என்பன முருகனுக்கு உரிய விசேட நாட்களாகும். சிறப்பாக பல முருகன் ஆலயங்களில் பங்குனி உத்தர நாளன்று வள்ளி திருமணம் நடைபெறுகின்றது. இவ் உன்னத நன் நாளில் எமது பறாளாயில் வீற்றிருந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கும் சுப்பிரமணியப் பெருமானுக்கு குடமுழுக்கு நடைபெறுவதையிட்டு அடியவர்கள் அனைவரும் பக்திப் பரவசம் அடைகின்றனர். வேண்டுபவர் வேண்டும் வரங்களை எல்லாம் அள்ளித்தரும் அப்பெருமானின் அடி பணிந்து நாமும் வாழ்வில் உய்வோமாக.

நன்றி

*"ஆகம கிரியா ஜோதி"*

**தியாக கணேஷரஞ்ச சர்மா**

Phone:(04112)222115
Fax :224305
Email:- skmkanci@md3.vsnl.net.in

உ

Sri Chandramouleeswaraya Namaha:
Sri Sankara Bhaghavadpadacharya Paramparagatha Moolamnaya Sarvagnapeeta

**His Holiness Sri Kanchi Kamakoti Petadhipathi**
**JAGADGURU SRI SANKARACHARYA SWAMIGAL**
**Srimatam Samsthanam**

**No.1, Salai Street, Kancheepuram - 631 502**

*Date: 10.02.2004*

பா.கோபாலகிருஷ்ணசர்மா
ஸ்ரீ சிவசுப்பிரமணிய ஆலயம்
பறாளை, சுழிபுரம்
இலங்கை.

தங்களது 16.01.2004 கடிதம் கிடைக்கப்பெற்று பூஜ்யஸ்ரீமஹாஸன்னிதானத்தில் ஸமர்ப்பணம் செய்யப்பட்டது.

இலங்கை வடபகுதி யாழ்ப்பாண நகரத்தில் அமைந்துள்ள சுழிபுரம் கிராமத்தில் எழுந்தருளி அருள்பாலிக்கும் ஸ்ரீ சிவசுப்பிரமணியஸ்வாமியின் ஆலயத்தின் ஜீணோத்தாரண திருப்பணிவேலைகளை முடித்து 04.04.2004ல் மஹாகும்பாபிஷேகம் செய்யஇருப்பதையறிந்து ஸ்ரீ ஆசார்யஸ்வாமிகள் மிக்க மகிழ்ச்சியடைந்துள்ளார்கள்.

குன்று தோறும் வீற்றுஅருள்பாலிப்பவரும் தகப்பனாருக்கே ப்ரணவ உபதேசத்தை செய்து தகப்பன்ஸ்வாமி என்று போற்றப்படுபவரும் தமிழ்க்கடவுள் என்று மக்களால் அன்புடன் அழைக்கப்படும் ஸ்ரீ முருகப்பெருமான் மஹா கும்பாபிஷேகம் சிறப்பாக நடந்து அதன் தொடர்பாக வெளியிட இருக்கும் மலரும் மக்களுக்கு நன்கு பயன்படும்படி அமையவும். ஸ்ரீ முருகப்பெருமான் அருளால் உலகமனைத்தும் ஸகலமங்களங்களையும் அடைந்து பாமஷேமமாகவாழ வேண்டும் என்று ஸ்ரீசங்கராசார்யஸ்வாமிகள் அருளாசி வழங்கி அனுக்கிரஹித்தப் பிரஸாதம் இத்துடன் அனுப்பியுள்ளது.

SRI KANCHI KAMAKOTI PEETAM

உ

"பன்னிரு தடந்தோள் வள்ளல் பாத பங்கயங்கள் போற்றி"

சுழிபுரம் பறாளை
CHULIPURAM PARALAI

**ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்**
**Shri Sivasubramaniya Swamy Kovil**

**தர்மகர்த்தா சபை**
**BOARD OF TRUSTEE**

பறாளை - Paralai
சுழிபுரம் - Chulipuram.
16.05.2004

# பறாளை ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயம் தர்மகர்த்தா சபையினது செய்தி

புராதனச் சிற்பங்கள் பலமிக்க எமது ஆலயத்தினது மகாகும்பாபிஷேகம் 04. 04. 2004ல் சிறப்பாக நிறைவெய்தியது. இக்கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற முருகன் அடியார்கள் அனைவரும் தர்மகத்தா சபை உறுப்பினர்கள், ஆலய பரம்பரை அர்ச்சகர்கள், தொண்டர்கள், சபை அங்கத்தவர்கள் மற்றும் அனைத்து நெஞ்சங்களுக்கும் தங்கள் பங்களிப்பினை வழங்கி இருந்தார்கள். ஆலயத்தினது திருப்பனி வேலைகள் பலவும் மிகச் சிறப்பான நிலையில் பூர்த்தியடைந்து ஆலயத்தினது மூலவர் ஷண்மகர் விமானங்கள் முற்றாகப் புதுப்பிக்கப் பெற்றது. இராஜகோபுர மேற்தள வேலைகள் கட்டப்பட்டு பஞ்சதள இராஜகோபுரமாக பல நூற்றுக்கணக்கான அழகிய சிற்பவேலைப்பாடுகளுடன் கம்பீரமாகக் காட்சியளிக்கின்றது. இத்திருப்பணிக்கான நிதியின் பெரும் பகுதியை சுளிபுரம் கிழக்கு வாசியான திருமதி. நல்லமுத்து பொன்னுச்சாமி அவர்கள் வழங்கியுள்ளார். சிற்ப வல்லுநர் பிரம்மஸ்ரீ. சி. பாலகுமாரசர்மா அவர்களின் தலைமையில் மேற்கொள்ளப்பட்டன. மற்றும் ஆலய முன் மண்டப வேலைகள் யாவும் திரு. சி. பாலகுமார் தலைமையில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

இராஜ கோபுரத்திற்கு இடது புறத்தில் உள்ள மணிக்கூட்டுக் கோபுரம் செல்வி கந்தையா இரத்தினேஸ்வரி அவர்களின் திருப்பணியாக அமைக்கப்பட்டுள்ளது. ஆலயத்தின் கருவறை விமானம் திரு. சேதுகாவலர் பரம்பரையினராலும் ஷண்முகர் விமானம் திரு. வேலாயுதர் பரம்பரைசார்பாக சபாரத்தினம் குடும்பத்தினராலும் புதுப்பிக்கப்பட்டுள்ளது. தெற்குப்புற இராஜகோபுரம் திரு. இராமநாதர் வரதராஜா அவர்களின் திருப்பணியாக அமைக்கப்பட்டுள்ளது. ஆலயத்திற்கான திருப்பணி நிதிகளை முருகன் அடியார்கள் வாரி வழங்கியுள்ளார்கள். வெளிநாட்டில் நிதி சேகரிப்பதற்கு திரு. க. சிவராஜா பல ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று பல இலட்சம் சேகரித்துக் கொடுத்துள்ளார். இவரை அங்கு தருவிக்க ஆலய அர்ச்சகர் மு. பாலகுமாரசாமிசர்மா பிள்ளைகளும் எம் ஆலய மகோற்சவ குருமாரின் பிள்ளைகளும் ஏனையோரும் நிதி சேகரிக்க உதவியுள்ளார்கள். சேகரிக்கப்பெற்ற பெருந்தொகையான நிதி திருப்பணி வேலைகள் பெருமளவு செய்யபயன் படுத்தபெற்றது திருப்பணி வேலைகளில் தர்மகர்த்தா சபையின் முன்னாள் தலைவர் காலஞ் சென்ற அப்பாத்துரை விதானையாரின் மகன்மாரும் பெரும்பணி யாற்றியுள்ளார்கள். மகாகும்பாபிஷேகம் பிரதமகுரு பிரம்மஸ்ரீ சாமி விஸ்வநாதக்குருக்கள் தலைமையில் பல சிவாச்சாரியார்களினால் 04. 04. 2004ல் நிறைவெய்தியது. திருப்பணி வேலைகள் இன்னமும் ஏராளமாக உள்ளது. அடியார்கள் ஒத்துழைப்புத் தரவேண்டும் என வேண்டிக் கொள்கின்றோம்.

நன்றி

சுழிபுரம் - பறாளாய்

# ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி திருக்கோவில்

## மகாகும்பாபிஷேக சிறப்புமலர்



# கட்டுரைகள்

# ஆலய வளர்ச்சியின் வரலாறு......

இயற்கை எழில் பல தன்னகத்தே கொண்ட இலங்கை மணித்தீவு இந்து மாசாகரத்தின் நன்முத்து எனப் பெயர்பெற்றது இந்திய திருநாட்டின் தென் கோடியில் அமைந்த தீவு. மலைவளம்,நீர்வளம், நிலவளம், நிறைந்தது. சிவனொளி பாத மலை கதிரமலை போன்ற புண்ணிய மலைகளுள்ள நாடு. மகாவலி கங்கை, மாணிக்க கங்கை, களனி கங்கை, மாயவனாறு போன்ற வற்றாத ஜீவநதிகள் பரவிப்பாயும் நாடு. திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம், நகுலேஸ்வரம், முன்னேஸ்வரம், தான்தோனறிஸ்வரம் போன்ற காலத்தால் மூத்த சிவாலயங்களையும், கதிர்காமம், நல்லூர் செல்வச் சந்நிதி மாவிட்டபுரம் மண்டூர் வெருகல் உகந்தை போன்ற இடங்களில் கலியுக வரதனாம் கந்தனது ஆலயங்களையும், வல்லிபுரம், பொன்னாலை, மல்லில், வந்தாறுமூலை, தெஹிவளை போன்ற திருப்பதிகளில் காத்தற் கடவுளாம் கண்ணனது திருக்கோயில்களையும் கொண்ட நாடு.

இத்தகைய பெருமையும் பெருவனமும் நிறைந்த இத் தீவின் சிரசென திகழ்வது யாழ்ப்பாணம். தமிழையும் சைவத்தையும் இரு கண்ணெனப் போற்றி வளர்த்த நாவலர் தோன்றிய நன்னகரம். கந்த புராண கலாச்சாரம் அழியாது இன்றும் நிலைத்து நிலவும் புண்ணிய பிரதேசம் இப்பிரதேசத்தில் வடபால் சகல வளங்களையும் கொண்ட தொன்மை மிகு கிராமம் சுழிபுரம். சான்றோர்கள் பலர் வாழ்ந்த வாழும் பதி. இங்குள்ள கல்விக் கூடங்களும் கல்லூரியும் பல நல்லறிஞர்களை உருவாக்கி நாட்டுக்கு அளித்த பெருமை மிக்கவை. புனிதம் நிறைந்த திருவடி நிலை என்ற சமுத்திர தீர்த்தத்தைக் கொண்ட கிராமம். இங்கு செந்நெற்கழனிகள் சூழ்ந்து இயற்கை வளத்துடன் கூடிய மருதநிலம் பறாளாய்.

நெடிதுயர்ந்த தென்னை பனை, ஆல் அத்தி புன்னை மருது வேம்பு மா, நெல்லி கடம்பு மாதுளை மகிழ் செண்பகம் கோங்கு போன்ற மரங்களும் மல்லிகை முல்லை கொன்றை பொன்னொச்சி அரளி ரோஜா போன்ற மலர் கொடிகளும் செடிகளும் நிறைந்த பசுமையான பதி. தொன்மை மிகு வெள்ளரசும் வேம்பும் இணைந்து நிறக அருகே வெண்டாமரையும் செந்தாமரையும் அல்லியும் ஆம்பலும் பூத்துக் குலுங்கும் நீர் நிலை. நாற்புறமும் நன்கு கட்டப் பெற்று, கிழக்குப் பக்கத்தில் வெள்ளை வயிரக்கற்கலால் படிகள் நன்கு கட்டப் பட்டுள்ளது. அருகே தர்ப்பை புதர்களும் கடம்பும் அரளியும் அடர்ந்து வளர்ந்துள்ளன.

திருமிகுந்த இவ்விடத்தில் ஆனைமுகனுக்கும் ஆறுமுகனுக்கும் இரு பெரு ஆலயங்கள் உள்ளன. தொன்மை நிறைந்த ஆனைமுகன் ஆலயத்தை போர்த்துக்கேயர் ஒல்லாந்தர் காலத்தில் அவர்கள் தகர்க்க முற்பட்டபோது விநாயகப் பெருமான் காக்கை உருவில் வந்து அவர்கள் கண்களைக் கொத்தித் தடுத்ததாக வரலாறு. தவறினை உணர்ந்து அவர்கள் ஆலயத்திற்கு அளித்த மானியவிபரமடங்கிய செப்பு பட்டயம் இதனை உறுதி செய்வதாகக் கூறுவர். இவ்வாலயத்திற்கு வடபால் சிவசுப்பிரமணிய சுவாமி என்ற திருநாமம் கொண்ட முருகன் ஆலயம் ஆதிநாட்களில் வெள்ளரசமரத்தடியில் வேல்ஸ்தாபித்து கந்தபுராணம் படித்து வழிபட்டு வந்தார்கள். இது பின் தென்னங்கீற்றுக் கொட்டிலாகி இவ்வூர் பக்தப் பெருமக்களினால் முருகைக் கற்களால் ஆலயமாக பின் வளர்ச்சியடைந்து இவ்வாலயங்களுக்கு கிழக்கே கண்ணகை அம்மன் கோயிலும் தென் கிழக்கே வள்ளியம்மன் ஆலயமும் தெற்கே கம்பனையில் அம்பாள் ஆலயமும் மேற்கே ஐயனார் பைரவர் ஆலயங்களும் வடக்கே சிறிது தொலைவில் நுணசை முருகன் ஆலயமும் வடகிழக்கில் சிவன் ஆலயமும் அரணாக அமையப் பெற்ற பெருமை பெற்றது.

இங்கு கலை நயம் செறிந்த அழகு மிக்க சிற்பங்களைக் கொண்ட அழகிய தேர் உள்ளது. கால நீரோட்டத்தினால் இது சிறிது பழுதுறவே புதிய சித்திரத்தேர் உருவாக்கப் பெற்றது. இப்பழமை மிகு சிறப்புக்கருவூலத்தை நன்கு பேணி பாதுகாத்து வருகின்றனர்.

மயில் மீதமர்ந்து அருள் மழை பொழியும் இம் முருகப் பெருமானின் திருக்கோயிலில் பரம்பரை அர்ச்சகர்களாக இருகோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் இந்தியாவிலிருந்து வந்தவர்கள் ஜமதக்னி கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் கும்பகோணம் என்ற தொல் பதியிலிருந்து வந்தவர் இவரின் வழித்தோன்றல்கள் சபாரத்தினக் குருக்களும் அவரின் சகோதரர் வேதரணி யேஸ்வரக் குருக்களும்.

பாடல் பெற்ற திருத் தலமான உத்தரகோச மங்கை என்ற தலத்திலிருந்து பாரத்வாஜ கோத்திரத்தை சேர்ந்தவர்கள் வந்தார் இவரது வழித்தோன்றல்களே சுப்பையாக்குருக்களும் இவரின் சகோதரர் முத்துச் சாமிஐயரும்.

இவ்விரு குடும்பத்தினருமே இவ்வாலய நித்திய நைமித்திய கருமங்களை குறைவற நிறைவேற்றி வந்தார்கள் ஊர் மக்கள் இவர்கள் மீது

பெரு மதிப்பும் மரியாதையும் பேரன்பும் கொண்டு பேணி வந்தார்கள். இவர்களும் அவர்கள் பால் தாளாத அன்பும் விஸ்வாசமும் கொண்டிருந்தார்கள்.

முருகைக் கற்களால் அமைந்த ஆலயத்தையும் தென்னங்கீற்றினால் மேய்பெற்ற வீதிகளையும் நவீனமயப்படுத்தி இவ்வாலய வளர்ச்சியை பெருநோக்காக கொண்டு செயலாற்ற விழைந்த இவர்கள் இதற்கு பெருமளவு நிதி தேவை என் உணர்ந்தனர்.

கொழும்பு சேர் பொன் இராமநாதன் அவர்களது ஆலயத்தில் பிரதம குருவாகவும், அவரின் வேண்டுதலின் பேரில் ஸ்தானிகராகவும் இருந்து பெருமதிப்புப் பெற்றவர், வேதாரணியேஷ்வரக் குருக்கள் தமது ஆலய முன்னேற்றம் கருதி கொழும்பு பொன்னம்பலவாணேசர் கோவிலிலிருந்து விலகி நிதி சேகரிக்கும் பொருட்டு அக்காலத்தில் பொன் கொழிக்கும் நாடாக விளங்கிய மலேசியாவுக்கும் சிங்கப்பூருக்கும் சென்றார். திரவியம் தேடிச் சென்ற எம் சுழிபுரத்து ஊர் மக்கள் பலர் அங்கு தொழில் வளம் பெற்று சீரும் சிறப்புமாக இருந்தார்கள். அங்கு புரோகிதம் செய்து கொண்டே கோவில் வளர்ச்சிக்காக நிதி சேகரித்தார். அக்காலப்பகுதியில் ஆலய பூஜையினை முத்துச்சாமி ஐயர் அவர்களே செய்து வந்தார். மலேசியா சிங்கப்பூரில் சேகரிக்கப் பட்ட நிதியினை சகோதரர் சபாரத்தினக் குருக்கள் அவர்களும், சுப்பையா குருக்கள், முத்துசாமி ஐயர் போன்றோரும் திருப்பணி வேலைகளுக்கு பயன்படுத் தினார்கள் ஆலயத்தின் கருவறை விமானம் என்பன ஊர் பெரியார் சேதுகாவல முதலியாரின் முன்னோரினால் வைரக்கற்கலால் அழகாக அமைக்கப்பட்டது. ஷண்முகர் சந்நிதியும் விமானமும் சைவ சமய அபிமானி வேலாயுதர் முன்னோரினால் அமைத்துக் கொடுக்கப்பட்டது. அர்த்தமண்டபம் மகா மண்டபம், ஸ்நபன மண்டபம் என்பன வேதாரண்யேஸ்வர குருக்களினால் சேகரிக்கப்பட்ட நிதியினைக் கொண்டு வைரக்கற்களினால் அழகாக அமைக்கப்பட்டது. நாடுதிரும்பிய வேதாரண்யேஸ்வரக் குருக்கள் (இவரை ஊர் மக்கள் சின்னையா குருக்கள் எனவும் அழைப்பார்கள்) ஆலயத்தின் திருப்பணி வேலைகளைக் கண்டு திருப்தியுற்றார். உள் சுற்றுக் கொட்டகைக்கு தேவையான தீராந்தி, ஊசிக்கால் போன்ற வற்றுக்கு தேவையான மரங்களைப் பெற ஊர் அன்பர்களின் அழைப்பின் பேரில் சுப்பையாக் குருக்களுடன் அநுராதபுரப் பகுதி காடுகளில் பாலை மரங்களைப் பெற்று வந்தார். வைரம்நிறைந்த பனைமரக் கைமரங்களும் சலாகைகளும் தெரிந்து வாங்க முத்துச்சாமி ஐயர் அவர்கள் வரணி முதலான ஊர்களுக்குச் சென்று பெற்று வந்து ஆலய சுற்றுக் கொட்டகை உருவாக்கப் பட்டது. எழில் கொஞ்சும் ஆறுமுகக் கடவுளுக்கு நல்ல உள்ளம் கொண்ட வள்ளல் 1914ம் ஆண்டு ஜூன் மாதம் 7ம் திகதி ஆனந்த ஸ்ரீ வைகாசி மீ 22ம் நாள் ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழா அன்று ஷண்முகப்பெருமானுக்கு திரு.ஆ.சின்னையாபிள்ளைஅவர்களால் உபயம் செய்யப்பட்ட மகுடகிரீடம் சூட்டும் வைபவம் இடம் பெற்றது. இதற்கு சற்று பின்னர் வெள்ளியிலால் ஆன திருவாசி முருகபக்தர் ஒருவரினால் செய்த தரப்பட்டது. முருகப் பெருமான் தேருக்கு பவனி வரும் பொருட்டு அறுகோணமுள்ள சிம்மாசனம் அர்ச்சகர் சின்னையர் குருக்கள் அவர்களின் முயற்சியினால் ஆறுமுக ஆசாரியினால் செய்து கொடுக் கப்பட்டது. ஆலய அர்ச்சகர்களில் ஒருவரான சபாரத்தினக் குருக்களின் மகன் நடராஜ ஐயர் தெய்வத்திருவுருவத்தை அலங்கரிக்கும் தெய்வீக கலையில் தன்னிகரற்று விளங்கினார். பெருமானை பல்வேறு நிலைகளில் எழில்ததும்ப அலங்கரித்து வழிபடும் பக்கதர்களை ஆனந்த அருவி சொரிய வழிபட வைத்தார் கோடைகாலத்து வெப்பம் எம்பெருமானை துதிக்குமே என மனம் நொந்து மூலவர் கருவறையினை சுற்றி முப்பக்கமும் நீர தொட்டி அமைத்து செங்கழுநீர, நீலோற்பலம் கொடிகளை வளர்த்து குளிரமை நிறைந்த இடமாகினார்.

"சோதியெ சுடரே சூழொளி விளக்கே"
"ஒளிர்வள விளக்கே"
"தீப மங்கள ஜோதி நமோநம"

என்று அருளாளர் பாடிப்பரவிய இறைவனுக்கு எம் நாட்டிலே முதன்முதலாக இலட்சதீபம் 1952ல் ஏற்றுவித்து இலட்சார்ச்சனை ஆரம்பித்து வைத்தார். இவ்விழா அன்று முதல் பங்குனி மாத வளர்பிறை பிரதமை முதல் ஷஷ்டியீறாக அறு சிவாச்சாரியர்களினால் ஆறு நாட்களுக்கு தினமும் மூன்று வேளை நடைபெற்று வருகின்றது. இவரது மூத்தமகன் சபாரத்தினக் குருக்கள் உள்வீதி சுவர்களை பூசுவித்து பின் அறைகளை செப்பஞ்செய்து கொடுத்தார். யாகசாலை, களஞ்சிய அறை மடைப்பள்ளி போன்றன இவரது முயற்சியினால் அன்பர்களைக் கொண்டு செய்விக்கப்பட்டது. முத்துச்சாமி ஐயர் அவர்கள் பல புதிய உபயங்களை உருவாக்கி பக்தி பெருமக்கள் மெய்சிலிர்த்து வழிபட்டு மகிழ காலந்தவறாது பூஜைகளை கிரமமுடன் செய்துவந்தார். இலட்சார்ச்சனை காலங்களில் பஞ்சபுராணம் பாடியதன் பின்னர் தினமும் கந்தரனுபூதி பாடும் வழக்கத்தினை ஏற்படுத்திக் கொடுத்தார். மார்கழி மாதத்தில் உதயத்திற்கு முன் அதிகாலைப் பூஜையினை ஆரம்பித்து விதவிதமான பிரசாத வகைகளை நைவேதித்து பக்தர்களுக்கு விநியோகித்து மகிழ்வார். 7ம் திருவிழா உபயகாரரான குகன் சங்கத்தினர் வே.சிவசுப்பிரமணியக் குருக்கள் அவர்களின் ஆலோசனையில் சிற்ப சாஸ்திரத்திற்கு அமைய கொடித்தம்பத்தினை உருவாக்கி கொடுத்தனர். பக்தர்களின் காணிக்கையினைக் கொண்டு புதிய தங்கமுலாம்

பூசப்பட்ட மயூரவாகனம் ஒன்றினை வே.சுப்பிர மணியகுருக்கள் செய்து முருகன் வீதிவளம் வர வழிசமைத்தார். ஆலய பரம்பரை அர்ச்சகரில் ஒருவரான சு.ஷண்முகரத்தின சர்மா அவர்கள் 1975ம் ஆண்டு பங்குனி மாதம் ஆனந்த வருஷம் ரோகிணி நட்சத்திரத்தன்று மஹாகும்பாபிஷே கத்தினை சுழிபுரம் குமாரசுவாமி குருக்கள் தலைமையில் சிறப்பாக நடாத்திவைத்தார். இவரின் பூஜைக்காலத்தில் நேரந்தவறாது பூஜை செய்யும் நடைமுறையும் மெற்கொள்ளப்பட்டது. திரு.இராஜபட்சம் தலைமையில் மேற்கொள்ளப் பட்டதே புதிய அழகிய சித்திரத்தேர் ஆச்சாரி திருநெல்வேலி ஆ.சீவரத்தினம் சகோதரர்களால் உருவாக்கப்பட்டு 1986ம் ஆண்டு வெள்ளோட்டம் விடப்பட்டது. இத்திருப்பணி சபையில் "மெய்கண்டான்" அதிபர் இரத்தினசபாபதி உட்பட பல தலைவர்கள் அங்கம் வகித்தனர். ஆலய அர்ச்சகர் மு.பாலகுருசாமி சர்மா அவர்களினால் ஆலய அர்த்த மண்டபம், மஹா மண்டபம், ஸ்நபன மண்டபம், வசந்த மண்டபம் மற்றும் கருவறைகளுக்கு 1984ம் ஆண்டுகளிலும் பின் தொண்ணூறுகளிலும் வர்ணம் பூசும் திருப்பணி அடியார்களின் ஆதரவினால் மேற்கொள்ளப பட்டது. கந்தசஷ்டி காலங்களில் ஷண்முகா ர்ச்சனை செய்ய உபயகாரர்கள் உருவாக்கி விரதம் அனுஷ்டிக்கும் பக்தர்கள் வணங்கி பரவசமடைய வழிசமைத்தார். மேலும் ஸ்தம்ப மண்டபத்தில் உள்ள மண்டபம் தற்போது மணிமண்டபமாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளது். இதற்கான மாதிரியினை திரு.தாமோதரலிங்கம் (பொறியியலாளர்) அவர்கள் வரைந்து கொடுத்தார். இம்மண்டபத்தில் உள்ள குத்துகால் தீராந்தி மரங்கள் அனைத்தும் கழட்டப்பட்டு தற்போது "கொங்கிறீட்" சீமெந்திலான வில்லு வளைவு வேலைப்பாடுகள் தர்மகர்த்தா சபையினரால் அமைக்கப்பட்டுள்ளது. இதற்கான ஆலோசனைகள் முன்னைநாள் தர்மகர்த்தா சபையின் தலைவர் காலஞ்சென்ற அப்புத்துரை விதானையாரின் புதல்வர்கள் வழங்கியிருந்தனர். இம்மண்ட பத்திலுள்ள சிற்ப வேலைப்பாடுகள் அனைத்தும் ஆலய அர்ச்சகர் பிரம்மஸ்ரீ சிவசுப்பிரமணியக் குருக்களின் மகன் சி.பாலகுமாரசர்மா அவர்களினால் மேற்கொள்ளப்பட்டது. மேலும் இம்மண்டப கட்டுமான செலவுகளின் பெரும் பகுதியை பிரம்மஸ்ரீ வேதாரணீயேஸ்வரக் குருக்களின் பரம்பரையினரால் மெற்கொள்ளப்பட்டு அவர்தம் ஞாபகார்த்தமாக "வேதாணீயேஸ்வர குருக்கள் மணிமண்டபமாக" பெயரிடப்பட்டது. 1986 சு.ஷண்முகரத்தினசர்மா அவர்களை காரியதரசியாகவும் த.சங்கரப்பிள்ளை அவர்களின் தலைமையிலும் ஒரு தர்மகர்த்தா சபை உருவாக்கப்பட்டது. இதில் அங்கத்தவர்களாக ஆலய மகோற்ஸவ உபயகாரர்கள் இணைந்து கொண்டனர். இந்த தர்மகர்த்தா சபையினரால் 1989ம் ஆண்டு முதல் ஏற்கனவே அரைகுறை வேலையில் சிதலமுற்றிருந்த இராஜகோபுர அத்திவார வேலைகள் முற்றாக அகற்றப்பட்டு பிரம்மஸ்ரீ சு.ஷண்முகரத்ன சர்மா அவர்களின் தலைமையின் கீழ் புதிய அத்திவாரம் போடப்பட்டு வைரகற்களினால் கோபுர வியாளமட்டம் வரை பல லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டது. நாட்டில் ஏற்பட்ட குழப்ப நிலை காரணமாக பெருமளவு மக்கள் வெளியேறியிருந்த நிலையிலும் ஆலய பூஜைகளும் கிரியைகளும் இடையூறு இன்றி ஒழுங்காக நடைபெற்றன். அர்ச்சகர் ந.இராமச்சந்திரசர்மா அவர்களின் முயற்சியினால் ஆலய உற்சவங்களுக்கு புதிய பீடம் திருவாசி என்பன உருவாக்கபப்பட்டது. சங்காபிஷேக சபையினரால் சங்கு அடுக்கவென பீடங்களும் யாகசாலைக்கான இரும்புக் கம்பிகளும் வாங்கப்பட்டன. தேரோடும் வீதி ஆலய தொண்டர் சபையினரால் புதிதாக புனரமைக்கப்பட்டிருந்தது. பஜனை சபையினரால் கந்தரனுபூதி மனனப்போட்டி நடாத்தப்பட்டு பங்கு பற்றியோருக்கு பெறுமதி மிக்க பரிசில்கள் வழங்கப்பட்டு வருகின்றது. பல நூற்றுக் கணக்கான மாணவர்கள் பங்கேற்றி பயனடை கின்றார்கள். தர்மகர்த்தா சபையினராலும் ஆலய அர்ச்சகர்களின் விடா முயற்சியாலும் திருப்பணிக்குழு ஒன்று உருவாக்கப்பட்டு பெருமளவு நிதி திரட்டப்பட்டு புதிய ஐந்துதள அழகிய இராஜகோபுரம் ஏற்கனவே பூர்த்தியடைந்திருந்த யாளமட்ட நிலையிலிருந்து தொடர்ந்து புதிதாக கட்டுமானம், பூச்சு வேலை, சிற்பவேலை வர்ணவேலை மற்றும் கோபுர கலசங்கள் வரையிலான அனைத்து பணிகளும் பெரும் பொருட் செலவில் நிர்மாணிக்கப்பட்டது. மெற்படி இராஜகோபுர திருப்பணி செலவுகளை சுழிபுரம் கிழக்கு திருமதி.நல்லமுத்து அம்மையார் அவர்களுடன் வேதாரன்யேஸ்வரக் குருக்களின் பேரனும் இவ்வாலய அர்ச்சகர்களில் ஒருவரான பிரம்மஸ்ரீ சிவ.பாலகுமாரசர்மா அவர்களின் தன்னலமற்ற முழுமையான அர்ப்பணிப்பினாலும் பூர்த்தியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. தெற்கு வாயில் கோபுரம் மூலவர் விமானம் சண்முகர் விமானம் அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி சிற்பவேலைகளை தமிழகத்திலிருந்து சிற்ப வல்லுனர்களை அழைத்து வந்து தனது ஆலோசனைப்படி ஆலய அர்ச்சகரான வேதாரணீயேஸ்வரக் குருக்கள் பேரனும் வே.சிவசுப்பிரமணியக் குருக்களின் மகனுமாகிய பாலகுமாரசர்மா அவர்கள் ஆகம விதிகளுக்கு அமைய கலைநயம் மிகுந்ததாக அமைத்துக் கொடுத்தார். ஆலய கும்பாபிஷேகத்திற்கான திருப்பணி நிதிகளை திருப்பணி சபையினரின் சார்பில் திரு.வாகைசிவராஜா அவர்கள் பல ஐரோப்பிய நாடுகளுக்கும் சென்று நிதி திரட்டி தர்மகர்த்தா சபையினருக்கு அனுப்பிவைத்தார். ஆலய அர்ச்சகர் முத்துசுவாமி ஐயர் அவர்களின் பேரன்மார்கள் திரு.வாகை சிவராஜா அவர்களை ஐரோப்பிய நாடுகளுக்கு அழைப்பதில் முன்னின்று ஒத்தாசை புரிந்தனர். அங்குள்ள முருகன்

பக்தர்களும் அந்தணப் பெருமக்களும் வர்த்தகர்களும் நிதி சேகரிக்க பெருதவி புரிந்தார்கள் ஆலய தொண்டர் சபையினர் மகா கும்பாபிஷேக திருப்பணிகளில் சரீர உதவிகள் பல புரிந்தார்கள். அவர்களின் அயராத முயற்சியினால் ஆலய தெற்குப் புறத்தில் அழகான வேலைப்பாடுகளில் அமைந்த ஒரு அன்னதான மண்டபம் கம்பீரமாக காட்சி தருகின்றது. தற்கால தர்மகர்த்தா சபையானது மிகவும் சிறப்பான முறையில் செயலாற்றி வருகின்றது. தலைவராக திரு.நாகராசா (இளைப்பாறிய கல்லூரி அதிபர்) அவர்களும் செயலாளராக திரு.வேலாயுதம் இரத்தினசபாபதி (இளைப்பாறிய அரச உத்தியோகத்தர்) அவர்களும் தனாதிகாரியாக திரு.பூபாலசிங்கம் (இளைப்பாறிய தபால் அலுவலக அதிபர்) அவர்களும் கடமையாற்றி வருகின்றனர். இக்கும்பாபிஷேக வைபவத்திற்கு இவர்கள் ஆற்றிய சேவைகளை எல்லோரும் பாராட்டிவருவருகின்றனர். குறிப்பாக செயலாளர் இரத்தினசபாபதி அவர்கள் ஆலயசேவையினை தம் மூச்சாக கருதி இரவுபகலாக ஆலயவளர்ச்சிக்கு தன்னாலியன்றளவு கடமையாற்றி வருகின்றார். இவர்களுக்கு உறுதுணையாக தொண்டர் சபையினர் ஆலயத்திருப்பணி வேலைகளுக்காக தங்களால் இயன்றளவு உடல் உழைப்பினை செய்து வருகின்றார்கள் அலய வீதியினைக் கூட்டுதல், கழுவுதல், துப்பரவு செய்தல் போன்ற பணியினை ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் மேற்கொண்டு வருகின்றார்கள். திருவிழாக்காலங்களில் தங்களால் நிர்மாணிக்கப்பட்ட அன்னதான மண்டபத்தில் பக்தர்களுக்கு அன்னதானம் செய்து வருகின்றார்கள். கும்பாபிஷேக திருப்பணி வேலைகள் விரைவாகவும் சிறப்பாகவும் நிறைவுபெற சகல விதத்திலும் ஒத்துழைப்பு நல்கிய முன்னால் இந்துகலாசார அமைச்சர் "சிவதர்ம"தியாகராஜா மகேஸ்வரன் M.P அவர்களுடைய பணியும் ஆலய வளர்ச்சியில் குறிப்பிடத்தக்கது. இப்படி பல திருப்பணி வேலைகளும் பூர்த்தியடைந்து ஆலய மஹா கும்பாபிஷேகம் சுபானு வருடம் பங்குனித்திங்கள் 22ம் நாள் ஞாயிற்றுக்கிழமை (04.04.2004) அன்று உத்திரநட்சத்திரம் கூடிய மீனலக்கின சுபமுகூர்த்த வேளையில் நவாலியூர் சாமி.விஸ்வநாதக் குருக்கள் தலைமையில் பல சிவாச்சாரியார்கள் பங்கோடு சிறப்பான முறையில் காலை 6.55 மணிக்கு நிறைவெய்தியது. இந்த கும்பாபிஷேக பெருஞ்சாந்தி விழாவில் பல கலைநிகழ்ச்சிகளும் நாதஸ்வர இசை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றிருந்தன. இந்த கும்பாபிஷேக வைபவம் சிறப்பாக நடைபெற பெரும் முயற்சிகளில் ஈடுபட்ட தர்மகர்த்தா சபை அங்கத்தவர்களுக்கும் ஆலய பரம்பரை அர்ச்சகர்களுக்கும் திருப்பணி வேலைகளுக்கு நிதி கொடுத்த வள்ளல்களுக்கும் மற்றும் முருக பக்த பெருமக்களுக்கும் எல்லாம் வல்ல வள்ளி மணாளன் ஸ்ரீ சிவசுப்பிரமணிய ஷண்முகப் பெருமான் பேரருள் புரிந்து அருள வேண்டி பிரார்த்திப்போமாக.

தொகுப்பு :
பிரம்மஸ்ரீ வே.சத்தியமூர்த்திசர்மா

## உருத்திராட்சத்தின் வகைகள்

உலகில் எத்தனையோ வகையான விருட்சங்கள் உண்டு. ஆனால் உருத்திராட்சத்தினை சிவனின் வடிவமாக பெரியோர்கள் கூறுவர். உருத்தினனுடைய நேத்திரம் அது அதனைத் தமிழில் திருக்கண்மணி என்று கூறுவார்கள். மற்றவிருட்சங்களுக்கு இல்லாத சிறப்பு உருத்திராட்சத்திற்கு உண்டு. இதனை பிரத்தட்சமாகப் பார்க்கலாம். மற்ற பழங்களில் உள்ள விதைகளுக்குரிய துளை இல்லை. இயற்கையிலே துளையுடன் கிடைப்பது உருத்திராட்சகாய் ஒன்றுதான். இது நேபாள நாட்டில்தான் அதிகமாகக் கிடைக்கின்றது. உருத்திராட்சத்திற்கு முகங்கள் உண்டு, பஞ்ச முகம் உள்ள உருத்திராட்சமே அதிகம் ஆறுமுக உருத்திராட்சமும் உண்டு. முருக பக்தர்கள் அதனை ஆறுமுகத்திற்கு ஏற்றது எனக் கருதி அணிவார்கள். ஏகாதசமுக ருத்திராட்சம் பரமேஸ்வரனை நினைத்து வாங்கி சிவ பக்தர்கள் அணிவார்கள். ஒரே முகம் கொண்ட ஏகமுகம் உருத்திராட்சமம் உண்டு ஆனால் கிடைப்பது அரிது. இரண்டு முகம், மூன்று முகம், நான்கு முகம் எனக் கிடைக்கும் ஆனால் ஏழு முதல் பதின்மூன்று வரையிலானவையே சாதாரணமாக கிடைக்கின்றது. முப்பத்திரண்டு முகம் உள்ளவைகள் மிகமிக அரிதாகவே கிடைக்கும். ஆனால் இவற்றின் விலை மிக அதிகமாகவே இருக்கும்.

ச.சிவகுமாரசர்மா
பாரீஸ் - பிரான்ஸ்

**அறம்பொருள் இன்பம் உயிரச்சம் நான்கின்**
**திறம் தெரிந்து தேறப் படும்**

அரசனால் பணி அமர்த்தப்படுபவன் அறமும், பொருளும், இன்பமும், உயிர்பற்றிய அச்சமும் ஆகிய நான்கு வகையாலும் மனப்பான்மை ஆராயப்பட்டுத்தேர்ந்தெடுக்கப்படுவான்.

# கோபுர தரிசனம் கோடி புண்ணியம்

தமிழீழ மண்ணை அலங்கரிக்கின்ற திருக்கோயில்களில் பறாளாய் முருகன் ஆலயம் என்னும் சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் - மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்று அங்கங்களினாலும் திருவருட்சிறப்பு மிகுந்தது. கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்றும், ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்றும் தமிழ் மூதாட்டி கூறியதிற்கமைய ஒவ்வொரு ஊர்தோறும் ஆலயங்கள் உருவாகி எம் மதத்தின் பெருமையை பேசி நிற்கின்றன. பக்த பெருமக்கள் செய்யும் வழிபாடானது அவர்கள் இதயத்திலிருந்து எய்த அம்பு போல மூலமூர்த்தியில் சேர்கிறது. மந்திர உச்சாடனங்களும், பஜனைகளும் அங்கே சென்று எல்லோருக்கும் மழைபோல பொழிகின்றதென தத்துவ நூல்கள் பேசுகின்றன.



சிறப்புக்கள் பலபொருந்திய எமதாலயத்தில் நிறைவேற்றி வைக்கப்பெற்றுள்ள பாரிய தெய்வத்திருப்பணிகள் அனைத்தும் அன்னையர் இருவர் அருகிருக்க மயில் மீதமர்ந்து அருள் மழைபொழிந்து வரும் சிவசுப்பிரமணியப் பெருமானது திருவருள் நோக்கினாலும், நம்முன்னோர்கள் ஒவ்வொருவரும் திரிகரணசுத்தியுடன் செய்த திருப்பணிகளின் பயனாலும், ஊர் மக்கள் அப்பெருமான் மீது கொண்ட தாளாத பக்தியுடன் கூடிய மனஎழுச்சியினாலும் அமையப்பெற்றுள்ளது.

பல்லாண்டு காலங்களுக்கு முன்பிருந்தே தாமரைத்தடாகக் கரையினில் காலத்தால் முதிர்ந்த வெள்ளரசும் வேம்பும் இணைந்த இப்புனிதம் மலிந்த திருப்பதியிலே வேலுருவில் தோன்றி - காலத்தால், கருத்தால், பக்திச்சுவை கூட்டும் பாடல் அமைப்பினால், காப்பியச் சிறப்பினால் போற்றப்படும் - கந்தபுராண படனத்தை செவிமடுத்து, சிறு ஆலயமாகி முன்னோர்களின் எண்ணத்தை செயலுருவாக்கிவித்து, படிப்படியாக இன்றைய நிலைக்குவர வழிசமைத்துள்ளான். எனவே இன்றைய திருப்பணிகளைச் செயல்படுத்த வேண்டுமென்ற எண்ணம் சிலஆண்டுகளுக்கு முன் எம்முள் எழுந்ததொன்றல்ல. எம் ஆலயவளர்ச்சியில் தம்மையே அர்ப்பணித்து ஆகுதியாக்கிய அருளாளர்களின் தியாகத்தின் பிரதிபலிப்பே ஆகும்.

ஆலயங்கள் கலை, கலாச்சாரம் இவைகளின் உறைவிடங்களாக விளங்கி வந்துள்ளன. சாஸ்திரங்களை அறிந்து நூல்களை இயற்றிய பலரும், கலா நிபுணர்களும் ஆலயங்களில்தான் அரங்கேற்றுவது வழக்கம். தெய்வத்திற்கு ஆபரணம் செய்வது, தேர் நிர்மாணிப்பது, கோபுரங்கள் அமைப்பது, சிற்பங்கள் செய்வது எல்லாமே ஆலயத்தை மையமாகக் கொண்டே வளர்ந்தவைகள்.

ஒரு ஆலயத்தின் அமைப்பு மனிதன் மல்லாந்து படுத்திருக்கும் நிலையைப் பிரதிபலிக்கிறது. ஆலயத்தின் வெளிக்கோபுரம்-பாதங்கள்: ஆஸ்தான மண்டபம் - கணுக்கால்: நிறுத்த மண்டபம் - தொடை: மகா மண்டபம்-மார்பு: அர்த்த மண்டபம்-முகம்: கர்ப்பக்கிரகம்-தலை: கர்ப்பக் கிரகத்திற்கு மேலுள்ள கோபுரம்-விமானம்: (விமானம் என்றால் அளவிடற்கரியது. அனுபூதி பெற்ற ஞானியின் அமர்ந்த திருக்கோலமே விமானம் என்பர்)



ஆலய நுழைவாயிலுள்ள பிரதான கோபுரமும் கர்ப்பக்கிரகமும் ஒரே நேர் கோட்டில் இருக்க வேண்டும். அதே வரிசையில் நந்தி, பலி பீடம் கொடிமரம் ஆகியன அமையும். கோபுரத்தை தரிசிப்பதே இறைவனை வணங்கும் பலனைத் தரும் என்பது நம்பிக்கை. ஆரம்ப காலத்தில் பக்தர்கள் கர்ப்பக்கிருகத்தின் மீதுள்ள விமானத்தை தரிசித்து இப் புண்ணியத்தை அடைந்தனர். வெளி கோபுரத்திற்கும் இம்மகிமை உண்டு.

ராஜ கோபுர வாயிலின் மேல் வாயில் போன்ற மாடங்கள் ஒற்றைப்படையில் அமைந்திருக்கும். இவைகள் பல தத்துவங்களை விளக்குபவன.


3 வாயில் - ஜாக்கிரத், ஸ்வப்ன, ஸுஷுப்தி

5 வாயில் - ஐம்பொறிகள் (மெய், வாய், கண், மூக்கு, செவி)

7 வாயில் - ஐம் பொறிகளுடன் மனம் புத்தி சேர்ந்தது

9 வாயில் - இந்த 7 உடன் சித்தம் அஹங்காரம் சேர்க்கப்படுகின்றன.

இத்தனை வாயில்கள் இருந்தும் உள்ளே பிரவேசிக்க தரை மட்டத்திலுள்ள வாயில்தான் உபயோகமாகிறது. அதேபோல் கடவுள் நாட்டம் கொள்ளும் போது மனம் என்னும் ஒரு கரணம்தான் நமக்குப் பயன்படுகிறது. ஏனைய கரணங்களை எல்லாம் இருக்கிறபடி வைத்துவிட்டு மனம் இறைவனை நாடி உள்முகமாகப் போக வேண்டும்.



கோபுரத்தில் சிற்பங்களை நம் இஷ்டப்படி வைத்துவிட முடியாது. இன்ன இன்ன இடத்தில் இன்ன தெய்வங்களைத்தான் வைக்க வேண்டும் என்ற நியதி உண்டு. கோபுரத்தின் பக்கங்களில் தேவதைகள், ரிஷிகள், பக்தர்கள் பூத கணங்கள் முதலிய உருவங்கள் அமைக்கப்பட வேண்டும். ராஜ கோபுரத்தையும் அதன் அமைப்பையும் கவனித்தால் சில அதிசயங்கள் தோன்றும், கணக்கற்ற சிறபங்கள் கோபுரத்தின் இடம் பெற்றிருக்கின்றன. தேவர்கள், மனிதர்கள், பிராணிகள் எல்லா உருவக்களுமே இடம் பெற்றிருப்பதைக் காணலாம். பிரபஞ்ச அமைப்பில் இவை யாவைக்கும் இடமுண்டு என்பது கோட்பாடு. அண்டத்தினுள் இன்னதுதான் இருக்கிறது; இன்னது இல்லை என்று பாகுபடுத்த முடியாது. இதைத்தான் கோபுரச் சிற்பங்கள் விளக்குகின்றன.





வாழையடி வாழையாக வந்த வழித்தோன்றல்களில் பக்திநிறை அர்ப்பணிப்பே மூலவரின் கருவறை மேல் அமைந்த இருதள (த்விதள) விமானமும், ஆறுமுக வேலவரின் விமானமும், அவரின்வாயிலில் அழகுற அமையப்பெற்ற கோபுரத்துடன் கூடிய சண்முகவிலாசமும் ஆகும். இவற்றில் இடம்பெற்ற கலைநயமும் உயிரோட்டமும் ஒருங்கிணைந்த சிற்பங்களும் அழகு நிறைந்து மிளிர்கின்றன. சுகாசனத்தில் அமர்ந்த நிலையிலுள்ள தென்முகக்கடவுளான தட்சிணாமூர்த்தியின் எழில் நிறைதோற்றம், நர்த்தனவிநாயகர், மேற்கே மஹாவிஷ்ணு, வடக்கே பிரம்மா, பாலதெண்டாயுதபாணி கிழக்கே முருகன் இவர்களின் பொலிவும் அழகும் கதைபேசி மகிழ்விக்கும். அவ்வாறே ஆறுமுகரின் விமானத்திலும் வாயிலிலும் இடம்பெற்றவை அழகுடன் திகழ்கின்றன. கொடி மரமண்டபம் எனப்படும் ஸ்தம்ப மண்டபம் எனது பெருமதிப்பிற்குரிய தாத்தாவும் ஊர்மக்களின் பேரபிமானம் பெற்று அவர்களால் கோவிலடி - சின்னையா குருக்கள் என்று அன்புடன் அழைக்கப் பெற்றவருமான வேதாரணியேஸ்வர குருக்கள் அவர்களின் எண்ணத்திலும் அவரின் புதல்வர் - சிவசுப்பிரமணிய குருக்கள் கைவண்ணத்திலும் அன்று உருவானவை - இன்று மேலும் அழகுற மிளிர முருகன் திருவருள் புரிந்து செயலாக்கும் பெரும்பேற்றினை அடியேனுக்கும் அருளியுள்ளான். வாயில் முகப்பினில் வினை தீர்க்கும் விநாயகரும், நடுநாயகமாக தேவியருடன் மயில் மீதமர்ந்த கோலக்குமரனும், அருகே அன்னையுடன் அருகமர்ந்த அகிலாண்டநாயகனும் வீற்றிருந்து அருள்பாலிக்கிறார்கள். முன்பு மண்டபத்திலிருந்த பாரிய





தூண்கள் அகற்றப்பெற்று, கலை அழகுடன் கூடிய தூண்கள் மேலே ஊசிக்கால்களின்றி வேலைப்பாடமைந்த வளைவுடன் முன்பிருந்ததைவிட உயரமாகவும் அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி மண்டபம் அவர்தம் ஞாபகார்த்தமாக "வேதாரணியேஸ்வர குருக்கள் மணிமண்டபம்" என்ற பெயருடன் அமைந்துள்ளது.

இப்படி மிகச்சிறப்பான ஆலயத்தையும் அங்கு வழிபடும் பேற்றினையும் நம் முன்னோர் நமக்கு ஏற்படுத்திக் கொடுத்துள்ளதை போற்றிப்பாதுகாத்தல் நமது கடமை. "அவன் அருளாலே அவன்தாள் வணங்கி" என்றபடி இப்பெரும் புண்ணிய கைங்கர்யத்தை நாம் செய்வதற்கு கிடைத்தது முன்செய்த தவப்பயனே. பக்த பெருமக்கள் அனைவரினது கனவும், அபிலாசைகளும்தான் கோவிலின் ஒவ்வொரு பகுதியிலும் புதுப்பொலிவுடன் விளங்குகின்றது.



குறிப்பாக திருக்கோவில் மூலஸ்தானம், ஷண்முகர் விமானம், ஷண்முகவிலாசம் என்ற தெற்கு கோபுரம் போன்றவற்றிற்கு, முன்னோர்கள் செய்த திருப்பணியினை அதன் பரம்பரையினர் விடாமல் தொடர்ந்து செய்து, தமது பாரம்பரியத்தையும், தொண்டினையும் நிலைநாட்டியமை பாராட்டத்தக்கது. அதேபோல சுமார் 20 வருடங்களுக்கு முன் கல்காரமட்டம் வரை கட்டியபடி இருந்த இராஜகோபுரத் திருப்பணி "என்றோ முடிந்த முடிவு" என்ற யோகர் சுவாமிகளின் வாக்குப்படி டென்மார்க் நாட்டில் வித்திடப்பட்டது. டென்மார்க் கோர்ணிங் நகரில் உள்ள ஸ்ரீ சித்தி வினாயகர் ஆலயத்தை கட்டுவதற்கு அடியேன் சென்றவிடத்தில் அக்கோவில் திருப்பணியில் தம்மை முழுமையாக அர்ப்பணித்துள்ள இந்து சமுத்திரத்தின் 'நன்முத்தாம்' ஸ்ரீமதி நல்லமுத்து அம்மையாருடைய தாயன்பை அனுபவிக்கும் பாக்கியம் கிடைத்தது.

அப்போது நமது நாட்டில் - சொந்த மண்ணில் - எம்குலதெய்வத்தின் இராஜகோபுரம் சிறப்பாக அமைய வேண்டும் என்ற பேராவாவினை எழுப்பினார்கள். நாட்டின் நிலமை, பொருளாதாரம் எல்லாவற்றையும் கடந்து இராஜகோபுரதிருப்பணி ஒன்றே தமது குறிக்கோள் என்பதை மிகவும் உறுதியுடன் அவர்கள் கூறினார்கள். அத்துடன் மிகவிரைவில் யாவும் சீரடையும் - அதே விரைவில் கோபுரத்திருப்பணியை செய்வோம் என்று 1999ம் ஆண்டு அங்கேயே சங்கல்பமானது. அதனைத் தொடர்ந்து 2003ம் வருடம் வைகாசி திருவிழாவின் பின்பு நடந்த தர்மகர்த்தா சபை கூட்டத்தில் ஆலயத் திருப்பணி சம்பந்தமாக பல விஷயங்கள் என்னிடம் ஆராயப்பட்டன. அவற்றில் முக்கியமாக,

1. இராஜகோபுத்திருப்பணி செய்வதற்கு நிதிநிலை இல்லை என்பதும்,

2. கோவில் திருப்பணிகள் யாவும் 2004ம் வருடம் வைகாசித் திருவிழாவிற்கு எந்தவித பாதிப்பும் இல்லாமல் நிறைவடைந்து கும்பாபிஷேகம் நடைபெற வேண்டும் என்பதும் வலியுறுத்தப்பட்டன.



அப்போது அடியேனை வாழ வைத்த தெய்வம் கந்தனுக்கு கோவில் செய்யக் கிடைத்தமை முன்செய் தவப்பயன் மாத்திரமல்லாது ஸ்ரீமதி நல்லமுத்து அம்மையார் சொன்ன வாக்குப்படி தொடர்வோம் என்றும் - அதில் ஏதும் மாறுபாடு இருந்தாலும் - எப்பாடுபட்டாகிலும் இப்பணியை செய்வேன் எனவும் இக் காரியம் நிறைவு பெற எல்லாம் வல்ல பறாளாய் முருகனின் துணை உண்டு என அந்த முருகனே என்னைக் கூற வைத்தான் என்றால் மிகையாகாது. அதேபோல் வைகாசி திருவிழா இந்தவருடம் தடையேதுமின்றி நடைபெற அவனே





செய்யவைப்பான் என என்னை உரைக்க வைத்தது மாத்திரமின்றி சற்றும் எதிர்பாராதபடி 22 வேலை ஆட்களை இந்தியாவிலிருந்து வரவழைத்து அச்செலவில் பெரும்பகுதியை தாங்குகின்ற வலுவினையும் எனக்கு கொடுத்து அடியேனைக் கருவியாக்கி தானே முன்னின்று இத்திருப்பணியை செய்வித்தான் என்பதே சர்வ நிட்சயமான உண்மை. இத்திருப்பணியில் தம்மை அர்ப்பணித்த நன்முத்தாம் நல்லமுத்து அம்மையாரிடத்தும், அல்லும் பகலும் கண்துஞ்சாது தெய்வப்பணியே உயிர்மூச்சு என பாடுபட்ட இரத்தினசபாபதியிடத்தும், பறாளாய் முருகன் தொண்டர்சபை இளைஞர்களிடத்தும் தனது பராக்கிரமத்தையும் பெரும் உந்து சக்தியையும் வாரிவழங்கி தனது கருணையால் யாவற்றையும் குறைவின்றி செய்த கந்தனின் கருணையே கருணை. மேலும் இவ்வாலய இராஜகோபுரம் மற்றும் ஏனைய விமானங்கள் போன்றவற்றை எமது கருத்துப்படி சிறிதும் குறைவின்றி புதுமையான வர்ணத்திலும் குறைவான கால அவகாசத்தில் ஒரு தடவை பார்த்தால் போதாது என மீண்டும் மீண்டும் பார்த்துப் பரவசமாக்கும் வண்ணம் வர்ணம் தீட்டிய திருநெல்வேலி ராஜூ குழுவினரின் திறமையும் மெச்சத்தக்கது.

பொதுவாக எங்கே பார்த்தாலும் எல்லோரும் பலவித துன்பங்களை அனுபவித்து வருவதற்குக் காரணம் கடவுள் நம்பிக்கை, வழிபாடு குறைந்து வருவதே. தெய்வ வழிபாடு இல்லாவிட்டால், பிறவி வீணாகும். கடவுள் அருள் எங்கும் எப்போதும் கிடைக்கும். நாம் அதைப்பெற முயற்சிக்க வேண்டும். அதற்கு இறைவன் நினைவு எப்போதும் வேண்டும்.

மழை பெய்கிறது. எல்லா பாத்திரங்களுக்கும் ஒரே மாதிரிதான் தண்ணீர் கிடைக்கிறது. ஒரு பாத்திரம் காலியாக இருந்தால் அப்பாத்திரம் முழுவதும் தண்ணீர் நிரம்பும். ஒரு பாத்திரத்தில் முக்கால் பங்கு மண் இருந்தால் கால் பாகம்தான் தண்ணீர் நிரம்பும். அந்த மண் அகற்றப்பட்டு விட்டால் அப்பாத்திரம் முழுவதும் நீர் நிரம்பிவிடும். உடலாகிய இந்த பாத்திரத்தில் காமக் குரோதாதி மலங்கள் நிரம்பியிருக்கின்றன. அவை வெளியேற்றப் பட்டால்தான் தெய்வ அருள் நிரம்பும். கோவிலில் இருப்பது வெறும் கல்தானே என்று எண்ணுபவர்களுக்கு வெறும் கல்லாகத்தான் இருக்கும். நம் அருமைக் குழந்தையுடைய படத்தைப் பார்க்கும் போது நேரில் குழந்தையைப் பார்ப்பதாக ஆனந்தம் அடைகிறோம். ஒரு குழந்தை எவ்வளவு பெரியதாக இருக்குமோ அவ்வளவு பெரிதாகக் கூட அப்படத்தில் குழந்தை காணப்படவில்லை. ஆயினும் அச்சிறு படத்திலுள்ள குழந்தையின் உருவத்தை குழந்தையாகவே நினைக்கிறோம். வெறும் போட்டோ காகிதம் என்று நம் மனதில் படுவதில்லை. ஆகவே நமது மனோபாவத்தைப் பொறுத்தே எல்லாம் அமைகிறது. உடம்பின் பயன் இறைவனை வணங்குவதாகும். அறிவின் பயன் இறைவனை அறிவதாகும். ஆலயங்கள் இறைவனை நாம் சுலபத்தில் காணவும், கண்டு உணரவும் கூடிய வகையில் அமைக்கப்படுகின்றன. ஆலயத்தின் பெரும் மதில்சுவர்கள் உலக பந்தத்திலிருந்து ஆலயத்தைத் தனியே பிரிக்கிறது. வழிபடுபவர், வெளி பிராகாரம் பின்னர் உள் பிராகாரம் பின்னர் அதனுள் உள்ள பிராகாரம் இம்மாதிரி வலம் வருவதன் தாத்பரியம் உலகபந்தத்தை சிறுகச்சிறுக விட்டொழிப்பதைக் குறிப்பாக உணர்த்துவதே.



பக்தன் கர்ப்பக்ரகத்தின் முன் நிற்கும் போது நிச்சயமற்ற - உலக பந்தம் எல்லாவற்றையும் ஒழித்துவிட்டதாகவே கூறலாம். எதுவும் அவனுக்கு முட்டுக்கட்டை போடாத நிலையில் - மெய் மறந்து பக்திப் பரவசமாக கடவுளிடம் மனதைச் செலுத்தி அவன் நிற்கிறான். கடவுளை ஆராதிப்பதில் அவன் தன் முழு எண்ணத்தையும் செலுத்தி இருக்கிறான். அவனுக்கு உலகம்

என்று ஒன்று இருக்கிறது என்பதை ஓசைகள், சந்தடிகள் இவை காதில் பட்டு நினைவூட்டாமல் இருப்பதற்காகவே இவ்வளவு பிராகாரங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. மனதை ஒரே நிலையில் நிறுத்தி கடவுளைத் தியானிக்க வசதி செய்யும் பொருட்டே அமைதியின் இருப்பிடமாக ஆலயங்கள் அமைந்துள்ளன. வெளிக்கோபுரம் முதல் கர்ப்பக்கிரகம் மீதுள்ள விமானம் வரை ஒவ்வொரு பிராகாரமாகத் தாண்டி வருவது போலவே ஒவ்வொரு புலன்களையும் அடக்கி கடவுளிடம் மனதை லயித்து ஆத்மானந்த பலனை அடைய முயற்சிக்க வேண்டும்.

இந்த கோயில்கள் பூஜைகள் தடையுறாது நிலை பெற்று அண்ட சராசரங்களிலுள்ள சக்திகளைக் கூட்டி அதனை மந்திர தந்திர உபாயங்களினால் நிலைபெற செய்து அங்கே உருவச் சிலைகளை பொருத்தி அதனால் மக்கள் பயன்பட வேண்டும் என பூஜை முதலியவைகளால் வழிபடும் இடமே கர்ப்பக்கிரகம். இதன் உச்சிக் கலசத்திற்கு நேர் மையத்தில் மனம் ஈர்க்கப்படும்வகையில் மூலஸ்தானம் அமைகின்றது. யந்திரத் தகடுகள், பொன், வெள்ளி, வைரம் முதலிய சிறப்புமிக்க பொருட்களைச் சேர்த்து விக்ரகத்தை அதன்மேல் ஸ்தாபித்து மூலிகை மருந்துகளால் கெட்டித்து மந்திரங்களுடன் பிரதிஷ்டை செய்யப்படுகிறது.

இவ்விதமாக உலோக சக்தி, மனோ சக்தி, மந்திர சக்தி, யந்திர சக்தி, ஆன்ம சக்தி ஆகிய சக்திகளால் கல் தெய்வீக சக்தி பெறுகிறது. இவ்விதமாக தெய்வீகச் சக்தியைத் திரட்டி மூர்த்தி வடிவில் சேமித்து வைப்பதே ஆலயங்களில் விக்கிரகங்கள் அமைப்பதின் நோக்கம். (வி + கிரகம், வி - விசேஷம், கிரகம் - இடம். இறைவன் விசேஷமாக இருக்கும் இடம்.)



நாம் ரூப குணாதிசயங்கள் உள்ள சகுணமான இறைவனை மனதில் இருத்தி தியானிப்பது சுலபம். இறைவனை விக்கிரக ஆராதனை மூலமே சாதாரண மக்கள் கண்டு அனுபவிக்க முடியும். இதற்கு வேதாந்தம், தத்துவம், ஞானம் வேண்டியதில்லை. மனதிற்கு ஒரு பிடிப்பு ஏற்படுவதற்காக இஷ்ட தேவதையிடம் மனதை இருத்தி தியானம் செய்ய வேண்டும். இதற்குப் பிரமாணமாக நமது வேதங்களும், ஸ்மிருதிகளும் ஆகமங்களும், இதிகாச புராணங்களும், பகவத்கீதையும், இவற்றின் பாஷ்யங்களும் உள்ளன.



அரணிக் கட்டையில் முழுவதும் நெருப்பு இருப்பினும் முயற்சியால் ஒரே இடத்தில் தொடர்ந்து கடைந்தே அக்னியை உண்டாக்க முடியும். அது போல் சர்வ வியாபியான பரப்பிரும்மத்தை ஆலயமாகிய பசுவின் கர்ப்பகிரகமான மடியிலிருந்து விக்ரகமாகிய காம்பின் மூலமே பாலாகிய தெய்வீக சக்தியை பெறமுடியும்.

இவ்வாறு ஆகம விதிகளின்படி ஆலயங்கள் அமைத்தலும், அவற்றைப் பேணி பாதுகாத்து நம் வருங்கால சந்ததியினர் பயனுறச் செய்தலுமே மிகப்பெரிய புண்ய காரியமாகும். இவ்வரிய தொண்டில் எனை ஈடுபடுத்திய எல்லாம் வல்ல பறாளாய் முருகனின் கருணையினை வியந்து, நாம் எல்லோரும் பக்தி மார்க்கத்தில் நிலைபெற்று சகல பேறுகளையும் பெறவேண்டுமாய் பிரார்த்திக்கின்றேன்.

"மேன்மை கொள் சைவ நீதி
விளங்குக உலகமெல்லாம்"

இப்படிக்கு,

**சிவ. பாலகுமாரசர்மா** பறாளாய்




"ஒரு திரு முருகன் வாந்தாங்கு உதித்தனன் உலகமுய்ய"

வியாகரண சிரோமணி

(அண்ணாமலை சர்வகலாசாலை)

சிவாசார்ய கலாநிதி

**சிவஸ்ரீ பூரண.தியாகராஜக்குருக்கள் B.A Hons (Cey)**

திரிகோணமலை - வில்லூன்றிக் கந்தசுவாமி கோவில் பிரதான சிவாசார்யர்,

மட்டக்களப்பு - சிவாநந்த வித்யாலய முன்னாள் சமஸ்கிருத, இந்துநாகரீக விரிவுரையாளர்,

பூர்ணானந்தகுருகுல - வேத - சாஸ்திர - ஆகமகலாசாலை அத்யாபகர்.


*இந்திரன் குமரியோர் பால் எயினர் தம் பாவை யோர் பால்*
*சந்தத மிருப்ப போனோர் முனிவரர் சங்கஞ் சூழப்*
*பந்தம தகலுந் தொண்டர் பரிவுடன் குகவென்றேத்தக்*
*கந்தனாங் கிருந்த மாட்சி கழறுதற் கெளிதன் றம்மா.*

இவ்வுலகிலேமனிதராகப் பிறவியெய்திய நாம் பிறவிப் பெருங்கடலைநீந்திக் கடைத்தேற இறைவழிபாடு ஒரு ஒப்பற்ற புனையாக அமைகின்றது. தன்னைவழிபடும் உயிர்களின் பரிபக்குவநிலைகளுக்கேற்ப இறைவனும் பலவீத திருக்கோலங்களில் காட்சி தருகின்றான். துஷ்ட நிக்ரஹ சிஷ்டபரிபாலனஞ் செய்ய – கெட்டவர்களை அடக்கி, அழித்து, நல்லலோரைக் காப்பதற்காக எடுக்கும் அவதாரங்களுள் இக்கலியுகத்திலே கண்கண்ட தெய்வமாக கருணைக் கடலான விளங்குகின்றார் கந்தப் பெருமான். இதனை,

*க்ருதேதுப்ரம்ம ஜிக்ஞாசா*
*த்ரேதாயாம் ஜாநகீபதி:!*
*த்வாபரே பகவான் க்ருஷ்ண:*
*கலௌ ஸ்கந்த: ப்ரகீர்த்தித:!*

கிருதயுகத்தில் பிரம்மவிசாரனையும், திரேதாயுகத்தில் ஸ்ரீ ராமபிரானும், துவாபரயுகத்தில் ஸ்ரீ கிருஷ்ணரும், கலியுகத்தில் கந்தப்பெருமானும் வரமருளும் மூர்த்திகளாம் என்றும் வட மொழிப்பாய்மூலம் அறியலாம்.

முன்னொருகாலத்தில் தவஞ்செய்து சிவபிரானிடம் பெற்ற வரத்தினால் இறுமாப்படைந்து ஆயிரத்தெட்டு அண்டங்களையுமடக்கியாண்டு அமரர்களைக்கூட அடிபணியச் செய்து வந்த சூரபதுமனால் துன்புற்ற தேவர்கள் சிவபிரானிடம் சென்று பிரார்த்தித்தனர். எங்கும் நிறைந்த பரம்பொருள் ஏளி உருவமாக – நெற்றிக்கண்ணிலிருந்து ஆறு பொறிகளாக உருவெடுத்தது.

மனிதர்கள் தெய்வத்தையடைய மேல் நோக்குகிறார்கள் தெய்வமும் மனிதரை உய்விக்கத் தனது உயர்நிலையிலிருந்து ஒரம்சமாக ஒளிப்பிழம்பாக கீழ்நோக்கிப் பாய்ந்து உலகோடு உலகாய் நிலைத்து மாந்தர் ஆர்வமுடன் உள்ளன்போடுதேடினால் கிடைக்கும் பொருளாகச் சுடர் விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது. அதுதான் ஸ்கந்த – கந்தன் எனும் திவ்வியமூர்த்தி.

(ஸ்கந்த – எதிரிகளை வற்றச் செய்து அழிப்பவன், கந்தன் (கந்து) யானைகட்டும் தறி) ஆண்மாக்களக்குப் பற்றுக் கோடாயிருப்பவன் என்றும் கூறலாம். சிவனாரின் நெற்றிக் கண்ணிலிருந்து ஒளிக்கற்றைகளாய்த்தோன்றியதைச் சுமந்த வாயுதேவனும் அக்கினி தேவனும் தாங்கொணாது, கங்கையில் விட்டனர் கங்கையுமதனை நாணற்புல் நிறைந்த சரவணப்பொய்கையில் ஒதுக்கினாள். இருளில் ஒளிதோன்றியது. உலகினை உய்விக்க உத்தமன் தோன்றினான். கார்த்திகைப் பெண்கள் அறுவரும் சீராட்டித்தாலாட்டி உலகிற்கு ஆறுதலளிக்க வந்த ஆறுமுகக் கடவுளை வளர்த்தனர். கங்கை சுமந்தமையினால் காங்கேயன், சரவணப் பொய்கையிலிருந்தமையால் சரவணபவன், கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப்பட்டதால் கார்த்திகேயன், என்றும் இளைஞன் எனவே குமாரன் (கு = பூமி, மார = மன்மதன் எனவே பூமியில் மன்மதன் பொற் பேரழகன். கு+மார என்பதனை குத்ஸித: – மார: யோக என்று அன்மொழித் தொகையைக் கொண்டால் மன்மதனையே கீழாகச் செய்த – பழிக்கின்ற பேரழகுவாய்ந்தவன் என பல பொருள்களைக் கூறலாம்.) எனபல திருநாமங்களால் போற்றப்படுகின்றான் குமரப் பெருமான். மேலும், அசுரர்களை அடக்கச் சிவனால் இயலாதா? அப்பேரொளியெ இருளைப் போக்க இயலாதா? அசுரரை அழிக்க இவ்வளவு பிரயாசை தேவையில்லை இச்சாமத்திரம் ப்ரபோ: ஸ்ருஷ்டி: கடவுள் நினைத்தவுடனேயே எதனையும் செய்ய வல்லவர் என்பது கருத்து. ஆனால் உலகில் ஆட்சிபுரியும் அசுரத்தன்மையை மாற்றி அதில் தெய்வத்தன்மையை நிலைநாட்டவேண்டுமானால்

சடப்பொருளைச் சைதமன்யமாக்க = உணர்வுள்ள தாக்க வேண்டுமெனில் அனைத்துக்கும் மேலே பரமாகாசத்தில் விளங்கும் அகண்ட சோதியிலிருந்து ஓர் ஒளி தோன்றி இம்மானிலத்தைப் படிப்படியாக ஊடுருவி வருதல் மிக அவசியமே. அவ்வொளிதான் கந்தன் சிவபெருமானின் ஐந்து முகங்களும் அதோ முகமும் சேர்ந்து ஆறுமுகப்பரம்பொருள் ஆயிற்று படிமுறையாக வந்த இந்நிலையினை வேதமானது "ஆகாசாத் வாயு: வாரக்னி..." ஆகாசத்திலிருந்து வாயுவும், வாயுவிலிருந்து அக்கினியும் அக்கினியிலிருந்து நீரும் நீரிலிருந்து பிருதிவியும் என விதந்து ஓதுகின்றது. தெய்வத்துக்கு எதிரான சக்திகளை அடக்கி அவைகளையும் தெய்வீகப் பண்பில் திருப்புவதே இப்பேரொளியின் சிறப்பான கருமம். சூரனைச் சங்கரித்ததும் மயிலாக மாறிய சூரனைத்தனது வாகனமாக்கி அசுரனையும் தெய்வத்தைச் சுமக்குமாறு மாற்றிவிட்டான். முருகனுக்கு மயூரவாஹனன் மயில்வாகனன் என்று ஏர்நாமமுண்டல்லவா! தனக்கு எதிரானவற்றை அழிப்பதைக் காட்டிலும் அவைகளைத் தன் பக்கந் திருப்புவது மிகக் கடினம் இக்கடினமான செயலைச் செய்யவே தேவசேனைக்குத் தலைமை தாங்கி தேவசேனாதிபதி எனவும் பெயர் பெற்றார்.

ஒருவன் ஒரு செயலை நிகழ்த்தி நிறைவு செய்ய இச்சை, கிரியை, ஞானம் என மூன்று சக்திகள் மிக முக்கியம் முதலில் இச்சை (ஆசை), தொழிற்படக் கிரியை, முறைதவறாமல் நிகழ்ந்த ஞானம் ஆக முப்பெருஞ்சக்திகளும் இணைந்தாற்றான் ஒரு செயல் பூரணத்துவம் அடையும் என்பதனை விளக்கவே இச்சக்தி கிரியாசக்தி ஞானசக்தி உருளினராக வள்ளி, தெய்வனை, வேல் ஆகியவற்றுடன் உலகினை உய்விக்க வந்த முருகப் பெருமான் காட்சி தருகின்றார். கந்தசுவாமியாரின் வலப்பக்கத்திலுள்ள வள்ளியின் திருக்கரத்தில் தாமரையும், இடப்பக்கத்திலுள்ள தெய்வானையம்மனின் திருக்கரத்தில் நீலோற்பல மலரும் உள்ளது. கந்தனின் வலக்கண் சூரியன் இடக்கண் சந்திரன், வலக்கண்ணான சூரியனின் ஒளி எப்போதும் விழுந்து கொண்டிருப்பதால் தாமரை எப்போதும் மலர்ந்த படியே இருக்கும் அஃதே போல் இடக்கண்ணாகிய சந்திரஒளி எந்நேரமும் பட்டுக்கொண்டிருப்பதனால் நீலோற்பல மலரும் மலர்ந்த நிலையில் எப்போது மிருக்குமன்றோ!

முற்பிறப்பிலே சூரன், பதுமன் என இருவராய் இருந்து முருகனை வேண்டித்தவமிருந்தவர்களே மறுபிறப்பில் சூரபத்மன் என ஒருருவம் கொண்டு பிறந்தனர். சூரன் ஆணவ ஸ்வரூபம் பதுமன் ஞானஸ்ரூபம் எனவேதான் மாமரமாயிருந்த சூரன் வேலினாற் பிளக்கப்பட்டு இருகூறானதும் ஒரு பகுதி மயிலுருவாகி வந்த ஆணவ மயமான சூரனைத் தனது வாகனமாக ஏற்றும் மறுபகுதி ஞானரூபனான பதுமன் சேவலாகிவர, அதனை கொடியில் வைத்தும்.உயர்த்தித் திருவருள் பாலித்தார் முருகப் பெருமான் இவ்வருட்செயல் மூலம் ஆணவம் அடக்கப்பட வேண்டும் ஞானம் உயரும் என்ற பேருண்மை தெளிவாகின்றதல்லவா!

ராமாயணம், பாரதம் முதலிய நூல்களில் எதிரிகளை கொன்றதாக வரலாறுண்டு. ஆனால் கந்தபுராணத்திலே முருகவேல் பகைவனாகிய சூரனை வதைக்கவில்லை. அடக்கி ஆட்கொண்டருளினார். அத்துடன் வேல்பட்ட சூரன் இருகூறாக்கி சேவலும் மயிலுமாகி முருகனின் அருளுக்குப் பாத்திரமாகி என்றும் அவருடன் சேர்ந்தே இருப்பதனால் முருகனைப் பக்தர்கள் வணங்கும் போது அவனும் வணங்கப்படும் பெரும் பேற்றினைப் பெற்றுவிட்டானன்றோ! முருகன் அருள்கிடைத்துவிட்டால் என்னதான் நிகழா?

*தீயவை புரிந்தாரேனும் குமரவேல் திருமுன் உற்றால்*
*தூயவராகி மேலைத் தொல்கதியடைவர் என்கை*
*ஆயவும் வேண்டும் கொல்லோ? அடுசமர் இந்நாட் செய்த*
*மாயையின் மகனுமன்றோ! வரம்பிலா அருள்பெற்றுய்ந்தான்*

இதன்மூலம் நாம் அறிவது என்னவெனில் கருணைக்கடலான முருகப் பெருமான் திருமுன்னிலையில் சென்று வணங்கினால் நாமும் இஷ்டசித்திகளைப் பெற்று உய்யலாமன்றோ!

மெலும் 'அ'கார, 'உ'கார, 'ம'கார என்ற "ஓம்" கார ஸ்வரூபமாக விளங்கும் கந்தன்

*"அ"காரோ விஷ்ணுருத்திஷ்ட:*
*"உ"காரஸ்து மஹேஸ்வர:!*
*"ம"காரஸ்து ஸ்ம்ருதா ப்ரும்ஹா*
*பிரணவ.ஸ்து த்ரயாத்மக:!!*

என்பதன் மூலம் பிரம்ஹ, விஷ்ணு, ருத்ரரூபியாகவும் விளங்குகிறார் என்றும் ஆன்றோர் கூறுவர். மேலும் மயில் பிரணவஸ்வரூபம் மயில் ஆடும் போது வலது காலிலிருந்து தொடங்கித் தோகையைச் சுற்றி வலமாகக் கொண்டுவந்து இடது காலடியில் முடித்துப் பார்த்தால் ஓம் என்ற பிரணவ எழுத்து வடிவமாகக் காட்சிதரும் இதனை

*ஆன தனி மந்த்ர ரூபநிலை கொண்டது*
*ஆடும் மயிலென்ப தறியேனே* என அருணகிரிநாத சுவாமிகள் அழகாகக் கூறுகின்றார்.

கலியுகத்தில் கண்கண்டதெய்வமாக – கலியுக வரதனாகக் காட்சிதரும் ஷண்முகப் பெருமானைத் தாலாட்டி வளர்த்த கார்த்திகைப் பெண்டிரும் ஆறுபேர் படைவீடுகளும் ஆறு அவருக்குரிய சக்திவாய்ந்த மந்திரத்திலுள்ள அஷரங்கள் = எழுத்துருக்களும் ஆறு கைமேல் பலன்தரும் விரதமான ''கந்தசஷ்டி'' விரதநாட்களும் ஆறு யந்திரமும் ஆறு கோணங்களினால் அமைந்தது.

அருட்சக்திமிக்க கந்தசுவாமியாருக்கு பாரதநாட்டிலும், நம்நாட்டிலும் பெரும் புகழ்பெற்ற திருத்தலங்கள் பலவுள, கந்தபுராணக்கலாச்சாரம் மிகுந்த யாழ் நகரில்லும் நல்லூர், மாவிட்டபுரம், கந்தவளக்கடவை, போல, வயல்கள் சூழ்ந்து பக்தி மணங்கமழும் ஷோத்திரமாக விளங்கும், புகழ் பெற்ற பறாளாய் என்னுந் திருத்தலத்திலே கோயில்கொண்டெழுந்தருளி அருள் மழைபொழியும் கண்கண்ட தெய்வமான முருகப் பெருமானுக்கு மஹா கும்பாபிஷேகம் எனும் பெருஞ்சாந்தி வீழா நிகழுமிச் சுப தினங்களிலே இந்திரன் குமரிகோள்வனும், வள்ளீகாந்தனும் ஆறுதலை கொண்ட (ஆற்றினை – கங்கையினை தலையிற்றரித்த) பரமசிவனாரின் அருட்குமாரனும், ஆறுதலைகொண்டவனும், கமலாம்பிகா சமேத திருவாரூர்தியாகராஜப் பெருமானின் உள்ளங்கவர் கள்வனும், திருகோணமலை வில்லூன்றிம் பதியில் எழுந்தருளிய எம்குலத் தெய்வமுமான – பறாளை ஸ்ரீ முருகப்பெருமானை தரிசித்து மனமுருகிப் பிரார்த்தித்து அவனருளாலே சகலநலன்களை இஷ்டசித்திகளையும் மன ஆறுதலையும் பெற்றுப் பூரணமான ஆனந்தவாழ்வு பெற்று வாழ்வோமாக.

(அயிகிரிநந்தினி.. என்ற மகிஷாஸுர மர்த்தினி – ஸ்தோத்ர மெட்டு)

*ஸுரபதி பாலித புத்ரி மனோஹர*
*பூஸுரஸ்தாபித வல்லீபதே*
*க்ஷேத்ர பரீவ்ருத ஸத்ம ஸுபூஜித*
*பூர்ண பல ப்ரத தாத குரே!*
*ஷடிதி ஸுகல்பித கோண விராஜித*
*(ம) யந்த்ர ஸமர்ச்சந துஷ்ட மதே*
*ஜய ஜயஹே பறாளாய் ஸ்தல வாஸக*
*ஷண்முக சம் குரு பாலய மாம்!!*

(ஆக்கம்:-பூரண தியாகராஜ சிவாசார்யார்)

இதன்பொருள் – தேவர்தலைவனாமிந்திரன் புதல்வியான தேவசேனையின் உளம்கவர்ந்ததவா! பூதேவர் என்று போற்றப்படும் அந்தண உத்தமர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்ட பெருமானே! வள்ளிமணாளா! வயல் சூழ்ந்துள்ள ஆலயத்திலே பூசிக்கப்படுகின்ற தேவா! (மனதார வேண்டித்துதிக்கும் அடியார்களுக்கு) பூரணமான பேறுகளையருளித்தருள்பாலிப்பவனே! தந்தைக்கே குருவான சுவாமிநாதா! ஆறு கோண யந்திரந்தன்னில் உள்ள மந்திரத்தால் (ஷடஷரமந்திரத்தினால்) மனம் மகிழ் இறைவா! ''பறாளாய்'' எனும் பதியிலே எழுந்தருளிய ஷண்முகா! வெல்க! வெல்க!! மங்களம் தருவாய்! என்னைக் காத்தருள் புரிவாயாக.
(ஷேத்ர – வயல், ஸத்ம – கோயில், துஷ்ட – மகிழ்ந்த)

*"ஸர்வே ஜநா:ஸுகினோ பவந்து"*
*மக்கள் அனைவரும் இன்புற்று வாழ்வார்களாக*

*சுபம்.*

''ராஜ்கமல்''
வேலூர், கல்லடி,
மட்டக்களப்பு.



# ரதோற்சவ மகிமை



"சிவாகம க்ரியா ஜோதி"
**சிவஸ்ரீ தியாகராஜ கமலராஜக் குருக்கள், (ரவி)**
இந்துசமய குரு
பயிற்றப்பட்ட ஆங்கில, கணித ஆசிரியர்
மட்/ கன்னங்குடா மகாவித்தியாலயம்
மட்டக்களப்பு

ஆலயங்களில் வருடந்தோறும் நடைபெறும் மகோற்சவத்திலே ரதோற்சவம் – தேர்த்திருவிழா என்றதமே சைவமக்கள் மனதிலே பக்தி கலந்த ஆனந்தம் ஏற்படும். பல ஊர்களில் இருந்தும் பல்லாயிரக் கணக்கிலே மக்கள் குடும்பமாகச் சென்று இறைவனைத் தரிசித்து நேர்கடன்களைச் செலுத்தியும், அங்கப்பிரதஷணம் செய்தும் பெண்கள் அடிஅழித்தல் (இறைவன் வீதியுலாவரும் போது பெண்கள் திருவுருவத்தின்பின் தொடர்ந்து பஞ்சாங்க நமஸ்காரம் செய்தவாறு இறைவனின் திருப்பாதம் பதிந்த இடங்களைத் தங்கள் கைகளால் பூசி மெழுகி வணங்குதல்) காவடி எடுத்தல், கர்ப்பூரச்சட்டி எடுத்தல் பஜனை செய்தல் ஆகியன செய்தும் தங்கள் கைகளினாலேயே தேர்வடம் (தேர் இழுக்கும் கயிறு) பிடித்துத் தேரினை இழுத்தும் மன நிறைவு கொள்வது தொண்டு தொட்டு நிகழ்ந்துவரும் வழமையான செயலாகும்.

ரதோற்சவம் என்றால் தேர்த்திருவிழா என்று பொருள். ரதோற்சவத்தின் தத்துவத்தை ஓரளவு விளக்குவோம். பரம்பொருளாகிய சிவபெருமான் திரிபுர அசுரர்களை அடக்குவதற்காக சூரிய சந்திரரைத் தேர்ச்சில்லாகவும், நான்கு வேதங்களைக் குதிரைகளாகவும், மற்றைய சரம், அசரம் (அசைவன அசைவற்றன ஆகிய) பொருட்களை ஒவ்வொரு உறுப்பாகவும் கொண்டு அமைக்கப்பட்ட தேரிலே எழுந்தருளினார். மேருமலைவில்லாகவும், விஷ்ணு அம்பாகவும் அமைய பிரமன் சாரதியாக இருந்து பிரணவமாகிய சவுக்குக் கொண்டு தேரைச் செலுத்தினார். சிவபிரான் முப்புரத்தசுரர்களைத் தனது அட்டகாசத்தின் மூலம் அதாவது சிரிப்பினால் முப்புரங்களையும் அழித்து சிவபக்தி வழுவாதிருந்தமையினால் அவர்களை அடிமைகளாகக் கொண்டு தம்பதமளித்து அருளினார். ஆகவே திரிபுரசங்கரத்து உண்மைக்காட்சியினை உணர்த்தி அதன் மூலம் ஆணவம் கன்மம் மாயை என்னும் மும்மலங்களையும் கெடுக்கும் திருவருட்செயலைக் குறிக்க இரதோற்சவம் நிகழ்கின்றது.

இதனைச் சுந்தரமூர்த்தி நாயனார் –
புரிசை மூன்றையும் பொன்றக்குன்றவில்லேந்தி வேதப்புரவித்தேர்மிசை
திரி செய் நான் மறை யோர் சிறந் தேத்துந் திருமிழலைப்
பரிசினாலடி போற்றும் பக்தர்கள் பாடியாடப் பரிந்து நல்கினீர்
அரிய வீழி கொண்டீரடியேற்கு மருளிதீரே என்று கூறினார். ஆகவே இங்கே முப்புரமென்பது ஆணவம் கன்மம் மாயை என்னும் மும்மலங்களின் காரியம் என்னும் உண்மையினையும், மூவரையும் அடிமை கொண்டமை விஞ்ஞானாகலர் பிரளயாகலர், சகலர் என்னும் மூவகையான்மாக்களையும் அடிமை கொண்டு இரட்சிக்கும் முறையையும் உணர்துவதாகும்.

பண்டைத்தமிழ் மக்கள் தங்கள் சமயானுஷ்டானங்கள், சமய நிகழ்ச்சிகள் யாவற்றையும் தத்துவார்த்தங்களுடன்தான் செய்தனர். தேர் என்பது தேகம் – அல்லது யாக்கையைக் குறிக்கின்றது. தேரோட்டம் என்பது வாழ்க்கையாகும் ஆகவே மனிதனின் வாழ்க்கையினையே சித்தரிக்கின்றது. தேரோட்டத்திருவிழா எனலாம். மேலும் ஒரு தேரினை எடுத்துக் கொண்டால் அதன் அமைப்பை ஆறு பகுதிகளாகப் பிரிக்கலாம். அதாவது 1) நான்கு சக்கரங்கள், 2) கீழ் அண்டம் – கீழ்ப்பகுதி, 3)தட்டு அல்லது பீடம், 4) மேற்பகுதி – மேலண்டம், 5) கலசம் அல்லது முடி, 6) அதன்மேல் உச்சியில் கட்டப்படும் குடை என்பனவாம்.

முதலாவதாக, வெளியாகத் தெரிகின்ற நான்கு சக்கரங்களும் சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் நான்கு படிகளைக் குறிக்கின்றன. ஒரு மனிதன் இதன் வழியாலேயே இப்பாதங்களை அனுசரித்துத்தான் வாழ்க்கையிற் பூரணத்துவம் பெறலாம் என்பதைக் காட்டுகின்றது. இந்தப்படிகளிலும் ஈடுபடும்போது பலவிதமான ஆபாசங்களும் வந்து நமக்கு முட்டுக்கட்டை போட்டு நமது வாழ்க்கையைத் திசைதிருப்பி

வீடுகின்றன. இதனையே தேரோடும் வேளைட் ல போடப்படுகின்ற சறுக்கிகள் – சறுக்கிக் கட்டைகள் போட்டுத் தேரோட்டத்தினைத் தடைசெய்யும் I கழ்ச்சி குறிப்பீடுகின்றது.

இரண்டாவதாக தேரின் கீழ்ப்பகுதியிலே பலவிதமான சித்திரங்கள், சிற்பங்கள் செதுக்கப்பட்டிருப்பதை நாம் அவதானிக்கலாம். இவை மனித வாழ்க்கையில் உள்ள காமம், குரோதம், லோபம், மோகம், மதமாற்சரியம் என்னும் மனோ வீகாரங்களையும் மனத்தில் தோற்றும் பல வித உணர்ச்சிகளையும் சித்தரிக்கின்றன. ஒருவன் வாழ்க்கையினைச் செவ்வனே நடத்த வேண்டுமானால் இவைகளையெல்லாம் கடந்து மேலான பீடத்தை – ஸ்தானத்தை அடைய வேண்டும் என்பதே இதன் கருத்து.

மூன்றாவது அங்கமாக உள்ள தட்டு அல்லது பீடம் நமது இதயத்தைக் குறிக்கின்றது. நாம் உற்சவகாலங்களிலே – தேர்த்திருவிழாவிலே இறைவனை – இறைவன் திருமேனியைக் கொண்டு போய்த் தேரின் பீடத்தில் அமர்த்துகின்றோமல்லவா! அதுபொலவே உடலோடு அமைந்த வாழ்க்கை எனுந்தேர் நன்றாக ஓடவேண்டுமானால் மனமாகிற பீடத்திலே நாம் இறைவனை இருத்த வேண்டும். இறைவனே உடலை இயக்கும் உயிர் – பரமான்மா. இறைவன் ஏறியதும் தேர் ஓட ஆரம்பிக்கின்றது. இறைவனை இறைவனின் விக்கிரகத்தைத் தேரிலிருந்து இறக்கியதும் தேரோட்டம் நின்றுவிடுகிறதல்லவா! அதுபோலவே உடம்பில் உயிர் இயங்குவதும் நிகழ்கின்றது.

நாலாவதாக தேரின் மேற்பகுதி வாழ்க்கையின் உன்னத இலட்சியங்களையும் குறிக்கோல்களையும் விளக்குகின்றது. மனிதனின் இலட்சியங்கள் பல தரப்பட்டன என்பதைக் குறிக்குமுகமாகவே பலவித வர்ணச்சீலைகளால் வரிசை வரிசையாக அலங்கரிக்கப்படுகின்றது. அத்துடன் மேற்பாகம் அடியில் அகன்று மெலே போகப் போகக் குறுகிச் செல்கின்றதல்லவா? இது எண்ணங்கள் – இலட்சியங்கள் பல வகையாக உள்ள போதும் அவையெல்லாம் கலசமாகிய முடியை நோக்கி குவிந்து செல்ல வேண்டும் என்பதைச் சுட்டுகின்றது.

அடுத்து ஐந்தாவதாக கலசம் – மேலேயுள்ள முடியானது வாழ்க்கையின் உன்னதப்பேறான ஜன்ன சாபல்யத்தை பிறவிப்பயனைக்குறிக்கினறது. வாழ்க்கையிலே செயல்கள் எண்ணங்கள் குறிக்கோல்கள் ஆகியன பலவாக மாறுபட்டநிலையில் இருந்த போதிலும் அவையெல்லாம் ஜன்மசாபல்யம் பிறவீப்பயன் என்னும் பெரும் பேற்றினை நோக்கிக் குவிதல் அவசியம் என்பதை மேற்பகுதியும் கலசமும் சொல்லாமற் சொல்லி நிற்கின்றன.

இவ்வாறு ஒன்று சேர்ந்து குவியுமானால் ஆன்மசாந்தி என்னும் நிழல் வாழ்வீற் கிட்டும் என்பதையே கலசத்தின் மேல் கட்டப்படும் குடை விளக்குகின்றது ஆகவே வாழ்க்கை என்னும் தேர் ஓடிக் கொண்டிருந்த போதிலும் எவன் ஒருவன் தனது இதயபீடத்தில் இறைவனை இருத்திப் பிறவிப்பெரும்பயனை நோக்கி மனத்தை ஒருமுகப்படுத்தி பயன் கருதாமல் கருமங்களைச் செய்கின்றானோ அவனுக்கு ஆன்ம சாந்தி மனச்சாந்தி எனும் குடை நிழல் கிட்டும் என்ற அருமையான சிறந்த தத்துவத்தையே தேரோட்டம் விளக்குகின்றது என்றும் கூறலாம்.

மேலும் தேர் வடிவம் சரீரத்தைக் குறிப்பதாம் அதிற்காணப்படும் நான்கு சிங்கங்கள் மனிதனின் ஜீவகாருண்யம் இல்லாத லோப குணத்தையும் பிரபஞ்ச ஆசையையும் வீபரீத உணர்வையும் அகங்காரத்தையும் குறிக்கும். எட்டு யாளிகள் ஆன்மாவினது அஞ்ஞானம் அபிமானம் ராகாதிகுணம் துக்கம் விஷயப்பற்று பலகன்மம் உபாதி அவத்தை என்னும் எட்டுவித அனுபவங்களையும் குறிக்கும் கொடிகள் தத்துவங்களைக் குறிக்கும் மணிகள் சாஸ்திர அறிவினாலுண்டாகும் பாசஞானத்தைக் குறிக்கும். குஞ்சங்கள் வாகுமாலைகள் முதலியன ஆன்மாக்கள் மனச்சலனத்தால் ஏழவகைப்பிறப்பில் பலயோனி பேதங்களாக மாறி மாறி அடையும் அவத்தையைக் குறிக்கும்.

இவ்வாறு கொண்டு உடம்பு முதலியவைகளையெல்லாம் ஆன்மா வெறுத்துத்தியானத்தால் திருவருளைச் சார்ந்திருக்கும் உண்மைக்கு அறிகுறியாகவே இரதோற்சவம் ஆலயங்களில் நிகழுகின்றது.

எனவே பல தத்துவங்களை விளக்கும் தேர்த் திருவிழா ஆலயங்களில் நிகழும் நன்னாளிலே நாம் அனைவரும் குடும்பத்துடன் தவறாது ஆலயம் சென்று இறைவனை வணங்கி மனநிறைவு மன அமைதி பெறுவதுடன் நம் இளஞ்சிறார்களுக்கும் சந்ததியினருக்கும் வீழாவின் அருமைபெருமைகளைத் தக்கபடி கூறி மனங்கொளச் செய்து அவர்களையும் சமயவழி வாழ வழிவகுத்து இறையருளினாலே சகல பேறுகளையும் பெற்றுப் பூரணமான ஆனந்தவாழ்வு பெற முயலுவோமாக.



# இந்துக்கலையில் சிற்பம்

சிவநெறிச்செம்மல்
பிரம்மஸ்ரீ ஞானபண்டிதசபா
வாசுதேவக் குருக்கள்
சிவன் கோயில்,
சித்தன்கேணி.

எங்கும் நீக்கமற வியாபித்திருக்கும் இறைவனின் திருவருளை நாம் பெற்று மகிழ்ந்திட எமக்கு வாய்க்கப்பெற்றதே ஆலயம் ஆகும். பசுவின் மடியில் பால் சுரப்பது போன்று இறை அருள் சுரக்கின்ற இடம் ஆலயம். பரந்து விரிந்து காணப்படும் இறை அருட்சக்தியை பல முகமாக உள்வாங்கப் பெற்ற ஆலய வடிவமைப்புக்களையும் உள்வாங்கப்பெற்ற அருட்சக்தியை கவர்ந்து பேணிக் காத்து வைக்கக் கூடிய வகையில் மஹா இயந்திரங்களையும் அச்சக்திகள் ஆன்மாக்களின் வழிபாட்டு தன்மைக்கும் பக்குவத்தன்மைக்கெற்ப அருளுகின்ற உருவமைப்புக்களையும் கொண்ட விக்கிரகங்களையும் கொண்டு மிளிர்வது ஆலயமாகும். இறைவனை வழிபாடாற்றுவதும் அவ்வழிபாட்டு இடமாக மிளிரும் ஆலயத்தினை அமைப்பதும் ஓர் கலையாகும். கலையின் உயர் பயன் இறை இன்பம் பெறுவதே ஆகும். இந்து மக்கள் மிக தொன்மையான காலம் தொட்டே கட்டிடம், சிற்பம், ஓவியம், இசை, நாடகமாகிய நுண்கலைகளை பொன்னெனப் போற்றி வளர்த்து வந்துள்ளனர். இந்து நாகரீக வரலாற்றில் இவ் இந்துக்கலைகள் யாவும் தெய்வீகமானவை. கலை என்பது மக்களது உள்ளத்தில் நிரம்பி பெருக்கெடுத்து வெளிப்படுத்தும் ஆற்றலே ஆகும் “ராதா கமல் முகர்ஜி” என்பவர் மனித உறவுகளையும் வாழ்க்கைக் குறிக்கோல்களையும் வகுத்து ஒழுங்கு படுத்துவது கலை ஆகும் என்கிறார்.

இந்துக்களது ஆலய வழிபாட்டிலே மிக இன்றியமையாதது இறைவன் திருவுருவம் இதனை அமைக்கும் கலை விக்கிரகங்களை படைத்தல், காத்தல், அழித்தல் என்ற முப்பெரும் தொழில்களை இறைவன் நிகழ்த்துகிறான். என்று புராணங்கள் கூறுகின்றன. புராணங்கள் சித்தரிக்கும் இறைவனின் புறத் தோற்றத்தை கட்புலனாகும் வண்ணம் சிற்பங்கள் உருவாகின்றன. கோயில் விமானங்களிலும் தூண்களிலும் தெய்வத்திருக்கோலங்கள் சிற்ப சாஸ்திரம் கூறும் முறைக்கமைய பல்வகை வடிவங்களில் அமைக்கப்படுகின்றன. பிம்பம், விக்கிரகம், மூர்த்தி, பிரதிமை, பேதம் முதலான பல்வேறு பெயர்கள் திருவுருவத்தைக் குறிக்கின்றது.

இந்து விக்கிரகக் கலை தனிச்சிறப்புடையது. இது மறைபொருளுடையது, உதாரணமாக நடராஜ வடிவம் சமயம், தத்துவம், கலை ஆகியன இணைந்து காணப்படுகின்றது. எளிமை, தூய்மை, சமயப்பற்று சமயப்பண்பாடு என்ப வற்றை விளக்கும் வகையில் ஆன்மீகக் கலைகள் காணப் படுகின்றது. கலைப் பொருட்களாக காணப்படும் உருவங்கள், மரங்கள், மலர்கள், பறவைகள் யாவும் இயற்கையிலிருந்தே எடுக்கப்பட்டவாயினும் அவை விண்ணுலக வாழ்வின் இயல்பைக் காட்டும் தன்மையுடையதாகக் காணப் படுவது. இந்துக் கலைகளின் தனிச்சிறப்பாகும். சிலையுருவில் பொறிக்கப்படும் ஒரு சிறிய சித்திரம் தானும் மனிதன் கடவுளை எப்பொருளில் காண்கிறான் என்ற உண்மையை விளக்குவது மட்டுமன்றி கடவுள் எல்லாப் பொருட்களுக்கும் ஒரு தெய்வீக இயல்பினை அளித்திருக்கிறார். என்ற செய்தியை மனிதனுக்கு அறிவிப்பதாகும். இந்திய இந்து சிற்பக்கலைக்கு மேலும் ஒரு தனிச் சிறப்புண்டு. இந்திய சிற்பி இயற்கை ஒழுங்கை அனுசரித்து கலைப் பொருட்களை ஆக்கும் திறமை படைத்தவர்கள். இவன் உலகில் காணப்படும் பொருட்கள் அனைத்தும் மாயை என்றும் தெய்வாம்சம் பொருந்திய ஆன்மா ஒன்றே நிலையான உண்மையானது என வற்புறுத்துகின்றான்.

இவ்வாறு சிறப்புப் பெற்றுக் காணப்படும் சிற்பக்கலை மரபு காலம் தோறும் வளர்ச்சி பெற்று வந்துள்ளது. விக்கிரகங்கள் பல்வகைப்பட்ட பொருட்களால் உருவாக்கப் படுகின்றன. மண்ணால் அமையும் விக்கிரகம் மிருண்மயீ என்றும் மரத்தினால் அமைப்பது தாருகடிதம் எனவும் உலோகத்தால் செய்யப்படுவது லோகஜம் எனவும் கல்லால் அமைவது சைலஜம் எனவும் அழைக்கப்படுகின்றது. கல்லினால் அமைக்கும் விக்கிரகங்கள் செய்யப்படும் முறையை சிற்ப நூல்கள் கூறுகின்றன. விக்கிரகங்கள் அமைக்க கல்லைத் தேர்ந்தெடுக்கும் முறையும் கல்லின்கள் பற்றிக் கூறுகின்றது. கல்லிலே காணப்படும் வளையங்கள், பளபளப்பு அதில் எழும் ஒலி முதலியவற்றைக் கொண்டு விக்கிரகங்களை ஆண், பெண், அலிச்சிலைகளை வேறுபடுத்தி சிற்பிகள்

அமைக்கின்றனர். மேலும் தெய்வப் படிவங்களில் திருக்கோலங்களை ஐவகையாக சிற்பநூல்கள் வகுத்துள்ளன ஸ்தானகம், அஸ்னம், சயனம், ஸ்தானாசனம், சயனாசனம் என்பன முறையே நின்ற கோலம், அமர்ந்த கோலம், கிடந்த கோலம் நின்ற கொலத்தைச் சார்ந்த பிறசாயல்கள், கிடந்த கோலத்தைச் சார்ந்த பிறசாயல்கள் என்பன அவ் ஐவகைப் பிரிவுகளாகும். இதைவிட ஒரு வகை கலவையில் அமைக்கப்படும் அதனால் சிற்பங்களும் காலம்தோறும் வளர்ச்சியடைந்து காணப்படுகின்றது.

சிந்துவெளி நாகரீகம் முதலாக இன்றுவரை சிற்பக்கலை சிறப்பு அடைந்து வந்திருக்கின்றது என்பதை வரலாறு நன்கு எடுத்துக் காட்டுகின்றது. சிற்பக்கலையானது தமிழ் நாட்டில் எவ்வாறு சிறந்தோங்கிக் காணப்பட்டதோ அதே போன்று ஈழத்திலும் சிறந்து விளங்கி மிளிர்கின்றது. அது இன்று ஈழத்தில் இந்தியக் கலைஞர்களும் சேர்ந்து எமது கலைஞர்களும் கலந்து ஒரு புதுப் பொலிவு தரும் அம்சமாகத் திகழ்கின்றது. அந்தவகையில் கலையம்சம் மிக்க உன்னதமாக மிளிரும் பல சிற்ப உருவங்களையும் ஆகமம் சார்ந்த அமைப்புக்களையும் கொண்டு விளங்கும் ஆலயங்களில் சுழிபுரம் பறாளாய் சிவசுப்பிரமணிய ஆலயமும் ஒன்றாகும்.

இவ்வாலயத்தில் புதிதாக உருவாக்கப்பட்டிருக்கும் மகாராஜகோபுரம் பற்றி நோக்குவோம். ஆன்மாக்களை வயப்படுத்துகின்றதாகிய அமைகின்ற ஆலயத்தில் அனைவரதும் மனத்தினை வயப்படுத்துவதாகிய அமைகின்ற முதல் இடம் கோபுரமாகும். இது "இஸ்தூலலிங்கம்" என பூஜிக்கப்படும். கருவறையில் வீற்றிருக்கின்ற இறைவனை போற்றுகின்ற அதேவேளை மகாராஜகோபுரதினையும் மிகச்சிரத்தையுடன் போற்றுகின்றது ஆகமங்கள்.

இராஜகோபுரம் தனது கம்பீரமான தோற்றத்தினால் தொலைவில் இருப்பவர்கள், ஆலயத்திற்கு வர இயலாதவர்களுக்கு என ஏராளமான அடியவர்களின் தரிசனத்திற்கு வாய்ப்பளிக்கின்றது. அதனால் அன்றோ "ஆயிரம் தலைஉடையதும் இரண்டாயிரம் கரங்கள் கொண்டதுமான சிவனாக ராஜகோபுரத்தினை ஆகமங்கள் பூஜிக்கின்றது. இது ராஜகோபுரத்தின் அருட்சக்தியின் சிறப்பை நன்கு எடுத்துக் காட்டுகின்றது.

மாநசாரம் ஐவகைப்பிரகாரங்களின் அமைப்புப்படி இந்த ஆலயத்தின் கிழக்கு வாசலின் முற்பகுதியில் இராஜகோபுரம் அழகு செய்கின்றது. இக்கோபுரமானது "இஷ்டகா" என கூறப்படும் செங்கற்களைக் கொண்டும் வைரக்கல், சுண்ணாம்பு முதலியனவற்றோடு இன்று பயன்பாட்டில் உள்ள சீமெந்து முதலிய பொருட்களாலும் அமைக்கப்பட்டுள்ளது. இக்கோபுரமானது ஐந்து மாடங்களைக் கொண்டதாகவும் ஐந்து கலசங்கள் நிறுவப்பட்டதாகவும் காணப்படுகின்றது. இதன் ஒவ்வொரு பகுதிகளிலும் இறைவனது தூலத்திரு மேனியின் ஒவ்வொரு உறுப்புக்களைக் குறிப்பனவாகவும் சிற்பங்களோடு அமைந்தனவாகவும் காணப்படுகின்றது. இராஜகோபுரத்தின் திருஅங்கங்களான ஆதாரம், பட்டிகை, பாதபந்தம், உத்தரம், கரகபிண்டி, ஆரம், களகூடம், பண்டிகை, சுந்தரநாசி, பத்மம், கலசம் ஸ்தூபி ஆகிய பகுதிகள் மிகவும் நேர்த்தியாகவும் செம்மையாகவும் அமைக்கப்பட்டுள்ளன. இதில் ஆகம முறைக்கமைய கிழக்கு திசையில் முருகனின் திருவிளையாடற் காட்சிகள் அற்புத நிகழ்வுத் தோற்றங்களாகவும், தெற்குப் பக்கத்தில் தட்சணா மூர்த்தியின் திருவுருவம் மேற்குப்பக்கத்தில் வைஷ்ணவ திருவுருவங்களின் அம்சங்களும் வடபக்கத்தில் பிரம்மாவின் உருவ அமைப்புக்களும் மற்றும் வழமையாக அமைவுறும் கோபுர தாங்கி சிற்பங்களுடன் பல்வேறு பட்ட சிற்ப அமைவுகளும் காணப்படுகின்றன.

இந்த வகையில் சுழிபுரம் பறாளாய் சிவசுப்பிரமணிய இராஜகோபுரம் ஆகம முறைப்படி, சிற்ப சாஸ்திரங்களுக்கு அமைவாக மேற்குறிப்பிடப்பட்டுள்ள சிற்ப அம்சங்களுடன் அமைந்து காணப்படுவது சிறப்புக்குரிய அம்சமாகும்.

சுபம் !



**குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்**
**மிகைநாடி மிக்க கொளல்**

குணமும் குற்றமும் இரண்டும் உடையவரே உலகத்தில் இருப்பதால், ஒருவன் குணங்களை முதலில் ஆராய்ந்து அதன்பின் குற்றங்களையும் ஆராய்ந்து, அவ்விரண்டில் அளவில் மிகுந்ததை ஆராய்ந்து, அதையே அளவாகக் கொண்டு, குணம் மிகின் தகுதியுடையவன் என்றும், குற்றம் மிகின் தகுதியில்லாதவன் என்றும் கொள்ள வேண்டும்.

# கந்தபுராணம்

## தோன்றிய வரலாறு

விரதங்களில் மிகவும் சிறந்த விரதமாகவும், மனம் ஒன்றி விரதமிருப்பவர்களுக்கு உடனே குகன் அருள் கிடைப்பதும் கந்தசஷ்டி விரதமாகும். ஐப்பசி மாதத்து பூர்வபட்ச பிரதமை தொடங்கி சஷ்டியீராக ஆறு தினங்களும் கந்தசஷ்டி எனப்படும். இந்த சஷ்டியில் தூய்மையான உள்ளத்துடன் விரதம் அனுஷ்டித்து முருகனை வணங்கி வரும் அன்பர்கள் அனைவருக்கும் வேண்டும் வரங்களை ஈயும் விமலமூர்த்தியாகிய எம் முருகக் கடவுள் நல்லருள் புரிவார். குழந்தைப்பேறு இல்லாத தம்பதிகள் முருகனை நோக்கி விரதமிருந்துவர குழந்தைப்பாக்கியம் சித்திக்கும் இப்படி மகிமைமிக்க கந்தசஷ்டி காலங்களில் முருகன் ஆலயங்களில் கந்தபுராணப் படிப்பு என்னும் பாராயணம் நிகழ்வுறும். செய்யுள்வடிவிலுள்ள இப்புராணத்தினை ஒருவர் படிக்க இன்னொருவர் அதற்கான பொழிப்புரையினை பக்தர்களுக்கு விளக்குவார். இப்படிப்பட்ட கந்தபுராணம் தோன்றிய வரலாறு என்ன? என்பது எம்மவர் பலருக்கு தெரியவில்லை. இது எப்படி தோன்றியது? யாரால்? யாருக்கு? எந்தநிலையில்? என்பதனை மிகவும் அழகாக ஸ்ரீகந்தபுராணம் கூறுகிறது. அதனை எம் மக்களும் அறியவேண்டும் என்பதற்காக மிகவும் சுருக்கமாகவும், அதேவேளை விளங்கக்கூடிய முறையிலும் கீழே தொகுத்துத் தருகின்றோம்.

முன்பொருசமயம் கோவில் நகரமென்று அழைக்கப்படும் காஞ்சித்தலத்தில் நான்முகப் பெருமானாகிய பிரம்மதேவன் மாபெரும் தவம் ஒன்றினைப் புரியலானார். சிவ பெருமானது திருவருளாலும், தவவலிமையினாலும் எல்லாவற்றையும் சிருஷ்டிப்பதற்காக அவர் அத்தவத்தினை மேற்கொண்டு தியானித்து வந்தார். அப்போது சில முனிவர்கள் புண்ணியத்தில் சிறந்துவிளங்கும் கிருஹஸ்தாஸ் சிரமத்தை வழுவாமல் நடத்திய பிறகு விகனஸ் முனிவரால் தோற்றுவிக்கப்பட்ட வானப்பிரஸ்தாச்சிரமத்தை (துறவை) மேற்கொண்டு தவம் செய்ய விரும்பினார்கள். அதற்கு தகுந்த இடம் எங்கு இருக்கிறது. என்று கேட்டறிய அவர்கள் பிரம்மாவை அணுகி வினாவினர். பிரம்மாவும் ஒரு சில தர்ப்பை புற்களைஎடுத்து வட்ட வடிவமாக வண்டிச்சக்கரமாக செய்து மகேஸ்வரனையும், மகேஸ்வரியையும் தியானித்து அதனை உருட்டிவிட்டார். பின்பு முனிவர்களை நோக்கி "நீங்களும் இந்த தர்ப்பை சக்கரத்தின் பின் செல்லுங்கள். கானகத்தில் எந்த இடத்தில் அது சரிந்து விழுகின்றதோ அந்த இடமே தவம் செய்ய ஏற்ற இடமாகும்" என கூறினார். முனிவர்களுக்கும் அவ்வாறே பின் தொடர்ந்து சென்றனர்.

இவ்வாறு அந்த தர்ப்பைச் சக்கரம் உருண்டு பல காததூரம் சென்று ஒரு பாறங்கல்லின்மீது மோதி விழுந்தது. முனிவர்களும் அதுகண்டு தாங்கள் தவம் செய்ய உகந்தஇடம் அதுவென எண்ணி மகிழ்ந்தனர். தர்ப்பை வந்து விழுந்ததனால் அவ் இடம் நைமிசாரண்யம் என்ற பெயர் பெற்றது. முனிவர்களும் அவ்விட த்தில் கடுந்தவம் புரியலாயினர். பின் ஸத்ரயாகம் என்ற யாகத்தையும் செய்ய தொடங்கினர். சிவபிரானின் அருளை முன்னிட்டு அவ்வந்தண முனிவர்கள் செய்துவரும் யாகத்தினை கேள்விப் பட்ட சூதமாமுனிவர் நைமிசாரண்ய யாகசாலை நோக்கி விரைந்தார். இவ் சூதமாமுனிவர் வேதவியாச முனிவரின் சீடராவார். புராணங்களை சொல்லும் வல்லமை பெற்ற தலசிரேஷ்டர். அவரைக்கண்ட நைமிசாரண்ய முனிவர்கள் அவருக்கு தகுந்த ஆசனமொன்றினை வழங்கி அவர் பாதம் தொழுது வணங்கி பூஜித்தனர்.

நைமிசாரண்ய முனிவர் களின் உபசாரத்தால் மனமகிழ்வடைந்த சூதமாமுனிவர் அவர்களுக்கு ஆசிவழங்கினார். பின் நைமிசாரண்ய முனிவர்கள் சூதமாமுனிவரை நோக்கி "மகாபிரபு! நான்முகன் வாக்கால் இவ்விடம் வந்து தவம் செய்து அருள் பெற்றோரும் புராணங்கள் சொல்வதில் வல்லவரான தாங்கள் முருகப் பெருமானின் உன்னதமான சரித்திரத்தை எமக்குச் சொல்லியருள வேண்டுகிறோம். கண்ணுதல் பெருமானது நெற்றிக்கண்ணாகிய நெருப்பிலிருந்து ஸ்ரீ முருகன் எப்படி தோன்றினான்? சரவணப்பொய்கை யிலிருந்து தோன்றிய காரணம் என்ன? போர் முனையில் முருகனது வீரதீர செயல்கள் என்னென்ன? அரும்பெரும் ஆற்றல் வாய்ந்த ஆறுமுகனால் மடிந்த அசுரர்கள் எவர்? தேர், யானை, குதிரை போன்றவையல்லாது மயிலை வாகனமாகக் கொள்ள யாதுகாரணம்?" போன்ற இன்னோரன்ன பிற வினாக்களுக்கும் விடை வேண்டி வணங்கி நின்றனர். சூத முனிவர் அகமகிழ்ந்து "நல்ல விரதங்கள், தவங்கள் புரிந்த தவசீலர்களே!சகல மங்களங்களையும் தரக்கூடிய முருகப் பெருமானது சரிதத்தைக் கூறுகிறேன். நீங்கள் அனைவரும் ஒருமித்தமன தோடு அவற்றைக் கேட்டு மகிழுங்கள்

பாமுருகதாசசர்மா - பறாளாய்
துர்க்கை அம்பாள் ஆலயகுரு
UTRECHT, THE NETHERLANDS.

இந்த கந்தனின் கதை அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கையும் ஒருங்கே நல்கும் குழந்தைப்பேறு இல்லாத பெண் இதனைக் கேட்டால் குழந்தைப் பேற்றினைப் பெறுவாள். கன்னிகையை அடையவிரும்பும் ஒருவன் இதனை பக்தி சிரத்தையுடன் கேட்டால் அழகிய கன்னியை வாழ்க்கைத்து ணையாகப் பெறுவான். கல்வி கற்கும் மாணவன் இதை மனம் ஒருமித்துக் கேட்டால் கல்விப் பேற்றினைப் பெறுவான். தரணியாளவிரும்பும் அரசன் இக்கதையினைக் கேட்டால் ஈரேழுபதினான்கு லோகத்தையும் ஆளும் தகுதி பெறுவான். அந்தணசீலர்களே! நான் இப்போது கூறியது அத்தனையும் சத்தியம்! சத்தியம்! பல கிளைக்கதைகளையுடையதும் எண்ணிய காரியமனைத்தையும் சிந்திக்க வல்லதுமான இந்தப்புராணக் கதையினை கூறுகிறேன்! அன்போடும் ஆர்வத்தோடும் கேட்க வேண்டும்! என கூறி கந்தபுராணத்தை கூறத் தொடங்கினார். இதுவே கந்தபுராணம் தோன்றிய வரலாறு.

நன்றி- ஸ்ரீஸ்கந்தபுராணம்
பிரேமா பிரசுரம்

# அறிந்து கொள்ளுங்கள்

**கு.சற்குணராஜசர்மா**
**- சுழிபுரம் -**

1. **அகாரம்** - சிருஷ்டிக்கின்ற எழுத்து
   **உகாரம்** - இரட்சிக்கின்ற எழுத்து

2. **இராஜகோபுரத்தின்மேல் நிறுத்தப்படும் கலசங்களின் தத்துவமாவது:-**
   கோபுரத்தில் அமைகின்ற கலசம் சிகை போன்றது. அது ஞானச்சுடராக விளங்குகின்றது. கோபுரத்தின் அளவுக்கமைய சிற்பநூலில் விதித்த சாஸ்திரங்களுக்கமைய 3, 5, 7, 9 என கலசங்கள் அமையும். கோபுரம் ஸ்தூலலிங்கம், மூலஸ்தானத்தில் சதாசிவலிங்கம், பலிபீடம் மந்திரலிங்கம் எனப்படும்.

3. **முருகன் கையில் வேலும், சேவற் கொடியும், கீழே மயிலும், பாம்பும் வைத்திருப்பதன் உட்பொருளாவது:-**
   வேல் - ஞானம், மயில் - விந்து, சேவல் - நாதம் (நாதலிந்து கலா தீ என்பதனால் அறிக. குண்டலி என்ற பாம்பினை ஓம் என்ற மயில் அடக்குகின்றது.)

4. **கருணை வடிவான கடவுள் வாள், வேல் முதலிய ஆயுதங்களை ஏந்தியிருப்பது கொடுமையின் அடையாளம் அல்ல, வேல் என்பது ஞானம். அறிவுக்கு மூன்று இலக்கணம் உண்டு.**
   1.ஆழம், 2.அகலம், 3.கூர்மை வேலின் அடிப்பகுதி ஆழமாகவும், நடுப்பகுதி விசாலமாகவும், நுனிப்பகுதி கூர்மையாகவும் இருக்கின்றது. "ஆழ்ந்தகன்ற நுண்ணியனே" என்பார் மாணிக்கவாசகர் சுவாமிகள். எனவே ஞானமாகிய கருவிகளை இறைவன் வைத்திருப்பது நமக்கு ஞானங்களை வழங்கும் பொருட்டேயாகும். இவைகளை நுணித்து உணர வேண்டும்.

5. **முருகன் திருவுருவம் சிவந்த மேனியும், அபயவரதத்துடன் கூடிய கரங்களும், மார்பில் சாய்ந்த வேலும், திருவடியில் மயிலும் தாமரை ஏந்திய கரத்துடன் வள்ளிதேவி வலத்திலும், நீலோத்பலம் ஏந்திய கரத்துடன் தெய்வயானை இடத்திலும் அமைந்திருப்பார்கள். இறைவன் மூன்று திருக்கண்களை உடையவன். சந்திரன், அக்கினி, சூரியன் என்ற மூன்று சுடர்பூக்களே மூன்று கண்களாம் முருகன் இமையா நாட்டம் உடையவன். கண்களை மூடுவதில்லை. தாமரை சூரியனைக்கண்டு மலர்வது, நீலோத்பலம் என்ற குமுதமலர் சந்திரனை கண்டு மலர்வது இறைவனை அடுத்திருப்பவர்களின் வாழ்வு சுருங்காது. முருகனுடைய வலப்புறத்தில் விளங்கும் வள்ளி தேவியின் திருக்கரத்தில் தாமரை வல நேத்திரமாகிய சூரிய ஒளிபட்டு அறுபது நாழிகையும் சுணங்காமல் மலர்ந்தவண்ணம் விளங்கும். இடப்புறத்தில் தெய்வயானையம்மையின் கரத்தில் உள்ள நீலோத்பலம் இடநேத்திரமாகிய சந்திரஒளிபட்டு அறுபது நாழிகையும் மலர்ந்தேயிருக்கும் முருகப்பெருமானை உள்ளன்போடு உபாசனை செய்பவர்களின் வாழ்வு என்றென்றைக்கும் பிரகாசமாகும் என்பதனை இதனால் அறியலாம்.**

உ


ஓம் கணபதி துணை

# மோதகம் எனும் கொழுக்கட்டையின் மெய்ப்பொருள்

விநாயகருக்கு உரிய ஒரு சிறந்த நிவேதனப் பொருள் மோதகம் கணபதி அஷ்டோத்திரத்தில் ''மோதகப்பிரியாய நமஹ'' என ஒரு நாமம் இருக்கின்றது விநாயகருக்கு மிகவும் விருப்பமானது என இது பொருள்படுகின்றது. இப்படிப்பட்ட மோதகம் கூறும் உட்பொருள் என்னவென இனி பார்ப்போம்.

வாழைநாருக்கு வாசனை கிடையாது, ஆனால் அதில் வாசனையிருந்த பூக்களை மாலையாக தொடுக்கும் போது பூவுடன் சேர்ந்து நாரும் வாசனை பெறுகிறது. அதனைப்போலவே மோதகத்தினை உருவாக்கும் பொருட்களான வெந்த அரிசிமாவும் பூரணத்துடன் கலந்து மோதகமாகும் போது மிகுந்த சுவை பெறுகிறது. தனிப்பட்ட ருசி எதுவும் அற்ற அரிசி மாவு மனிதனைக்குறிக்கும். பூரணம் என்றால் முழுமையடைந்த எனப்பொருள்படும். ''அங்கெங்கில்லாது எங்கும் பிரகாசமாய்'' நிறைந்திருக்கும் இறைவன் பரிபூரணம். வெல்லமும் தேங்காயும் பருப்பும் சேர்ந்து தயாராகும் பூரணம் இறைவனைக் குறிக்கின்றது. பிள்ளையார் தனது கரங்களில் மோதகத்தினை வைத்திருக்கிறார். ''எந்த சிறப்பு இல்லாத நீ அகந்தையை அகற்றிவிட்டு என்னிடம் வருவாயாயின் நீயும் இந்த மோதகத்தினைப் போல சிறப்புப் பெறுவாய்'' என்ற கருத்தையே மோதகம் குறிக்கின்றது அரிசி மாவும் பூரணமும் தனித்தனியானவை இரண்டையும் கலந்தவுடன் அரிசி மாவின் தனித்தன்மை நீங்கி பூரணமே மேலோங்கி இருக்கிறது.அரிசிமாவும் பூரணத்தின் இயல்பை பெற்று ''ஒன்றுதான் இரண்டுஅல்ல'' என்ற அத்வைத தத்துவத்தை விளக்குகிறது இதுவே மோதகம் கூறும் உட்பொருளாகும் எனவே பிறவிப்பயன் நீங்க இவ்வுலகில் தோன்றிய நாங்களும் விநாயகரைத் தொழுது பிறவிப்பயனை நீக்கி அவர் தம் திருவடிநிகழ அடைவோமாக.

ம.சஞ்சீவசர்மா
கொட்டாஞ்சேனை



உ

# கந்தனது பதினாறு நாமங்களின் பெருமை

எண்ணிய பொருள்களைப் பெறுவதற்காக அனைத்தையும் உணர்ந்தவரும் எங்கும் வியாபித்து இருப்பவருமான முருகக் கடவுளை வணங்கி வழிபட்டு வருபவர்களுக்கு இப்பூவுலகில் கிடைத்தற்கரிய பேறுகள் பலவும் கிடைக்கும். முருகப் பெருமானது பதினாறு விஷேட நாமங்களினதும் கருத்து பின்வருமாறு:-

ஞானம், சக்தி, ஆத்மா என்பவற்றின் வடிவமாக இருப்பதனால் ஞானசக்தியாத்மா, பகைவர்களை பூண்டோடு அழிப்பவராதலால் ஷ்கந்தன், நெருப்பில் உற்பத்தியானமையால் அக்னிபூதன், கார்த்திகை நட்சத்திரங்களின் மைந்தரானமையால் பாலேயன், கங்கையின் குமாரன் ஆனமையால் காங்கேயன், நாணல் புதரில் தோன்றியமையினால் சரவணபவன், கிருத்திகை நட்சத்திரப் பெண்களால் வளர்த்தமையால் கார்த்திகேயன், பச்சிளம் பாலனாக இருப்பதனால் குமாரன், ஆறுமுகங்களைக் கொண்டமையினால் ஷண்முகன், சேவல் கொடி கொண்டமையால் குக்குடத்துவஜன், சக்தியின் அம்சமான வேலாயுதம் கொண்டமையால் சக்தித்தரன், சித்தகுகையில் இருப்பதனால் குஹன், ஆறு கார்த்திகைப் பெண்களை அன்னையாகக் கொண்டு பிரமச்சாரியாக இருப்பதனால் ஷாண்மாதுரன், கிரௌஞ்சபித் என்ற மலையினை இரண்டாகப் பிளந்தமையினால் கிரௌஞ்சபித், தோகை விரித்தாடும் மயிலை வாகனமாகக் கொண்டமையால் சிகிவாஹனன், தேவர்களின் சேனைக்கு அதிபதியாக இருப்பதனால் தேவசேனாதிபதி இப்படியான இப் பதினாறு நாமங்களையும் பக்தி சிரத்தையுடன் நாமஜெபம் செய்து வருபவர்களுக்கு சகல ஐஸ்வரியங்களும் இப் பூவுலகில் கிடைக்கும். நினைப்பது கை கூடும் வாழ்க்கையில் சகல வளங்களும் கிடைத்து பேரானந்த பெருவாழ்வு வாழ்வார்கள்.

பா.ஜெகந்நாதசர்மா
பறாளை - சுழிபுரம்.

# சில வரிகள்

## சிந்திக்க

கண்ணுக்கு அணிகலம் ஆபரணம்
கண்ணோட்டத்திற்கு அணிகலம் தாட்சண்யம்
காதுக்கு அணிகலம் நல்ல கேள்வி
வாக்குக்கு அணிகலம் சத்தியம்
கரத்திற்கு அணிகலம் தான தருமம்
மனத்திற்கு அணிகலம் தியானம்.

நீ உன் உடம்பை வளர்க்க முயற்சி செய்வதோடு உயிரையும் வளர்க்க முயற்சி செய். ஏனெனில் உயிர் சிறந்தது. உயிரில்லா உடம்பை யாரும் பேணியதில்லை உயிர் நீங்கிய உடலை மண்ணில் அழித்து விடுகின்றனர் அதனால் இவ் உடம்புக்குள் உறையும் உயிருக்கு உறுதி தேடு

நல்ல உணவுகளை உண்பதால் உடல் வளரும், நல்ல நூல்களை படிப்பதனால் உனது அறிவுணர்ச்சி வளரும். நல்ல உள்ளத்துடன் சதா இறைவனை தியானித்து நினைப்பதனால் உனது உயிர் வளரும்.

ஆதலால் உடம்பையும் உணர்ச்சியையும் உயிரையும் வளத்த்துக் கொள். அறிவிலும் ஆற்றலிலும் சிறந்த ஆன்றோர்களை துணையாகக் கொண்டு ஒழுகு. அதனால் உனது வாழ்வு உயர்சியுறும் துன்பத்தில் அழுந்தமாட்டாய்.

கொடியானது உயர்ந்த மரத்தைப் பற்றி சுற்றிக் கொள்ளுமானால் வானம் வரை உயர்கிறது. இல்லையேல் மண்ணில் படர்ந்து மிதிபடுகிறது. நீ எப்போதும் பெரியோர்களை துணைகொள்.

கல்லின் தன்மை தண்ணீரில் மூழ்கிவிடுவது கட்டையின் தன்மை தண்ணீரில் மிதப்பது. சிறிய கல்லோ பெரிய கல்லோதண்ணீரில் மூழ்கிவிடும்.

அதுபோல அறிவாற்றல் ஆண்ற பெரியோர்களை அடுக்குவாயானால் உனது அறிவாற்றலுக்கு இயலாத பெருங் கருமங்களை நீ செய்து முடிப்பாய்.

துன்பங்களுக்கெல்லாம் பெரிய துன்பம் அறிவில்லாதவர்களுடன் பழகுவதேயாகும். இன்பங்களுக்கெல்லாம் பெரிய இன்பம் அறிஞர்களுடன் பழகுவதேயாகும்.

நிரம்பவும் படித்ததை விட படித்தபடி நின்று ஒழுகுவதற்கு முயற்சி செய், படிப்பது உணவு உண்பது போல, ஒழுகுவது உண்ட உணவு செரிப்பது போல உணவு நிரம்ப உண்டாலும் செரிக்கவில்லையாயின் என்ன பயன்? துன்பமன்றோ ஆதலால் சிறிது கற்றாலும் கற்ற வண்ணம் நிற்க வேண்டும். ஓதலின் நன்று ஒழுக்க முடைமை.

உனக்கு சரியெனப்பட்டதை சரீஎன முடிவு கட்டாதே இன்று சரியென உனக்கு தோன்றியது நாளை தவறு என்று தோன்றும் உனது அறிவு வளர்கின்ற அறிவு. பூரணமாக வளர்ந்து அருளறிவு பெற்ற தீர்க்கதரிசிகள் கூறிய நியதிகளையும் நியாயங்களையும் கடைப்பிடித்து வாழ்வாய்.

ஆசையுடையவன் அரக்கன், பற்றுடையவன் விலங்கு, அன்புடையவன் மனிதன், அருளுடையவன் தெய்வம் பிறரைக்கொடுத்து தான் மட்டும் வாழவேண்டும் என்ற எண்ணம் ஆசை, தான் மட்டும் வாழவேண்டும் என நினைப்பது பற்று. தானும், தன் இனமும் தன்நாடும் வாழவேண்டும் என்ற எண்ணம் அன்பு, சராசரம் எல்லாம் நன்றாக வாழவேண்டும் என்ற எண்ணம் அருள்.

விளக்கு ஒரு நிறமுமில்லை, ஆனால் பல நிறங்களையுடைய கண்ணாடிக் கூட்டுக்குள் அவ்விளக்கு எரிகின்றபோது பார்ப்பவர் எந்த நிறக் கண்ணாடியூடாக பார்க்கிறாரோ அந்த நிறம்தான் தெரியும். அது போல சாதகன் எந்த எந்த வடிவமாக ஆண்டவனை வழிபடுகிறானோ, இறைவன் அந்த அந்த வடிவத்தை தாங்கி அருள் புரிகிறான்.

இறைவன் உன் உள்ளத்தில் எழுந்தருள வேண்டுமானால் உன் உள்ளம் தூய்மையானதாக இருக்க வேண்டும். குப்பைகள் உள்ள இடத்திலிருக்க நீ அருவருப்புக் கொள்ளாயன்றோ? அதுபோல காமம், கோபம், வஞ்சனை, சூது, புலை, கொலை, பொய் போன்ற அசுத்தங்கள் நிறைந்த உள்ளத்தில் இறைவன் இருக்க மாட்டான். ஆனமையால் சாந்தமாகிய பசுவின் சாணத்தினால் மெழுகி, அன்பு என்ற சந்தணம் தெளித்து, அறிவு என்ற விளக்கேற்றி, உண்மை என்ற கற்பூரம் கமிழவை இறைவன் தானாகவே எழுந்தருளுவான்.

இறைவனிடம் நீ நின்று அன்பு செய்யும் போது "ஆண்டவரே உலகத்திலுள்ள எல்லா உயிர்களும் இன்புற அருள் புரிவீர் என வேண்டு அப்படியின்றி" என்னைக் காப்பாற்று என வேண்டாதே.

என் வயலுக்கு மழை பொழிய வேண்டும் என வேண்டுவதைவிட உலகமெல்லாம் மழை பொழிய வேண்டும் என வேண்ட வேண்டும். உலகமெல்லாம் மழை பொழிந்தால் உன்வயலிலும் மழை பொழியுமன்றோ?

பரம்பொருளாகிய பதியுடன் கூடும் இன்பம் பேரின்பம் அந்த இன்பத்தையடைய முயற்சி செய். இறைவனோடு ஏகபோகமாக இறுகு.

**பிரம்மஸ்ரீ இராமநாத ஸ்ரீதரக் குருக்கள்**
**இலண்டன்**

# நல்வாழ்வுக்குகந்த 40

பா.பிரபாகரசர்மா
— ஜேர்மன் —

1. மாசிலா மனமே ஈசன் கோயில்
2. பயிருக்கு முள் வேலி. பணத்திற்கு தருமமே வேலி
3. பாலுந்தேனும் உடலுக்குறுதி, வேலும் மயிலும் உயிருக்குறுதி
4. ஆறுதலை அமலன் ஆறுதலையருள்வான்
5. எல்லா உயிரும் ஈசன் கோயில்
6. அயர்ச்சியில்லாத முயற்சி உயர்ச்சி தரும்
7. வேலையுடையவனிடத்தில் வேலை கேள்
8. எழுந்ததும் - இறைவா! நான் நல்வழி நிற்க அருள்புரி என வேண்டுக.
9. உண்ணும் - போது இறைவா! உன்னுடைய நல்ல அறிவும் அன்பும் உண்டாக அருள்புரி என வேண்டவும்.
10. உறங்கும் போது - இறைவா! உன்னுடைய எண்ணமே நிற்க அருள்புரி என வேண்டவும்.
11. கண்ணுக்கு அணிகலம் தாட்சண்யம். மனதிற்கு அணிகலம் தியானம்.
12. இரை தேடுவதுடன் இறையுந்தேடு
13. பிறரைக் கெடுத்து தான் மட்டும் வாழ ஆசைப்படாமல் தானும், தன் இனமும், தன் நாடும், அண்டசராசரமும் வாழ நினை.
14. தானே சொல்லுவதால் குறைவது புண்ணியமும் பாவமுமேயாம்
15. முதுமைக்கு வேண்டின் இளமையில் தேடு, மறுமைக்கு வேண்டின் இறமையில் தேடு.
16. உணவு தேடுவதுடன் உணர்வினையுந்தேடு.
17. செல்வம் அழியாமல் இருக்க - ஏழைகள் கண்ணீர் பிறர் பொருள்மேல் ஆசை, அநியாயவழியில் சம்பாதித்தல் முதலியன கூடாது.
18. ஒருமையுணர்வு இருமையுந் தரும்.
19. செல்வம் அடக்கத்தால் நிலைபெறுகின்றது.
20. யானைக்கு மூன்று மதங்கள் போல மனிதனுக்கும் தன்மதம்,குலமதம், கல்வி மதம் என மூன்று உண்டு.
21. ஏழைகளுக்காக உழைக்கும் உத்தமனது முகத்தில் சிந்தும் வியர்வையே சிறந்த தீர்த்தமாகும்.
22. ஆமணக்கு இலையிலும் பனை ஓலை கூடையிலும் வைத்த புஷ்பம் பூஜைக்கு கூடாது.
23. உள்ளம் வசமானால் உலகம் உன்வசமாகும்.
24. பிரமனிடம் செய்த பாவம் விஷ்னுவிடமும், விஷ்னுவிடம் செய்த பாவம் சிவனிடமும் சிவனிடம் செய்த பாவம் குருவிடமும்அழிந்து விடும். குருவிடம் செய்த பாவமோ அழியாது.
25. ஆயுள் வரை - மாலைவெய்யில், ஓமப்புகை, அருவி நீர், இரவில் பால், கருணைமிக்க மனைவி முதலியன ஆகும்.
26. இரவில் கூடாதவை - இஞ்சி, பாகற்காய், கட்டித்தயிர், கீரை, நெல்லிக்காய் என்பன.
27. கிழக்கு நோக்கி உண்டால் ஆயுள்வளரும், மேற்கு நோக்கி உண்டால் செல்வம் வளரும் தெற்கு நோக்கி உண்டால் புகழ் வளரும், வடக்கு நோக்கி உண்டால் நோய் வளரும்.
28. அன்னம், நெய், உப்பு மூன்றையும் கையினால் படைக்கக் கூடாது.
29. யானையைப்போல குளிப்பாயாக, தேனியைப் போல உழைப்பாயாக.
30. ஆரோக்கியம் பெற ஆதித்தனை வணங்கு, செல்வம் பெற அக்கினியை வணங்கு, ஞானம் பெற முருகனை வணங்கு, சுகம் பெற திருமாலைப் போற்று, ஆற்றல் பெற அம்பிகையைத் தொழு.
31. ஒற்றைத்துண்டுடன் சபை போகக் கூடாது, இரு கரத்தினாலும் தண்ணீர் வாரிக் குடிக்கக் கூடாது.
32. வறுமையுள்ளவனுக்கு எல்லாம் பாழ்.
33. இரவில் கிழக்கில் தலைவத்துப் படுத்தல் நன்று, வடக்கில் தலைவைத்துப் படுத்தல் கூடவே கூடாது.
34. தூய உணவை உட்கொண்டால் தூய எண்ணம் வளரும்.
35. குருவருளும் திருவருளும் பெற்றால் இறைவன் ஞானவடிவை கானலாம்.
36. மன அழுக்கு தியானத்தாலும், வாயழுக்கு துதிப்பதாலும், மெய்யழுக்கு அர்ச்சனையாலும் நீங்கும்.
37. குரோதம், பொறாமை உள்ளவனுக்கு செல்வம் இல்லை.
38. நீ உனது கடமைகளைச் சரிவரச் செய். பலனை எதிர்பார்க்காதே
39. நீ யார்? எங்கிருந்து வந்தாய்? தந்தவன் யார்? என்ற வினாக்களுக்கு தெளிவு பெறுக.
40. நீ முதலில் உன்னை உணர்ந்து கொள். பின் இறைவனை உணர்ந்து கொள்ளலாம்.

## கொல்லாமை

**"கொன்றால் பாவம் தின்றால் தீரும்" என்ற பழமொழிக்கு மற்றவர் கூறும் பொருள் தவறானது. கொல்லுகின்றவன் விலை கொடுத்து வாங்குபவர் களுக்காகவே செய்கிறான். ஆகவே அப்பாவம் முழுதும் அவனையே சேராது.**

தினற்பொருட்டால் கொல்லாது உலகெனின் யாரும்
விலைப் பொருட்டால் ஊன் தருவார் இல் ~ குறள்

**ஆகவே உயிர்களை கொல்கின்ற பாவம் தின்பதனால் போகும் என்பது பொருந்தாது. ஒரு சிலர் "நான் கொல்வதில்லை கடையிலிருந்து தான் வாங்கித் தின்கின்றேன்" என்கிறார்கள். இதுவும் பிழையான கருத்தாகும். வாங்குவோர் பொருட்டே அவன் கொல்கின்றான்.**

கொல்லாமல் கொன்றதைத்தின்னாமல் சூத்திரம்
கோள் கரவு கல்லாமல்............. ~ பட்டினத்தார்

**இப்படி எத்தனை பிரசுரங்களாகப் பார்த்தாலும் ஊன் என்பது பெரிய பாவமாகும்.**

உண்ணாமை உள்ளது உயிர்நிலை ஊனுண்ண
அண்ணாத்தல் செய்யாது அன்று ~ குறள்

**இனி "கொன்றால் பாவம் தின்றால் தீரும்" என்பதற்கு சரியான உரை கீழ்வருமாறு:-**

**புலால் உண்பவர்களை யமபடர்கள் நரகத்தில் நிறுத்தி அவர்களது உடல் தசையினை அறுத்து அறுத்து அவர்கள் வாயில் ஊட்டுவார்கள். அதை அவர்கள் உண்டால்தான் அவர்கள் கொன்ற பாவம் தீரும். இந்த கருத்தை அருணகிரிநாதர் தனது திருச்சிராப்பள்ளி திருப்புகழில் "புவனத்தொரு...." எனத் தொடங்கி "இறைச்சி அறுத்து அயில்வித்து" என்று குறிப்பிடுகிறார். எனவே கொன்ற பாவம் தன் உடலைத் தானே தின்றால் தான் தீரும் என்பதே சரியானது.**

**மு.ஸ்ரீரமணசர்மா**
**முன்னேஸ்வரம்**

## கர்மா என்ற வினையின் விளக்கம்

கர்மா என்றாலும் வினை என்றாலும் ஒன்றுதான். நம்முடைய மதத்தின் அடிப்படையான அசைக்க முடியாத உண்மைகள் நான்கு, அவையாவன:- செய்வான், செய்வினை, வினைப்பயன், சேர்ப்பான் என்பவை.

1. **செய்வான்** - ஆன்மா
2. **செய்வினை** - ஆன்மாக்கள் செய்த வினை
3. **வினைப்பயன்** - செய்த வினையினால் விளையும் பயன்
4. **சேர்ப்பான்** - வினை ஜடம் ஆனமையால் செய்த வினை தானே வந்து செய்தவன் பால் பொருந்த மாட்டாது. ஆகவே இறைவன் அவரவர் செய்த வினைப் பயனைக் காலமறிந்து இடமறிந்து ஊட்டுகின்றான்.

**"செய்வினையும் செய்வானும் அதன் பயனும் சேர்ப்பானும் மெய்வகையால் நான்காகும் விதித்த பொருள்..." - சேக்கிழார்**

வினை நல்வினை தீவினை என இரண்டு வகை. அன்றியும் ஆன்மாக்களாகிய நாம், இப்பொழுது செய்கின்ற வினை ஆகாமியம் எனப்படும். இறைவனாகிய நீதிபதி தீர்ப்புக்கூற இப்பிறப்பில் நுகர்ந்து கொண்டிருப்பது பிராரப்தம் எனப்படும். பக்குவப்படாமல் வரும் பிறப்புக்களில் நுகர்வதற்கு இருப்பது சஞ்சிதம் எனப்படும். ஞானிகள் தன் செயல் இன்றி எல்லாம் ஈசன் செயல் என்று நிற்பதால் ஆகாமியம் விளையாது. பிராரப்தம் உடல் ஊழாக நுகர்ந்து மடியும். சஞ்சிதம் ஞானாக்கினியால் வெந்து சாம்பலாகும் இவ்வாறு வினை நீங்கப் பெற்ற முக்கான்மாக்கள் சிவப்பேறு பெறுவர்.

**சோ.ஜெயக்குமாரசர்மா**
**பாரீஸ்- பிரான்ஸ்**

# உருத்திராட்சம்

**உருத்திராட்ச மாலை உருவான கதை:**

உருத்திர மூர்த்தியின் திருக்கண்களிலிருந்து இரக்கத்தினால் கண்ணீர் சிந்த, அதில் இருந்து உருத்திராட்ச மரம் உண்டாயிற்று.

"ருத்ராட்சா ஜாதா சர்வானுக்ரகார்த்தம்" என்று பராசாரஸ்மிருதி கூறுகிறது. முற்றிய உருத்திராட்ச மணியைத் தேனில் இழைத்து உட்கொள்ள தீராத மூளைக் காய்ச்சல் நோய் நீங்கும் என்று தேரையர் வாடகம் கூறுகிறது.

முற்றிய உருத்திராட்ச மணி மீது செப்புக் காசுகளை வைத்தால் செப்புக் காசு சுற்றும். ஆதலால் உருத்திராட்சத்தில் மின்சக்தி உள்ளது. அதை அணிந்து கொள்வதனால் அதன் மீது பட்ட தண்ணீர் நம்மீது படுவதனால் உடல் நலம் எய்தும். பெண்களும் சிறு சிறு உருத்திராட்ச மணிகளை பொன்னில் கட்டி மார்பில் தாலியுடன் சேர்த்து அணியலாம். மலசலம் கழிக்கும் நேரத்தை தவிர ஏனைய நேரங்களில் அவசியம் அதனை அணிய வேண்டும். சிவார்ச்சாரியர்கள் உருத்திராட்சம் அணிந்துதான் பூஜை செய்ய வேண்டும்.

பூணாமல் கண்டியினை பூசை புரிவார்
பலத்தைக்
காணார் எனவே கழலுமறை
நாணாதே
பூண்டு சிவபூசை புரிவார் புகுந்து
மேற்புரத்துக்
கண்டிருப்பார் ஈசன் கழல்

**- ஊருத்திராட்ச வசிட்டம் -**

**பா.ஜெகந்தநாதசர்மா**
**பறாளை - சுழிபுரம்**

# திருநீறு.....

திருநீறு, வீபூதி, பசுமம், பசிதம், சாரம், இரட்சை என்ற பலவகைப்பெயர்களையுடையது திருநீறு. ஆண்மாக்களின் பாலங்களையெல்லாம் நீறு செய்வதனால் அது திருநீறுப் பசுமம். வி – மேலானப் பூதி – ஐஸ்வர்யம் மேலான ஐஸ்வர்யத்தினைத் தருவதால் விபூதி இங்கே மேலான ஐஸ்வரியம் என்பது முத்திப் பேறு என்பதாகும்.

அறியாமை அழியும்படி சிவஞானமாகிய சிவ தத்துவத்தை விளக்குவதால் – பசிதம் ஆண்மாக்களின் மன மாசினைக்கழுவுவதனால் அதனை சாரம் ஆன்மாக்களைத் துன்பத்தினின்றும் நீக்கி இரட்சிப்பதனால் அதனை இரட்சை எனப் பொருள்படும்.

திருநீறு தரிக்காதவர்கள் செய்யும் தவம் முதலியன உவர் நிலத்தில் இட்ட விதை முளையாது வீணாவது போல பயன்தரமாட்டாது. தவம் செய்யும் ஆற்றல் இல்லாதவர்கள் திருநீற்றினை உள்ளன்புடன் பூசிக்கொண்டால் தவம், தானம், தருமம், விரதம் முதலிய யாவும் செய்த பயன்களைப் பெறுவார்கள். பிதிர் தினத்தில் திருநீறு அணிந்தவர்களுக்கு செய்யும் தான தருமம் மிகுந்த பலன்களைக் கொடுக்கும்.

**சோமாஸ் கிரிதரசர்மா**
**முகத்துவாரம் - கொழும்பு**



# குங்குமம் இடுவதற்கான காரணம்

இந்து மக்களிடையே காணப்படும் கலாச்சார பழக்க வழக்கங்களில் குங்குமம் அணிதல் மிக முக்கிய பங்கு வகிக்கின்றது. அண்மைக்காலங்களில் இளம் வயதினர் இதனை அணிவதில் வெட்கம், தயக்கம் காட்டினாலும் திருமணத்தின் பின் இதனை அணியத்தலைப்படுகின்றனர்.

இக் குங்குமம் தயாரிப்பதனை நோக்குமிடத்து சுத்தமான மஞ்சள் கிழங்கினை உடைத்து எழுமிச்சை பழச்சாற்றில் ஊறவைத்து பின் அதனை வெய்யில் படும் இடத்தில் காயவைத்து பின் அதனை நன்றாக பொடிசெய்தால் குங்குமம் எமக்கு கிடைக்கின்றது. இவ்வாறு பெறப்படும் குங்குமத்தினை பெண்கள் நெற்றியில் தலைவகிட்டிலும் அணிகின்றார்கள். பாரத நாட்டில் ஆண் பெண் இருபாலாரும் இதனை அணிகிறார்கள் இது மங்கள சொரூபமாக இருக்க உதவுகின்றது என்ற நம்பிக்கையுடன் அறிவியல் ரீதியாகவும் காரணங்கள் உள்ளன.

மனித உடலில் நெற்றியின் மத்தியில் உட்பறத்திலே மூளையின் ஒரு பகுதி Pineal Gland என்னும் சுரப்பி உள்ளதாகவும் அறிஞர்கள் அறிந்துள்ளனர். இதனையே நம்புராணங்களில் இறைவன் நெற்றிக் கண்ணுடன் இருப்பதாக சமய அறிஞர்கள் கூறியதை நாம் தொடர்பு படுத்தலாம். இந்த நெற்றிக்கண்ணுடன் தொடர்புள்ள புருவமத்தி ஒரு புலப்படாத சக்தி குவியும் இடமாகவும், யோகப் பயிற்சியில் முக்கியமானதாக கருதும் கழுமுனை இதுவே எனவும் குறிப்பிடக்கூடியதாகவுள்ளது. தெய்வத்திடம் தொடர்பு கொள்ள உதவியாகவுள்ள தியானம், யோகாசனம் என்பவற்றுக்கு முக்கிய பகுதியாக விளங்குகிறது. அதாவது மனிதனின் ஆறு அறிவுக்கு அப்பால்பட்ட விடயங்களை அறிய உதவும் பகுதியாக இது கருதப்படுகின்றது. இதனை உணர்ந்த அன்றைய யோகிகளும், ஞானிகளும் குருமாரும் இதனை தத்தம் நெற்றிகளில் அணிந்து வந்தனர். இக்குங்குமத்தை முறைப்படி தயாரித்து அணியும் போது மின்கடத்தல் சக்தி அதிகரிப்பதாகவும் நெற்றியின் நேர் பின்புறத்திலுள்ள Pineal சுரப்பியுடன் தொடர்பு ஏற்படுவதாகவும் இதனால் தெய்வத்துடன் தொடர்பு கொள்ள தியானம், யோகம் போன்ற முறைகளை கைக்கொள்ள உதவி செய்வதாகவும் நம்பப்படுகின்றது. அத்துடன் கண்படுதல் அல்லது திருஷ்டி போன்ற தீயசக்திகளையும் தடுக்க உதவுகின்றது. இவ்வாறு பலவழிகளிலும் நம்மை பாதுகாத்து நல்லருள் கிடைக்க வழிசெய்வதனாலேயே குங்குமம் இந்து சமயத்தினரால் அணியப்படுகின்றது. ஆகவே தற்போதய இளஞ்சமுதாயத்தினரும் இக் குங்குமம் தரிக்கும் காரணங்களை அறிந்து தாமும் இம் முறைகளை கையாள வேண்டும் என வேண்டுவதுடன் எல்லோரும் பறாளை ஸ்ரீ ஷண்முகநாதப் பெருமான் அருள்புரிய வேண்டி வணங்குகின்றோம்.

**பிரம்மஸ்ரீ சு. வரதராஜசர்மா**
**கோண்டாவில்**

---



பறாளாய் "சிற்பகலாமணி"
பிரம்மஸ்ரீ சி.பாலகுமாரசர்மா
சென்னை

ஆலயத்தினது இராஜகோபுரம், மூலவர், ஷண்முகர் விமானம், தூலஜஸ்தம்ப மணிமண்டபம், ஷண்முகவிலாசம் என்பவற்றிற்கான சிற்ப வேலைகளை மேற்கொண்டவர்.

# ஆகமங்களில் சுப்பிரமணியன்

ஸ்ரீபதிசர்மா கிருஷ்ணானந்தசர்மா
*விரிவுரையாளர் – சமஸ்கிருதத்துறை*
*பல்கலைக்கழகம் – யாழ்ப்பாணம்*
*(சிவன் கோவில் – நல்லூர்)*

**கௌ**மார வழிபாட்டு மரபில் வழிபடும் தெய்வமாக சுப்பிரமணியன் விளங்குகின்றார். ஸ்கந்தனின் ஒரு வடிவமாகப் போற்றப்படும் இவர் நல்ல வேதத்திற்குத் தலைவன், சிறந்த தேவன், ஆனந்தமான பரவஸ்நூலிலிருந்து தோன்றி ஒளிக் பவன் எனப் பொருள்படும் குணங்களையுடையவர் சுப்பிரமணியன் என்பது சிறந்தது எனவும், பிரம்மணியம் என்பது வேதத்தைச் சார்ந்தது எனவும் பொருள்படும் பிரம்மத்தை உபாசிப்பவர்களுக்கு சிவனிலும் மேலான தெய்வமாக விளங்கும் இவர் சிவப்பரம் பொருளுக்கு வேறானவரல்லர்.

ஆனந்தமானது, பிரம்மம் பரிசுத்தமானது நியமபிரகாசம் சக்கிதானந்தம் - ஆனந்தத்தையே சொரூபமாக உள்ள பரவஸ்துவின் பால் உதித்த அறிவுமயமான வியாபத்தன்மை பொருந்திய காரிய வடிவினைவான அருள் நிறைந்த அனாதி நித்திய சிவப்பிரகாசமென்றும் அனுபவ சொரூபமே சுப்பிரமணியன் ஆவார். இன்னொருவகையில் சு நன்மை - இனிமை பிரம்மணியம் - பிரம்ம ஞானத்தில் விருப்பத்தை வளர்ப்பது ஆகவே வழிபடுபவர்களை இன்மையான பேரின்பத்தில் திளைக்கச் செய்து அவர்களின் மேலான ஞான இயல்பினை மேலும் மேலும் வளரச் செய்பவனே சுப்பிரமணியன் ஆவார்.

இவர் குங்குமநிறமும் நிறை மதிபோல்முகமும் தாமரை, அபயம் சத்தி குக்குடம் இவற்றைத்தாங்கிய நான்கு கைகளும் செஞ்சாதனச் செம்பட்டையும் கேயூரம், ஆரம் (மாலை) இவற்றை உடையவராகவும் விளங்குகின்ற திருவுருவம் உடையவர். இன்னொரு வகையில் ஒரு முகமும் இருகைகளும் அவற்றில் ஒரு கையை அபயமாகவும் ஒரு கையை இடுப்பிலும் வைத்திருப்பவர் சூரியன் போன்ற ஒளியை உடையவர் என குமாரசரித்திரம் கூறுகின்றது. கௌமாரம் என்பது மோஷத்தைத்தருவது எனப்பொருள்படும். இவ்விதமான சிறப்புடைய சுப்பிரமணியனது வழிபாட்டு மரபினையும் மூர்த்தியினுடைய உருவபேதங்களையும் பலவிதமாக பல்வேறு ஆகமங்களும் எடுத்து விளக்குகின்றன. அம்சுமதபேதாகமம் (படலம் 49ல்) ஷண்முகரின் இலஷணல்களை எடுத்து விளக்குகின்றது. உத்தரகாமிகம் (படலம் 64ல்) குகனுடைய ஸ்தாபனம் இலஷணங்கள் என்பன கூறப்படுகின்றது.

அழகு பொருந்திய இரு கரங்கள் இரு கண்களையுடையவராய், வலது கையில் தாமரையும் தொங்கிய இடது கையையும் உடைய சிறு குமார வடிவினனான சுப்பிரம்மணியர் கிராமங்களில் அபிவிருத்தியின் பொருட்டு அமைத்து வழிபடவேண்டியவர் ஞானஸ்கந்தர் எனும் திருஉரு மலைகளிலும் காடுகளிலும் ஸ்தாபித்து வழிப்படவேண்டியது. அடுத்து ஸ்கந்தர் என்பவர் பட்டணங்களிலும் நகரங்களிலும் நிறுவப்பட்டு வழிபடவேண்டியவர் அறுமுகங்கள் ஆறுதலைகள் பன்னிருகண்கள் பன்னிரு கரங்கள் சக்தி, அபயம், அஷமாலை கத்தி,கேடயம், கோழி இவைகளைக் கையில் உடைய ஷடானனர் என்பவர் தலைநகரின் அபிவிருத்திக்காக நிறுவப்பட்டு வழிபடவேண்டியவர். இரு சக்திகளுடன் மயில் மேலமர்ந்த மயூரவாகனர் கிராமங்கள் முதலானவற்றில் சித்தியின் பொருட்டு நிறுவப்பட்டு வழிபடவேண்டியவர்.

ஸ்கந்தனுடைய திரு உருவை இருக்கை நிலையில் இருகரங்களுடனும் நிற்கின்ற நிலையில் நாற்கரங்களுடனும் (யானம்) செல்கின்ற நிலையில் எட்டு கைகளுடனும் அமைதல் வேண்டும் என சுப்பிரபேதாகமம் (44 படலம்) கூறுகின்றது.

குமாரதந்திராகமம் நாற்கரங்கள், இருகரங்கள் ஆறுகைகள், எட்டு கைகள், பன்னிருகைகள் உடைய முருகனின் வடிவங்களை பலவாறு கூறுகின்றது. இவற்றில் இருகைகளையுடைய மூர்த்தியானவர்

ஐந்து வகையாகவும் நாலுகைகளையுடையவர் ஏழு வகையாகவும், பன்னிருகைகளையுடைவர் ஆறுவகையாகவும் அமைக்கும் முறை கூறப்படுகின்றது. இம் மூர்த்திகளை சக்திகளுடன் கூடியதாக அமைத்தல் வேண்டும் எனவும் சக்திகள் அல்லாது தனித்து அமைப்பது யோக மூர்த்தி எனவும் கூறப்படுகிறது. மேலும் சில்பரத்தினம், விஷ்ணுதர்மோத்தரம், பூர்வகாரணாகமம், ஸ்ரீதத்துவநிதி போன்ற நூல்களும் சக்திதரர், சுப்பிரமணிய ஸ்கந்தர், ஞானசக்தி சுப்பிரமணியர், ஸ்கந்த சுப்பிரமணியர், சேனாபதி, சரவணபவன், கார்த்திகேயன், குமாரன், ஷண்முகன், தாரகாரி, சேனானி, பிரம்மசாஸ்தா, வள்ளிகல்யாணசுந்தரர், பாலசுவாமி, கிரௌஞ்சபேதர், சிகிவாகனர், பாகுலெயர், அக்கினிஜாத சுப்பிரமணியர், சௌரபேயசுப்பிரமணியர், காங்கேய சுப்பிரமணியர், குகன், பிரம்மசாரி, பரமசிவனிக் குருவான தேசிக சுப்பிரமணியர் போன்ற திருஉருவ இலஷணங்களை கூறுகின்றன.

அனைத்துலகிலுமுள்ள இருளைப் போக்குகின்ற கோடி சூரியஒளிக் கிரணங்களை வீசுபவரும் பூமியில் ஊன்றிய ஒரு முளையையுடைய வில்லையும் அம்பையும் உடையவரும் மேல்நொக்கிய உடலையுடையவரும் குலிசம், சக்தி, தாமரை, ஜபமாலைகளை ஏனையகைகளில் கொண்டு விளங்குபவரும் அனைத்து அலங்காரங்களும் கொண்டவரும் அமரர் உலகைக் காப்பாற்றப் பாடுபடுபவர் எனப் போற்றப்படுகின்றார். இவர் விண்ணுக்கும் மண்ணுக்குமுரியதாக கூறப்படுவது நோக்கத்தக்கதாகும்.

சுப்பிரபோதகமம் முருகனின் தோற்றம் பற்றிக் கூறும்போது மலையரசன் மகளாகிய பார்வதி தேகத்தைவிட்டு ''சதி''ஹிமவான் மகளாக மலைச்சாரலில் தவம் செய்தாள். அப்போது சிவனும் யோக நிலையில் இருந்தார். இருவருடைய இணைவையும் தேவர்கள் பிரார்த்தித்தார்கள். சிவனுடைய (ரேதஸ்) ஒளி அக்கினியால் பெறப்பட்டு சரவணப்பொய்கையில் விடப்பட்டது. அதிலிருந்து முருகன் தோன்றியதால் சரவணன் எனப்பட்டான். கார்த்திகைப் பெண்களின் பாலுண்டதால் கார்த்திகேயன் எனவும் அறுவரின் பாலுண்ணவேண்டியதால் ஆறுமுகன் எனவும் தோற்றம் பெற்று அழைக்கப்பட்டான். எனக் கூறுகின்றது. மேலும் ஸ்கந்த மஹாபுராணத்திலும் அதன் இதிஹாஸமாகிய சிவரஹஸ்யத்திலும் முருகனின் பெருமை பலவாறு கூறப்பட்டுள்ளது. இவ்வித சிறப்புக்களையுடையவனும் வழிபடும் அடியவர்களைப் பேரின்பத்தில் திளைக்கச் செய்பவனுமாகிய சுப்பிரமணியனை வழிபட்டு இகபர சௌபாக்கியம் பெறுவோமாக.

**உசாத்துணை நூல்கள்**


1. கலைக்களஞ்சியம்
2. குமாரதற்சிரம் ஆகமம்
3. அப்பிரபேதம் ஆகமம்
4. காரணாகமம்
5. காமிகாகமம்
6. சிவாலயத்திருமேனிகள் - திருவாவடுதுறை ஆதீனம் - 1999
7. முருகன் - திருவாவடுதுறை ஆதீனம்
8. Puranic Encyclopaedia - Molilalbanarsidass Publishers - Delhi - 1998

# நன்னெறி செலா அவுணர் நாயகன் முன் உய்த்தான்

பண்டிதர் திரு. பொன்னம்பலவாணர்.
சித்திவிநாயகர் கோவில் – பொன்னாலை

கந்தபுராண சூரபன்மன் வதைப்படலத்தில் வருவதொரு அரிய அதொடர் ஈது. சூரபன்பனுக்கும் முருகனுக்கும் நிகழ்ந்த போரில் முருகனுக்கு வெற்றியும் சூரபன்மனுக்கு தோல்வியும் உண்டானபோது தேவர்கள் மகிழ்ச்சி யாரவாரம் செய்தமை கண்டு சூரபன்மன் முருகனை எதிர்ப்பதைவிட தேவர்களை தாக்கத் தொடங்கினான். முருகன் யுத்தகாலத்தில் நின்றவாறே சூரபன்மனால் தேவர்களுக்கு பாதிப்பு ஏற்படாதவாறு தடுத்தார். பின் முருகன் தன் தேர்ச்சாரதியாகிய வாயுதேவனைத் தன் தேரினை சூரபன்மன் நிற்கும் வானவெளிக்கு செலுத்துமாறு பணித்தார். இவ்வாறு வாயுதேவன் சூரபன்மன் முன் முருகன் இருந்ததேரை கொண்டு செலுத்திய நிகழ்வையே ''நன்னெறி செலா அவுணர் நாயகன் முன் உய்த்தான்'' என்று கச்சியப்பர் பாடுகின்றார்.

பாடல் இவ்வாறு அமைந்திருந்தாலும் சூரன் முன் முருகன் சென்று நின்றார் என்பதேகருத்தாகும். ஏனெனில் வாயுதேவனை இவ்வாறு செல்லும்படி ஏவியவர் முருகனே ஆவார்.

இங்கு சூரபன்மனைக் கச்சியப்பர் ''நன்னெறி செலா அவுணர் நாயகன்'' என்றது கவனிக்கத் தக்கது. சூரபன்மனை எதிர்த்து யுத்தம் செய்தவர் முருகன். யுத்தத்தைப் பார்த்து தூரத்தே நின்ற பார்வையாளர்கள் தேவர்கள். முருகனை எதிர்ப்பதை விடுத்து தேவர்களைத்தாக்கியதால் அவன் ''நன்னெறி செலா அவுணர்நாயகன்'' ஆயினான். தன்னை எதிர்க்கும் ஆற்றல் அற்றவர் தேவர் என்பதை அறிந்திருந்தும் தன்னிலும் மெலியாரைத் தாக்க முற்பட்டமையினால் ''நன்னெறி சொல்லாதவன்'' ஆயினான்.

சிவானுக்கிரகத்தால் வரமும் அதிகாரமும் பெற்றபின் தன் ஆட்சிக்குட்பட்ட அண்டங்களில் வாழும் தேவர்களை நீதிவழுவாது ஆட்சிசெய்ய வேண்டியவன் அதனைச் செய்யாது கொடுமைப்படுத்தியமையால் ''நன்னெறி செல்லாத வனாகினான்'' தன் உயிரில் விருப்பமற்றவர்களே தேவர்களுக்கு துன்பம் செய்வர் என்றும் தேவர்களுக்கு துன்பம் செய்தமையாலேயே வரம் முதலிய பலம் பெற்ற அவுணர் பலர் அழிந்தனர் என்பதை அறிந்திருந்தும் தேவர்களை துன்புறுத்தி சிறை செய்தமை எதிர்த்தமையினால் நன்னெறி செல்லாதவனாகிறான். முருகனும் சிவனும் வேறல்லர் என்பதை நியாயங்களினால் மட்டுமன்றி தன் செயலாலும் வீரவாகுதேவர் தூது சென்றுணர்த்திய போதும் திருந்தாமையால் நல்நெறி செலாதவனா கிறான். தனக்கு வரமளித்த சிவன் ஆதலால் அவர் மகனை எதிர்த்தல் நன்றி கொல்லல் உய்தியில் பாவம் என்பதை மறந்து யுத்தத்திற்கு வந்தமையால் நன்னெறி செல்லாதவனாகிறான். இப்படியான பலகாரணங்களினால் அவன் முன்பு தான் செல்லலாகாது என்று கருதி வேலை ஏவி அவனை அழிக்கும் செயலைச் செய்யாது அச்சூரபன்மன் முன்சென்று அவனுக்கு தன்னை வெளிப்படுத்தி காட்சி தந்த முருகன் கருணையை தாம்வியந்து எம்மையும் சிந்தித்து உய்வடைய வாய்ப்பாக கச்சியப்ப சிவாச்சாரியார் கவிக்கூற்றாக இத்தொடரை அமைத்திருப்பது பெரும் நன்மை பயப்பதாயுள்ளது. சூரபன்மன் வீடயத்தில் மட்டுமன்றி நன்நெறி செய்பவர், செய்யாதவர் என வேறுபடுத்தாது ஒவ்வொரு உயிரையும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஈந்து தடுத்து ஆட்கொள்ளும் பெருங்கருணையாளர் முருகக் கடவுள் இப்படியான முருகனின் அளப்பெரும் கருணையினை நாமெல்லாம் அவதானித்து உய்யவாய்ப்பாக சூரபன்மன் முன் முருகப்பெருமான் சென்றமையினை அடையாளமாகக் காட்டும் கச்சியப்பர் பெருமையினையும் முருகன் கருணை யையும் மறவாது நலம்பெறவேண்டும்.

சூரபன்மனை எதிர்த்து யுத்தம் செய்த முருகன் செயல் தேவர்களுக்கு மட்டுமன்றி சூரபன்மனுக்கும் அருள்புரிந்தது போல இறைபருளால் அதாவது இறைபணியில் ஈடுபடுதல் போன்ற சமயங்களில் வரும் எதிர்ப்பு, துன்பம் போன்றன சூரன்முன் முருகன் வெளிப்படும் அருட்பேற்றுக்கான எதிர்ப்பே எனத் தெளியப்பாடுபடுவோமாக.

# என் இருகண்ணே கண்ணுள் இருக்கும் மாமணியே போற்றி

பண்டிதை **பொன் பாக்கியம்**
- சுழிபுரம் -

என் வாயிலும் மனத்திலும் இடையறாது நிறைந்து நிற்கும் முருகப்பெருமானை எண்ணும் பொழுது என் உள்ளம் இறும்பூது எய்துகின்றது. உடல் புளகாங்கிதம் அடைகின்றது. வாழ்த்த வாயும் நினைக்க மட நெஞ்சும், தாழ்த்தச் சென்னியும் அந்தப் பரம்பொருள் தந்தானென்றால் அது எத்தனையோ பல பிறவிகளில் நான்செய்த புண்ணிய மென்றே நினைக்கின்றேன்.

கலியுகத் தெய்வம் கந்தனாவான், 'ஈசனே அவன் ஆடலால் மதலை ஆயினன்காண்' என்கின்றது கந்தபுராணம். குறிஞ்சிநிலக் குமரன் மருதநிலப் பாங்கான நம் சுழிபுரத்திலுள்ள பறாளைத் தலத்தில் வீற்றிருந்து அடியவருக்கு அருள்மழை பொழிகின்றான். இத்திருத்தலத்தின் பெருமையையும், இங்கு எழுந்தருளி அருள்பாலித்துக் கொண்டிருக்கும் ஈசுரவிநாயகர், சிவசுப்பிரமணியர் ஆகிய தெய்வங்களின் பெருங்கருணையையும் பல நூல்கள் எடுத்தியம்பி இருக்கின்றன.

முருகப் பெருமானது ஆலயத்திற் பூசை செய்யும் இரு பிறப்பாளர்களாகிய அந்தணர்கள் இந்தியாவிலிருந்து வருகைதந்த உயர் கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள். ஆசாரம், ஒழுக்கம், சீலம், வர்ணாச்சிரம தர்மம், வேத நூற்பயிற்சி, ஆகம விதிகள் யாவும் அறிந்தவர்கள் அந்தணர் என்போர் அறவோர் என்னும் கூற்றுக்கு இலக்கணமாக வாழ்பவர்கள். இவ்வூரவர்களாலும் அயற் கிராமத்தவர்களாலும் நன்கு மதிக்கப்படுபவர்கள். முருகப் பெருமானுக்கு நித்திய நைமித்திய பூசைகளை நன்கு ஆற்றி மக்களுக்கு மனச்சாந்தியையும் பேருவகையையும் நல்குபவர்கள். ஊர் மக்களுடனும், விவசாயிகளுடனும் நல்லுறவு பூண்டவர்கள் இவர்கள் சுழிபுரம் குடியிருப்புப் பகுதியிலும், கோயிலை அண்டிய பகுதியிலும் இல்லங்கள் அமைத்து கோவிற்சூழலைப் புனிதமாகப் பேணிக்காத்தவர்கள். ஒருநாளாவது முருகப் பெருமான் வீற்றிருந்தருளும் பறாளைத் திருத்தலம் ஆளரவம் அற்றதாகக் காணப்படுவதில்லை. இற்றைக்கு ஐம்பத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக நான் புத்தி பூர்வமாக முருகனை வழிபட்டு வருகின்றேன். அவன் கோவில் கொண்டிருக்கும் மண்ணைத் தீண்டி இன்புற்றிருக்கிறேன். அச்சந்தர்ப்பங்களில் சிவனும் அம்மனும் போல் வீற்றிருந்த எங்கள் உபாத்தியாயர் ஐயாவும் கமலாம்பாள் அம்மாவும் எனக்கு நல்லாசி வழங்குவார்கள். நாடு நாடாகாது போனமையால் யாவும் மாறிவிட்டன. மீண்டும் பெருமானின் திருக்கருணையினால் கோவிலும், கோபுரமும் புதுப்பொலிவு பெறுகின்றன. அப்பனின் அருளினால் கோவிற் சூழலும் புதுப் பொலிவு பெற்று அந்தணர் வாசஸ்தலங்களும் உருவாக வேண்டுமெனப் பிரார்த்திப்போமாக.

அடியவர்க்கு எளியவனாய் ஒருகால் நினைக்கில் இருகாலும் தோன்றும் சிவசுப்பிரமணிய சுவாமி உலகம் உய்யத் தோற்றம் பெற்றவர். ''யாழ்ப்பாணக் கலாச்சாரம் கந்தபுராணக் கலாச்சாரம்' என்பது நாவலர் பெருமானின் திருவாக்கு. இவ்வாலயம் தோற்றம் பெற்ற காலம் தொடக்கம் கந்தசஷ்டி விரதகாலத்தில் கந்தபுராணம் படித்துப் பயன் கூறுவது மரபாக உள்ளது. நமது மூதாதையர் விரதகாலத்திற் கோவிலிலேயே தவமிருந்தனர். பிள்ளைச் செல்வம் கிடைக்கப் பெறாதவர் கந்தர்சஷ்டி விரதம் அனுஷ்டித்து அப்பேற்றைப் பெற்றனர். நாற்பாலும் நன்செய்வயல்கள் சூழ நடுவே தாமரைமலர்த்

தடாகம் குளிர்செய்ய அப்பரம்பொருள் பறாளையிற் கோவில்கொண்டிருக்கிறார். ஐப்பசி கார்த்திகை மாதங்களில் பறாளைச் சூழலைக் காணாத கண் என்ன கண்ணே என்றவாறு இயற்கை பச்சைப் பசேலனக் காட்சியளிக்கும் அழகிய மயில்கள் தோகைவிரித்தாடும் தடாகத்தின் அருகேயுள்ள வெள்ளரசு மரமும் வேம்பும் பின்னிப் பிணைந்து தடாகத்தின் மேற் படர்ந்து நிழலளிக்கும் இத்தகைய இயற்கை அமைவைக் கொண்ட பறாளைத்தலம் பிரசித்தி வாய்ந்தது. சங்கமித்தை வந்திறங்கிய சம்பில் துறைமுகமும் ஸ்ரீ ராமர் பாதம்பதித்த திருவடிநிலையும் இத்தலத்திற்கு மேற்கேயுள்ளன. அத்திருவடிநிலைக் கடற்கரைக்கே முருகப் பெருமான் தீர்த்தமாடச் செல்வார்.

பறாளை முருகனுக்கு கொடியேறிவிட்டால் கோவிலுக்குவரும் விரதிகளின் எண்ணிக்கை சொல்லில் அடங்காது. மகாமண்டபத்திலிருந்து தேர் முட்டிவரை அங்கப் பிரதட்சணம் செய்வோரும் அடியழிப்போரும் இட நெருக்கடி காரணமாக காத்திருப்பர். கந்தசஷ்டி விரத காலத்தில் மகா மண்டபம் முழுவதும் விரதிகளிருந்து பக்திபூர்வமாகக் கந்தபுராண படனம் கேட்பர்.

இத்தகு சிறப்புள்ள அருள்வள்ளல் ஆறுமுகப்பெருமான் கோவில் கொண்ட திருத்தலத்தைத் தரிசிக்க நாம் கோடி தவம் செய்துவிட்டோம். அவர் கண்பட்ட மண்ணில் நமது கால் பட்டாலே போதுமென எண்ணிவரும் தள்ளாத வயது அடியவர்கள் எத்தனை எத்தனைபேர் அவன் தேர்மீது இருந்து வரும் காட்சி அப்பப்பா கண்கொள்ளாக் காட்சி. மெய்ஞ்ஞான தெய்வத்தைக் கண்டுதொழ நாலாயிரம் கண் படைத்திலனே அந்த நான்முகனே' என அருணகிரி நாதர் ஏங்குகின்றார். உன்னை ஒழிய ஒருவரையும் நம்புகிலேன் எனப்பாடுபவர்களும் எந்தையும் எனக்கருள் தந்தையும் நீயென ஓலமிடுபவர்களும், என்னிருகண்ணே கண்ணுள் இருக்கும் மாமணியே போற்றி எனக் கதறிக் கண்ணீர் சொரிபவர்களும், காக்கக்கடவிய நீர் காவாதிருந்தக்கால் ஆர்க்குப் பரமாம் ஆறுமுகவா எனச் சண்டையிடுவோருமாக அடியவர்கள் முருகனைப்பற்றிப் பிடிப்பார்கள்.

அழகும் இளமையும் அருளும் நிறைந்த முருகப் பெருமானை வழிபடும் நமக்கு மணிவாசகப் பெருமான் கூறிய வண்ணம் உடம்பெல்லாம் கண்ணாகிக் கண்ணீர் வெள்ளம் பாயவேண்டும். உள்ளந்தான் நின்று உச்சியளவும் நெஞ்சாய் உருகவேண்டும். யாவும் அவன் தந்தவை என்னாலும் சில முடியுமென்கை நாணன்றோ என்னும் நிலை உருவாக வேண்டும்.

எங்கள் பறாளை முருகனுக்கு அழகிய கோபுரம் அமைக்கப்பெற்று கோவில் புனருத்தாரணம் செய்யப் பெற்றுப் புதுப் பொலிவுடன் அவன் விளங்குகின்றான். முருகனை அருள் மழை பொழியச் செய்யும் அந்தணப் பெருமக்களும் கோவில் தர்மகர்த்தா சபையினரும், தொண்டர் சபையினரும், கோபுரம் அமைத்தோரும், முருகப் பெருமானை அன்புடன் வழிபடும் அடியவருமாகிய அனைவரும் அவனருளைப் பெற்று வையத்தில் வாழ்வாங்கு வாழ்வோமாக.

பன்னிரு கரத்தாய் போற்றி பசும்பொன்மா மயிலாய் போற்றி முன்னிய கருணை யாறு முகப்பரம் பொருளே போற்றி கன்னியர் இருவர் நீங்கா கருணைவா ரிதியே போற்றி என்னிரு கண்ணே கண்ணுள் இருக்குமா மணியே போற்றி.

# சுழிபுரம் பறாளை காசி விசுவநாத சிவலிங்கப் பெருமான்

**வாடையும் கோடையும்** மாறி மாறி வந்து வளமாக்கும் பூமி யாழ்ப்பாணம். யாழ்ப்பாணத்தின் மேற்திசை யடைந்தது சுந்தரஞ்சேர் சுழிபுரம். சுழிபுரத்தின் வடபால் அமைந்தது பறாளையம்பதி. இப் பெரும்பதியிலே பொற்புற வீற்றிருந்து அருள் பாலிப்பவர் விநாயகப் பெருமானும் முருகப் பெருமானும்.

ஸ்ரீசிவசுப்பிரமணியர் ஆலயம் எனச் சிறப்பித்துக் கூறப்படும் முருகன் ஆலயத்தில் பொற்றாமரைக் குளத்தின் கிழக்கு புறத்தேயிருப்பது காசி விசுவநாதரின் சிற்றாலயம். காசி விசுவநாதர் வரலாற்றுப் பின்னணியோடும் சரித்திரச் சிறப்போடும் சிறப்பித்துப் பேசப்படுகின்ற அரச வேப்பமரத்தின் கீழ் வீற்றிருந்து அருள் பாலிக்கின்றார்.

காசி விசுவநாதப் பெருமான் இங்கு எழுந்தருளி அருள் பாலிப்பதற்கு சிறப்புக்காரணம் உளது. காசி விசுவநாதரையும் விசாலாட்சியம்மையையும் வணங்கினால் பெருமையுண்டு. பக்தியோடு தரிசிக்க முக்தியுண்டென்பர் ஆன்றோர். கங்கை நதியில் மூழ்கிப் பாவம் தீர்த்துப் பயபக்தியோடு பெருமானையும் பெருமாட்டியையும் இங்கு தரிசித்தால் இதன் மேற் பேறில்லை என்பர்.

இக்கூற்றுக்கு அமையச் சுழிபுரம் வடக்கு கந்தவனம் சுந்தரம்பிள்ளை அவர்களும் அவர்களது தர்மபத்தினியார் அமிர்தமும் வட இந்தியா சென்றனர் பாவங்கள் தீர்க்கும் புண்ணிய நதியான கங்கைக் கடலில் மூழ்கிக் காசி விசுவநாதரையும் விசாலாட்சி அம்பாளையும் கண்ணாரக் கண்டு உள்ளம் உருகிப் பக்தியோடு ஆனந்தக் கண்ணீர் வடித்து வழிபட்டனர். எம்பெருமானே! சுழிபுரம் செல்லும் போது உம்மோடு கூடவே செல்லவேண்டும் என்று நினைத்து, அங்கிருந்து எம்பெருமானது சிலை வடிவான சிவலிங்கத்தை எடுத்து வந்தனர்.

கைலையிலிருந்து இராவணன் சிவலிங்கத்தை எடுத்து வந்தது போல சுந்தரம்பிள்ளை தம்பதிகள் காசியிலிருந்து சிவலிங்கத்தை எடுத்து வந்து பறாளை முருகன் பொற்றாமரைக் குளத்தருகே வீற்றிருக்கச் செய்தனர். பொற்றாமரைக் குளத்தையும் வைரக்கல்லினாலே சுற்றி வரக்கட்டி மிகச் சிறந்த அழகிய பெரிய குளமாக ஆக்கினர். இதே போன்று காசிவிசுவாநாதச் சிவலிங்கப் பெருமானையும் வைரக்கல்லினால் அமைக்கப்பட்ட சிற்றாலயத்தில் சிறப்பாக அமைத்தனர்.

சிவனும் தன் பிள்ளைகளாகிய மூத்தண்ணனாகிய விநாயகப் பெருமானும் அவன் தம்பியாகிய ஆறுமுகப்பெருமானும் சேர்ந்திருக்கும் ஆலயங்களின் அருகே தானும் இணைந்திருக்க வேண்டும் என்ற கருத்தோடு இங்கு வீற்றிருந்து அருள வந்தானோ! என்ற எண்ணக்கருவை இக் கோலாக்காட்சி எம்மனக்கண்ணே கொண்டு வருகின்றது. பொற்றாமரைக் திருக்குளத்தின் பெருநீரால் அடியார்கள் அவன் திருப்பாதத்தில் அபிஷேகம் செய்யவும் குருமார்கள் குடநீரால் அபிஷேகம் செய்யவும் எம் பெருமான் காசிவிசுவநாதனின் அருளாட்சி எங்கும் பரவுகின்றது. கிட்டத்தட்ட எழுபது ஆண்டுகளுக்கு முன்பாக அமைந்த இந்த ஆலய அமைப்பும் அதன் பொலிவும் அடியார்களை அன்றும் இன்றும் என்றும் ஈர்த்துக்கொண்டேயிருக்கின்றது. சிவலிங்கப்பெருமானுக்கு நித்தியபூசையோடு சிவபெருமானுக்கு நடைபெறும் விஷேட அபிஷேகங்களும் நடைபெறுகின்றன. அத்தோடு மாசி மாதத்தில் வரும் மகா சிவராத்திரியும் சிறப்பாக நடைபெறுவது சிறப்பம்சமாகும். மேலும் கார்த்திகை மாதத்தில் காசி காண்டப் படிப்புச் சிறப்பாக இடம்பெறுகின்றது.

இவ்வாறான சிறப்புகளோடு நிகழும் இச் சிவலிங்கப்பெருமானுக்கு யாவும் சிறப்பாக நடைபெறுவதற்காக அன்பர் சுந்தரம்பிள்ளை அமிர்தம் தம்பதிகள் பறாளையில் ஆறுபரப்பு நெற்காணியையும் இக் கோயிலுக்கு எழுதிக் கொடுத்துள்ளனர். கோயிற் தொண்டில் மிக மிக ஈடுபாடு கொண்ட கந்தவனம் சுந்தரம்பிள்ளை தம்பதிகள் ஆண்சந்ததியே இவ் ஆலயத்தைப் பரம்பரை பரம்பரையாகப் பார்த்து நிர்வகிக்க வேண்டுமென்றும் கூறிப் போந்தனர்.

இவ்வாறு பற்பல சிறப்புகளோடு அமைந்து பொலிந்த இச்சிறு ஆலயம் தரிசித்து வழிபட ஆனந்தம் பயக்கின்றது. காசி சென்று விசுவநாதப் பெருமானைத் தரிசிக்க முடியவில்லையேயென்ற பக்தர்களின் ஏக்கத்தையும் மனத்தாக்கத்தையும் போக்கி, அன்போடு வழிபட இவ் ஆலயம் வைக்கின்றது. காசியில் இறக்க முத்தி என்பார்க்குக் காசி செல்லாமலே சுழிபுரம் பறாளை முருகன் ஆலயத்தில் அமைந்துள்ள விசுவநாத சிவலிங்கர் பெருமானை வணங்கினாலும் முத்தி கிடைக்குமென்பதில் ஐயமே இல்லை. ஆகவே இப்பெருமானை என்றும் வந்திப்போம்! சிந்திப்போம்! இகபர சுகங்களைப் பெற்றிடுவோம்!

**கட்டுரை ஆக்கம்**

திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகளின்
பிரதான சீடன்
கலாபூஷணம் பிரசங்கபூஷணம்
**சுழிபுரம் நடேசன் சிவசண்முகமூர்த்தி** B.A. Dip.in.Edu
(முன்னாள் ஆசிரிய அலோசகர்)

சுழிபுரம் - பறாளாய்

## ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி திருக்கோவில்

## மகாகும்பாபிஷேக சிறப்புமலர்



# கவிதைகள்

ஆலய அர்ச்சகர்
அமரர்

**பிரம்மஸ்ரீ சு.ஷண்முகரத்நசர்மா**

அவர்களினால் இயற்றப்பட்ட
பறாளாய் முருகன்

# தமிழ் முத்து மாலை




**காப்பு**

**பூலோக கற்பக தருக்களும் செந்நெல்
வயல்களும் சூழ்ந்திருந் தழகெறிப்ப
செந்தாமரை மலர்ந்தாடும் தடாகமும்
பழமைபெறு வெள்ளரச மரமும்
வண்டாட மலர்பபொழிந்து வழிபாடு
செய்கின்ற தண்கடம்ப வனமும்
பண்பாடும் பறாளையுறை பாலசுந்தரனை
நினைந்துருக வந்தருள் கணேசசுந்தரனே.**

**நூல்**

**நூற்றெட்டு யுககாலம் நொந்தலைந்
தழுது நின்ற
முப்பத்து முக்கோடி தேவர்கள் துயர்தீர
நெடுவே லெறிந்த குமரா
பலகோடி பக்தர்கள் முருகா எனக்கூவி
மகிழ்கின்ற பறாளை தனிலே
மயில் மேலமர்ந்தென் உளமேபுகுந்த
குகனே ஷண்முகானந்த குருவே.**

மணிமகுடமின்ன முழுமதி யெழுந்தன்ன
மிளிர் வதனங்களாறும்
கருணைபொழி ஈராறுவிழிகளும் அபயமென்
றருள் புரியும் ஆறிருபுயங்களும்
இரத்நவடிவேலும் க்குடபதாகையும் வைர
மணிமாலைகளும் என்னுளே தோன்ற
வருகின்ற கந்தனே பறாளையுறை முருகனே
ஷண்முகானந்த குருவே.

செந்தினை மாவையும் தேனையும் கலந்தந்த
மான்விழிவள்ளி மலர்க்கரம் தந்ததை
ஏந்தினை உண்டனை உன்னருள்மழை
பொழிந்தவளை அணைத்தனை ஐயா
கந்தனே காத்தருள் காத்தருள் என்றி
டைவிடா துருகுகின்றோம்
வந்தனை செயுமடியர் துயர்தீர்க்கும்
பறாளையுறை கந்தனே ஷண்முகானந்த குருவே.

இந்திரற் கரசளித்தாய் இமையவரைக் குடி
யேற்றினாய் தந்திரச் சூரனைச்
சமர்செய்தடக்கியே சேவலும் மயிலு
மாக்கினாய் மந்திரத் தமிழினால்
கந்தனே உன்னலங்காரமும் கருதரிய
அனுபூதியும் சுந்தரத் திருப்புகழுமாய்
வந்தனை செயுமடியர் கூடிடும் பறாளையுறை
முருகனே ஷண்முகானந்த குருவே.

அழகனே குமரனே புள்ளிக்காலப மயிலேறிவரும்
வள்ளிக்கு வாய்த்த கணவனே
ஆனந்த நடமாடு மலைவாயமர்ந்த திருச்
செந்திலாண்டவனே தேவசேனாதிபதியே
திங்கள் தங்குசடைப்பரமன் தந்த சிவசுப்பிரமண்
யனே இந்திராணி மங்கலம்காத்த தயாநிதியே
எங்கள் துயர்தீர தாய்மார்கள் தாலிகாக்க காளையர்
தம் கன்னியர்தம் உயிர் காக்க
வழிபொன்று நின்கருணை மழைபெய்து தோன்றிடாதோ
தேவர் துயர் தீர்த்த தேவசேனாபதியே
வழியெங்கும் திருப்புகழ் மழைதங்கும் பறாளை
வடிவேலனே பால ஷண்முகானந்த குருவே

கந்தாசரணம் கடம்பாசரணம் கதிர்காமத்தெந்
தாய்சரணம் கனகமயில் வீராசரணம்
காந்திமதிபெற்ற தேந்தாசரணம் கார்த்திகேயாசரணம்
கானக்குறமங்கை கந்தாசரணம்
குமராசரணம் குகனேசரணம் குஞ்சரிதன்கணவா
சரணம் பரங்குன்றனே சரணம்
கூத்தாடும் காவடிகள் பார்த்தாட மயிலாடும் பறாளை
யுறை முருகாசரணம் சரணம் ஷண்முகானந்த குருவே.

அகத்தியருக்கரிய தமிழ்உபதேசித்தாய் நக்கீரர் பாடல் கேட்டாய்
அருணகிரிநாதருக் கருள்செய்து சந்தத்திருப்புகழ் கேட்டாய்
ஔவைக்கு நாவற்கனிகொடுத்து அரிதானபாடல் கேட்டாய்

பேசாத குமரகுருபரனைப் பாடவைத்து கலிவெண்பாமாலை சூடினாய்
ஆதிசங்கரர் புஜங்கம்பாடப் பிணிநீக்கினாய் சங்கப்பலவனாகி
பலபுலவர் பாடல்பெற்றாய் பகழிக்கூத்தர் கச்சியப்பர்
முதலானபலபேரின் பாடல்கேட்டாய் பறாளையுறை முருகனே
என்பாடல் ஒன்றுகேட்டருள வேண்டாமோ பிழை
பொறுத்தருள் ஷண்முகானந்த குருவே.

பொருள்வேண்டேன் புகழ்வேண்டேன் போகம்வேண்டேன்
உனை நினைந்துருகாதார் உறவுவேண்டேன்
பதவிவேண்டேன் இன்னொருவர் உதவிவேண்டேன் சமய
வாதம்வேண்டேன் பரசமய போதம்வேண்டேன்
உடற்பிணிவராமை வேண்டும் ஓயாது உன்நாமம்
கூறவேண்டும் உனைமறவாமை வேண்டும்
எப்போதும்மலரிட்டு வழிபட்டு வலம்வந்து சந்நிதியில் வீழ்ந்து
எழவேண்டும் பறாளையுறை கந்தா அருள் ஷண்முகானந்த குருவே.

பெற்றதாய் தனைமறந்து பிறந்த பொன்னாட்டைத்துறந்து
சென்று பலகோடிதேடி வாடுகின்றார்
நாடுகாடாக வீடுமண்மேடாக இல்வாழ்வுபுகாது கன்னியர்
பலர்வாடை மக்கள் சீரழியலாமோ
பறாளையுறை முருகனே உன்னருள்கொண்டு நாம்உய்ந்திட
ஒருவழி காட்டியருள்வாய்
தமிழ்நாடு நலம்பெற தமிழர் ஆட்சி வழம்பெற செந்தமிழ்த்
தெய்வமே அருள் ஷண்முகானந்த குருவே.

அழகுக்கோர்எல்லையான ஆண்டவனே போற்றி
இகபரசுகம் ஈவாய் போற்றி
உமையவள்தன் குமரா போற்றி ஊழ்வினையறுப்பாய் போற்றி
எங்கும் நிறைந்தாய் போற்றி ஏகநாயகனே போற்றி
ஐம்புலனுக் கெட்டாத ஒளியே போற்றி ஓங்கு புகழ்ப்
பறாளையுறை கந்தா போற்றி
பிறவிப் பிணிதீர்க்கும் ஒளடதமானாய் போற்றி
போற்றி போற்றி ஷண்முகானந்த குருவே.

பைந்தாரணிகுழல் வள்ளிபங்கா கந்தா கடம்பா கதிர்
வேலா உமைமைந்தா சிவகுமாரா
பங்கேருகமலர்ப்பாதா பொன்மகுடம் வைரமணிமாலை
பீதாம்பரம் தண்டை சிலம்பெலாம் துறந்த பழனி ஆண்டவனே
எப்போதுமுனை நினைப்பவர் தனம்பெறுவர் கல்விபெறுவர்
நல்லமனம் பெறுவர் உயர்வாழ்வு பெறுவர்
முப்போதும் சங்கு முழங்கும் பறாளையுறை முருகனே
ஞானமுதல்வனே ஷண்முகானந்த குருவே.

தேன்பொழியும் சோலைத்தென் பறாளையுறை வேல்
வேந்தனைத்தினம் கண்டு தொழுதால்
ஊன்பொதி உடற்பிணிபோம் மனமயக்கம்போம்
தனந்தேடி யலைகின்ற தன்மைபோம்
பிறந்திறந்து உழல்கின்ற கேடுபோம் நல்லவர்க்
கிடுக்கண் செய்யும் குணம்போம்
மறந்து விடாதிருக்க அருள்வாய் மயிலேறிய
மாணிக்கமே ஷண்முகானந்த குருவே.

என்குல முன்னோர்கள் உன்பணிசெய்தலே தம்
கடனெனக் கொண்டு வாழ்ந்திருந்தார்
என்தந்தை குருவாகி உன்னோடிருந்துவர பெரு
வெள்ளத்துள் அடியார்மீது தேர்சாயாது காத்த கருணைக்கடலே
உனைநோக்கித் தவமிருந்து கல்வி செல்வம் புத்திரப்
பேறுபெற்றோர் தீராநோய் தீர்ந்தோர் எத்தனை எத்தனைபேர்
அனைவர்க்கும் ஆறுதலளிக்கும் ஆறுமுகா பறாளையுறை
கந்தவேல்முருகா காத்தருள் ஷண்முகானந்த குருவே.

நீலக்கலாப மயில்மீது கோலக்குறமங்கை வள்ளியும்
இந்திரகுமாரி தேவயானையும் இருமருங்கு மணைந்திருக்க
வீரவாகுமுதல் வீரர்களும் தேவர்களும் நாரதாதி முனிவர்களும்
சூழ்ந்துவர அடியார்கள் துயர்தீர கந்தகிரியில் எழுந்தருளினீர்
ஓயாதுனை நினைப்போரும் இடைவிடாதுனை வணங்குவோரும்
உன்நாமம் பலகூறிப்பாடுவோரும் சித்தத்தேஉனை
அலாதுவேறொன்றும் நினையாரும் ஆயபல்லோர் இங்குசூழ்ந்து
இருக்கின்றோம் பறாளையிலிருந்தருள் புரியும் ஷண்முகானந்த குருவே.

நீரேறநெல்லேறும் அணிவயல்கள் நடுவிலே நிலைகொண்டு
உயர்ந்துள்ள சுழிபுரப் பறாளை தனிலே
நின்திருவடிக்கமலங்கள் தெய்வீக ஒளிவீசும் செம்பொன்னாடை
ஒளிவீசும் அழகொழுகுமார்பிலே நவரத்நமாலை ஒளிவீசும்
மதிவதனகாந்தியின் கருணை ஒளிவீசும் மணிமகுடமும்
வெற்றிவேலும் ஒளிவீசும்இருவர் அருகே ஒளிவீசிநிற்பர்
அதுகண்ட அடியார்கள் மெய்யுருக மனமுருக உன்னடி
வணக்கிநிற்பர் ஆண்டருள்குமர ஷண்முகானந்த குருவே.

கந்தாஎன்றுனை நினைந்து இங்குவந்தார் நோயற்ற
வாழ்வுபெற்றார் குறைவற்ற செல்வம்பெற்றார்
மங்காத புகழ்பெற்றார் மகப்பேறுபெற்றார் மனநிறைவு
பெற்றார் பட்டம் பதவிபெற்றார் பெறாதவையுமுளவோ
சங்கோலமிடும் திருவடிநிலைக் கடல்சூழ்ந்த திருப்பறாளைமுருகா
பிறவாமை தரவேண்டும் பிறந்தாலுமுனை
மறவாமை தரவேண்டும் உன்திருவடித் தொண்டேகதி
யென்றுவாழ அருள்குகனே ஷண்முகானந்த குருவே.

பெற்றவளும் பிதாவும்நீயே உன்பிள்ளையும் அடிமையும்நான்
செய்தபிழையெல்லாம் பொறுத்தருள் முருகா
பெறுதற்கரிய நின்திருவடி மலர்களுக்கு வணக்கம் சிங்கார
மயிலுக்கும் சேவலுக்கும் வணக்கம் ஐயா
அஞ்சாதே எனக்காட்டும் உன்திருக்கை மலருக்கு வணக்கம்
மலர்தரித்த வெற்றிவேலுக்கு வணக்கம்
குன்றாதஅழகுபொழி வதனங்கள் ஆறுக்கும் விழிகளின் கருணைக்கும் வணக்கம்
நீகுடிகொண்ட பறாளைக்கு வணக்கம் வணக்கம் ஷண்முகானந்த குருவே.

அப்பாவருக என்அரசேவருக உமைதந்த முத்தேவருக
நஞ்செந்தின்மேய வள்ளிமணாளா வருக
முப்போதும் மலர்கின்ற தணிகைக்குமரா வருக
உலகமுதல்வா வருக குகனே வருக
அமரேசனளித்த செல்விக்கு வாய்த்த குமரேசனே வருக

தேவர் தொழும் தெய்வசிகாமணியே வருக
அமரேபுரிகின்ற அதிகாரமழிக்கவல்ல வேல்முருகா வருக
எமைக்காக்கவருக பறாளையுறை ஷண்முகானந்த குருவே.

நல்லோரெல்லாம் நலம்பலபெற்று வாழவேண்டும்
நாடெலாம் செந்நெல்விளைந்து சிறக்கவேண்டும்
இல்லோர் என்றபேரே இல்லாதிருக்க வேண்டும்
இளைஞரெலாம் உரிமைகாக்கும் வீரர்களாக இலங்கவேண்டும்
பல்லோர் புகழ்பாடும் பறாளையுறை வேல்வல்லோய்உனை
எல்லோரும் எந்நாளும் மறவாதிருக்க வேண்டும்
எல்லாம் தந்தருள்வாய் மான்விழிமங்கையும் தேவயானைதரு
நங்கையும் தழுவிய குமாரகுகனே ஷண்முகானந்த குருவே.

கந்தா உன்திருவடியே கதியென்று கண்டுகொண்டேன்
அதைப்பற்ற நல்ல வழியொன்று காட்டிவிட்டாய்
எந்தாயும் எனக்கருள் தந்தையும் நீயென்றிடைவிடாது
இடைவிடாது கூறச்சொன்னாய் வாய்திறந் தென்னேரமும்
வேல்வேல்முருகா வெற்றிவேல் முருகாஎன்று பாடச்சொன்னாய்
அழகுநிறை பறாளையிலே பார்க்கச் சொன்னாய்
மால்மருகா, முருகா, குமரா, குகா என்றுருகச் சொன்னாய்
சொன்னதெல்லாம் செய்வேன்காத்தருள் ஷண்முகானந்த குருவே.

பல்லாண்டு புகழ்பூத்த திருப்பறாளை வாழ்க வலமாக அருள்கின்ற
வலலைபநாயகன் வாழ்க இரத்நகலாப மயிலும் சேவலும் வாழ்க
குளிர்சந்திர வதனங்கள் ஆறும்கருணைமழை பொழிகின்ற
விழிகளும் வாழ்க அள்ளிக் கொடுக்கின்ற பன்னிருகரங்களும்
அழகொழுகு வள்ளியும் தேவயானையும் வாழ்க துலங்குபொன்
மணிமகுடமும் கடம்பமலர் மாலைகளும் வாழ்க
அருள்பொழி திருவடிக்கமலங்கள் வாழ்க அடியார்கள் வாழ்க
வெற்றிவேல் வாழ்க வாழ்க ஷண்முகானந்த குருவே.



## தீபபேதம்

இந்தடுக்குள்ள அலங்கார தீபம் பஞ்சகலைகளைக் குறிக்கின்றது. மூன்றடுக்குள்ள தீபம் முத்தத்துவங்களைக் குறிக்கின்றது. இத்தீபத்தால் ஆராதிப்பின் ஆன்மசுத்தியுண்டாகும். நாகதீபம் புத்திர விருத்தியின் பொருட்டும், இடபதீபம் பசுவிருத்தியின் பொருட்டும், புருஷ தீபம் சகல சித்தியின் பொருட்டும், நக்ஷத்திர தீபம் ரோகசாந்தியின் பொருட்டும், விந்தியைன் பொருட்டும், கும்ப தீபம் மலநிவாரணத்தின் பொருட்டும், ஐந்து தட்டைகள் ஈசானம் முதலிய ஐந்து குணங்கள் பதிதற் பொருட்டும், தூபம் சரூப பதவியின் பொருட்டும், செம்பஞ்சும் நிம்பபத்திரமும் திருட்டி தோஷநீக்கத்தின் பொருட்டும், வீபூதி மூவுலகரக்ஷயின் பொருட்டும்சிவசந்நிதியில் ஆராதிக்கப்படுகின்றது.

# சுழிபுர பறாளை ஐயா

அங்கமெல்லாம் ஜொலிக்கின்ற சிவசுப்பிரமணியா
அழகாய் சுழிபுர பறாளை ஐயா
திங்கள் முகத்தோனே திருத்தலமையை
தீர்த்தம் திருநாளாய் தேரும் ஐயா

மங்கையர் யாவரும் நேர்த்திகளோடு
மயிலாடும் பூங்காவனமும் உன்னோடு
முந்தை வினைக்கு நீ வள்ளி தெய்வானையோடு
முருகா வைகாசி விசாகம் சிறப்போடு

செங்கதிரேனும் உன்னைப் பணித்திடுமே
செந்தமிழே நித்தம் பொழிந்திடுமே
இங்கு வயல்களும் சூழ்ந்திடுமே
இன்பனே உன்னால் பேரானந்தமே

காட்சி கண்டேன் காட்சி கண்டேன்
கண்குளிர கந்தா நீயேதான்
ஆட்சி சுழிபுரம் பராளைதான்
அப்பா உன் நாமம் சுந்தரந்தான்

துன்பங்களும் கடந்தோடுமே முன்
தொடர்ந்திடும் திருநாளுமே தான்
வென்றிடுவோர் பல வெற்றியும்தான்
வேலவனே உனக்கு வேடிக்கைதான்.

மணி மண்டபவம் நெஞ்சிலும் தான்
அணியணியாய் அதில் தீபமும்தான்
அன்றும் அடியார் தொண்டுதான்
பண்புடனே தமிழிசை யாவும்தான்.

பூங்காவனத்திலும் மலர்கின்றாய் - முருகா
புன்னகை சிந்திட வைப்பாயே
சிங்கார சிவ சுப்பிரமணியா - அந்த
சூர சங்காரமும் திருநாளுமையா

பக்கம் நின்றிட சுழிபுரத்தானே
பறாளை ஐயனே நீ தேனே
மாங்கல்ய பாக்கியம் வரம்தானே
மனமெங்குமே அருள்பவனே

எங்கு பார்த்தாலும் வண்ண சோலைகளே
எத்தனைதான் பக்தர் உனக்குள்ளே
தாங்காத் துயருக்கு கந்தவேளே
தவிர்ந்திட வழி காட்டும் உன் விழிகளே

குருவாய் அறிவூட்டும் உன் பதி
குறைகளை தீர்த்திடும் பக்தி
கருணை உள்ளமே முருக மூர்த்தி
கவசனே உன்னால் மனம் சாந்தி

கூர் விழி ஈராறு பன்னிரெண்டு
சுழிபுரனே பறாளை குடிகொண்டு
தெருவீதி உள்வீதி திருவீதி
தேடுவோருக்கு அங்கு நீ நீதி

சர்வமும் காக்கும் சிவசுப்பிரமணியா
சந்ததி சந்ததி யாவும் ஐயா
வந்திடுவார் உன்னை தஞ்சமென்று
வந்திடுவார் பல நேர்த்தி கொண்டு.

**செல்வி. சந்திரா,**
**திருகோணமலை**

## சீரார் பறாளை

சீரார் பறாளை சிவசுப்பிரமணியன்
தாரார் திருவடியைச் சார்ந்தோர்கள்
ஆரா அமிழ்தம் போல் வாழ்வார் அனைத்துநலம்
ஏற்றி தமிழ் உள்ளளவும் தழைத்து

வேண்டுவோர்க்கு வேண்டுவன
வேல்முருகன் தருவான்
வினைகளைத் தீர்த்திடவே
மால்மருகன் அருள்வான்
பாவங்களைப் போக்கிடவே
பறாளாய்ப்பதிவாரீர்
பார்புகழும் கோலக் குமரனை
கண்குளிரக்காணீர்.

**பறாளை வே. சத்தியமூர்த்திசர்மா**

# எங்கள் குலநாயகனே ஏற்றிநின்றோம் ஓடிவா

1. வேல்முருகா வேல்முருகா வாவா வேலவா
கால்பிடித்தோம் அடியவரைத் காத்தருள்வாய் வேலவா
பறாளையுறை வேலவனே பாலசுப்பிரமண்யனே
சிறுவனாக எழுந்தருளும் செய்யவடி வேலவா – (வேல்முருகா)

2. சுழிபுரத்திற் கோவில்கொண்ட தூயவனே சண்முகா
சூரனைத் தடிந்துதேவர் துயர்துடைத்த வேலவா
எத்தனையோ அடியார்கள் எக்கமதை நீக்கினாய்
பக்குவமாய்ப் பணிபவரைப் பாரிற்காப்பாய் குமரனே – (வேல்முருகா)

3. நக்கீரர் துயர்துடைத்த நாதனே குமரவேல்
நமதின்னல் தீர்த்திடுவாய் எங்கள்முரு கையனே
ஔவைக்கு அருள்புரிந்த ஆறுமுக வேலவா
கையில்வேல் பிடித்தைமக்குக் கருணைபுரி வேலனே – (வேல்முருகா)

4. வள்ளிதெய்வ யானையை மணந்தவனே கந்தனே
புள்ளிமயில் ஏறிவந்து அருள்புரிவாய் வேலனே
கள்ளமற்ற அடியவரின் கருத்தினிலே உள்ளவா
தெள்ளுதமிழ் உரைவிரித்த தேசிகனே சண்முகா – (வேல்முருகா)

5. ஐங்காரற்கு இளையவனெ அகிலலொக நாயகா
சங்கரனின் மகனாரே சண்முகனே குமரேசா
மங்கைவள்ளி துணைமணக்க மகிழ்ந்துபுனம் ஏகினாய்
எங்கள்குல நாயகா ஏற்றிநின்றோம் ஓடிவா – (வேல்முருகா)

**பண்டிதை பொன் பாக்கியம்**

**சுழிபுரம்**

உ

சிவமயம்

**சீறார் வுன்னடியைச் சிந்தித்தே வந்தித்தோம்!**
**சிறந்தநற் பறாளையுறைச் சண்முகனே! காத்திடுவாய்!**

சுந்தரஞ் சேர் சுழிபரத்தில் திகழும்நல் வேலா!
சுடர் திங்கள் போன்றிலங்கும் சிவனாரின்பாலா!
எந்தையே! என்றுன்னை எற்றி வரும் அடியார்
எழில்வேம்பும் நல்லரசும் என்றுமே கண்டு
முந்தையரின் வழிபாடும் முறையான சரிதையையும்
முறையாகக் கண்டிங்கே மகிழவைக்கும் வேலா!
உந்தனது திருப்பாதம் உன்னியாம் வந்தோம்,
உருகி நிதம் பாடுகிறோம் உன்காட்சி தாராய்!

பன்னிருகை வேலனென்று பன்னியாம் பாடுவதைப்
பாராதிருப் பாயோ! பக்தரிடம் வாராயோ!
முன்னிக்கட லைச்சுருக்கி முகிலது கொட்டுவபோல்
முருகாவெனும் அடியார்க்கு முத்தியருள் கொடுக்காயோ!
தன்னிகரில் லாதபெரும் தனிவெலை யுடையோனே!
தந்தைக்குப தேசித்துத் தனிப்புகழும் கொண்டாயே!
தின்பதற்கு வள்ளி தந்த தினைமாவை யுண்டோனே!
தித்திக்க வடியார்க்குத் திருவருளைச் சொரிவாயே!

பார்போற்றும் முதுதேரில் பவனி வரம் வடிவேலா!
பாலபிஷே கமொடுநற் பூசைகளும் உவப்பேனே!
தாரணியும் மௌலியொடு சண்முகமாய் காட்சிதந்து
தண்ணருள் புரிவோனே! சரணமென வந்தோமே!
வார்கடல் சூழுகின்ற வையமதில் யாமுய்ய
வடிவேலா! வந்திடுவாய்! வந்தெம்மைக் பார்த்திடுவாய்!
சீர்பெற்ற வுன்னடியைச் சிந்தித்தே வந்தித்தோம்!
சிறந்தநற் பறாளையுறைச் சண்மகனே! காத்திடுவாய்.

**கவிதையாக்கம்**

தொல்புரம் திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளின் பிரதம சிஷ்யன்
சுழிபுரம் ஞானக்கவி – கலாபூஷணம் – பிரசங்கபூஷணம்
**சுழிபுரம் நடேசன் சிவசண்முகமூர்த்தி** B.A. Dip.in.Edu
(முன்னாள் ஆசிரிய ஆலோசகர்)

# இஷ்ட தெய்வ வழிபாடு

# சிவன்



ஆதிசங்கர பகவத்பாதாள் அவர்கள் ஸ்தாபித்த இஷ்ட தெய்வ வழிபாட்டு முறைகளில் சைவம் என்பது சிவ பெருமானைப் பிரதானமாகக் கொண்டு வழிபடும் சம்பிரதாயத்தைக் குறிக்கின்றது. இந்து தர்மத்தின் சரித்திரத்தை ஆராய்ந்தால் ஆதிசங்கரருக்குப் பன்னெடுங்காலமுன்பே சைவம் என்னும் சிவ வழிபாடு இருந்து வந்ததாக ஆதாரங்கள் உள்ளன. ஹரப்பா மொஹஞ்சதாரா புதைபொருள் ஆராச்சியிலிருந்து கண்டு பிடிக்கப்பட்ட சிந்து சமவெளி நாகரீக காலத்திலேயே சிவனைப் போன்ற உருவம் வழிபாட்டுக்குரியதாக இருந்ததாகச் சின்னங்கள் காணப்படுகின்றன.

சைவம், பிறந்து, வளர்ந்து தழைத்ததில் தென்னகத்துக்கும், குறிப்பாகத் தமிழகத்துக்கும் குறிப்பிடத்தக்க பங்கு உண்டு. சிவ பெருமான் நிரந்தரமாக இருந்து அருள்பாலிக்கும் புண்ணியமலை கைலாயம் எனும் இமயம்.

அது புண்ணிய பாரதத்தின் வடக்கு எல்லை. அஷ்டதிக் பாலகர்களில் செல்வத்துக்கு அதிபதியான குபேரன் திசை வடக்கு அத்தகைய வடக்குத் திக்கில் அமைந்த இமயத்தையே, மேரு என்றும் கூறுகின்றோம். இமயத்தின் அடிவாரமான வட இந்தியா முழுவதும் சிவ வழிபாடு மிகவும் முக்கியத்துவத்துடன் காணப்படுவதில் ஆச்சரியப்படு வதற்கில்லை.


பொதுவாக புண்ணிய க்ஷேத்திரங்கள் பற்றி குறிப்பிடும் போது காசி, ராமேஸ்வரம் என்று சொல்வார்கள். இரண்டுமே சிவஸ்தலங்கள் ஒன்று வடநாட்டில் உள்ளது. மற்றயது தென்னகத்தே தமிழ்நாட்டில் உள்ளது. புண்ணியபாரதத்தை வடக்கு, தெற்கு என்று பிரிக்கமுடியாமல் பிணைத்து வைத்திருப்பது நம் இந்து தர்மம் அதற்கு முக்கியமான காரணங்களில் ஒன்று பாரதம் முழுவதும் பரவியுள்ள சைவம் எனும் சிவ வழிபாடு.

சிவபெருமான் வழிபாட்டில் ஒரு சிறப்பு அம்ஸம் உண்டு. அவரை உருவமாகவும் வழிபடலாம் அருவமாகவும் வழிபடலாம். லிங்க வழிபாடு சிவபெருமானுக்கே உரித்த தனி முறையாகும். இந்தியா மட்டுமல்ல வெளிநாடுகளுக்குச் சென்று பார்த்தாலும் சிவ ஆலயங்களில் பெரும்பாலும் லிங்க வடிவில்தான் சிவனை வழிபடுகின்றோம். இது சைவத்தின் ஒரு மகத்தான தத்துவம்.

“சிவம்” என்றால் மங்களம் என்று பொருள், சிவன் என்றால் ஜீவனுக்கு ஆதாரமானவன் என்றும் அர்த்தம் கொள்ளலாம்.

தமிழனாலும் சமஸ்கிருதம் அல்லது ஹிந்தியானாலும் “சிவ” என்ற சப்தத்தில் உள்ள கொம்பு அல்லது தீர்க்கத்தை எடுத்துவிட்டால் “சவ” என்று ஆகிவிடும். ஜீவன் இல்லையேல் மனிதன் சவம் என்றுதானே கருதப்படுகின்றான். ஆகவே சிவனே உயிர் சிவனுக்கு சங்கரன் என்று ஒரு பெயர் உண்டு “சம்” என்றால் மங்களம் என்றே பொருள். எனவே சங்கரன் என்பவன் மங்களத்தைச் செய்கின்றவன் என்று பொருள்.

சிவனைப் பற்றி சிந்திக்கும் போதே, அவர் உருவ வடிவத்தை விளக்கும் லிங்கம், அவர் கையிலுள்ள சூலம், நெற்றியிலுள்ள திருநீறு கழுத்திலுள்ள நாகம் அவரது மூன்றாவது கண்ணான நெற்றிக்கண், அவர் அணிந்துள்ள ருத்ராக்ஷம், அவருக்குகந்த வில்வ இலை ஆகியவைதான் நினைவுக்கு வரும்.



இவை அனைத்துமே சைவ சின்னங்கள் என்று போற்றப்படுகின்றன. சிவனிடம் பக்தி செலுத்துபவர்கள் சைவச் சின்னங்களையும் போற்றி வணங்கிப் பூஜிக்கின்றனர். இந்த சின்னங்களிலும் சிவனையே காண்கின்றனர்.

*லிங்கம் ஸர்வம் ஸமுத்பன்னம் லய: சோங்யதே*
*ஸ்ருஷ்டி ஸம்ஹார மேவாந்தம் லிங்கம்*
*நமஸ்ய சோஸ்யதே*

என்ற வாக்கியங்கள் லிங்கத்திலிருந்துதான் ஸ்ருஷ்டி அனைத்தும் உண்டாயிற்று. ஸ்ருஸ்டிகள் எல்லாம் லிங்கத்தில் அடங்குகின்றன படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களின் வடிவமே லிங்கம் எனும் சிவமூர்த்திதான் என்பதை விவரிக்கின்றன.

இந்து தர்மத்தில் பன்னெடுங்காலமாம் முன்பு உருவ வழிபாடு இல்லை என்பதற்கு லிங்கவடிவமாக இறைவனை வழிபட்டது ஒரு ஆதாரமாகும் என சமய ஆராச்சியாளர்கள் கருதுகின்றனர். திருமுறைகளில் நால்வர் பாடல்களில் சிவன் ஒருவனே ஈடில்லாத இறைவன் என்று கூறப்படுகிறது.

*செங்கணலாலும் பிரமனுந்தம்முள்ளே*
*எங்குந் தேடித்திரிந்தவர் காண்கிலர்*
*இங்குற்றேனென்றிலிங்கத்தே*
*பொங்கு செஞ்சடை புண்ணியமூர்த்தியே*

என்ற பாடலில் பிரம்மனானாலும், விஸ்ணுவானாலும் முடி, அடிகளைக் காணமுடியாத சிவபெருமான் லிங்க வடிவில் தோன்றினான் என்று கூறப்படுகின்றது. ***யதோ வா இமானி பூதானி ஜாயந்தே*** என்று உபநிஷதம் கூறுகிறது சகல ஜீவராசிகளும் பக்தி லயத்தோடு அடைய நினைக்கும் அந்தப் பரம்பொருள் "லிங்கம்" எனப்பட்டது என்று ஒபநிஷதம் வழிகாட்டுகிறது. சைவ வழிபாட்டிற்குரிய லிங்க வடிவங்கள் பல வகைப்படும்.

மாணிக்கம், வைரம், வைடூரியம், மரகதம் போன்ற நவரத்தினங்களால் செய்யப்படும் லிங்கங்கள் ரத்ன லிங்கம் எனப்படும். தங்கம், வெள்ளி போன்ற உலோகங்காளால் செய்யப்படும் லிங்கங்கள் லோஹஜ லிங்கம் எனப்படும். சந்தனம், தேவதாரு போன்ற மரங்களால் செய்யப்பட்ட லிங்கங்கள் மருண்மய லிங்கம் எனப்படும். கல்லாலான லிங்கங்களை தாருஜலிங்கம் என்கிறோம் மண்ணால் செய்யப்பட்ட லிங்கங்கள் சைலஜம் எனப்படும் இவற்றில் ஏழவகை உண்டு.

ஸ்வயம்பு, தேவிகம், தைவிதம், ஆர்ஷம், ராகூஷஸம், மானுஷம், பாணம் என்பவை அவை, பூமியில் தானாகவே தோன்றி பூஜிக்கப்படும் லிங்கங்கள் ஸ்வயம்பு எனப்படும். பல சிவ கேஷத்திரங்களில் லிங்கங்கள் தானே தோன்றியதாக ஸ்தல வரலாறுகள் உள்ளன.

சிவபெருமானுக்கு ஒளி தருபவன், என்ற குண விசேஷமுண்டு. எனவே ஜயோதி வடிவமாக அருள்தரும் லிங்கங்கள் புண்ணிய பாரதத்தில் பன்னிரெண்டு கேஷத்திரங்களில் உள்ளன. அவை முறையே ஸோமநாதம், ஸ்ரீசைலம், உஜ்ஜயினி, ஓம்காரம், பரலிவைத்யநாத், பீமசங்கரம், ராமேஸ்வரம், நாகேசம், சாசி, த்ருயம்பகம், கேதாரம், குஸ்ருனேஸ்வரம் ஆகியவை.

பஞ்ச பூதங்களுக்கான லிங்கங்கள் அமைந்திருந்த கேஷத்திரங்கள் வருமாறு:

***காளஹஸ்தி*** – ***வாயு***
***திரவானைக்கா*** – ***ஜலம்***
***திருவண்ணாமலை*** – ***அக்னி***
***சிதம்பரம்*** – ***ஆகாயம்***
***காஞ்சிபுரம்*** – ***ப்ருத்வீ – பூமி***

பஞ்சாயதன பூஜையில் சிவலிங்கமே ப்ரதானமாகப் பூஜிக்கப்படுகிறது.

ஒரு தெய்வத்தின் வழிபாட்டில் ரூபத்தின் அழகு. நாமத்தின் வலிமை. குண விசேஷ அனுக்ரஹம் என்ற மூன்று தன்மைகள் உண்டு.

அந்த வரிசையில் சிவபெருமானின் அருவமான லிங்க வடிவத்தை முதலில் தெரிந்து கொண்டோம்.

பொன்னார் மேனி, புலித்தோல் ஆடை, இடப்பாகம் உமை எனும் பார்வதி, விஷத்தை உண்டு நீலமான கழுத்து, உடம்பெல்லாம் திருநீறு நாகங்களே ஆபரணம், கையில் மான், மழு, திரிசூலம், சடையில் பிறைச்சந்திரன் இப்படி அர்த்தநாரீஸ்வரனாக அழகிய வடிவிலும் சிவபெருமான் அருள்பாலிக்கிறான். சிவபெருமானின் நாமத்தை எடுத்துக் கொண்டால் ***வேதம்நான்கிலும்மெய்ப்பொருளாவது நாதன் நாமம் நமச்சிவாயவே*** என்னும் திருஞானசம்பந்தமூர்த்தி அவர்களின் திருவாசகம்தான் நினைவுக்கு வரும்.

ஓம் நமசிவாய என்ற பஞ்சாஷர மந்திரம் பாபங்கள் அனைத்தையும் போக்கி, புண்ணியத்தைச் சேர்த்துத் தரும். மங்களகரமான நாம மந்திரம்.

***சிவ சிவ வெங்கிலர் தீவினையாளர்***
***சிவ சிவ வென்றிடத் தீவினை மாறும்***
***சிவ சிவ வெண்றிடத் தேவருமாவர்***
***சிவ சிவ வென்றிட சிவகதிதானே***

என்று திருமூலர் திருமந்திரம் சிவநாம மகிமையைப் பாடுகிறது. ரூபத்தையும் நாமத்தையும் கடந்து சிவபெருமானின் குண மாதுர்யங்களையும், அவை நமக்கு நல்கும் அருட்செல்வங்களையும்பற்றிச் சிந்திப்போம்.

வேதங்களில் "ருத்ரம்" எனப்படும் வேதவாக்கியங்கள் சிவபெருமானின் குணவிசேஷங்களையும் அருள் சக்திகளையும் விளக்குகிறது. வேதங்கள் நான்கு ரிக், யஜூர், ஜாம, அதர்வனம் என்பவை. இவற்றில் இரண்டாவது யஜூர் வேதம் என்பது. யஜூர் வேதம் ஏழு காண்டங்கள் கொண்டவை. இவற்றில் நான்காவது காண்டம் ருத்ரம் அதை ஸ்ரீருத்ரம் என்கிறோம். அதன் ஒரு பகுதியில் சமகம் எனும் பிரார்த்தனை ஸ்லோகங்கள் உள்ளன. ருத்ரபாராயணத்தால் சிவனின் பெருமை பாடப்படுகிறது. அதனால் சிவனருள் கிட்டுகிறது. நோயற்ற ஆரோக்கிய வாழ்வு வாழ கலங்கிய மனம் அமைதிபெற சித்திகள் வந்து அடைய பேரானந்துப் பெருநிலை கிட்ட ருத்ர பாராயணம் செய்வது சைவ சமயத்தின் முக்கிய வழிபாட்டு முறையாகக் கருதப்படுகிறது.

சிவனுக்குச் செய்யும் பூஜையைவிட, சிவனடியாருக்குச் செய்யும் சேவை சிறப்பானது என சைவம் வலியுறுத்துகிறது. தமிழ் மொழியின் சிறப்புக்குச் சிறப்புத்தேடித்தந்தது சைவ சமயம் சைவத் திருமுறைகள் வேதங்களுக்கு சமமாக சிவனைத் துதிக்க உதவும் தமிழ் வேதமாகும்.

திருஞான சம்பந்தர் அருளிய திருப்பதிகங்கள் மூன்று திருமுறைகள் ஆகும். அப்பர் ஸ்வாமிகளின் தேவாரம், மூன்று திருமுறைகளாகும், சுந்தரமூர்த்தி நாயனார் அருளிய பதிகங்கள் ஒரு திருமுறையாகும். இவை தவிர மாணிக்கவாசகர், திருமாளிகைத்தேவர், நம்பியாண்டார் நம்பி, சேக்கிழார் போன்றவர்கள் இயற்றிய நூல்கள் எல்லாமே சிவனது பெருமையையும் சிவனடியார் சிறப்புக்களையும் கூறுவதால் இவைகளையும் சேர்த்து சைவத் திருமுறைகள் பன்னிரெண்டாகின்றன.

இவை காலத்தால் அழியாத சைவ சமயத்தின் இலக்கியச் செல்வங்கள் சமய நெறிகள் வாழ்க்கைக்கு வழிகாட்டும் தெய்வீக நூல்கள் சைவ சித்தாந்தம் மிகத் தொன்மையானது அர்த்தமுள்ளது.

உலகைப் பாசம் என்றும் உலகப் பற்றுக்களில் கட்டுண்ட ஜீவன்களைப் "பசு" என்றும் ஜீவன்களை இக்கட்டிலிருந்து விடுவித்து, பரமானந்த நிலைக்கு அழைத்துச் செல்லும் தலைவனை "பதி" என்றும் சைவ சித்தாந்தம் விளக்கி சிவதத்துவத்தை பாசம் பசு பதி என்று வர்ணிக்கிறது. அதனாலேயே சிவபெருமான் பசுபதி என்று அழைக்கப்படுகின்றான்.

சிவனை உணர்ந்தால் எல்லா ஜீவன்களுமே சிவநிலையை அடையலாம் என்பதும் சைவத் தத்துவம்.

***சிவனென் சிவனென் வேறில்லை***
***சிவனார் சிவனாரை அறிகிலர்***
***சிவனார் சிவனாரை அறிந்தபின்***
***சிவனார் சிவனாயிட் டிருப்பாரே***

என திருமூலர் கூறுகின்றார். சிவனை உபாஸித்து வழிபடுவதற்குகந்த நேரம், திரயோதசி திதி, சந்தியா காலம் இதைப் ப்ரதோஷம் என்கிறோம். பிரதோஷ காலத்தில் சிவனைத்தரிசிப்பதால் நோய்கள் நீங்கி ஐஸ்வர்யமான வாழ்க்கை அமைந்து சிவனருள் கிட்டும் என்பது சமய நம்பிக்கை.

மனித வாழ்க்கையில் எது நியாயமோ? நிச்சயமில்லையோ? மரணம் ஒன்று மட்டும் நிச்சயம். ஒரு நாள் அது நிகழும் பிறந்தவர்களெல்லாம் இறந்தேஆகவேண்டும். மனித உயிர்களைக் கவர்ந்து செல்லும் பணியமதர்மனுடையது. அந்த யமதர்மனே வழிபடும் தெய்வம் மஹேஸ்வரன் சிவ பெருமான், மருத்யூ என்றால் மரணம் என்று பொருள். எனவே மரணத்தை வென்று மரணம் இல்லாமப் பெருவாழ்வு வாழ ம்ருத்யுஞ்சயனான சிவனை வழிபடுதல் இந்து தர்ம மரபு.

சிவனும் பல்வேறு யுகங்களில் பல்வேறு பலன்களைத் தர, வித்தியாசமான அவதாரங்களையும் வடிவங்களையும் ஏற்று உயிர்களுக்கு அருள்பாலிக்கின்றான். என்று சிவபுராணம் கூறுகின்றது. அத்தகைய வடிவங்கள் தான் தக்ஷிணாமூர்த்தி, நடராஜர், பிக்ஷாடனர், வைரவர், ம்ருத்யஞ்சயர், சண்டேஸ்வரர் போன்றவை.

சிவனது வாகனம் நந்திகேஸ்வரர் எனும் ரிஷபம். அவரது பரிவாரங்கள் பூத கணங்கள் அவரது பத்தினி உமை எனும் பார்வதி அவரது புத்திரர்கள் சித்தி புத்தி ரூபமான கணபதியும் ஞானஸ்கந்தன் எனும் முருகனும்.

சிவனை வழிபடும்போது இத்தனை பிரதான தேவதைகளையும் வழிபடுகின்ற புண்ணியம் கிடைக்கிறது என்று சைவ சமயம் கூறுகிறது.

நவக்கிரஹ தேவதைகளில் சனீஸ்வர பகவானும், சர்ப்பகிரஹங்கலான ராகு, கேதுக்களும் சிவ உபாஸனை செய்பவர்களைப் பிடித்துக் கஷ்டப்படுத்துவதில்லை என்று சிவ புராணத்தில் கூறப்படுகிறது.

அஷ்டதிக் பாலகர்கள் எனும் திசைக் காவலர்களும், வாஸ்து தேவனும் ஈஸான்ய திக்கிலிருந்து அருள் பாலிக்கும் ஈஸ்வரனான சிவனுக்குக் கட்டுப்பட்டே இயங்குகிறார்கள். எனவே சிவனை நினைத்தால் போதும் திசைக் காவலர்கள் அருளும் வாஸ்து புருஷனின் அனுக்ரஹமும் கிட்டும் என்று வாஸ்து சாஸ்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. சிவனைக்

குறித்து பாடப்பட்ட தமிழ்ப் பாடல்கள் சிலவற்றை நினைவு கூர்ந்தால் சைவ சமயம் தமிழுக்கு ஆற்றிய தொண்டும் தமிழால் வளர்ந்த சிவபக்தியும் நமக்குப் புலனாகும். வேதங்களிலும் வட மொழி நூல்களிலும் பிற மொழி நூல்களிலும் சிவனைப் பற்றி எத்தனையோ சிறப்புகள் கூறப்பட்டிருந்தாலும், தமிழிலக்கியத்தில் சிவனைக் குறித்து பாடப்பட்ட பாடல்கள் சிவ பக்தியைப் பரப்பி சிவன் அருள்பெற எல்லாக்காலங்களிலும் வழி வகுத்து நிற்கின்றன. சிவபெருமானே இனிய தமிழ் கேட்டு பேரானந்தமடைந்ததாக திருவிளையாடல் புராண நிகழ்ச்சிகள் வர்ணிக்கின்றன.

*ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே*
*உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே*
*தெளிவளர் பளிங்கின் திரள் மணிக்குன்றே*
*சித்தத்துள் தித்திக்கும் தேனே!*

– திருமாளிகைத் தேவர் –

*அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய்*
*ஆனந்தப் பூர்த்தியாகி அருளொடு நிறைந்தது*

~ தாயுமானவர் –

*பால்நினைந்தூட்டும் தாயினும் சாலப்*
*பரிந்து நீ பாவியேனுடைய*
*ஊனினை உருக்கி, உள்ளொளி பெருக்கி*
*உலப்பிலா ஆனந்தமாய*
*தேனினைச் சொரிந்து புறம் புறந்திரிந்த*
*செல்வமே சிவபெருமானே*
*யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்*
*எங்கெழுந்தருள்வது இனியே!*

– திருவாசகம் –

**நன்றி: ஞானபூமி**

## புஸ்ப விசேடம்

கோங்கம்பூவில் சரசுவதியும், அலரிப்பூவில் பிரமாவும், வன்னியில் அக்கினியும், நந்தியாவர்த்தையில் நந்தியும், புன்னையில் வாயுவும், எருக்கில் சூரியனும், செண்பகப்பூவில் சுப்பிரமணியரும், வில்வத்தில் இலக்குமியும், கொக்கிறகம்பூவில் விஷ்ணுவும், மாவிலங்கையில் வருணனும், மகிழில் சரசுவதியும், வாகையில் நிருதியும், சாதிப்பூவில் ஈசானனும், செங்கழுநீரில் சூரியனும், குமுதம்பூவில் சந்திரனும், மந்தாரையில் இந்திரனும், மதுமத்தையில் குபேரனும், நாயுருவியில் இயமனும், தாமரைப்பூவில் சிவனும் அறுகில் விநாயகரும் நீலோற்பலத்திலும் ஏனைய வாசனைப் புஸ்பங்களிலும் உமாதேவியாரும் அதிதேவதைகளாய் இருப்பர்.

ஆகையால் இப்பத்திர புஸ்பங்களையும் ஏனையவற்றையும் விதிப்படி எடுத்துக் கொடுப்பவர்களும், அவற்றினாற் பூசித்தவர்களும் திருமாலை கட்டிக் கொடுப்பவர்களும், திருநந்தனவனம் வைப்பவர்களும் போகமோஷங்களை அடைவார்களென்று உண்மை நூல்கள் கூறுகின்றன.

ஓம்கார பிரணவஹ
ஸர்வ வ்யாபீஸ ஏகஹதத் பரப்பஹ்ம

–(அதர்வஸிர உபநிஸத்) –

# ஓம் எனும் பிரணவம்

ஓம் எனும் பிரணவம் மஹா புனிதமான அழியாத பரப்பிரமத்தின் வடிவம். 'அ', 'உ', 'அம்' என்ற மூன்று அஷரங்கள் அல்லது மாத்திரைகளால் அமைந்தது ஓம். அந்த 'அ', 'உ', 'அம்' ஆகிய அஷரங்கள் எவையெவற்றைக் குறித்து நிற்க்கின்றன என்று உபநிஷத்துக்கள் அடியிற் கண்டவாறு கூறுகின்றன.

| | அ | | உ | | அம் | | ஸ்வரூப நிலை |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | ப்ரும்மா | - | விஷ்ணு | - | சிவன் | - | மும்மூர்த்தி ஸ்வரூபம் |
| 2. | சூரியன் | - | சந்திரன் | - | அக்னி | - | (ஒளிவடிவம்) |
| 3. | ஸ்திரீ | - | பருஷன் | - | நபும்ஸகன் | - | (லிங்கவடிவம்) |
| 4. | க்ரியாசக்தி | - | இச்சாசக்தி | - | ஞானசக்தி | - | (லிங்க ஸமஷ்டி) |
| 5. | ருக்வேதம் | - | யஜுர் வேதம் | - | ஸாமவேதம் | - | (வேத சாரம்) |
| 6. | ஸ்தூலம் | - | ஸூஷ்மம் | - | காரணம் | - | (லிங்க சரீரம்) |
| 7. | பாதம் | | நாபி | - | சிரம் | - | (மனித உடல்) |
| 8. | புத்தி | - | மனம் | - | ஆன்மா | - | (சித்தி ஸாதனை) |
| 9. | கடந்த காலம் | | நிகழ்காலம் | - | எதிர்காலம் | - | (காலப்பரிமாணம்) |
| 10. | வஸுக்கள் | - | ருத்ரர்கள் | - | ஆதித்யர்கள் | - | (தேவதா ஸமஷ்டி) |

இறைவனை நமஸ்கரிக்க எந்த நாமத்தைச் சொன்னாலும், அல்லது அர்ச்சனை மந்திரங்கள் சொன்னாலும் 'ஓம்' என்ற சப்தத்தை முதலில் சேர்த்துக் கொள்ள வேண்டும். உதாரணமாக ஓம் மஹா கணபதியே நமஹ ஓம் நாராயணாய நமஹ - என்பது சரியான முறையாகும். நமஹ: என்பது கடைசியில் தான் வரவேண்டும் சில சமயங்களில்அர்ச்சனை மந்திரங்களைத் தொடர்ந்து வேகமாகச் சொல்லும்போது 'நமஹ ஓம்' என்று வருவதுமுண்டு ஆனால் 'ஓம்'இல் தொடங்கி இறைவன் நாமத்தைச் சேர்த்துக் கொண்டு 'நமஹ' என்று முடிப்பதுதான் சாஸ்திர முறை.

நன்றி: ஞானபூமி

# கும்பாபிஷேகங்கள் ஏன்?



இறைவனின் அளவிட முடியாத பகுத்த உணர இயலாத பெரும் சக்தியால் பிரபஞ்சம் இயங்குகிறது. இறைவனின் சக்தி சித் சக்தி என்று கூறப்படும். சித்து என்றால் அறிவு. தெய்வீக அறிவே சித் சக்தி ஆகும்.

ஆண்டவன் எங்கும் நிறைந்திருக்கிறான். அவனது இந்த மாபெரும் சக்தியை, வேத ஆகம நெறிகளின்படி திருக்கோயில்களில் எழுந்தருள செய்விக்கப்படுகின்ற சிலை வடிவிலான திருமேனிகளில் நிலை பெறச் செய்கிறார்கள்.

திருக்கோயில்களில் எழுந்தருளியுள்ள மூர்த்திகளில் தெய்வீக ஆற்றல் தேங்கி நிற்கிறது. அந்த மூர்த்திகளை நாம் வழிபட்டுப் பயனடைகிறோம்.

ஓடுகின்ற நீரை ஓர் அணையைக் கட்டி, அதில் தேக்கி வைத்து விவசாயக் காரியங்களுக்கும் இதர பணிகளுக்கும் பயன் படுத்துவதைப்போல, எல்லாம் வல்ல எங்கும் நிறைந்துள்ள கடவுளின் மாபெரும் சக்தியைத் திருக்கோயில்களில் தேக்கி வைத்து உயிர்கள் மேன்மை அடைவதற்காகப் பயன்படுத்திக் கொள்கிறோம்.

இதுதான் ஆலயங்களின் அடிப்படை தத்துவம். மனத்தில் மாசு - அழுக்கு - உள்ளமனிதன் தினசரி சென்று தீண்டுவதால் ஆலய விக்கிரங்களில் தேங்கியுள்ள இறைவனின் சித் சக்தி நாளாவட்டத்தில் நிலை பெறாமல் அகன்று விடும். அவ்வாறு நிகழாமல் தடுப்பவை கும்பாபிஷேகங்கள் என்று சைவ நெறியிலும், சம்ப்ரோட்சணங்கள் என்று வைணவ நெறியிலும், குறிப்பிடப்படுகின்றன. பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை திருக்கோயில்களுக்கு கும்பாபிஷேகம் அல்லது சம்ப்ரோட்சணம் செய்விக்க வேண்டும்.

இவ்வாறு செய்ய இயலாத ஆலயங்களில் அஷ்டபந்தனம் சாத்தியாவது குடமுழுக்கு செய்விக்க வேண்டும். ஆலயங்களில் திருவுருவங்கள் அஷ்ட பந்தனம் இல்லாமல் இருத்தல் கூடாது பழுதடைந்த மின்சார சாதனங்களைப் புதுப்பிக்காவிட்டால் மின் விசிறிகள் ஓடாது.மின் விளக்குகள் எரியாது; மின் அடுப்புகளில் சமைக்க முடியாது. அது போல, அஷ்டபந்தனம் இல்லாத ஆலயங்களின் மூர்த்திகளில் தெய்வீகச் சக்தி தேங்கி நிற்காது. கொம்பரக்கு, கருங்குங்கிலியம், சுக்கான், காவிக்கல், வெண் மெழுகு, வெண்ணெய், செம்பஞ்சு, இலிங்கம் ஆகிய எட்டுப் பொருட்களால் விதிப்படி தயாரிக்கப்படுவது அஷ்ட பந்தனம். திருக்கோயில்களில் எழுந்தருளியுள்ள மூர்த்திகளுக்கு இந்த அஷ்ட பந்தனத்தைப் பக்தியுடனும், ஆகம நெறியின் வண்ணமும் சாத்தினால் இறைவனின் அளப்பரிய சித்சக்தி மூர்த்திகளில் தொடர்ந்து நிலை பெற்றிருக்கும்.

மகா கும்பாபிஷேகத்தில் அஷ்டபந்தனம் சாத்துவது மிக முக்கியமான ஒரு பணி இறைவனின் எல்லையற்ற சித்சக்தி ஆலயங்களில் பிரமரந்திரம் எனப்படும் விமான உச்சித்துணை வழியாக விமானக்கலசம் வரையில் ஊடுருவி நிற்கிறது.ரீவி. நிலையங்களிலும், வானொலி நிறுவனங்களிலும் ஒலி அலைகளை வாங்கிப் பல இடங்களுக்குப் பரவச்செய்ய கருவிகள் அமைக்கப்படுகின்றன அல்லவா? அதே தொழில் நுட்பம்தான் திருக்கோயில்களிலும் செயல்படுகிறது. ஆலயங்களில் விமானக் கலசங்கள் செம்பினால் அமைக்கப்படுவதற்கு இதுவே காரணம். செம்பு வழியாகச் சக்தி எளிதில் பரவும்.மகா கும்பாபிஷேகத்திற்கு முன்பாக ஆலயங்களைப் பழுதுபார்த்து, புதிய பகுதிகள் அமைப்பார்கள்; அல்லது ஏற்கனவே உள்ள பகுதிகளைப் புதுப்பிப்பார்கள்.

திருக்கோயில் கர்ப்பக் கிருஹத்தைத் தூய்மை செய்வதற்கு முன்பாக கோயிலுக்கு வெளியே ஒரு யாக சாலை அமைத்து

அங்கு சில தினங்கள் இறைவனைக் கடங்களில் எழுந்தருள செய்வார்கள். இறைவன் தற்காலிகமாக எழுந்தருளும் இடம் யாக சாலை "பிம்ப வடிவில் உள்ள பெருமானைக் கும்பத்தில் [குடத்தில்] உள்ள புனிதமான நீரில் ஆவாஹனம் செய்விப்பது" என்று இதனைக் குறிப்பிடலாம்.

கும்பாபிஷேக காலத்தில் யாக சாலை பூஜைகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை யாகசாலையில் ஆல மரம், அரசமரம் முதலியவற்றின் சமித்து களதும் பசு நெய்யினாலும் ஹோமங்களைச் செய்வார்கள். ஹோமகுண்டத்தில் உள்ள அக்னியில் பொருள்களை இட்டால் அவை இறைவனிடம் சென்று அடையும் யாக சாலையில் சிறப்பு வழிபாடுகள், வேத பாராயணம், ஆகம பாராயணம், மங்கல வாத்திய இசை, சமய விரிவுரைகள் முதலியவையும் இடம் பெறும். இறுதியாக சாலைக் குடங்களில் உள்ள புனித நீரால் கோபுர உச்சியின் விமானக் கலசங்களுக்கும் கருவறையில் எழுந்தருளியுள்ள மூர்த்திகளுக்கும் அபிஷேகம் செய்யப்படும் கும்ப நீரால் அமையும் அபிஷேகம் கும்பாபிஷேகம்.

வேத ஆகம நெறி முறை தவறாமல் மகா கும்பாபிஷேகங்களையும் சம்ப்ரோக்ஷணங்களையும் [புனித நீரைத் தெளித்தல்] செய்பவர்களுக்கும். செய்விப்பவர்களுக்கும் பகவானின் பரிபூரணமான அருள் கிடைக்கும்.

நன்றி: மங்கை



தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவின் திருநாமஞ் செப்பல்
தெளிவு குருருபஞ் சிந்தித்தல் தானே

திருமந்திரம்

## பிள்ளையார் சுழி

பழங்காலத்து கல்வெட்டுக்களிலும் பழங் காலத்து ஓலைச்சுவடிகளிலும் பிள்ளையார் சுழி போட்டு எழுதும் பழக்கம் இருந்து வந்திருக்கின்றது. இது எப்படி ஏற்பட்டது என்ற கருத்து எல்லோர் மனத்திலும் கேள்விக்குறியாக இருக்கின்றது.

ஓம் என்பது முதல் எழுத்து இதனை விரைந்து எழுதும்போது 'உ' என்று வரும். இப்படி எழுதினார்கள் தமிழ் மக்கள். எழுத்துக்களுக் கெல்லாம் தாயாகிய பிரணவ வடிவத்தினை முன்னெழுதியே ஏனையவற்றினை பின் எழுதினர். இந்தப் பிரணவம் பிள்ளையார் வடிவம் பிரணவத்தின் திரிந்த வடிவமே பிள்ளையார் சுழி எனக் கூறுவர்.

பிரணவம் ஐந்தெழுத்துக்களின் கூட்டம் முதல் உரு நட்சத்திர வடிவு அதாவது வட்டப்புள்ளி இரண்டாம் வடிவு தண்டம் போலப்படுக்கையில் கிடக்கும் நேர்க்கோடு மூன்றாம் உரு வட்டம். நான்காம் உரு பிறைமதி, ஐந்தாம் உரு பிந்து, இவற்றுள் வட்டப்புள்ளியும் நேர்கோடும் இணைந்து பிள்ளையார் சுழியாகிறது. இந்தச் சுழியை இட்டாலே போதும் பிள்ளையார் வணக்கம் ஆகிவிடுகிறது.

பிரணவத்தின் ஐந்து கூறுகளுக்கும் உரிய அதி தேவதைகள் இருக்கிறார்கள். அவர்களை இன்னார் என்று கூறவந்த சிவஞானபோதம் அகரத்திற்கு பிரமனையும், உகரத்திற்கு திருமலையும் மகரத்திற்கு உருத்திரனையும் பிந்துவுக்கு மகேசனையும், நாகத்திற்கு சதாசிவனையும் கூறிற்று. எழுதத்தொடங்குவது என்பது இலக்கிய சிருஷ்டி அதனால் இலக்கியம் தோன்றவும், நின்று நிலவவும், வளர்ச்சி பெறவும் ஐந்து தெய்வங்களையும் வணங்கும் முகத்தான் பிள்ளையார் சுழியினை இட்டு எழுத தொடங்குகின்றோம்.

ச. தண்டபாணி தேசிகர்
திருவாவடுதுறை ஆதீனம்.

# பிரதோஷவிரதம்

ஒவ்வொரு மாதமும் பிரதோஷ நாளன்று சிவபெருமானின் அருள் வேண்டி அனுஸ்டிக்கும் விரதமே பிரதோஷ விரதமாகும். பொதுவாக பிரதோஷ காலம் என்பது பகல் முடியும் நேரம் முதல் வானில் நிலவு தோன்றும் நேரம் வரை உள்ள காலம் என்பர். அதாவது மாலை 5.45 மணிக்கு மேல் 6.30 மணிக்குள் பிரதோஷ காலம் ஆகும். ஒவ்வொரு மாதமும் அமாவாசையிலிருந்து 13ஆம் நாளும் பௌர்ணமியிலிருந்து 13ம் நாளும் திரயோததி திதியாகும். அன்றுதான் பிரதோஷநாள் மாதத்திற்கு இரண்டு பிரதோஷ நாட்கள் வருகின்றன.

பிரதோஷம் என்பது இரவின் தொடக்கம் என்றும் சிறந்த நேரம் என்றும் பொருள்படும் கடுமையான தோஷ வேளையாகும் என்று கூறுவர் சிலர். அதாவது தீய சக்திகள் விலக வேண்டி சிவபெருமானை வணங்கத்தக்க திருநாளாகும் இது.

**1. நித்தியப் பிரதோஷம்**

நாள்தோறும் சூரியன் மறைவதற்கு 3 நாழிகைக்கு முன்பு நட்சத்திரங்கள் தெரியும் வரை உள்ள காலத்தில் வருவது நித்தியப் பிரதோஷம் ஆகும்.

**2. பட்சப் பிரதோஷம்**

சுக்லபட்ச சதுர்த்திநாளில் மாலை வேளையில் வருவது பட்சப் பிரதோஷம் ஆகும்.

**3. மாதப்பிரதோஷம்**

அமாவாசையிலிருந்து 13ஆம் நாளும் பௌர்ணமியிலிருந்து 13ஆம் நாளும் திரயோதசி திதியில் வருவது மாதப் பிரதோஷம் ஆகும்.

**4. மகாப் பிரதோஷம்**

பிரதோஷநாள் சனிக்கிழமையாக இருப்பின் அது மகாப் பிரதோஷம் ஆகும்.

**5. பிரளயப் பிரதோஷம்**

பிரளயகாலத்தில் எல்லாம் சிவனுடன் ஒடுங்கும் வேளையில் வருவது பிரளயப் பிரதோஷம் ஆகும்.

**சோம சூத்திரப் பிரதக்ஷிணம்:**

பிரதோஷ காலத்தில் மட்டும் வழக்கமாக வருவது போல் ஆலயப்பிரதட்சணம் வருதல் கூடாது. அப்ர தட்சணம் வருதல் வேண்டும். இதைத்தான் சோம சூத்திரப் பிரதஷிணம் என்பர். முதலில் நந்தி தேவரைத் தரிசித்து அங்கிருந்து இடமாகச் சென்று சண்டேச நாயனாரை வணங்கி பின்பு சென்ற வழியே திரும்பி வந்து மறுபடியும் நந்தி தேவரைத் தரிசித்து பின்பு அங்கிருந்து வலமாகச் சென்று சண்டேச நாயனாரைத் தரிசித்து பின்பு திரும்பி வந்து நந்தி தேவரை வணங்கி அவருடைய இரண்டு கொம்பின் நடுவே பிரணவத்தோடு கூட ''ஹரஹர'' என்று சொல்லிச் சிவலிங்கப் பெருமானைத் தரிசித்து வணங்க வேண்டும். இவ்வாறு செய்யும் பிரதஷிணத்திற்கு ''சோமசூத்திரப் பிரதஷிணம்'' என்று பெயர் இதனைப் பிரதோஷ காலத்தில் செய்தால் விசேஷமான பலன் உண்டு.

**பிரதோஷநாளில் அப்ரதட்சணம் வரக் காரணம்:**

தசமி திதி காலை வேளையில் அமிர்தம் பெற வேண்டி தேவர்களும், அசுரர்களும் மந்திர மலையை மத்தாகவும், வாசுகி என்னும் பாம்பைக் கயிறாகவும் கொண்டு திருப்பாற் கடலைக் கடையத் தொடங்கினர். தொடர்ந்து கடைந்து கொண்டே இருந்தனர். இரவு கழிந்து மறு நாள் ஏகாதசி காலையில் வாசுகியின் ஆலமும் (விஷமும்) கடலில் தொன்றிய ஆலமும் சேர்ந்து ஆலகாலமாகி எங்கும் புகை மண்டலம் போல் எழுந்தது.

அதன் அனல் கொடுமை தாங்க மாட்டாத தேவர்கள் சிவபெருமானிடம் முறையிட திருக்கயிலைநோக்கி ஓடி வலமாகச் செல்ல முயன்றனர். அவ்வாறு வலமாகச் செல்ல விஷ மண்டலம் தடுத்த காரணத்தால் - அப்ர (இடது) தட்சணமாக ஒடி கயிலை அடைந்தனர். இவ்வாறு தேவர்கள் அன்று கயிலையை அடைய அப்ர தட்சணம் வந்த காரணத்தால்தான் சிவாலய பிரதோஷ நாளன்று அப்ர தட்சணம் வரும் முறை பின்பற்றப்படுகிறது. இதுவே சோம சூத்ர பிரதட்சணம் ஆகியது.

கிருஷ்ண பட்சத் திரயோதசியில் பூஜை தொடங்கி ஓர் ஆண்டு பிரதோஷ பூஜை செய்து, உத்யாபனம் செய்வது மகா பிரதோஷ விரதம் ஆகும். இந்த விரதத்தை ஐப்பசி, கார்த்திகை, சித்திரை, வைகாசி என்ற நான்கு மாதங்களுள் ஒன்றில் சனிக்கிழமையில் வரும் பிரதோஷத்திலிருந்து முதலாகத் தொடங்கி அனுஷ்டிக்க வேண்டும். இவ்வாறு வரும் சனிப் பிரதோஷம் மிகவும் சிறப்பு வாய்ந்தது என்று ஆகமம் கூறுகிறது.

பிரதோஷ நாளன்று திருமால் திருக்கயிலாயத்தில் இருந்ததை நினைவூட்டும் வகையில் இன்றும் ஒவ்வொரு பிரதோஷ நாள் மாலையிலும் பெருமாள் ஆலயங்களில் திரையிட்டு மறைத்து வைக்கப்பட்டிருக்கும் ஐதீகம் பின்பற்றப்படுகின்றது.

**வழிபடும் முறை:**

* விடியற்காலை எழுந்து, நீராடி, மடியுடுத்தி, நெற்றியில் சைவச் சின்னங்களை தரித்துக் கொள்ளுதல் வேண்டும்.
* முழுஉபவாசம் இருந்து படுக்கையில் படுக்காமல், சிவ புராணம் சிவநாமவளிகளைப் படித்துக் கொண்டு சிவ சிந்தனையோடு இருக்க வேண்டும்.
* மாலையில் சூரியன் அஸ்தமனமாக நான்கு நாழிகைக்கு முன்பு மீண்டும் ஸ்நானம் செய்து மடியுடத்தி நெற்றியில் திருநீறு பூசிக்கொள்ள வேண்டும்.
* இல்லத்தில் சிவலிங்கமம், நந்தியும் கற்படிமமாகவோ, விக்கிரகமாகவோ இருப்பின் அவற்றிற்கு அபிஷேகம் செய்து வில்வ தளத்தால் அர்ச்சனை ஆராதனை செய்ய வேண்டும்.
* அல்லவெனில் மாலை பிரதோஷ வேளையில் சிவாலயத்திற்குச் சென்று சிவபெருமானுக்கும், நந்தி தேவருக்கும் நடைபெறும் மஹன்யாச ருத்ர ஜபத்துடன் கூடிய அபிஷேகத்தைக் கண் குளிரக் காண வேண்டும்.
* நந்தி தேவருக்கு அருகம் புல் மாலையை அணிவிக்க வேண்டும்
* மாவினால் அகல் செய்து துாய்மையான பசு நெய்விட்டு விளக் கெரிக்க வேண்டும்.
* காரரிசியில் வெல்லம் கலந்து நந்தி தேவருக்கு நிவேதனம் செய்ய வேண்டும்.
* தீபாராதனை வேளையில் நந்தி தேவரின் இரு கொம்புகளுக்கிடையே சிவ பெருமானைக் கண்டு 'ஹரஹர' என்று கூறி வணங்க வெண்டும்.
* பிரதோஷ நாளில் ஆலயத்தை வலம் வரும் போது அப்ர தட்சிணமாக வர வேண்டும்.
* பின்னர் சிவபெருமான் உமாதேவியாருடன் ரிஷபாரூடராய் பிரதோஷநாயகராய், பிரதோஷகாலத்தில் (மாலை 5.45 முதல் 6.30 மணி வரை) ஆலயத்தை வலம் வரும் பொழுது கண்டு தரிசிப்பது மிகப் பெரிய புண்ணியமாகும்.
* சிவ ஆலயங்களில் வேத பாராயணத்துடன் முதலிலும், திருமுறை பாராயணத்துடன் இரண்டாவதும், நாதஸ்வர மங்கல இசையுடன் மூன்றாவதுமான மூன்றுமுறை ஆலய வலம் நடைபெறும். இரண்டாவது வலம் வரும் போது இறைவனையும், இறைவியையும் ஈசான திக்கில் இருந்தருளச் செய்வார்கள் அப்போது காண்பிக்கப்படும் கற்பூர ஆரத்தியைக் கண்டு தரிசிப்போருக்கு மிகுந்த பலன் உண்டு என்று கூறப்படுகிறது.
* சிவ தரிசனம் முடிந்ததும் வீட்டிற்கு வந்து இருவருக்காவது அன்னமிட்டு அதன் பிறகு உண்பதே சிறப்பு என்று கூறப்படுகின்றது.

**நன்றி: மங்கை**

# அம்பிகை வழிபாட்டின் தொன்மை

உலகில் உயிர்கள் யாவும் அநாதியானது. என்றும் அழிவில்லாதது. உயிர்கள் அவ்வப்போது தன் உடலை மாற்றிக் கொள்கிறது. ஒவ்வொரு உடலுக்கும் ஒரு தாயுண்டு. அந்த தாய் தான் ஸகல சக்தியையும் உருவாக்கித் தருகிறாள். முதலில் தாயை வணங்க, மதிக்கக் கற்றுக் கொண்டான் மனிதன். உலகில் பிறந்தவுடன் அவன் அறிந்தது தாயைத்தான். தாயின் மூலம் தான் தந்தையை அறிகின்றான். தநதையின் மூலம் நல்ல குருவை அடைகின்றான். குருவின் மூலம் தெய்வத்தை அறிகின்றான். இதனையே மாதா, குரு. தெய்வம் என்று கூறப்படுகிறது. தாய் அன்பையும் ஆற்றலையும் பக்குவமறிந்து போதித்து, வல்லவனாக ஆக்குகிறாள். தாயை வணங்கக் கற்றுக் கொண்டதால் தாய் வழிபாடே பின்னர் சக்தி வழிபாடாக மிளிர்ந்துள்ளது. தாய் அவனுக்கு அறிவை புகட்டினாள். அதுவே பின்னர் அறிவுக் கடவுளான சரஸ்வதி வழிபாடாகவும், தாய் அவனுக்கு தின்பண்டங்கள் வாங்க காசு கொடுத்தாள், அதுவே ஸகல செல்வங்களைத் தரும் லஷ்மி வழிபாடாகவும், தாய் அவனுக்கு நல்ல ஆற்றலையும் வீரத்தையும் போதித்தாள். இலக்கியத்தில் தாய் தன் கணவன் போரில் வீரமரணம் அடைநதான் என்பதை அறிந்து தன் ஒரே மகனை சிறுவனாக இருந்தபோதிலும் அவனுக்கு போருடைகளை அணிவித்து வில்லையும் வாளையும் தந்து போருக்கு அனுப்பி **மகனே வெற்றியுடன் திரும்பி வா. ஒரு சமயம் மரணம் ஏற்படுமானால் மார்பில் அடிப்பட்டவனாக இறக்க வேண்டும். முதுகில் அடிபட்டு இறந்தாய் என்பதைக் கேட்டால் உனக்குப் பால் தந்த மார்பகத்தை அரிந்து எறிந்து விடுவேன்** என்று வீர வாக்கியம் கூறியததாகத் தமிழ் இலக்கியங்கள் கூறும் வீரத்தை ஊட்டியதைத்தான் பின்னர் துர்க்கை வழிபாடாக மிளிர்ந்துள்ளது.

உலகின் மனித குலம் முதன் முதலில் தாயை அறிந்து அவள் மூலமாக எல்லா ஆற்றலையும் பெற்றுள்ளதால், சக்தி வழிபாட்டை முதல் வழிபாடாக அமைத்துக் கொண்டுள்ளது. தாய் (அன்னை) வழிபாடே மிக தொன்மையாக உள்ளது. அதன் வளர்ச்சியே இன்று சக்தி வழிபாடாகத் திகழ்கிறது.

இறைவன் செய்யும் எல்லா செயல்களும் சக்தி மூலம் நடைபெறுவதை சிவாகமம் உரைக்கின்றது. இறைவனுக்கு மூன்று சக்திகள் - 1. யோகசக்தி, 2. போகசக்தி, 3.வீரசக்தி. இறைவன் நிச்சலமாக இருக்கும் போது யோக சக்தியாகவும், உலகைப் படைக்க விரும்பும்போது போக சக்தியாகவும், அருள்பாலிக்க விரும்பும்போது வீர சக்தியாகவும் செயல்படுவதால் அருளது சக்தியாகும் என்று சிவஞான சித்தியார் கூறுகிறது. இறைவனும் சக்தியும் என்றும் பிரியாதது நெருப்பும் சூடும் போல தண்ணீரும் தட்பமும் போல உள்ளது என்பார்.

சமயாசாரியர்கள் இறைவன் சக்தியோடு கண்டார்கள். திருஞானசம்பந்தர், இறைவனை **பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகையிருந்ததே** என்றும், திருநாவுக்கரசு சுவாமிகள் **மாதர்பிறைக் கண்ணியானை** என்றும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் **வைத்தாய் பெண்ணை தென்பால் வெண்ணெய் நல்லூர்** என்றும் பாடியுள்ளார்கள். மணிவாசகப் பெருமான் பெண் சுமந்த பாகத்தன் என்று பாடியுள்ளார். வேத உபநிஷத் - அனோரணீயான் மஹதோமஹீயான்- அணுவிற்கு அணுவாயும் (சிறியதற்கெல்லாம் சிறியதாயும்) மஹத்திற்கெல்லாம் மஹத்தாயும் (பெரியதற்கு எல்லாம் பெரியதாயும்) என்று கூறுகிறது.

விஞ்ஞானிகள் அணுவை பிளந்து ஆராய்ச்சி செய்தபோது ஒரு பகுதி ஆடிக்கொண்டும் ஒரு பகுதி ஆடாமலும் இருந்ததைக் கண்டார்கள். இதனையே மெய்ஞானிகள் சிவம் ஆடிக்கொண்டும் சக்தி ஆடாமலும் இருப்பதை நமக்கு நடராஜதத்துவமாக உணர்த்தியுள்ளார்கள்.

திருஞானசம்பந்தப் பெருமானுக்கு அருள் பாலிக்க விரும்பிய இறைவன், தன் அருளான சக்தியின் மூலம் ஞானப் பாலைத் தரச் செய்தார். தந்தையான சிவபாத ஹிருதயர் கேட்ட பொழுது ஞானக் குழந்தையான திரஞானசம்பந்தர் தோடுடைய செவியன் என்று சக்தியோடு சேர்த்து இறைவனைச் சுட்டிக் காட்டுகிறார்.

சிவாகமம் சிவாலயத்தில், நல்ல குருவின் மூலம் பாசநீக்கம் பெற்ற உயிர்களுக்கு சிவயோகந் தந்த பின்னர் சிவ சாயுஜ்யத்தைத் தருவதை, உயிர்கள்

பசுத்தன்மையுடையன என்பதை உள் நந்தியாகவும், பாசம் என்பதை இறைவனை மறைந்திருக்கும் திரையாகவும், அதனை நீக்கி பதியாகிய இறைவனை காட்டும் குருவாக குருக்களும், இறைவனைக் கண்ட உயிர்களுக்கு சிவபோகத்தைத் தருபவளாக அர்த்த மண்டபத்தில் போக சக்தியாக இருந்து பின்னர் ஜீவாத்மாவை இறைவனிடம் இரண்டறகலக்கச் செய்து சிவஸாயுஜ்யத்தைத் தருபவளாக சக்தி விளங்குகிறாள்.

**பிரம்மனின் சக்தியே பிராம்மி**
**விஷ்ணுவின் சக்தியே வைஷ்ணவி**
**மகேசனின் சக்தியே மாகேசுவரி**
**ருத்ரனின் சக்தியே ரௌத்ரி**
**குமரனின் சக்தியே கௌமாரி**
**இந்திரனின் சக்தியே இந்திராணி**
**வராஹ மூர்த்தியின் சக்தியே வாராஹி**

காரிய ஸித்தியையும் புத்தியையும் தரக்கூடிய மஹா கணபதியின் சக்தியே சித்தி-புத்தியாகும். படைப்பவனுக்கு அறிவு மிகுதியாக இருக்கவேண்டுமென்பதால் படைப்புக் கடவுளான பிரமனுக்கு அறிவு தெய்வமான சரஸ்வதியே சக்தியாகும். காப்பவனுக்கு செல்வம் மிகுதியாக இருக்கவேண்டுமென்பதால் காத்தல் கடவுளான விஷ்ணுவிற்கு செல்வத்தின் நாயகியான மஹா லெஷ்மியே சக்தியாகும். அழித்தல் தொழில் செய்யும் காலாக்னி ருத்ரனுக்கு காலத்தை நிர்ணயம் செய்யும் மஹா காளியே சக்தியாகும்.

ஆகையால் உலகம், தோன்றிய காலம் முதல் இன்றுவரை பரிணாம வளர்ச்சியாக வளர்ந்து வந்துள்ள போதும் மிகத் தொன்மையாக உள்ளது அம்பிகை வழிபாடு. நாமும் அன்னை பராசக்தியை வழிபாடு செய்து எல்லா நலங்களுடன் வாழ்வாங்கு வாழ்ந்துவர, திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான திருமங்கலக்குடி ஸ்ரீ அருள்தரும் பிராணநாதேஸ்வரர் திருவருளைப் பெற்று எல்லா நலங்களுடன் பல்லாண்டு வாழ்ந்துவர வேண்டுவோமாக!.

சிவாகம ஞான சாகரம்
**என்.இராமநாத சிவாசாரியார்,**
திருக்கோலக்கா, சீர்காழி.

# அவனருளாலே அவன்தாள் வணங்கி



பறாளாய் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலய மகா கும்பாபிஷேக பூர்த்தியினை முன்னிட்டு மலர் வெளியிடும் செய்தியறிந்து அகமகிழ்வுறு கின்றேன். இவ் ஆலயத்தி ருப்பணி வேலை களில் பங்கு கொள்ள எனக்கும் இடம் கொடுத்தமைக்காக இறைவன், பன்னிரு திருக்கரவள்ளல் பாதபங்கமயம் போற்றி வணங்கி வழிபடுவதுடன் நின்றுவிடாது திருப்பணிவேலைகளில் ஒத்துழைப்புக் கொடுத்த அனைவருக்கும் ஸ்ரீ ஷண்முக நாதப் பெருமான் நல்லருள் கிடைக்க வேண்டிப் பெருமானைப் பிரார்த்திக்கின்றேன்.

''மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்''

**நன்றி!**

❇❇❇❇❇❇❇❇❇❇❇❇❇❇❇❇❇❇❇❇❇❇❇❇❇❇❇

ஒருத்தி அழகும் விவேகமும் உள்ள ஒருவனை விவாகஞ் செய்ய வேண்டும் என்று வெகு நாளாகக் காத்திருந்தாள். ஒருநாள் அழகுள்ள புருஷன் வந்தான். அவன் விவேகியோ என்று அறியும் பொருட்டு அவனோடு பேசிக்கொண்டிருந்தாள். அப்பொழுது அங்கே சடசட என்றது. அவன் "அது என்ன" என்றான். "அது உடும்பு" என்றாள். "அதில் ஓரிறகு பிடுங்கிவா: காது குடைதல் வேண்டும்" என்றான். "உடும்புக்கு இறகு இருக்குமா! போ" என்று அவனை அனுப்பிவிட்டாள். சிலநாள் சென்றபின், வேறொருவன் வந்தான். அவனுடனே "முன் ஒரு மூடன் உடும்பிலே இறகு பிடுங்கி வரச்சொன்னான்" என்றாள். அதற்கு அவன் சிரித்து, "அவன் ஆமை என்று நினைத்தான் போலும்" என்றான். இவன் அவனிலும் பெருமூடன் என்று எண்ணி, இவனையும் இகழ்ந்து போகச் சொன்னாள்.

**ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பாலபாடம்**

❇❇❇❇❇❇❇❇❇❇❇❇❇❇❇❇❇❇❇❇❇❇❇❇❇❇❇

# மங்களம் தரும் வேதம் - ஆகமம் - யாகம்

எஸ். நாராயணசுவாமி,எம்.ஏ.எம்.ஏ.,எம்.எட்.,
ஆசிரியர், திருவாவடுதுறை ஆதினக் கல்வி நிலையம்,
திருவிடைமருதூர்.

**(இக்கட்டுரை ஆசிரியர் திருமங்கலக்குடி ஸ்ரீபிராணநாதர் திருக்கோயில் கும்பா பிஷேகத்தில் யாவரும் பொதுவாக அறிதல் வேண்டி வேதம்- ஆகமம் - யாகம்- யாகத்திற்குரிய பொருள்கள் - பிற பலன்கள் ஆகியன தொகுத்து வழங்கியுள்ளார்.).**

ஓம் என்ற மூலமந்திரத்தை விளக்க வந்தது வேதாகமம். அது ஈஸ்வரனின் அருளையும், புருஷர்களுக்கும் உலகத்திற்கும் உள்ள தொடர்பையும், தொடர்பினால் ஏற்படுகின்ற பாசத்தையும் விடுவிக்கின்ற முறையினையும், பாசத்தை விட்டதனால் மனிதன் (பசு) சர்வேஸ்வரனின் திருவருளுக்குப் பாத்திரமாகின்றான் என்பதையும் விளக்குகிறது.

மேற்கண்ட கருத்தை விளக்க வந்ததுதான் நான்கு வேதங்களும், அதன் முடிவாக அமைந்த உபநிஷத்துக்களும், அதன் பிறகு வந்த ஆகமங்களும் ஆகும்.

**ஆகமத்தின் பொருள்**

காமிகம் முதலிய சிவஞானம் ஊர்த்துவச் சுரோதோற்பவங்களாகி மேன்முகத்திற் பிறந்தன, என்று காமிகாகமம் கூறுகின்றது. வேதங்களான இருக்கு, யசுர், சாமம், அதர்வம் என்பது சிவனது மற்றை முகங்களில் பிறந்தன.

இந்தச் சிவாகமங்கள் காமிகம் முதலாக இருபத்தெட்டு ஆகமங்களாம்.

1) ஆ- என்பது பாசம், க-என்பதுபசு, ம - என்பது பதி (உலகம், ஆன்மா, கடவுள்). ஆகவே முப்பொருள் உண்மையை விளக்க வந்ததுதான் ஆகமம் என்று புலப்படுகிறது.

2) ஆ-என்பது சிவஞானமும், க- என்பது மோட்சமும், ம- என்பது மலநாசமும் ஆகும் ஆன்மாக்களிடத்தில் இருக்கும் மும்மலத்தையும் நாசஞ் செய்து சிவ ஞானத்தைத் தோற்றுவித்து மோட்சத்தைக் கொடுக்கவல்லது ஆகமமேயாகும்.

இதனை மணிவாசகர் கூறுகையில்

ஆகமம் ஆகி நின்று அண்ணிப்பான் தாள் வாழ்க

என்று திருவாசகத்தில் கூறுகின்றார்.

**ஆகமங்கள்**

1)காமிகம், (2) யோகசம், (3) சிந்தியம்,(4) காரணம், (5) அசிதம், (6) தீப்தம், (7) சூக்குமம், (8) சகச்சிரம், (9) அம்சுமான், (10) சுப்பிரபேதம், (11) விஜயம், (12), நிச்சுவாசம், (13) சுவாயம்புவம், (14) ஆக்கினேயம், (15) வீரம், (16) ரௌரவம், (17) மகுடம், (18) விமலம், (19) சந்திரஞானம், (20) முகவிம்பம், (21) புரோற்கீதம், (22) லளிதம், (23) சித்தம், (24) சந்தானம், (25) சர்வோக்தம், (26) பாரமேசுரம், (27) கிரணம், (28) வாதுளம் முதலியன மேலும் இதனுள் 207 உபாகமங்களும் உள்ளன.

**ஆகமத்தினுள்ளே.....**

இவ்வாகமங்கள் மந்திரமெனவும் தந்திரமெனவும் சித்தாந்தமெனவும் பெயர் பெறுகின்றன. இந்த இருபத்தெட்டு சிவாகமங்கள் ஒவ்வொன்றுக்கும் கோடி கிரந்தமாக இருபத்தெட்டு கோடி கிரந்தங்கள் உள்ளன. இவைகள் (1) ஞானபாதம்,(2) யோகபாதம், (3) கிரியா பாதம், (4) சரியாபாதம் என்று நான்கு பாதங்களாக அமைந்துள்ளன.

(1) பதி, பசு, பாசம், (கடவுள், ஆன்மா, உலகம்) என்னும் முப்பொருளின் உண்மையை ஞானபாதம் விளக்குகின்றது.

(2) பிராணாயாமம் முதலிய அங்கங்களோடும் கூடிய சிவயோகத்தை யோகபாதம் விளக்குகின்றது.

(3) மந்திரங்களின் உத்தாரம், சந்தியாவந்தனம், பூசை செபம், ஓமம் என்பவைகளையும் விளக்கி, சமய தீட்சை, விசேஷ தீட்சை, நிர்வாண தீட்சை, ஆசாரியாபிஷேகம் முதலியவைகளைக் கிரியாபாதம் விளக்குகிறது.

(4) சமயாசாரங்களையும் அதன் நுட்பங்களையும் தொண்டு செய்கின்ற வழிமுறைகளையும் சரியாபாதம் விளக்குகிறது.

இந்த இருபத்தெட்டு சிவாகமங்கள் சிவபெருமானது ஒவ்வொரு அவயவத்தைப் பொருந்துவதுபோல அமைந்துள்ளன.

ஆகமங்களின் விஷயங்கள் வேதங்களில் நேரிடையாகக் கூறப்படாமல் சுலோகமாகச் சொல்லப்பட்டுள்ளன. மேலும் வேதச் சொற்கள் நுட்பமான சொற்களினாலும், ஆகமங்கள் எளிய சொற்களினாலும் (விரிவுரை போன்று) அமைந்துள்ளன.வேதவாக்கியங்கள் சுலோகமாதால் பல பொருளாகக் கொள்ளப்படும். ஆகமம் தெளிந்து உணர்த்தும் விரிவுரையாகப் பொருள் கொள்ளக்கூடியதாகும்.

**வேதாந்தம்**

வேதங்களின் முடிவாக அமைந்த உபநிஷத்துக்கள்தான் வேதாந்தம் ஆகும்.வேதம் ¸ அந்தம் (முடிபு) - வேதாந்தம். இந்த வேதாந்தத்திற்கு விளக்கம் அளித்தவர்கள்தாம் ஆதிசங்கரார், இராமானுஜர், மத்துவர் முதலியோர். பிறகு இவர்கள் பிரம்ம சூத்திரத்திற்கு விளக்கம் செய்யும் போது தங்கள் விளக்கத்திற்கு, அத்வைதம், விசிஷ்டாத்வைதம், துவைதம் என்று பெயர் சூட்டினர்.

**இருக்குவேத உபநிஷத்துக்கள்**

இந்த இருக்கு வேதம் 21 சாகைகளைக் கொண்டது. (1) ஐத்ரேய, (2) கௌஷீதகீ, (3) நாதவிந்து, (4) ஆத்மப் பிரபோதம், (5) நிருவாண, (6) முத்கலை, (7) அட்சமாலிகை, (8) திரிபுரை, (9) சௌபாக்கியம், (10) வக்விருச்சானை என்ற பத்து உபநிஷத்துக்கள் கொண்டதாகும்.

**யஜுர்தேவ உபநிஷத்துக்கள்**

இவ்வேதம் 180 சாகைகளைக் கொண்டது. இதனுள் 51 உபநிஷத்துக்கள் உள்ளன. அவையாவன (1)கடவல்லி (2) தைத்திரீயம், (3) பிரமம், (4) கைவல்லியம்,(5) சுவேததாச் சுவதரம், (6) கர்ப்பம், (7) நாராயணம், (8) அமிர்தவிந்து, (9) அமிர்தநாதம் (10)காலாக்கினிருத்திரம் (11) சுரிகை (12) சர்வசாரம், (13) சுகரகசியம், (14) தேசோவிந்து, (15) தியானவிந்து, (16) பிரமவித்தியை (17) யோகதத்துவம், (18) தட்சிணாமூர்த்தி, (19) கந்தம், (20) சாரீரகம், (21) யோகசிகை, (22) ஏகாட்சரம், (23) அட்சியம், (24) அவதூதம், (25) கரம், (26) உருத்திரவிருதயம், (27) யோககுண்டலினி, (28) பஞ்சப்பிரமம், (29)

பிராணாக்கினி கோத்திரம், (30) வராகம், (31) கலிசந்தரணம், (32) சரசுவதி, (33) ஈசாவாசியம், (34) பிருகதாரணியம், (35) சாபாலம், (36) அம்சம், (37) பரமஹம்சம், (39) சுபாலம், (39) மந்திரிகை,(40) நிராலம்பம்,(41) திரிசிகி, (42) மண்டலம், (43)அத்துவயதாரகம்,(44) பைங்கலம், (45) பிட்சு, (46) துரியாதீதம், (47) அத்தியாத்துமம், (48) தாரசரம், (49) யாக்ஞவல்கியம், (50) சாட்டியாயனி, (51) முத்திகம்.

**சாமவேத உபநிஷத்துக்கள்**

இந்த வேதம் 1000 சாகைகளைக் கொண்டது. இதனுள் 16 உபநிஷத்துக்கள் உள்ளன. (1) கேனம், (2) சாந்தோக்கியம், (3) ஆருணி, (4) மைத்திராயணி, (5) மைத்திரேயி (6) வச்சிரசூசிகம், (7) யோகசூடாமணி, (8) வாசுவேதம், (9) மகத்து, (10) சந்நியாசம், (11) அவ்வியக்தம், (12) குண்டிகை, (13) சாவித்திரி, (14) உருத்திராக்க சாபாலம், (15) தரிசனம், (16) சாபாலம் முதலியன ஆகும்.

**அதர்வணவேத உபநிஷத்துக்கள்**

இவ்வேதம் 50 சாகைகளைக் கொண்டது. இதனுள் 31 உபநிஷத்துக்கள் உள்ளன. (1) பிரச்சினம், (2) முண்டகம், (3) மாண்டுக்கியம், (4)அதர்வசிரசு, (5) அதர்வசிகை, (6) பிருகச்சாபாலம், (7) நிருசிம்மதாபினி, (8) நாரதபரி, (9) விராசகம், (10) சீகை (11) சரபம்,(12) திரிபாத்வீயமகாநாராயணம், (13) இராமரகசியம், (14) இராமதாபினி, (15) சாண்டில்யம், (16) பரமஹம்சபரிவிராசகம், (17) அன்னபூரணை (18) சூரியன், (19) ஆத்மம், (20) பாசுபதம், (21) பரப்பிரமம், (22) திரிபுராதபினி, (23) தேவி, (24) பாவனை, (25) பஸ்மசாபாலம், (26) கணபதி மகாவாக்கியம், (27) கோபாலதபனம், (28) கிருஷ்ணம், (29) ஹயக்கிரீவம், (30) தத்தாத்திரேயம், (31) காருடம் முதலியன ஆகும்.

வேதத்தின் ஞானகாண்டமும், ஆகமத்தின் ஞானகாண்டமும் முப்பொருள் உண்மையை விளக்க வந்தவையாகும். சனகாதி முனிவர்கள் கூறுகையில் சித்தாந்தத்தின் கருத்துக்களை வேதமும் ஆகமங்களும் தன்னகத்தே நிறுத்தியும் பல்வேறு வழிகளைக் காட்டியும் உண்மைப் பொருளை உள்ளவாறு வேதாகமங்கள் விளக்குகின்றன. என்று தெளிவுப்படுத்தியுள்ளனர். இவ்வாறான வேதங்கள்-ஆகமங்கள்; ஆகமங்களில் சொல்லப்பட்டவாறு அமைந்த கோயில்களில், விளங்கும் தெய்வத் திருமேனிகளுக்கு உரிய யாகங்கள் யாவும் இன்றைக்கும் திருக்கோயில்களில் நிகழ்த்தப்படுகின்றன. யாகசாலைகள், யாகமந்திரங்கள், யாக திரவியங்கள், அபிஷேகங்கள்,உபசாரங்கள் யாவும் பலநிலைகளில் விரிவாகவும் சுருக்கமாகவும் நிகழ்த்தப்பட்டு வருகின்றதை யாவரும் அறிவர்.

யக்ஞம், யாகம், ஹோமம், வேள்வி, ஓமம் என்ற சொற்கள் ஒரே பொருளைத் தருவனவாகும். கடமை என்ற சொல்லிற்கு நம் முன்னோர்கள் வகுத்த சொற்களாகும். இறைவனுக்கு யாகம் செய்து வழிபடுவதும் ஒரு நல்ல கடமையாகும். யாகத்தின் மூலமாக முழுமையான பலனை அடையலாம். யாகத்தின் ரூபமாக சிவன் விளங்குகின்றார் என்பதனை யக்ஞரூபயநம என்ற பதம் விளக்குகிறது.

**ஐவகை யாகம்**

1) சிவனை எண்ணுதல், சிவபூசை செய்தல் கர்மயாகம் ஆகும். 2) உடம்பை வளர்க்காது விரதம் இருந்து ஐம்புலன்களை அடக்குதல் தவயாகமாகும். 3) சிவ மூலமந்திரம் (பஞ்சாட்சரம்) ருத்ரம் முதலான மந்திரங்களை ஜபித்தல் ஜபயாகம் ஆகும். 4) சதாகாலம் சதாசிவனை தியானித்தல் தியான யாகம் ஆகும். 5) தியானத்தினால் இறைவனது அருளால் ஞானத்தைப் பெற்று அந்த ஞானாதீதத்தில் திளைத்திருப்பது ஞானயாகம் என்று இவை ஐவகை யாகங்களாம்.

**மற்றைய யாகங்கள்**

கணபதி முதலான அனைத்துத் தெய்வங்களுக்கும் யாகாதி விசேஷங்கள் உண்டு இவை தவிர ஆன்மாக்களின் இஷ்ட காம்யங்களை பூர்த்தி செய்யும் யாகங்களும் உண்டு சிறப்பாக ஏக காலத்தில்

பிரதான மூர்த்தியோடு இந்திராதி முதலான அனைத்து விசேஷ மூர்த்திகளுக்கு திருக்கொயில்களில் கும்பாபிஷகம் என்ற முறையில் விசேஷ யாகங்கள் பல காலங்களோடு அனுசரித்து செய்யப்படுவதாகும். இந்த யாகங்கள் சிறப்பினுள் சிறப்பாகும்.

**யாகசாலையின் புத்தகங்கள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| குகபதம் | - | 1 | தத்வபதம் | - | 64 |
| சக்தி பதம் | - | 8 | புவனபதம் | - | 72 |
| நாத பதம் | - | 16 | மந்த்ர பதம் | - | 80 |
| பிந்து பதம் | - | 24 | பதபதம் | - | 88 |
| சதாசிவ பதம் | - | 32 | வர்ண பதம் | - | 96 |
| மகேசுவர பதம் | - | 40 | ருத்ர பதம் | - | 104 |
| சுத்தவித்யாபதம் | - | 48 | விஷ்ணு பதம் | - | 112 |
| கலா பதம் | - | 56 | பிரம்ம பதம் | - | 120 |
| சுத்தமாயா பதம் | - | 128 | கணபதம் | - | 192 |
| மிச்ரமாயாபதம் | - | 136 | சித்த பதம் | - | 200 |
| கலா பதம் | - | 144 | ஆர்ஷ பதம் | - | 208 |
| காலம்பதம் | - | 152 | யஷ பதம் | - | 216 |
| நியதி பதம் | - | 160 | கந்தவர்வ பதம் | - | 224 |
| வித்யா பதம் | - | 168 | சுர பதம் | - | 232 |
| ராக பதம் | - | 176 | ரஷாபதம் | - | 240 |
| தேவ பதம் | - | 184 | மாநவ பதம் | - | 248 |

**யாக சமித்துகள்**

1. வெள்ளெருக்கு
2. பலாசு
3. கருங்காலி
4. நாயுருவி
5. அரசு
6. மா
7. வில்வம்
8. வன்னி
9. அத்தி
10. ஆல்
11. பலா
12. புன்னை
13. மகிழ்
14. மூங்கில் (முள்நீக்கியது)
15. மாதுளை
16. கிளுவை
17. அறுகு
18. சந்தனக்கட்டை
19. வெள்ளெருக்கு
20. வெட்டிவேர்
21. விளாமிச்சவேர்
22. செஞ்சந்தனக்கட்டை
23. அகில்
24. தேவதாரு
25. பாதிரி
26. செண்பகம்
27. அசோகம்
28. குங்கிலியம்
29. நெல்லி
30. மாவிறகு 1 அடிநீளம் கைப் பருமன்
31. அரசு 1அடி நீளம் கைப்பருமன்.

(**குறிப்பு:** 1 முதல் 19 வரை உள்ள சமித்துக்கள் 9 அங்குல நீளம் விரல் பருமனாகவும், 20 முதல் 29 முடிய 6 அங்குல நீளம் விரல் பருமனாகவும் இருக்கவேண்டும்).

**யாக குண்டங்கள்**

1. சதுர குண்டம்
2. யோனி குண்டம்

6. பத்ம குண்டம்
7. விருத்த குண்டம்

3. அர்த்த சந்திர குண்டம் 8. அஷ்டகோணம் குண்டம்
4. திரிகோண குண்டம் 9. பிரதானமான விருத்த குண்டம்
5. ஷட்கோண குண்டம்

**குடத்தில் சுற்றப்படும் நூல்**

குடத்தில் சுற்றப்பட்டுள்ள நூல் மூன்று உள்ளதாக இருக்க வேண்டும். இந்த சுற்றுகள் உத்தமம், மத்திமம், அதமம் எனப்படும்.

1. உத்தமம்: நூல் சுற்றப்பட்டுள்ள இடைவெளி எள் அளவு இருப்பது.
2. மத்திமம்: நெல் இடைவெளி உள்ள சுற்றாக இருப்பது.
3. அதமம்: யானையின்கண் இடைவெளி உள்ள சுற்றாக இருப்பது.

**அஷ்டபந்தன திரவியங்கள்**

(1) சுக்கான்கல், (2) குங்கிலியம், (3) கொம்பரக்கு, (4) தேன்மெழுகு, (5) நற்காவி, (6) செம்பஞ்சு, (7) சாதிலிங்கம், (8) எருமைவெண்ணெய்.

**கணபதிக்கு உரிய சிறப்பு ஹோம திரவியங்கள்**

அருகு, மோதகம், அவல், நெற்பொரி, சத்துமா, கருப்பங்கழி, தேங்காய்கீற்று, சுத்தமான எள், வாழைப்பழம், இவைகளில் தேன், நெய், பால், வெல்லம் இவைகளைச் சேர்த்து ஹோமம் செய்யவேண்டும்.

**தீர்த்தங்கள்**

திருக்குடங்களில் சேர்க்கப்படும் தீர்த்தங்கள் - கங்கை, யமுனை, கிருஷ்ணா, கோதாவரி, நர்மதை, நர்மதை, சிந்து, காவேரி, சரசுவதி, குமரி, பயோஷ்ணி, சரயு மற்றும் அவ்வத் தலங்களில் பிரதானமாக விளங்கும் தீர்த்தத்தைச் சேர்த்துக் கொள்ளவேண்டும்.

**வாசனைப் பொருள்கள்**

கொட்டம், துருக்கம், தகரம், அகில், சந்தனம்.

**எட்டுவகைத் தானியங்கள்**

நெல், கம்பு, வரகு, தினை, சாமை, சோளம், துவரை, மூங்கில்நெல்

பஞ்சகுண்ட விபரம்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1. | கிழக்கில் | - | ஆஹவனியாக்னி | - | சதுரகுண்டம் |
| 2. | தெற்கில் | - | தக்ஷினாக்னி | - | அர்த்தசந்திர குண்டம் |
| 3. | மேற்கில் | - | கார்ஹபத்யம் | - | விருத்தகுண்டம் |
| 4. | வடக்கில் | - | கேவலாக்னி | - | பத்மகுண்டம் |
| 5. | வடகிழக்கில் | - | சிவாக்னி | - | விருத்தம் அல்லது சதுர குண்டம் |

**நவகுண்ட விபரம்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | கிழக்கு | - | ஆஹவனியாக்னி | - | சதுரகுண்டம் |
| 2. | தென்கிழக்கு | - | விருத்தாக்னி | - | யோனிகுண்டம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 3. | தெற்கு | - தஷிணாக்னி | - | அர்த்தசந்திரகுண்டம் |
| 4. | தென்மேற்கு | - யௌவனாக்னி | - | திரிகோணகுண்டம் |
| 5. | மேற்கு | - கார்ஹபத்யாக்னி | - | விருத்தகுண்டம் |
| 6. | வடமேற்கு | - பாலாக்னி | - | அறுகோணகுண்டம் |
| 7. | வடக்கு | - கேவலாக்னி | - | பத்மகுண்டம் |
| 8. | வடகிழக்கு | - சாமான்யாக்னி | - | எண்கோண குண்டம் |
| 9. | ஈசான்யம் | - சிவாக்னி | - | விருத்தகுண்டம் |

**ஸ்நபனங்களின் எண்ணிக்கை (கும்பங்கள்)**

1. நவகலச ஸ்நபனம்
2. சப்த தச கலசஸ்நபனம்
3. பஞ்சவிம்சதி கலச ஸ்நபனம்
4. ஏகோநபபஞ்சாசத் கலச ஸ்நபனம்
5. ஏகாசீதி கலச ஸ்நபனம்
6. நவோத்ரசத கலச ஸ்நபனம்
7. நவோத்ர சதுர்விசத கலச ஸ்நபனம்
8. நவோத்ர சதுர்சத கலசஸ்நபனம்
9. நவோத்ர சகஸ்ர கலச ஸ்நபனம்
10. சகஸ்ர சங்க மகா ஸ்நபனம்

**உதக திரவியங்கள்**

1. ரத்தினோதகம்
2. லோகோதகம்
3. தாதூதகம்
4. பீஜோதகம்
5. சுத்தோதகம்
6. மிருதூதகம்
7. மார்ஜன உதகம்
8. பத்திரோதகம்
9. பரிமார்ஜன உதகம்
10. புஷ்போதகம்
11. மான்யோதகம்
12. அஸ்திரோதகம்
13. பலோதகம்
14. காஷாயோதகம்
15. ஆர்கோதகம்
16. காந்தோதகம்
17. மூலதோயம்
18. சாந்தியுதோகம்
19 புஷ்கரோதகம்
20. கோதுமை
21. குளச்செந்நெல்
22. சந்தானாதித்தைலம்
23. நெல்லிமுள்ளி
24. மஞ்சள்மா

**ஆசனம்**

| | | | |
|---|---|---|---|
| 1. | பிருதுவி தத்துவம் | - | கூர்மாசனமும், |
| 2. | உபவேதிகை | - | அனந்தாசனமும், |
| 3. | நெல் | - | யோகாசனமும், |
| 4. | அரிசி | - | பதுமாசானமும், |
| 5. | எள் | - | விமலாசனமும், |
| 6. | நெல் மற்றும் மலர் | - | சத்தியாசனமுமாகப் |

பிருதுவி முதற் குடிலையீறாகிய 36 தத்துவங்களும் பஞ்சாசனமாக அமைந்துள்ளன.

**மந்திர வகைகள் (பொது)**

1. மூலமந்திரம்
2. பீஜ மந்திரம்
3. பஞ்சமந்திரம்
4. சடங்க மந்திரம்
5. சம்ஹிதா மந்திரம்
36. பஞ்ச தசாக்கரி மந்திரம்
37. சோடசாஷரி மந்திரம்
38. தடைமந்திரம்
39. விடைமந்திரம்
40. பிராசாத மந்திரம்

| | | | |
|---|---|---|---|
| 6. | பதமந்திரம் | 41. | உருத்திர மந்திரம் |
| 7. | மாலாமந்திரம் | 42. | சூக்த மந்திரம் |
| 8. | சம்மேளன மந்திரம் | 43. | ஆயுள் மந்திரம் |
| 9. | காயத்ரி மந்திரம் | 44. | இருதய மந்திரம் |
| 10. | அசபா மந்திரம் | 45. | கவச மந்திரம் |
| 11. | பிராணபிரதிட்டா மந்திரம் | 46. | நியாச மந்திரம் |
| 12. | மாத்ருகா மந்திரம் | 47. | துதி மந்திரம் |
| 13. | மோன மந்திரம் | 48. | உபதேச மந்திரம் |
| 14. | சாத்யமந்திரம் | 49. | தாரக மந்திரம் |
| 15. | நாமமந்திரம் | 50. | ஜெபசமர்ப்பணமந்திரம் |
| 16. | பிரயோகமந்திரம் | 51. | நீலகண்டம் |
| 17. | அத்திர மந்திரம் | 52. | மிருத்யுஞ்சயம் |
| 18. | விஞ்சனமந்திரம் | 53. | தட்சிணாமூர்த்தி |
| 19. | பசிநீக்கு மந்திரம் | 54. | சரபம் |
| 20. | விண்ணியக்க மந்திரம் | 55. | வீரபத்ரம் |
| 21. | வேற்றுரு மந்திரம் | 56. | விநாயகம் |
| 22. | துயில் மந்திரம் | 57. | சண்முகம் |
| 23. | திரஸ்கரிணி மந்திரம் | 58. | பைரவம் |
| 24. | சட்கர் மந்திரம் | 59. | நாரசிங்கம் |
| 25. | அஷ்டகர்ம மந்திரம் | 60. | நவக்கிரகம் |
| 26. | பஞ்சகிருத்ய மந்திரம் | 61. | வாலை |
| 27. | அகமருடண மந்திரம் | 62. | புவனை |
| 28. | ஏகாஷர மந்திரம் | 63. | திரிபுரை |
| 29. | திரியஷரி மந்திரம் | 64. | துர்க்கை |
| 30. | பஞ்சாஷர மந்திரம் | 65. | அசுவாருடி |
| 31. | சடாஷர மந்திரம் | 66. | சப்தமாதா |
| 32. | அஷ்டஷர மந்திரம் | 67. | முப்பத்து முக்கோடி தேவர்கள் |
| 33. | நவாக்கரி மந்திரம் | 68. | பதிணெண் கணம் |
| 34. | தசாஷர மந்திரம் | 69. | யோகினியர் |
| 35. | துவாதச நாம மந்திரம் | 70. | காலக்கடவுள் |

சப்தகோடி (முடிவு) மகா மந்திரங்களின் விளக்கம்

***1.நம:***

வணக்கம், தம்பனம் - நிலைநிறுத்தல். இறைத் திருவருள் தன்னில் நிலைக்க வேண்டல். இது மூல மந்திரங்களின் முடிவில் வைக்கப்படும்.

***2.ஸ்வாஹா***

இது பெரும்பாலும் ஓமித்தலில் பயன்படுகிறது. ஒரு மந்திரத்தின் உபாசனா தேவதைக்கு ஓமத்தில் அளிக்கப்படும் பொருள் கொண்டு அத்தேவதை திருப்தியுற வேண்டும் எனவேண்டுதல் ஆகும்.

***3.வஷட***

இதன் மூலம் நமது விளைவு எதையும் தன் வயப்படுத்தல் (வசியம்) என்பது உணர்த்தப்படுகிறது.

*4. வௌஷட்*

இது நமது விருப்பம் எப்பொருளையும் தன்னருகாமையில் ஈர்த்துக்கொள்ளல் (ஆகர்ஷணம்) ஆகும்.

*5. ஸ்வதா*

இது எரியிலிடாது தேவர்கட்கும், இருடிகட்கும், முனிவர்க்கும், பிதிரர்கட்கும், கணங்கட்கும் உலகிலுள்ள ஆன்ம கோடிகட்கும் அளிக்கப்படும் பொருள்கள் அவ்வப்ரிரிவினர்க்கு மகிழ்வு (துஷ்டி) அளிக்க வேண்டுதலாம்.

*6. ஹூம்*

இது மந்திர/அஸ்திர தேவதைகள் தன் பகைவரை அச்சுறுத்தி அவர்களைத் தனக்குப் பணிய வைப்பதை வேண்டுவதாம்.

*7. பட்*

ஏவிய காரியத்தை உடன் முடிக்க வேண்டுதல் (விஜர்ஜனம்) இதன் குறிக்கோள் ஆகும். (குறிப்பு: பெரும்பாலும் இவையிரண்டையும் கூட்டி ஹூம்பட் என்றே பயன்படுத்துவர்.

*8. ஹை ஹை*

இதன் பயன் தன் பகைவன் முற்றிலும் செயலற்ற நிலை (மரணம்) பெற உந்துவதாகும்.

இவ்வாறு இக்கோடி மந்திரங்களை தனித்தனியாகவும் இரண்டு அல்லது மூன்றினைக் கூட்டியும் பயன்படுத்துவது மந்திர சாஸ்திரத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

**யாகசாலைக்குரிய திரவியங்கள் (பொது)**

| | | |
|---|---|---|
| மஞ்சள்பொடி | கொள்ளு | சர்க்கரை |
| திரவியப்பொடி | எள் | கற்கண்டு |
| மாப்பொடி | அகில் | காறாகருணை |
| குங்குமம் | முகில் | சேமங்கிழங்கு |
| சந்தனம் | தேவதாரு | மலைப்பழம் |
| புஷ்பம் | சந்தணக்கட்டை | அன்னாசிப்பழம் |
| நல்லெண்ணெய் | கோரைக்கிழங்கு | நாவல் |
| கடலைஎண்ணெய் | பூலாங்கிழங்கு | பம்பிளிமாஸ் |
| பசுநெய் | செண்பகமொட்டு | பேயன்பழம் |
| பசும்பால் | ரோஜாமொட்டு | ரஸ்தாளிப்பழம் |
| பசுந்தயிர் | வலம்புரி | ஆரஞ்சு |
| எலுமிச்சம்பழம் | இடம்புரி | சாத்துக்குடி |
| நாரத்தம்பழம் | கஸ்தூரிமஞ்சள் | தம்பரத்தம்பழம் |
| பூவன்பழம் | விரளிமஞ்சள் | வில்வப்பழம் |
| வெற்றிலை | தாமைக்கிழங்கு | விளாம்பழம் |
| பாக்கு | தாமரைக்காய் | கொடிமுந்திரிப்பழம் |
| சீவல் | சுக்கு | கரும்பு |
| சூடம் | அரிசிதிப்பிலி | பலாப்பழம் |
| பத்தி | சித்திரத்தை | மாம்பழம் |
| சாம்பிராணி | வெள்ளை மிளகு | கருப்பஞ்சாறு |

குங்குமப்பூ
பச்சைக்கற்பூரம்
ஏலக்காய்
கிராம்பு
பன்னீர்
ஜலதிரவியம்
தேங்காய்
இளநீர்
வாழை இலை
பச்சை அரிசி
தொன்னை
வாழைக்காய்
மூங்கில் தட்டு
விசிறி
உளுந்து
பயிறு
கடுகு
பிள்ளைப்பூண்டு
கடலை
கோதுமை
மொச்சை
தோரணங்கள்
திரிநூல்கள்
சூரியக்காந்தக்கண்ணாடி
மண்மடக்குகள்
குடங்கள்
சொம்புகள்
அர்க்கிய பாத்திரங்கள்
பஞ்சபாத்திரங்கள்
உத்தரணி
அட்சரத்தகடு
மாலைகள்
உதிரிப்பூக்கள்
வில்வப்பத்திரம்
விளாபத்திரம்
நொச்சிப் பத்திரம்
மாவிளங்கு பத்திரம்
கிளுவை பத்திரம்
பணிசெட்டு வகையறா
வெட்டிவேர்
மருக்கொழுந்து
அருகு
தாழம்பூ
நவக்கிரக வஸ்திரங்கள்
சிவப்புத் துண்டு
வெள்ளைத் துண்டு
சிவப்புத் துண்டு
மஞ்சள் துண்டு
தங்கநிற மஞ்சள் துண்டு

கிராம்பு
வெண்கடுகு
யவைநெல்
சாமைநெல்
மூங்கில் அரிசி
தினை
ஜடாமஞ்சு
மட்டிப்பால்
நெரிஅரிசிபால்
அலகுபாக்கு
வால்மிளகு
ஜாதிக்காய்
ஜாதிபத்திரி
புனுகு
ஜவ்வாது
கச்சோலம்
கஸ்தூரி
கோரோசனை
அரகஜா
சந்தானதிதைலம்
தேன்
அவிசுபாத்திரம்
(வெங்கலப்பானை)
ரஷாபந்தனக்காப்பு
பொன்தகடு அச்சரம்
கூர்மாதி பிரதிமைகள்
ஸ்வர்ண பங்கஜம்
நீலோத்பலம்
பவித்ரம்
பொன்ஊசிக்கம்பி
வெள்ளிக்கம்பி

**தனலட்சுமி பூஜை**
**வகையறா**

ரவிக்கைத்துண்டு- சிகப்பு

சீப்பு

குங்குமச்சிமிழ்
பழங்கள்
சந்தனம்
தங்கக்காசு

**பூஜைகள்**

அனுக்ஞை
தேவதா அனுக்ஞை
விக்னேஸ்வரபூசை

விளாமுச்சிவேர்
திராட்சை
பேரிச்சம்பழம்
கடுக்காய்
மாசிக்காய்
நெல்லிமுள்ளி
அச்சுவெல்லம்
கருப்பட்டி
பனைவெல்லம்
அவல்
நெற்பொரி
முப்புரி நூல்கண்டு
தர்ப்பை
ஜாதிலிங்கம்
கங்காதீர்த்தம் முதலியன
நெல்
நீவாரம்
முத்தகாச
பச்சைநெல் உமி
உருண்டைவெல்லம்
மாவிலை
நவக்கிரக யாகம்
ஸ்வர்ணபுஷ்பம்
ஸ்ருக்
ஸ்ருவம்
யாத்ராதானம்
அபிஷேக தட்சணை
ஆசாரிய சம்பாவணை
அஷ்டபந்தன மருந்து
சுவர்ணபந்தனம்
ரஜதபந்தனம்
மருந்துக்கு பசு வெண்ணெய்
யாகசாலை அமைத்தல்

**அஷ்டமீர்திகை அபிஷேகம்**

சமுத்திரமண்

காவேரி மண்
யானையடி மண்
மண்புற்று மண்
தர்ப்பை மூலமண்
நண்டுவளை மண்
காளைமாட்டுக் குளம்பு மண்

புண்ணிய ஸ்தல மண்
கூர்மாஸனப்பலகை (பிரதானம்)

| | | |
|---|---|---|
| வெள்ளைத் துண்டு | புண்ணியாகவாசனம் | ஆசனபலகைகள் |
| கறுப்புத் துண்டு | பஞ்சகவ்யம் | அஷ்டமங்கலப் பலகைகள் |
| நீலநிறத் துண்டு | வாஸ்துசாந்தி | தசாயுத பலகைகள் |
| சித்ரவர்ணத் துண்டு | மிருகத்சங்கிரஹனம் | தோரணவாயில் |
| கணபதிக்கு - துண்டு | அங்குரார்ப்பனம் | தீபஸ்தம்பம் (விளக்கு) |
| கும்பவஸ்திரம் (சுவாமி) | ரஷாபந்தனம் | முக்காலி |
| பூர்ணாஹுதிக்கு பட்டு | பிரசன்னாபிஷேகம் | ஸ்நான வேதிகை |
| தேங்காய் உரித்தது | கும்பஸ்தாபனம் | மண்தோண்டிகள் |
| பூர்ணபலம் | பிரதான கலசம் | கடத்திற்கு முப்புரி |
| கும்பவஸ்திரம் (அம்பாள்) | வர்தினி கலசம் | நூற்கண்டுகள் |
| சுவாமிவேதிகை (வஸ்திரம்) | ஸப்தவிம்சதி கும்பம் | கலர் நூல் கண்டுகள் |
| ஆசார்ய வஸ்திரம் | அஷ்டவித்யேஸ்வர கும்பம் | மண் மடக்குகள் |
| வாஸ்து சாந்திவஸ்திரம் | வினாயகர் யாகம் | பாலிகைகள் - 12 |
| பரிசாரக வஸ்திரம் | வர்த்தினி பரிவாரக கலசம் | |

| **சமித்துகள்** | **வாஸ்து சாந்திக்கு** |
|---|---|
| மா | மண்வெட்டி |
| பலா | மூங்கில் தட்டுகள் |
| அரசு | தாம்பாளங்கள் |
| புரசு | வலம்புரிச்சங்கு |
| அத்தி | வேஷ்டி துண்டு |
| வில்வம் | சுவர்ணபுஷ்பம் |
| வன்னி | சோடச சாமான்கள் |
| நாயுருவி | வேத கோஷ்டி |
| பாதிரி | உபநிடதகோஷ்டி |
| நெல்லி | ஆகம கோஷ்டி |
| மூங்கில் | புராண கோஷ்டி |
| அறுகு | சாஸ்திர கோஷ்டி |
| தர்ப்பை | திருமுறை கோஷ்டி |
| தர்ப்பைக்கயிறு | கோஷ்டிகளுக்கு வஸ்திரம் |
| மோது | மற்றும் தட்சணைகள் |
| பூசணிக்காய் | |

**விசேஷ யாக திரவியங்கள் - பலன்கள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பொரசு | - | ப்ரஜாவிருத்தி | எள்ளன்னம் | - | பாபநாசம் |
| கருங்காலி | - | விஜயம் | மிளகன்னம் | - | சத்ருநாசம் |
| அரசு | - | தனாதிக்யம் | தயிரன்னம் | - | ஆரோக்கியம் |
| இத்தி (இச்சில்) | - | சௌக்யம் | பருப்பன்னம் | - | வித்யாலாபம் |
| அத்தி | - | போகம் | தேனன்னம் | - | சந்தோஷம் |
| சந்தனம் | - | சாந்தி | கடுகு அன்னம் | - | பயநாசம் |
| ஆல் | - | ஆரோக்கியம் | தேங்காய் சாதம் | - | புஷ்டி |
| வன்னி | - | வசியம் | எலுமிச்சசைசாதம் | - | வசியம் |
| வில்வம் | - | இஷ்டசித்தி | பாயசான்னம் | - | திருப்தி |
| வெள்ளெருக்கு | - | ரோகநாசம் | உளுந்தன்னம் | - | க்ரோதசமனம் |
| மா | - | ஐஸ்வர்யம் | உளுந்து | - | பசுவிருத்தி |
| பாதிரி | - | சத்ருக்ஷயம் | நெல்பொரி | - | சாயுஜ்யம் |
| மூங்கில் | - | சாந்தி | சத்துமாவு | - | |

| | | |
|---|---|---|
| பலா | - | கீர்த்தி |
| அறுகம்புல் | - | தரித்ரநாசம் |
| தர்ப்பை | - | ஞானசித்தி |
| நெய் | - | ரோகநாசம் |
| ஹவிஸ் | - | |
| (சுத்தான்னம்) | - | சுபவிருத்தி |
| பாலன்னம் | - | ஆயுள் |
| விளாம்பழம் | - | புத்ரலாபம் |
| மாதுளம்பழம் | - | புத்ரலாபம் |
| பேரிச்சம்பழம் | - | வலிமை |
| நாரத்தம்பழம் | - | சோகநாசம் |
| எலுமிச்சம்பழம் | - | வசியம் |
| திராட்சைப்பழம் | - | இஷ்டசித்தி |
| பயறு | - | ஆயுள் |
| கொண்டகடலை | - | சிரேயசு |
| கோதுமை | - | ஸாதிகாரம் |
| குளச்சல்நெல் | - | வீர்யம் |
| யவைநெல் | - | இராஜவசியம் |
| மூங்கில் அரிசி | - | தேக சாந்தி |
| கொள்ளு | - | தேகபலம் |
| கருமொச்சை | - | வம்சவிருத்தி |
| துவரை | - | வீர்யம் |
| தினை | - | இஷடசித்தி |
| அவரை | - | பந்துலாபம் |
| நெல் | - | சுபிட்சம் |
| பொற்சம்பாநெல் | - | |
| செம்பாளை நெல் | - | |
| வால் நெல் | - | |
| வெள்ளை சம்பா நெல் | | |
| சிவப்பு சம்பா நெல்- | | |
| சிவப்பு சம்பா நெல் | | |
| புனுகுசம்பா நெல் . | | |
| பெருஞ்சம்பா நெல் | | |
| செம்பவளசம்பா நெல் | | |
| பன்றி நெல் | | |
| கூர் நெல் | | |
| முத்துசம்பா நெல் | | |
| தேங்காய் | | |
| வெள்ளைஎள் | | |
| சாமை | - | மழை |
| வரகு | - | மலநாசம் |
| கரும்பு | - | பிராணிசுகம் |
| வெள்ளரிக்காய் | - | விருத்தி |
| தேன் | - | சந்தோஷம் |
| சர்க்கரை | - | சத்ருநாசம் |
| அவல் | - | இஷ்டசித்தி |
| லட்டுகம் (இட்லி) | - | சுபிட்சம் |

| | | |
|---|---|---|
| (ரிபுநாகம்) | - | கடன்நீக்கம் |
| பால் | - | சௌபாக்கியம் |
| தயிர் | - | சுகம் |
| வெல்லம் | - | செல்வப்பேறு |
| வாழைப்பழம் | - | துக்கநாசம் |
| மாம்பழம் | - | ரோகநிவர்த்தி |
| பலாப்பழம் | - | சுபம் |
| மாஷாபூகம் | - | யட்சு |
| அப்பம் | - | சந்தோஷம் |
| நீர்க்கொழுக் | | |
| கட்டை | - | இஷ்டசித்தி |
| திலாபூபம் | | |
| (எள்கொழுக்கட்டை) | - | பாபநாசம் |
| திலகண்டம் | | |
| (எள் உருண்டை) | - | ஆயுள் |
| மோதகம் | - | ஆனந்தம் |
| அகில் | - | வலிமை |
| தேவதாரு | - | சுகம் |
| வெண் | | |
| மொச்சை | - | சௌந்தர்யம் |
| கிழங்குகள் | - | பூமிலாபம் |
| வெட்டிவேர் | - | லாபம் |
| விலாமிச்சைவேர் | - | மோகம் |
| மருக்கொழுந்து | - | விருத்தி |
| குங்கிலியம் | - | சாதுர்யம் |
| சிற்றேனம் | - | ப்ரீதி |
| கிராம்பு | - | பயநாசம் |
| ஜாதிக்காய் | - | விரோதசமனம் |
| ஜாதிபத்திரி | - | அனுகூலம் |
| பன்னீர் | - | பிரியம் |
| குங்குமப்பூ | - | ப்ரீதி |
| பச்சைக்கற்பூரம் | - | ப்ரீதி |
| சந்தனக்கட்டை | - | ப்ரீதி |
| கஸ்தூரி | - | ப்ரீதி |
| புனுகு | - | ப்ரீதி |
| கோரோஜனை | - | ப்ரீதி |
| செஞ்சந்தனம் | - | ப்ரீதி |
| தாமரை முதலான | | |
| புஷ்பங்கள் | - | செல்வம் |
| பத்திரங்கள் | | |
| (தளிர்கள்) | - | ஆரோக்கியம் |
| வில்வம் | - | பாபநாசம் |
| நீலோத்பலம் | - | அருள் |
| வாசனை | | |
| திரவியங்களுடன் | | |
| கூடிய தாம்பூலம் | | |
| | - | இஷ்டசித்தி |

## அபிஷேகப் பலன்

| | | |
|---|---|---|
| கந்த தைலம் | - | இன்பம் |
| மாப்பொடி | - | கடன்தீரும் |
| மஞ்சட்பொடி | - | அரசு வசியம் |
| நெல்லிப் பருப்புப் பொடி | - | பிணிநீக்கம் |
| திருமஞ்சனத் திரவியம் | - | பிணிநீக்கம் |
| பஞ்சகவ்யம் | - | சுத்தம், சகலபாப நீக்கம் |
| பஞ்சாமிர்தம் | - | முக்தி |
| பழ பஞ்சாமிர்தம் | - | முக்தி |
| பால் | - | ஆயுள் விருத்தி |
| தயிர் | - | ப்ரஜா விருத்தி (குழந்தைப்பேறு) |
| நெய், இளவெந்நீர் | - | முக்தி |
| தேன் | - | சுகம், சங்கீத குரல் வளம் |
| இளநீர் | - | இராஜபோகம் |
| சர்க்கரைச்சாறு | - | சத்ரு நாசம் |
| கரும்புச்சாறு | - | ஆரோக்கியம் |
| தமரத்தம்பழச்சாறு | - | மகிழ்ச்சி |
| எலுமிச்சம்பழச்சாறு | - | யமபயம் போக்கும் |
| நாரத்தம்பழச்சாறு | - | மந்திர சித்தி |
| கொழுஞ்சிப்பழச்சாறு | - | சோகம் போக்கும் |
| மாதுளம் பழச்சாறு | - | பகைமை அகற்றல் |
| அன்னாபிஷேகம் | - | விளைநிலங்கள் நலந்தரும் |
| வில்வோதகம் (வில்வம் கலந்த நீர்) | - | மகப்பேறு |
| குசோதகம் (தருப்பை கலந்த நீர்) | - | ஞானம் |
| பன்னீர் | - | குளிர்ச்சி |
| விபூதி | - | சகல ஐஸ்வர்யம் |
| ஸ்வர்ணோதகம் (தங்கம் கலந்த நீர்) | - | சகல சௌபாக்கியம் |
| ரத்னோதகம் (ரத்னம் கலந்த நீர்) | - | சகல சௌபாக்கியம் |
| சந்தனம் | - | அரசாட்சி, பெருஞ்செல்வம் |
| கோரோசனை | - | சகல ஆரோக்கியம் மிக்க புகழ் |
| சகஸ்ரதாரை | - | சகல ஆரோக்கியம் மிக்க புகழ் |
| ஜவ்வாது | - | சகல ஆரோக்கியம் மிக்க புகழ் |
| புனுகு | - | சகல ஆரோக்கியம் மிக்க புகழ் |
| பச்சை கற்பூரம் | - | சகல ஆரோக்கியம் மிக்க புகழ் |
| குங்குமப் பூ | - | சகல ஆரோக்கியம் மிக்க புகழ் |
| சங்காபிஷேகம் | - | சகல பாபாரிஷ்டம் |
| ஸ்நபன கும்பாபிஷேகம் | - | சித்த சுத்தியடைந்து சிவதரிசனம் |

ஒவ்வொரு அபிஷேகத்தின்பின் வடிகட்டிய சுத்த ஜலத்தால் அபிஷேகம் செய்ய பரமசாந்தம் உண்டாகும்.

**கும்பாபிஷேகம் தரிசித்து என்றும் இன்புறுக!**

**குருமூர்த்திகள் தரிசித்து குருவருள் பெற்று அமைக!**

# சைவ சமயம்

தேவார இசைமணி,
ஆர். சங்கரநாராயணண்
திருமருகல்

**முன்னுரை - சங்ககாலத்துச் சைவம்**

பிற்காலச் சோழர் அல்லது சோழப் பேரரசர் எனப்பட்டவர் ஏறத்தாழ 10-ஆம் நூற்றாண்டிலிருந்து 13-ஆம் நூற்றாண்டு வரை சிறப்புற்றிருந்த சோழராவர். அவர்கட்கு முன்னர் ஏறக்குறைய கி.பி.300 முதல் 900வரை தமிழகத்தில் பேரரசராக இருந்தவர் பல்லவர் என்பர்.அவர்கட்கு முற்பட்டதே சங்ககாலம் என்பது தமிழக வரலாற்றில் பொற்காலம் எனலாம். சேர, சோழ, பாண்டிய அரசர் தம்மாட்சி பெற்று விளங்கினர்.தம் தாய்மொழியாகிய தமிழைத் தம் உயிரெனக் கருதி வளர்த்தனர். இயல், இசை, கூத்தெனும் முத்தமிழையும் அவற்றில் வல்லலாரையும் போற்றிப் புகழ்ந்தனர்; தத்தம் சமயத்தில் அழுத்தமானபற்றுடன் இருந்தனர். ஆயினும் பிற சமயங்கள் நாட்டில் பரவ இடந்தந்தனர்; சமயச் சொற்போர்கள் நிகழ இடம் தந்து சிறந்த சமயத்தில் சேரப் பொதுமக்கட்கு உரிமையளித்தனர். எனினும் சங்ககாலத்தில் தமிழ் நாட்டுச் சமயங்களாக விளங்கியவை சைவ வைணவங்கள் என்று துணிந்து கூறலாம். அவற்றுள்ளும் சைவசமயமே முதற் படியில் இருந்தது என்பது,

நுதல் விழி நாட்டத் திறையோன் முதலாப்
பதிவாழ் சதுக்கத்துப் பூத மீறாக

என்று, பௌத்தசமய ஆசிரியராகிய சாத்தனார்கூற்றுக்கொண்டும், கோயில்களைக் குறிக்குமிடத்துச் சமணராகிய இளங்கோவடிகள்,

பிறவாயாக்கைப் பெரியோன் கோயிலும்

என்று கோயில் வரிசையில் முதற்கண் சிவபெருமான் திருக்கோயிலைக் கூறியிருத்தல் கொண்டும் நன்குணரலாம் சைவப் புலவர் ஒருவர் கூற்றைச் சான்றாகக் கொள்வதிலும் புறச் சமயத்தவரும் பெருங்காப்பிய ஆசிரியருமாகிய மேற்சொன்ன இருவர் கூற்றுக்களே சங்க காலத்துச் சைவச் சிறப்புக்குச் சிறந்த சான்றாகும்.

**பல்லவர் காலத்துச் சிறந்த சைவம்**

பல்லவர் முதற்கண் பௌத்தம், சமணம் ஆகிய சமயங்களில் மிக்க ஈடுபாடு கொண்டிருந்தனர். ஆயினும் கி.பி. 7-ஆம் நூற்றாண்டு முதல் சைவத்தை வளர்ப்பதிற் சிறந்து விளங்கினர். அப்பர் காலத்தவனான முதலாம் மகேந்திரவர்மன், சிவனை நினையாதவர் ஆறுமுறை நரகத்திற்குச் செல்வாராக! எனக் கல்வெட்டிற் பொறித்துச் சிவலிங்க வடிவில் அமைந்த மணிமுடி தரித்து நாடாண்ட முதலாம் பரமேற்வரவர்மன், அவன் திருமைந்தனும் பெரிய கற்றளியாகிய கயிலாசநாதர் கோயிலை எடுப்பித்தவனுமான இராசசிங்கன், திருவதிகைக் கோயிலுக்குச் சிறப்புச் செய்த இரண்டாம் பரமேசுவரன், மூன்றாம் நந்திவர்மனான கழற்சிங்கன் என்பவர் நாயன்மார்கள் காலத்துச் சைவ சமயத்தை வளர்க்கப் பேருதவி புரிந்தவராவர். இப் பல்லவர் காலத்து விளங்கிய நாயன்மார்கள் தொண்டை நாட்டிலும், சோழநாட்டிலும் சைவ சமயத்தை நன்கு வளர்த்தார்கள்; பிற சமயத்தவரைப் பலவகை வாதங்களில் வென்றார்கள். பல்லவர் காலச் சைவசமய நிலையை அவர்கள் காலத்துப் பட்டயங்கள், கல்வெட்டுகள், திருமுறை, இலக்கியம் முதலின கொண்டு நன்குணரலாம். பல்லவர்கள் காலத்துக் கோயில்கள் செங்கல், சுண்ணாம்பு, மரம், உலோகத் தகடுகள் இவற்றைக் கொண்டு அமைந்தவையேயாகும். அவை நாளடைவில் அழிந்துவிடும் என்று அஞ்சிப் பல்லவர்கள் அழியா நிலையில் மலைகளைக் குடைந்தும், ஒற்றைக் கற்களை மாற்றியும், கற்பாறைகளை உடைத்து ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கியும், மூவகைக் கோயில்களை அமைக்கத் தொடங்கினர். அவர்கள் காலத்தில் கோயில் ஆட்சி இருந்தது; கோயில்களில் ஓவியம், சிற்பம், நடனம், நாடகம், இசை முதலிய நாகரிகக் கலைகள் வளர்ச்சி பெற்றன. தேவரடியார் இருந்தனர்.

## சோழர் காலத்துச் சைவ சமயம்

**முதல் திருப்பணி:** பல்லவரை ஒடுக்கிச் சோழப் பெருநாட்டை அமைத்து ஆளத்தொடங்கிய முதற் பேரரசன் ஆதித்த சோழன் என்பவன். அவன் பாடல் பெற்ற கோயில்கள் என்றும் நிலைத்திருக்க வேண்டும் என்னும் நன்னோக்கம் கொண்டு அவற்றைக் கற்கோயில்களாக மாற்றத் தொடங்கினான். அவனுக்குப் பின்வந்த அரசர்களும், செம்பியன்மாதேவியார் போன்ற அரசமாதேவியரும், அரசாங்க உயர் அலுவலாளரும் ஆதித்தன் தொடங்கி விட்டதிருப்பணியைக் காலக் கணக்கில் செய்து முடித்தனர்.

**இரண்டாம் திருப்பணி:** சோழர்கள் வழிவழிச் சைவர் ஆதலின் கற்கோயில்களாக மாற்றிய பழைய கோயில்களில் பல்லவர் காலத்தில் இருந்த ஆட்சிமுறை முதலிய அனைத்தையும் விரிவாக்கினர்; கோயில்கட்குக் குறைவின்றி நிலங்களையும் ஆடைகளையும் அணிகளையும் வழங்கினர்; கோயில் தொடர்பான எல்லாவகைச் செலவுகளுக்கும் மானியங்களையும் மிகுதியாகக் கொடுத்து உதவினர்.

**மூன்றாம் திருப்பணி :** பாடல் பெற்ற கோயில்கள் கற்றளிகளாகவே மாறின; அவற்றின் நடைமுறைகட்குத் தேவையான நிலவருவாய் அளிக்கப்பட்டது. அடுத்துச் செய்யவேண்டுவது சமயப்பெரியார் செய்த தமிழ்தொண்டினைப் பாராட்டலேயன்றோ? அதற்காக அவர்கள் பெயர்களும், அவர்தம் நூல்களின் பெயர்களும் பல கிராமங்களுக்கு இடப்பட்டன. அவற்றுள் திருத்தொண்டத்தொகை நல்லூர் என்பது ஒன்று. சமய குரவாராகிய நாயன்மார் உருவச்சிலைகள், கோயில்களில் எழுந்தருளச்செய்யப்பெற்றன. அவற்றுக்கு பூசைகள், திருவிழாக்கள், நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பெற்றன. அத்தனை விழாக்களுள் சிறுத்தொண்ட நம்பி விழாவொன்று. கண்ணப்பர் கமுகந்தோப்பு என்றாற்போல நாயன்மார் பெயர்கள் தோப்புகட்கும் இடப்பட்டன எனின், அக்கால மக்களது சைவ சமயப் பற்றினை என்னென்பது! சோழர்கால மக்கள் நாயன்மார் பெயர்களைத் தம் மக்கட்கு இட்டு வழங்கினர். ஊதுகாளங்கள் முதலியவற்றின் மீது நாயன்மார் பற்றிய சிறப்பு நிகழ்ச்சிகள் சில பொறிக்கப்பட்டு இருந்தன. அவற்றுள் ஒன்று, பித்தனென்று பாடச்சொன்னான் என்று ஓது ஊதுகாளத்தின்மீது பொறிக்கப்பட்டிருந்ததாகும்.

**திருமுறைகள்:** இராசராச சோழற்கு முன்னரே பல கோயில்களில் திருப்பதிகங்கள் ஓதப்பெற்றன. இராசராசன் நம்பிகளைக் கொண்டு திருமுறைகளை ஒழுங்கு செய்வித்த பின்னர்த் திருப்பதிகங்கள் கோயில்கள் தோறும் ஓதப்பெற்று வந்தன என்பதை எண்ணிறந்த கோயிற் கல்வெட்டுகள் அறிவிக்கின்றன. பல பெரிய கோயில்களில் திருமுறை மண்டபங்கள் இருந்தன. திருமுறைகளைப் பாதுகாத்து வந்தவர் தமிழ் வீரகர் எனப்பட்டார். அவருக்கு நிலம் மானியமாக விடப்பட்டது. திருமுறைகள் செப்பேடுகளிலும் எழுதப்பெற்றன; இரண்டொரு கோயில் சுவர்களிலும்பொறிக்கப்பட்டன. திருமுறைகள் பிராமணர், தேவரடியார், குருடர் முதலிய அனைவராலும் திருக்கோயில்களில் ஓதப்பெற்றன. திருத்தவத்துறை எனப்பட்ட (இன்றைய லால்குடி)க் கோயிலில் பிராமணர் திருமுறை ஓதினர்; திருவொற்றியூர்த் திருத்தலத்தில் பதினாறு தேவரடியார்கள் திருப்பதிகம் விண்ணப்பம் செய்தருளினர்; திருவாமாத்தூர்க் கோயிலில் குருடர் இருந்து திருமுறை ஓதினர் என்று அவ்வூர்க் கோயிலிலுள்ள கல்வெட்டுக் கூறுகிறது. இவை அனைத்திற்கும் மேலாகத் திருமுறைகள் கோயில் தோறும் விண்ணப்பம் செய்யப்படுதலைக் கண்காணிக்கவும், அவற்றைப் பாதுகாக்கவும் தேவார நாயகம் என்ற அரசாங்க உயர் அலுவலாளர் ஒருவர் இருந்தனர் என்பது இராசேந்திர சோழன் காலத்துக் கல்வெட்டு ஒன்றினால் தெரிகிறது.

**புதிய கற்றளிகள்:** பல்லவரைப் பின்பற்றி ஆதித்த சோழன் சிறிய கற்றளிகளைத் தோற்றுவித்தான். ஆயின் காஞ்சி கயிலாசநாதர் கோயிலையும், மாமல்லபுரத்துக் கடற்கரைக் கோயிலையும் பின்பற்றி இராசராச சோழன் மிகப்பெரிய அளவில் அரும்பாடுபட்டுத் தஞ்சை இராசராசேச்சுரத்தைக் கட்டுவித்தான். அவனைப் பின்பற்றி அவன் செல்வ மைந்தனான இராசேந்திர சோழன் கங்கை கொண்ட சோழபுரத்தில் கங்கை கொண்ட சோளேசுவரம் கட்டுவித்தான். இரண்டாம் இராசராசன் இராசராசபுரத்து (தாராசுரத்து)க் கோயிலை மிக்க அற்புதமாக அமைத்தான்; மூன்றாம் குலோத்துங்கன் திருபுவனம் சிவன்கோயிலைத் தோற்றுவித்தான். இப்புதிய கற்கோயில்கள் சோழர்காலத்துக் கட்டிடக்கலை நுட்பங்களை உலகு அறியச்செய்வன. தமிழர் நாகரிகத்திற்கு மணிமகுடமாக இலங்குவன; அக்காலச் சைவம் நாட்டில் பெற்றிருந்த ஒப்புயர்வற்ற தன்மையை நன்கு விளக்குவன. இக்கோயில்களுக்குச் சோழ மன்னர்கள் அளித்த நிலங்களும் பிறவும் மிகப்பல. இவ்விவரங்களை இக்கோயில்களில் உள்ள கல்வெட்டுக்களே கூறுகின்றன.

**நாயன்மார் திருவுருவங்கள்:** சோழர் காலத்துப் பழைய - புதிய கோயில்களில் தோன்றிய சிற்பங்கள் மிக உயர்ந்த வேலைப்பாடு கொண்டவை. அச்சிற்பங்களில் பல, நாயன்மார்களையும் அவர்தம் வரலாற்று நிகழ்ச்சிகளையும் உணர்த்துபவை. திருக்கடம்பூர் இளங்கோயில் கருவறைப் புறச் சுவர்களில் இருந்த மாடங்களில் நாயன்மார் திருவுருவங்கள் தனித்தனியே எழுந்தருள்விக்கப்பட்டன. அவற்றினடியில் அவ்வந் நாயன்மார் திருப்பெயர் பொறிக்கப்பட்டு இருந்தது. கடம்பூர் பெரியகோயில் கருவறைப் புறச்சுவர்களில் நாயன்மார் வரலாறுகளில் சிறப்பாகக் குறிக்கத்தக்க நிகழ்ச்சிகள் பொறிக்கப்பட்டு உள்ளன. இத்தகைய நிகழ்ச்சிகளை எல்லாப் பழைய கோயில்களிலும் காணலாம். கங்கை கொண்ட சோழபுரத்தில் கண்ணையும் கருத்தையும் கவரதக்கதாகிய சண்டீசப்பதம் உணர்த்துகின்ற சிற்பம் பொறிக்கப்பட்டுள்ளது. பெரிய புராணத்திற்கு முன்னரே சில பெரிய கோயில்களில் அறுபத்துமூவர் உருவச்சிலைகள் வைக்கப்பெற்று வழிபாடு செய்யப்பெற்று வந்தன. பெரிய புராணத்திற்குப் பிறகு எல்லாக் கோயில்களிலும் உருவச்சிலைகள் வைக்கப்பெற்றன. இராசராசபுரத்து கருவறைப் புறச் சுவர்களில் அறுபத்து மூவர் வரலாற்று நிகழ்ச்சிகளைக் குறிக்கும் சிற்பங்கள் தோன்றி இன்றளவும் காட்சியளிக்கின்றன. கோயில்களில் நாயன்மார் செப்புப் படிமங்கள் எழுந்தருளுவிக்கப் பெற்றன. அவற்றினடியில் அவரவர் பெயர் அல்லது சிறப்பு அடைமொழியுடன் கூடிய பெயர் பொறிக்கப்பட்டது. தத்தா, நமரே காண் என்ற மிலாடு உடையார் படிமம் ஏ்னபது அவற்றில் ஒன்றாகும். இத்தகைய செப்புத் திருப்படிமங்கள் திருவிழாக்காலங்களில் இறைவன் திருமேனிக்கு முன்னர் உலாவில் தேர்களில் வைத்துக்கொண்டு செல்லப்பட்டன ஏ்னபது சோழர் காலத்துத் தில்லையுலா என்னும் நூலிலிருந்து தெள்ளிதின் அறியலாம்.

**மாளிகை மண்டபங்கள்:** சைவப் புராணங்கள் திருக்கோயில்களில் பாடி விரிக்கப்பட்டன. அவற்றுக்குரிய மாளிகைகள் மண்டபங்கள் என்பன கோயில்களில் இருந்தன. திரு நீடூர்க் கோயிலில் புராண நூல் விரிக்கும் புரிசை மாளிகை இருந்தது. சிவதருமோத்தரம் கோயில் மண்டபங்களில் படித்து விளக்கப்பட்டன உடைய நம்பி திருப்புராணம் (திருத்தொண்டர் புராணம்) ஒற்றியூர்க் கோயிலில் மகிழடி சேவையின் போது படிக்கப்பட்டது. கன்னிவனபுராணம், பூம்புலியூர் நாடகம் முதலிய நூல்கள் அக்காலத்துத் தோன்றி, மக்கட்குச் சைவப்பற்றை ஊட்டினர்.

**ஓவியங்கள்:** நாயன்மார் வரலாற்று நிகழ்ச்சிகள் கோயில் சுவர்கள்மீது ஓவியங்களாகத் தீட்டப்பெற்றிருந்தன. சான்றாகத் தஞ்சைப் பெரிய கோயில் கருவறைப் புறச்சுவர் ஓவியங்களைக் காணலாம்.அவை இராசராசன் கால்தனவாகலாம். சுந்தரர் திருமணம், தடுத்தாட்கொள்ளல், சுந்தரர், சேரமான் கயிலை செல்லல் என்னும் நிகழ்ச்சிகள் மிகச் சிறந்த முறையில் ஓவியங்களாகத் தீட்டப்பட்டுள்ளன. அவை சமய உணர்ச்சியை ஊட்டுவதுடன், சோழர்கால ஆடை, அணிகள், மயிர்முடிப்பு. இசைக்கருவிகள் முதலியவற்றை நமக்கு உணர்த்தலேயன்றிச் சோழர்கால ஓவியக்கலைச் சிறப்பையும் உலகறியச் செய்வனவாகும்.

**முடிவுரை**

தமிழர் கட்டிடக்கலையில் உலகிற் சிறந்தவர்; சிற்ப- ஓவியக்கலைகளில் பண்பட்டவர் உயர்ந்த பண்பாட்டினர் என்று இன்று மேனாட்டார் பாராட்டுதற்கு அடிப்படையாக இருப்பவை சோழப் பேரரசர் அமைத்த திருக்கோயில்களே ஆகும். இங்ஙனம் தம் சமயத்தை வளர்த்ததோடு அன்றித் தம் வழித் தோன்றலாகிய நமக்கும் இன்றளவும் பெருமை அளிக்கப் பேருதவி செய்த அப்பெருமக்கட்கு நமது உளமார்ந்த நன்றி என்றும் உரியதன்றோ? வாழ்க! சோழப் பெருமன்னர்கள்!

**பொய்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த**
**நன்மை பயக்கும் எனின்.**
குற்றமற்ற நன்மையைப் பிறர்க்குத் தருமானால், பொய்யான சொற்களும், வாய்மை என்று கருதத்தக்க இடத்தைப் பெறுவனவாம்.

# கும்பாபிஷேகமென்னும் ..................பெருஞ்சாந்தி

ஆலயங்களில் நடைபெறும் கும்பாபிஷேகம் இரண்டு பிரிவுகளைக் கொண்டது. கலசங்களில் புனித நதிகளிலிருந்து கொண்டுவரப்பட்ட தீர்த்தங்களால் நிரப்பி, அக்கலசங்களை உரிய முறையில் அலங்காரம் செய்து, அந்த அந்த தெய்வங்களை அக்கலசங்களில் ஆவாஹனம் செய்வார்கள். அக்கலசங்களுக்கு பூஜைகள் – நிவேதனம் – தீபாராதனைகள் நிகழ்த்துவர். இது ஒரு பகுதி.

இதே முறையில் யாக குண்டங்களை நிர்மானித்து அந்தக் குண்டங்களில் உரிய தேவதைகளை அன்வாரம்பம் என்ற கிரியை மூலம் அக்நியில் வரவழைத்து உரியன மந்திரங்களால் ஹோமங்களைப் புரிவர். பூர்ணாகுதி முடிந்ததும் அக்னி குண்டத்தில் பிரசன்னமான தேவதைகளை உரிய கலசங்களில் ஸமாரோபனம் (ஏற்றிக்கொள்ளல்) செய்து அந்தக் கலசங்களிலுள்ள தீர்த்தங்களைக் கொண்டு இறைவனுக்கும் சலசங்களுக்கும் குடமுழுக்குச் செய்யப்படுகிறது. இவ்வாறு இரண்டு பிரிவுகளை ஆலயங்களில் நடைபெறும் யாகசாலைகளில் காணலாம்.

பொதுவாக பல்வேறு யாகங்கள் சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ளன. இந்த யாகங்களையும் இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். மனிதன் தனது விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்ள இயற்றப்படும் யாகங்கள் என்றும், வீடு பேற்றினைப் பெறுவதற்கும், உலக மக்கள் நலமாக இருக்கவும் இயற்றப்பெறும் யாகங்கள் என்றும் வகைப்படுத்தலாம்.

சொந்த நலம், அல்லது விருப்பங்களுக்காக இயற்றப்பெறும் யாகங்களில் இராஜசூயம், அச்வமேதம், புத்திரகாமேஷ்டி போன்ற யாகங்களை இதற்கு உதாரணமாகக் கொள்ளலாம்.

உலக மக்கள் நலம் பெறும் பொருட்டு செய்யப்படும் யாகங்களே சிவாலயங்களில் நிகழ்த்தப்படும் யாகங்களாகும். இவை நித்தியம் என்றும், ஏதேனும் ஒரு காரணம் பற்றி சிறப்பாகச் செய்வதை நைமித்திக யாகம் என்றும் கும்பாபிஷேக காலத்தில் இயற்றப்படும் யாகம், போகங்களையும், மோஷங்களையும் உலக மக்களுக்கு வழங்குவதால் குறிப்பாகவும் சிறப்பாகவும் மோஷத்தை அடைவதைக் குறித்தே இயற்றப்படுவதால் இதனை ஞான யாகம் என்பர். இதனை சிவயாகம் என்றும் கூறுவர். இத்தகைய யாகத்தின் பயன் ஆன்மாவை பந்த பாசங்களிலிருந்து நீக்கி பதியாகிய சிவத்துடன் சேர்ப்பதால் சிவயாகம் என்று கூறப்படுகிறது.

சிவாலயங்களில்குறிப்பாக கும்பாபிஷேகங்களில் இயற்றப்பெறும் யாகசாலையில் அமைக்கப்படும் குண்டங்களும் அவற்றின் தத்துவங்களும்:–

1. **திசை:-** கிழக்கு **திக்கு தேவர்கள்:-**இந்திரர் **குண்டம்:-** நாற்கோணம் **அக்னி:-** அஹவனீயம் **தத்துவம்:-** பிருதிவி – மண்
2. **திசை:-** தென்கிழக்கு **திக்கு தேவர்கள்:-**அக்னி **குண்டம்:-** அரசிலைக்கோணம் (யோனிகுண்டம்) **அக்னி:-** வீருத்தாக்னி **தத்துவம்:-** நியதிமாயா
3. **திசை:-** தெற்கு **திக்கு தேவர்கள்:-**யமன் **குண்டம்:-** அர்த்தசந்திரக்கோணம் (அரைவட்டம்) **அக்னி:-** தஷிணாக்னி **தத்துவம்:-** அப்பு – நீர்
4. **திசை:-** தென்மேற்கு **திக்கு தேவர்கள்:-**நிருதி **குண்டம்:-** முக்கோணம் **அக்னி:-** பௌவனாக்னி **தத்துவம்:-** தேயு – தீ
5. **திசை:-** மேற்கு **திக்கு தேவர்கள்:-**வருணன் **குண்டம்:-** விருத்தகுண்டம் **அக்னி:-** கார்ஹபத்தீயம் **தத்துவம்:-** ஆகாயம்
6. **திசை:-** வடமேற்கு **திக்கு தேவர்கள்:-**வாயு **குண்டம்:-** அறுகோணம் **அக்னி:-** பாலாக்னி **தத்துவம்:-** வாயு – காற்று
7. **திசை:-** வடக்கு **திக்கு தேவர்கள்:-**குபேரர் **குண்டம்:-** பத்மகுண்டம் **அக்னி:-** கேவலாக்னி **தத்துவம்:-** கலா (சூரியனைக்குறிக்கும்)
8. **திசை:-** வடகிழக்கு **திக்கு தேவர்கள்:-**ஈசானர் **குண்டம்:-** எண்கோணம் **அக்னி:-** ஸாமாதன்யாக்னி **தத்துவம்:-** காலம் (சந்திரனைக் குறிக்கும்)
9. **திசை:-** வடகிழக்கு திசைக்கும் கிழக்கு திசைக்கும் மத்தியில் **திக்கு தேவர்கள்:-.....** **குண்டம்:-** பிரதான குண்டம் **அக்னி:-** சிவாக்னி **தத்துவம்:-** சிவதத்துவம் (சிவத்தைக்குறிக்கும்)

ஆதலால் யாகசாலைமுப்பத்தாறு தத்துவங்களின் சொருபமான சிவபெருமானின் அட்டமூர்த்த வடிவமாகும். எட்டு திசைகளுக்கும் எட்டுவித அக்னியும் எல்லாவற்றுக்கும் மேலாக சிவாக்னியும் இதில் இடம் பெற்றிருப்பதால் யாகசாலையே சிவ ஸ்வருபமாக உருவகிக்கிப் பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| உடல் | – | தேவி |
| தலை | – | துரோணகலசம் |
| பாதம் | – | இரதம் |
| இடக்கை | – | நெய்பாத்திரம் |
| வலக்கை | – | ச்ருவம் |
| புலன்கள் | – | சபையினர் |
| ப்ரயாசை | – | மஹாபூதங்கள் |
| பல் மற்றும் உதடுகள் | – | சூக்தவாகங்கள் |
| நாக்கு | – | யுவாகம் |
| தயை | – | ஸ்மிருதி |
| ஓங்காரம் | – | யூபம் |
| ஆசை | – | ரஸனை |
| மனம் | – | ரஸம் |
| காமம் | – | பசு |
| உரோமம் | – | தருப்பை |
| புலன்கள் | – | யாகபாத்திரங்கள் |
| கர்மேந்திரியங்கள் | – | அவிசு |
| அனைத்தையும் தியாகம்செய்தல் | – | தக்ஷிணை |

இத்தகைய முறையில் சிவஸ்வருபமாக அமைக்கப்பெற்றுள்ள யாகத்திலிருந்து எழும் அக்னியும் சிவஸ்வருபமே. இந்த யாக குண்டலத்திலிருந்து எழும் புகை, வெப்பம், வேதவோசை, சிவனடியார்களின் சாஸ்திரவோசை, சிவாசாரியார் – சாதகர்கள் செய்யும் – சிவமந்திரக்கிரியை – பாவனைகளுடன் செய்யும் – செயல்களும், உத்தம மெய்யன்பர்களின் நல்ல எண்ணங்களும் சேர்ந்து எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் இறைவனது அருட்சக்தியைத் தூண்டி எழுப்பி கும்பத்தின் மேலும் –அதன் உள்ளிருக்கும் தீர்த்தங்களிலும் தெய்வீக சக்தியை உருவாக்குகிறது.

உலகியலில் நாம் பயன்படுத்தும் மின்சார சக்தியை கடத்தும் பொருட்கள் – கடத்தாப் பொருட்கள் என்று இரு வகைகளாக விஞ்ஞானிகள் வகைப்படுத்தியுள்ளனர். மின்சக்தியை பொன், செம்பு இரும்பு பொன்ற உலோக வகைகள் எளிதில் கடத்தும் . ரப்பர் மரம் போன்றவை மின்சக்தியை கடத்தப் பொருட்கள் என்பர் இவ்வாறே தெய்வீகம் என்ற மின்சக்தியை கடத்தும் பொருட்களாக உள்ளவைகள்: – தெளிந்த ஞானியர் உள்ளம் அவர்களது சுவாசம், விரல்கள், தருப்பை, மாவிலை ஆகியவை தெய்வீக அருள் மின்சக்தி எங்கும் நீக்கமற நிறைந்திருப்பினும், மேலே கூறிய பொருட்களின் வழியாகவே கடத்தும் தன்மையுள்ளன என்பது ஆன்மீக நூல்கிளில் காணப்படும் கருத்து இவற்றின் வழியாகவே மந்திரங்களாலும், யாகங்கலாலும் செய்யப்படும் கிரியைகளாலும் தூண்டிவிடப்பட்ட ஆன்மீக – மின்சக்தியே சிவகலைகளின் சக்தி. இந்த சக்தியை கடத்தும் பொருட்களாக தருப்பை, மாவிலை போன்ற சாதனங்களின் வழியாக கும்பத்திலுள்ள புனித நீரில் ஏற்றி, அதிலிருந்து சிவசக்தியை ஆலயங்களிலுள்ள கும்பங்களில் மற்றும் அங்குள்ள விக்கிரகங்களில் அபிஷேகம் செய்தலே கும்பாபிஷேகம் என்னும் பெருஞ்சாந்தியாகும்.

**கும்பாபிஷேகம் என்னும் பெருஞ்சாந்தியின் பயன்**

நாம் தெரிந்தோ – தெரியாமலோ அன்றாடம் பல தவறுகளைச் செய்கிறோம். மனம் – வாக்கு – காயம்(மனம் – சொல் – உடல்) ஆகியவற்றால் செய்யும் தீமைகளுக்கு சாந்தி – சாந்தி ராயணம் கிரகரம் முதலிய பிராயச்சிதம் செய்து கொள்வது ஒரு வழி. மற்றது செய்த தீவினைகளின் தீர்வைக் குறித்து அனுட்டிக்கும் பிராயச்சித்தமாக மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகியவற்றைத் தரிசித்தல், இதில் ஏதேனும் கைங்கரியம் எனப்படும் திருப்பணி செய்தல் ஆகியவைகளே தீர்வைகளாகும். நாம் செய்த தீவினைகளுக்கு நாம் செய்யும் நல்வினைகளே தீர்வு. இக்கருத்தை சிவப்பிரகாசம் என்னும் நூல் விளக்குகிறது.

உற்ற தொழி னினிவுரையி லிருவினையு முளவா
மொன் றொன்றா லழியாதா ணொழியா துன்னின்
மற்றிவற்றி னொரு வினைக்கோர் விளையால் வீடு
வைதிகசை வம்பகரு மரபி னாற்றப்
பற்றியது கழியுமிது விலையா லேற்கும்
பான்மையுமாம் பண்ணாது பலிக்கு முன்னஞ்
சொற்றருநூல் வழியின்வரின் மிகுதி சோருஞ்
சேராதங் கதுமேலைத் தொடங்கி யாமே

என்கிறது. தீவினைகளுக்கெல்லாம் தலையாயது சிவ அபராதம், நாள்தொறும் சிவாலயம் சென்று சிவதரிசனம் செய்ய வெண்டும். இது இன்றைய காலகட்டத்தில் நம்மால் இதைச் செய்ய முடிவதில்லை. அப்படியே சென்றாலும் அமைதியற்ற மனநிலையால் ஆலயத்தில் தெரிந்தோ, தெரியாமலோ சில தவறுகள் செய்கிறோம். இதுகூட சிவ அபராதமே இவற்றை நீக்கிக் கொள்ள சில

பிராயச்சித்தங்களை – சாந்திகளை செய்து கொள்ளவும் நமது முன்னோர்கள் வழிகாட்டியுள்ளனர்.


ஒருவன், தனது வாழ்க்கையில் தன்னையறியாமல் தினந்தோறும் செய்த தீவினைகள் நாடேறும் செய்யும் சிவாலயத் தரிசனத்தால் நீங்கும். நாள்தோறும் சிவ தரிசனம் செய்யாமையால் வரும் தீவினைகள் உற்சவ தரிசனத்தால் தீரும். அந்த உற்சவ தரிசனத்தில் நேரும் பிழைகளும் தீவினைகளும் மகா கும்பாபிஷேக தரிசனத்தால் நீங்கும்.

ஆகையால்தான் எவ்வகையாலும் தீராத சிவாபராதங்களைத் தீர்க்கும் கும்பாபிஷேகத்தைப் பெருஞ்சாந்தி என்று சைவ நூல் உணர்ந்தோர் கூறுவர். இதனை திருஞான சம்பந்த சுவாமிகள் தமது தமிழ் முறையில் கும்பாபிஷேகத்தைப் பெருஞ்சாந்தியென்று திருவாய் மலர்ந்து அருளியுள்ளார்.

உரிஞ்சாய வாழ்க்கை யமணுடையைப் போக்கும்
இருஞ்சாக்கி யர்களெடுத்து ரைப்ப நாட்டில்
கருஞ்சோலை சூழ்ந்த கபாலீச்சர மமர்ந்தான்
பெருஞ்சாந்தி காணாதே போதியோ பூம்பாவாய்.

ஆதலால் கும்பாபிஷேக தரிசன பலன் அளவிடற்கரியது. போக மோஷங்களின்றி பேரானந்த மோஷத்தையே கொடுக்க வல்லது. இத்தகு சிறப்பு மிகுந்த கும்பாபிஷேகத்தை தரிசித்து தீவினைகள் நீக்கி இகத்திற்கு வெண்டிய புத்திரப்பேற்றையும் – பரத்திற்கு வேண்டிய சிவப்பேற்றையும் பெறுவோமாக.

**என். ஸ்ரீநிவாஸன்**
**வடமொழித்துறை,**
**சரஸ்வதி மகால் நூலகம்,**
**தஞ்சாவூர்.**



## முத்தித்தலங்கள் ஆறு

| | | |
|---|---|---|
| 1. **பிறக்கமுத்தி** | - | திருவாரூர் |
| 2. **தரிசிக்கமுத்தி** | - | சிதம்பரம் |
| 3. **நினைக்கமுத்தி** | - | திருவண்ணாமலை |
| 4. **இறக்கமுத்தி** | - | வாரணாசி |
| 5. **சொல்லமுத்தி** | - | மதுரை |
| 6. **கேட்கமுத்தி** | - | அவினாசி |

ச.பதுர்சனசர்மா

சுழிபுரம்

## திரைச்சீலை

சிவ சந்நிதிதானத்திலே இடப்படும் திரைச்சீலையினாலே, மாயையாகிய திரையே அநாதி மத்தசித்துருவாகிய சிவத்தை அறியவொட்டாது மறைந்திருக்கின்றதென்றுணர்ந்து, அவ்விறைவனது திருவருள் என்னும் கத்தியினாலே கீறி ஞானக்கண் கொண்டு உள்ளபடி தரிசித்தவர்களே சிவகதி பெறுவர். என்னும் உண்மை அறியப்படும்.

உயர்ந்த கான்கு வர்ணத்தாருள் உறுப்புக் குறைந்தவர்களும் நான்கு வர்ணத்தார் அல்லாத சங்கர சாதியாரும் தங்கள் தங்கள் அதிகார குணமாக ஆசாரியார் இடத்து தீட்சை பெற்று,
"தூவியினைக் கோபுரத்தை யீசனெனக் கண்டுதொழு
பாவமறம் வாய்த்துற மின்பம்"
என்று வருத்தமற உய்யும்வழி என்னும் நூல் கூறியவாறு தூபியையும் கோபுரத்தையும் சிவபெருமானாக பாவித்து அவற்றுக்கு எதிரே பத்தர புஸ்பங்களைத் தூவி துதித்தல் முறையாம்.

**மஹோற்சவ விளக்கம்**

# தமிழகக் கோயில் சிறப்பு

தஞ்சை
என். எஸ்தாத்தாசாரியார்

**நிற்கின்ற போதே நிழலுடை யான்கழல்**
**கற்கின்ற செய்ம்மின் கழிந்துகும் பாவங்கள்**
**சொற்குன்றல் இன்றித் தொழுமின் தொழுதபின்**
**மற்றுஒன் றில்லாத மணிவிளக் காமே**

**கோயில்**

கோ- என்பதற்கு அரசன் இறைவன் முதலிய பொருள்கள் உண்டு. அவர்கள் இருக்குமிடம் கோ + இல் கோயிலாற்று. ஆனால் ஈண்டுக் காரண இடுகுறிப் பெயராய் கடவுள் ஆலயங்களுக்கே கோயில் எனப் பெயர் ஏற்பட்டுவிட்டது. கோயில், ஆலயம், கோட்டம், குடி, கற்றளி என்றெல்லாம் அழைப்பதுண்டு. ஆலயம் என்பதை ஆ + லயம் எனப் பிரித்து ஆன்மா அடைவதற்கும் லயிப்பதற்கும் உரிய இடம் என்றும், ஆணவமலம் அடங்கவேண்டிய இடமென்றும் பொருள் உரைப்பதுண்டு.

இன்று நம் தமிழ்நாட்டில் காணும் ஆலய அமைப்பு ஆகம விதிப்படிக்கு மனித வடிவ அமைப்பைச் சார்ந்தே காணப்படுகிறது. இதனை ஷேத்திரம் சரீரப்ரஸ் தாரம் என்பார்கள். திருமூலர் இக்கருத்தை,

**உள்ளம் பெருங்கோயில் ஊன்உடம் பாலயம்**
**வள்ளல் பிரானுக்கு வாய்கோ புரவாசல்**
**தெள்ளத் தெளிந்தார்க்கு சீவன் சிவலிங்கம்**
**கல்லப் புலனைந்தும் காளா மணிவிளக்கே.** என்று வெளியிட்டார்

மனித உடலின் பாதம் கோபுரம்,முழங்கால் முன் மண்டபம், துடை வாத்யமண்டபம், தொப்புள் பலிபீடம், மார்பு மகாமண்டபம், கழுத்து அர்த்தமண்டபம், தலை கருவறை, இருசெவிகள் விமானத்தின் வலம் இடமாய் அமைந்த தஷிணாமூர்த்தி சண்டேசுவரர் ஆலயம், கழுத்தின் மையம் நந்தி, வாயும் மூக்கும் மருங்கு ஸ்நபன மண்டபம், புருவத்தின் நடு சிவலிங்கம், தலையின் உச்சி விமானம் என அமைப்பைக் கூறுவர். மனிதனது உடலை மண்ணால் அமைந்ததொரு வெற்று உருவமாகக் கருதும் பொழுது இவ்வுடல் சரீரம் (அழியும் தன்மையுள்ளது) என்றும், தேகம் (எரிக்கப்படுவது) என்றும் பெயர்பெறும். இதையே இறைவனுடைய இருப்பிடமான திருக்கோயிலாக கருதினால் இதற்கு மெய் என்ற பெயர் ஏற்படுகிறது. இந்த மனித உடலை மறைந்திருக்கும் உறை அதாவது ஆவரணம் ஏழாகும். மற்றும் இது போல ஜீவான்மாவுக்கு, உறையான அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆனந்தமயம் என்ற கோசங்கள் ஐந்தாகும். இக்கணக்கை இட்டு ஆனந்தமயமான இறைவனுடைய கருவறையைச் சுற்றி ஏழு அல்லது ஐந்து திருச்சுற்றுக்களை அமைத்தனர்.மனிதன் கருவறையிலுள்ள இறைவனை அடைவதை அன்னமய கோசமான உடலையும் இதற்குள் உள்ள காற்றுருவில் உள்ள பிராணமயகோசத்தையும், இதற்கும் உள்ளே உள்ள மனோமய கோசத்தையும் புத்தி என்ற விஞ்ஞானமய கோசத்தையும் தாண்டிக் கடைசியில் உள்ளதாகிய ஆனந்தமய கோசத்தையடைந்து அழியாப் பேரின்பத்தை அடைவதையே குறிக்கும் என்பர் ஒரு கோயிலின் அடிப்பகுதியில் சிவசக்தியும், நடுவில் விஷ்ணுசக்தியும், முடிவில் பிரமனுடைய சக்தியும் உள்ளன என்றும் கூறுவார்கள். அதனால் தான் விமானத்தின் நடுவே மூடிபோன்ற கல்பகுதிக்கு பிரம்மமந்திரம் என்னும் பெயரிட்டார்கள் என்பது சிலரது கருத்து. கோயில்களில் இறைவனது உருவங்களைக் கல், செம்பு முதலிய உலோகப் பொருள்களால் அமைத்து அதற்கு மேல் வானொலியின் ஏரியல்போலக் குடவான இடைவெளியுள்ள விமானத்தை அமைத்து; சிகரத்தில் செம்பு, பொன்னாலான தூபியையும் அதில் மாவிலை விசிறியையும் அமைப்பதை மின்ஒளி சக்தி பரப்பும் விஞ்ஞான முறையில் ஒப்பிட்டுப்பார்க்கலாம். மின்சக்தி ஓட்டம் கொண்ட நீரில் மந்திரசக்தியை நல்லோர்கள் நல்லமுறையில் பாய்ச்சியும், மாபெரும் தூய அடியார்களின் உள்ளத்தின் அருட்சக்தியைச் சொற்களால் பாய்ச்சியும்

அந்நீரை சிலைவடிவில் அபிஷேகமாக இட்டால் அந்நீரினின்று பாய்ந்தோடும் ஒப்பற்ற அருட்சக்தி, அச்சிலையின் மூலமோ தாமிரம் போன்ற உலோகப்பொருளாலான வடிவத்தினின்றோ நேர்குத்தாக எழும்பி,மேலே விமானத்தின் கலசத்தினுடைய விசிறிகளின் வழியே வானில் பரவி நிற்கும். நீருக்குச் சூட்டை இழுக்கவும், விடவும் ஆற்றல் உண்டென்பதை சூடான பால் பாத்திரத்தை குளிர்ந்த நீரில் வைத்தால் அக்குளிர்ந்த நீரில் பாலின் சூடு பாய்வதைக் காணலாம். அதனால்தான் கோபுரத்தைக் காலையில் கண்கள் மூலம் காண்பவர்களுக்கும் இறைவனது அருட்சக்தி கிடைக்கும் என்பார்கள். மனிதனது கண்களை ஒளியின் இருப்பிடமென்று கூறுவதையும் ஈண்டு கவனித்தல் வேண்டும். ஆகவேதான் கோயில் இறைவனது படிமங்களைக் கூர்ப்பான முடியுடனும், கருவறையில் புறக்காற்றுப் பரவாமலும் அடக்கமாகவும் அமைத்தார்கள். கற்பாறைகளுக்கு ஒளி ஒலியைத் தேக்கி முன்னே தள்ளும் சக்தி உண்டு என்பதையும் நினைவில் கொள்க. அதனால்தான் ஔவையாரும் ஆலயம் (கோபுரம்) தொழுவது சாலவும் நன்று என்று கூறினார் இது ஆராய்ந்து தீர்மானிக்கவேண்டிய உண்மை. இருப்பினும் அறிஞர்களின் ஆராய்ச்சிக்காக இக்கருத்தை இங்கு எழுதினோம். சுருங்கக் கூறின் நம் தமிழ் நாட்டு ஆலயங்களை அருள்வான் ஒளிபரப்பும் நிலையம் எனலாம்.

**கோபுரம்**

இறைவனது ஆலயத்தில் கருவறையும், பலிபீடமும், கோபுரமுமே முக்கியப் பகுதிகளாகும்.இறைவனது கருவறைக்கு மேலே உள்ள கோபுரத்தை விமானம் என அழைப்பார்கள். சிவன் கோவிலின் கோபுரத்தை ஸ்தூலலிங்கம் என்பார்கள். கோபுர தரிசனம் கடவுளின் பாத தரிசனம் என்று உரைப்பார்கள். விமானம் நாகரம், திராவிடம் என மூவகைப்படும். அடி முதல் அனைத்தும் நாற்கோண வடிவாக உள்ளது (சதுரம்) நாகரம் எனப்படும். கண்டம் முதல் வட்டமாக உள்ளது வேசரம் எனப்படும். கண்டம் முதல் எட்டுக் கோணமாக உள்ளது திராவிடமாம். தமிழ் நாட்டில் திராவிடமே புகழ்பெற்றது. நாகரத்தை ஆண் விமானம், திராவிடத்தை பெண் விமானம், வேசரத்தை அலிவிமானம் எனவும் அழைப்பார்கள். ஹெலியோடோரஸ் என்ற கிரேக்க நாட்டுப் பெரியவர் நம் நாட்டிற்கு வந்தார் என்றும், அவரைப் பற்றிய கல்வெட்டில் மிகப் பழங்காலம் தொடங்கி இந்நாட்டில் கோபுரம் கொடிமரம் முதலிய அமைந்த கோயில் கட்டும் முறை உண்டு என்றும் புதைபொருள் ஆராய்ச்சி நூலில் 5-ஆம் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளன என்பர் (Memories of the Archeological servuey of India) கோபுரம் என்பது தென்னிந்தியாவில் குறிப்பாகத் தமிழ் நாட்டில் உள்ள கோயில்களின் வாயிலின்மேல் கட்டப்பட்ட உயரமாகவும், மேலே போகப் போகக் குறுகியும் காணப்படும் வாயில் மாடமாகிய பாகத்தின் பெயராகும். ஆந்திராவில் அமராவதி நாகார்ஜுன கொண்டா முதலிய இடங்களில் அகப்பட்ட கி.பி.1.2 நூற்றாண்டுகளைச் சேர்ந்த சிற்பங்களிலே கோபுரம் போன்ற மேற்கோப்புள்ள சிறிய வாயில்களைக் காணலாம். கி.பி.7,8ஆம் நூற்றாண்டுகளுக்கு முன்பே தமிழ் நாட்டில் பல கோயில்கள் கட்டப்பட்டிருந்தன என்பதைச் சங்க நூல்கள், தேவாரம், திவ்வியப் பிரபந்தங்கள் இவற்றிலிருந்து காணலாம். புகாரிலும், மதுரையிலும் பலதேவருக்குக் கோயில் இருந்தமை பற்றிக் கூறும் சிலப்பதிகாரம்.

வால்வளை மேனி வாலியோன் கோயிலும்
(சிலப் | 5 – 171 – 2)
மேழிவலன் உயர்ந்த வெள்ளை நகரமும்
(சிலப் | 14 – 8 – 9)

என்ற அடிகளால் முதல் நூற்றாண்டிலேயே தமிழ் நாட்டில் கோயில்கள் கட்டப்பட்டன என்பதை அறியலாம். இக்கோபுரங்கள் முதலில் மரம், செங்கல், சுண்ணாம்பு ஆகியவற்றால் கட்டப்பட்டு நிலைத்திருக்காமல் சிதறுண்டன. இந்தக் காலத்தில் கோபுரம் கொண்ட முதற்கோயிலானது காஞ்சிபுரம் கைலாசநாதர் கோயிலாகும். ஆனால் இதற்குக் கொஞ்சம் முந்திய காலத்தைச் சார்ந்த மாமல்லபுரத்தில் உள்ள ஒரு கல்லில் செதுக்கப்பட்ட பீமரதம் எனப்படும் சிறு கோயிலே கோபுர அமைப்பில் செதுக்கப்பட்டிருப்பதும் நோக்கத்தக்கது. இக்காலத்தில் கோயிலானது கருவறை விமானத்துக்கே பெருமை தரப்படுகிறது. லட்டிகம் எனற ஊரில் உள்ள சோழர் காலத்துக் கோயிலை உடைய கோபுரமும் மிகவும் எளிய அமைப்பைக் கொண்டது 11ஆம் நூற்றாண்டைச்

சேர்ந்த தஞ்சைப் பெரிய கோயிலின் புறத்தே இரண்டு கோபுரங்கள், சாலைகள், கோஷ்டங்களாலும் சுதைச் சிற்பங்களாலும் அழகுறுத்தப்பட்டன. 12-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட தாராசுரத்துச் சிவன் கோவிலின் கோபுரம் சற்று உயரமானது போலும் 13-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட திருபுவனக் கோயில் கோபுரம் அடுத்தப்படியானது. இக்கோபுரங்கள் யாவும் சோழர் காலத்தவை. இக்கோயில்களில் கோபுரத்தைவிட விமானங்களே பெரியனவாக உள்ளன.

13-ஆம் நூற்றாண்டின் இறுதியில் பாண்டியர்களும் கோபுரங்கள் கட்டினர். திருவாரூர்க் கீழைக் கோபுரம், சிதம்பரம் மேலைக்கோபுரம் ஆவுடையார்கோயிலின் கோபுரம் முதலயவை இவர்கள் காலத்தில் கட்டப்பட்டவை எனலாம். கிருஷ்ணதேவராயரால் கட்டப்பட்ட பெருங்கோபுரங்கட்குச் சிதம்பரம் வடக்குக் கோபுரமும் திருவண்ணாமலை மேலைக்கோபுரமும் எடுத்துக்காட்டாகும். கி.பி.17-ஆம் நூற்றாண்டில் சிற்ப வேலைப்பாடுகள் அமைந்து நிறைந்த கோபுரங்களை மதுரை நாயக்க மன்னர்கள் கட்டியுள்ளனர். திருமலை நாயக்கர் மரபினரால் கட்டப்பட்ட பெரிய கோபுரங்களை மதுரை மீனாட்சியம்மன் கோயிலிலே காணலாம். இவைகளில் இருமுறைகள் உள்ளன. ஒன்று நான்கு மூலைகளிலும் நேர்க்கொடு போன்று அமைந்திருப்பது. மற்றொன்று இவை உள் வளைவாக வளைந்திருப்பதாகும். இரண்டாவது முறைக்கு மீனாட்சிம்மன் கோயிலின் தெற்குக் கோபுரம் எடுத்துக்காட்டாகும். இவைகளுக்குச் சற்றுப் பிற்பட்டது மிக உயரமானதும் சுதை வேலைகள் இல்லாததுமான ஸ்ரீவில்லிபுத்தூர் ஆலயக் கோபுரமாகும். இன்றும் கோபுரம் கட்டும் முறை சற்று நவீன அமைப்பில் நடந்து வருகின்றது. ஆனால் இத்தகைய கோபுரங்களில் சாலைகளும் கோஷ்டங்களும் மிகச் சிறியவை. அவைகளைச் சிற்பங்கள் மறைத்து நிற்கின்றன. கோபுரத்தின் அடிப்பகுதியில் சிற்ப வேலைப்பாடுகள் குறைவு. மயிலாப்பூர் கபாலீசுவரர் கோயில் கீழைக் கோபுரமும் இத்தகையது. (சாலை - மண்டபம், கோட்டம் - வளைவு).

மாடக்கோயில்

இயற்கை அழகு மிளிரும் இடமே வழிபாட்டிற்குச் சிறந்த இடமென்று முதன் முதலில் ஆற்றங்கரைகளிலும், மரச்சோலைகளிலும், மரத்தடியிலும், தெய்வங்ளை உருவமைத்து மக்கள் வழிபட்டனர். ஒவ்வொரு பழங்கோயிலுக்கும் இன்று தலபுராண நூல்களில் தல விருஷம் கூறப்படுவது இதற்குச் சான்றாகும். பிறகு மரத்தடிகளில் சிறு கோயில்களின் கட்டிடம் அமைத்தனர். அதன் பின் மலைக்குகைகளில் கோயில் அமைத்தனர். பிறகுதான் இப்பொழுது அமைந்துள்ள கோயில் வகைகள் ஏற்பட்டன. ஆகம முறைப்படி அமைந்த ஆலயங்கள் இடைக்காலத்தவை. வீடுகளில் செய்யும் வழிபாட்டைத் தன்னலம் கருதியும் கோயில்களில் செய்யும் வழிபாட்டை நாட்டின் நலன் கருதியும் செய்வதால், கோயில்களுக்குப் பதார்த்தம் எனப் பெயர் உண்டு. இன்று ஆகம முறைப்படி அமையும் ஆலயங்களில் சுற்றுமதில், சிறிய, பெரிய கோபுரங்கள், பலிபீடம், கொடிமரம், அந்த அந்த இறைவனுக்குரிய ஊர்தி, கருவறை என்பன முக்கியமாக இருக்கும். கோயில்களை நகரின் மையமாக வைத்துச் சுற்றுப் பெருந்தெருக்களை அக் கோயிலின் சுற்றுக்களாக ஆக்கினர்.சுற்றுக்களுக்குள்ளே மக்கள் குடியிருக்கும் முறையைச் சிறப்பாக மதுரை நகரிலும், திருவரங்கத்திலும் காணலாம். ஆலயச் சுற்றுக்களாகிய தெருக்களில் வசிப்பது, இறைவன் திருவடி நிழலிலேயே ஒதுங்கி வாழ்வதைக்காட்டும். ஆகவே தமிழகக் கோயில்களைப் பற்றி வளர்ச்சி முறையை மிகச் சுருக்கமாகக் காணலாம்.

தமிழ் நாட்டில் பல்லவர் காலத்திலே கற்களை உடைத்துச் செதுக்கிச் சேர்த்துக் கட்டின கோயில்கள் எழுந்தன. இவைகளே கற்றளிகளாகும். இவைகளுக்கு எடுத்துக்காட்டு மல்லையில் உள்ள அலைவாய்க் கோயிலும், காஞ்சியிலுள்ள பல்லவர்களின் கோயில்களுமாகும். அடுத்து வந்த சோழர் காலத்தில் இத்திருப்பணி மேம்பாடடைந்தது. ஒரு நிலை விமானங்களுடன் கூடின சிறிய கோயில்களும், பல நிலைகளுடன் ஓங்கி வளர்ந்து நின்ற பல மாடக் கோயில்களும் (மஹாப்ராஸாதம்) எழுந்தன. எங்குமிருந்த செங்கல், மரம் இவற்றாலான பழைய கோயில்கள் கற்றளிகளாகப் புதுப்பிக்கப்பெற்றன. சோழர் காலத்துத் திருப்பணியில் கற்பனையும். கைத்திறனும் சிறந்து விளங்கியதோடு கோயிலின் அமைப்பும் திட்பமாயிற்று கோபுரம், திருமதில், சுற்றாலை,பரிவார

தெய்வங்களின் சிறு கோயில்கள், இவைகளின் நடுவே விமானம், அதில் அகமண்டபம், மகாமண்டபம், முகமண்டபம் முதலிய உறுப்புக்கள் திட்டமாக அமைக்கப்பட்டன. தமிழ் நாட்டில் தொடர்ந்து வளர்ந்த திருப்பணியின் உச்ச நிலையைக் காட்டும் தஞ்சைப் பெரிய கோயிலின் அமைப்பு இதற்கு எடுத்துக்காட்டாகும்.இக்காலத்தில் விமானமே கோயிலமைப்பின் நடுநாயகமாக ஓங்கி வளர்ந்து நிற்பதும், மற்ற தளிகளும், விமானத்தைவிடச் சிறிய அமைப்பில் இருப்பதும் இதன் சிறப்புக்களாகும். பிற்காலச் சோழர் காலத்திலும் இவர்களுக்குச் சமகாலத்தவரும், பின் போந்தவருமான பாண்டியர் காலத்திலும், மதிற் சுற்றுக்கள் பெருகி, அவற்றினுடைய வாயில்களில் மிகப் பெரிய நிலைக் கோபுரங்களும் அமைக்கப்பட்டன. இறுதியாக வந்த விஜயநகரவாசர் காலத்திலும், அவர்களைத் தொடர்ந்த நாயக்கமன்னர் காலத்திலும், மேலும் உயர்ந்த சுதைக் கோபுரங்களும், உள்ளும் புறமும் பலவகையான கலியாண மண்டபங்களும், நூற்றுக்கால், ஆயிரக்கால் மண்டபங்களும், திருவிழா மண்டபங்களும் அமைக்கப்பட்டன. இவ்வாறு தமிழ்நாட்டில் கோயிலமைப்பு படிப்படியாக தொடர்ந்து, ஆயிரம் ஆண்டுகளுக்குமேல் மாறி வளர்ந்து, இன்னும் பொலிவுடன் விளங்குகின்றன.

தென்னாட்டுக் கோயில்களின் சிகரங்கள் பெரும்பாலும் எட்டுக் கோணங்கள் கொண்டவை. இந்த வகையைத் திராவிடம் என்று சிற்பம் கூறும்.

இத்தென்னாட்டுத் திருப்பணிக் காலத்தைச் சற்று ஏறக்குறைய கி.பி.600 முதல் 850 வரை பல்லவர் காலம், 850 முதல் 1100 வரை சோழர் காலம், 1100 முதல் 1350 வரை பிற்காலச் சோழர் அல்லது பாண்டியர்காலம், 1350 முதல் 1600 வரை விஜயநகரவரசர் காலம், 1600க்கு பிற்பட்டது நாயக்கர் காலம் எனப் பாகுபடுத்திக் கூறுகின்றனர். சிற்ப முறைப்படி இரண்டு முதல் பதின்மூன்றுக்கு மேற்பட்ட தளங்களையுடைய தஞ்சைக்கோயில் போன்ற கோயில் விமான அமைப்பை ஜாதி விமானங்கள் அல்லது மாடக்கோயில் என்பர். அர்த்த மண்டபத்திற்கு மேற் கூரையாக வண்டிக் கூடுபோல் நீண்டு வருவதும் இக்காலத்திய சிறப்பாகும். இதனைச் சுகநாசி (கிளிமூக்கு) என்பார்கள். தஞ்சைக் கோயிலில் காணும் சித்திரங்களில் கட்டப்பட்டுள்ள பழைய கோயில் அமைப்புக்களும், சிதம்பரம் சிற்பசபையும், மற்றும் திருக்குற்றாலத்துச் சித்திர சபையும் பழங்கால மண்டபக் கட்டிட அமைப்புக்களுக்குச் சான்றாகும்.

கோயில் திருப்பணியைக் கற்கட்டிடங்களால் அமைத்தாலும் மன்னர்கள் பெரும்பாலும் தங்கள் அரண்மனைகளைப் பணிவின் காரணமாகச் செங்கல், மரம், ஓடுகள் ஆகியவற்றால் அமைத்துக் கொண்டார்கள் என்பர். ஹம்பியில் உள்ள சித்திராங்கி மகாலில் உள்ள கஜசாலை, செஞ்சியுள்ள காற்றாடி மண்டபம், களஞ்சியம், பாசறைகள், மதுரையில் உள்ள திருமலை நாயக்கர் மகால், தஞ்சை அரண்மனை என்பவை இத்தகைய கட்டிட அமைப்புக்குச்சான்றாகும்.

**கொடிமரமும் நந்திதேவரும்**

துஷ்ட தெய்வங்களை அகற்றவும், தேவ கணங்களை அழைக்கவும், ஆலயத்தைக் காக்கவும், பக்தர்களைக்காக்கவும் கொடிமரம் நிறுவப்படுகிறது. அதனது முகப்பகுதியும், அடுத்துள்ள இறைவன் ஊர்தியின் முகமும் இறைவனை நோக்கியே இருக்கும். கொடிமரத்திற்குச் சந்தனம், தேவதாரு, சண்பகம், வில்வம், மகிழ் முதலிய மரங்கள் சிறந்தவைகளாகும். கொடிமரத்திற்கு 33 கணுக்கள் இருப்பது சிறப்பு. கொடிமரத்திற்கு அப்பால் உள்ள சிவன் கோயிலில் அமர்ந்திருக்கும் நந்திதேவர் சிவலிங்கத்தை நோக்கிக் கொண்டு இருப்பர். நந்தி என்பதற்கு எப்பொழுதும் மகிழ்ந்த நிலையில் இருப்பவர் எனப் பொருள் இவர் இளமையும் திட்பமும் வாய்ந்தவர்; சிவகணத் தலைவர். இவருடைய இசைவு பெற்றே அடியார்கள் இறைவனை வணங்கிச் செல்வர்.

# திருஞானசம்பந்தரின் பாடல்களில் இசை

வம்பறா வரிவண்டு மணநாற மலரும்
மதுமலர்நற் கொன்றையான் அடியலாற் பேணா
எம்பிரான் சம்பந்தன் அடியார்க்கும் அடியேன்

என்று சுந்தரர் திருத்தொண்டத் தொகையில் திருஞானசம்பந்தரை வழிபடுகிறார். நம்பியாண்டார்நம்பி ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி, திருச்சண்பை விருத்தம், திருமும்மணிக் கொவை, திருவுலாமாலை, திருக்கலம்பகம், திருத்தொகை என்று ஆறு பிரபந்த நூல்களில் இவரின் வாழ்க்கை நிகழ்ச்சிகளைக் குறிப்பிட்டுள்ளார். சேக்கிழாரடிகள் பாடிய திருத்தொண்டர் புராணம் என்று பெரியபுராணத்தில் உள்ள 4286 பாடல்களில் 1256 பாடல்களில் இவரின் வரலாறு கூறப்பட்டுள்ளது. இதனால் பிள்ளை பாதி புராணம் பாதி என்ற பழமொழியும் தோன்றியது. பின்பு வந்த சிவப்பிரகாசச் சுவாமிகள் நால்வர் நான்மணி மாலையிலும் அருட்பிரகாச வள்ளலாரின் ஆளுடை பிள்ளையார் மாலையிலும், அருணாசலக் கவிராயர் படைத்த காழி அந்தாதி, சீர்காழித்தலபுராணம் போன்ற நூல்களிலும் இவரின் வரலாறு குறிப்பிடப்பட்டுள்ளன. இறைவனின் ஞானப்பாலைஉண்டு இறைவனின் அருட்செல்வமாக விளங்கிய ஞானசம் பந்தரின் பாடல்களில் இசைச்செய்திகள் நிறைய பொதிந்துள்ளன. ஞானசம்பந்தரின் மூன்று திருமுறைகளிலும் காணப்படும் இசை செய்திகளைப் பற்றி இனிக்காணலாம்.

**திருஞானசம்பந்தர் பாடியவை**

சம்பந்தர் பாடிய பாடல்களை மூன்று திருமுறைகளாக அமைத்தனர். இவைகள் பண் அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளன.

| திருமுறை பாடல்கள் | பதிகங்கள் | பண்களும் பதிகங்களும் | |
|---|---|---|---|
| முதல் திருமுறை | 1 - 136 | நட்டபாடை (1-22) | 22 |
| | | தக்கராகம் (23 - 46) | 24 |
| | | பழந்தக்கராகம் (47 - 62) | 16 |
| | | தக்கேசி (63 - 74) | 12 |
| | | குறிஞ்சி (75 - 103) | 29 |
| | | வியாழக்குறிஞ்சி (104 - 128) | 25 |
| | | மேகராகக்குறிஞ்சி (129 - 135) | 7 |
| | | பண்ணில் அடங்காத யாழ்மூரி | 1 |
| | | | 136 |
| இரண்டாம் திருமுறை | 137 - 258 | இந்தளம் (1-39) | 39 |
| | | சீகாமரம் (40 - 54) | 14 |
| | | காந்தாரம் (54 - 82) | 29 |
| | | பியந்தைக் காந்தாரம் (83 - 96) | 14 |
| | | நட்டராகம் (97 - 112) | 16 |
| | | செவ்வழி (113 - 122) | 10 |
| | | | 122 |

| | | | |
|---|---|---|---|
| மூன்றாந் திருமுறை | 259 - 383 | காந்தாரபஞ்சமம் (1 - 23) | 23 |
| | | கொல்லி (24 - 41) | 18 |
| | | கொல்லிக்கௌவாணம் (42) | 1 |
| | | கௌசிகம் (43 - 55) | 13 |
| | | பஞ்சமம் (56 - 66) | 11 |
| | | சாதாரி (67 - 99) | 33 |
| | | பழம்பஞ்சுரம் (100 - 117) | 6 |
| | | புறநீர்மை (118 - 123) | 18 |
| | | அந்தாளிக்குறிஞ்சி (124 - 125) | 2 |
| | | | 125 |
| | | கல்வெட்டில் கிடைத்த திருவிடைவாய் திருப்பதிகம் | 1 |
| | | | 384 |

இசையால் வழிபடும் முறை பற்றி ஞானசம்பந்தர் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளார்.

| | |
|---|---|
| இசையால் வழிபாடு செய்துள்ளனர் | 306 – 7 |
| பண்ணிசையால் ஏத்தப்படுவான் | 181 – 9 |
| மருதரைப்பண்ணின் மொழி சொல்ல விண்ணும் தமதாமே | 95 – 3 |
| பாடல்சீரார் நாவினால் வல்லராகி வாழ்த்துவார் | 300 – 11 |

**இசை என்ற சொல்லாட்சி**

திருஞானசம்பந்தர் பாடல்களில் இசை என்ற சொல் பல இடங்களில் ஆளப்பட்டுள்ளன

| | |
|---|---|
| தன்னிலங்கு விரலான் எரிவித்து இசை கேட்டருள் செய்த தமிழ்மாலை | 2:8 |
| பற்றியென்றும் இசைபாடிய மாந்தர் ஞானசம்பந்தன் சொன்ன | 2:11 |
| கொண்டு இனிதா இசை பாடி யாடி | 8:11 |

இசைக்கு இறைவன் அகப்படுவான் என்பதனைக்

கீதம் வந்த வாய்மையினது கிளர் திருக்கினார்களில் ஓதிவந்த வாய்மையால் உணர்ந்துரைக்கலாகுமோ 310:7 என்கிறார்

**இசையும் சம்பந்தரும்**

நாளும் இன்னிசையால் தமிழ்பரப்பும் ஞானசம்பந்தன் என்று பாடப்பட்ட ஞானசம் பந்தர் காரைக்காலம்மையார் காட்டிய வழியில் தமிழிசைப் பாடப்புகுந்து பிற்காலத்தில் தோன்றிய தமிழிசை வாணர்களுக்கெல்லாம் முன்னோடியாகத் திகழ்கிறார். இன்னிசையின் இனிமையைப் பல இடங்களில் பாங்குறப் பாடியவராக விளங்குகின்றார். இசைப்பாடல் இறையுணர்வை வளர்க்கும் என்றும் இசைப்பாடும் ஞானம் வல்லார் இறைவனை அடைவர் என்றும் குறிப்பிடுகிறார். தன்னை இசையோடு இணைத்துச் சொல்கிறார்.

| | |
|---|---|
| இசைஞான சம்பந்தன் | 319 |
| இசையார் தமிழ் விரகன் | 249 |
| இன்னிசையால் உரைத்த பனுவல் | 220 |
| ஈனமிலாத வண்ணம் இசையால் உரைத்த தமிழ்மாலை | 223 |
| தமிழ்ஞானசம்பந்தன் ... பண்ணிசையால் ஏத்திப்பயின்ற இசை | 181 |

துன்னிய இன்னிசையால் துதைத்து சொல்லிய ஞானசம்பந்தன்
தண்ணிசையாற் சொன்ன மாலை பத்து என்றும் குறிப்பிடுகிறார்.

**இசையும் சிவபெருமானும்**

கலைவடிவமாக இறைவன் திகழ்கின்றான். ஆடும் நிலையில் ஆடல்வல்லானும், குழலூதும் நிலையில் கண்ணனும் வீணை இசைக்கும் நிலையில் கலைமகளும் மத்தளம் கொட்டும் நிலையில் நந்தியம் பெருமானும் திகழ்கின்றார்கள்.

அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையாக விழங்கும் இறைவனைப் பண்ணினால் பாடி அடையலாம். திடங்கொள் நாவின் இசைத்தொண்டர் பாடும் பாட்டுக்கு இறைவன் ஆட்படுவான். பக்திப் பாசுரங்கள் அனைத்தும் இசையாக விளங்குவதும் இதனை உறுதிசெய்யும் இந்நிலையில் இசை வடிவினனாக இறைவன் விளங்குவதனையும் இசையை விரும்பி ஏற்ப தனையும் ஞானசம்பந்தர் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளார்.

இசை வடிவினன் சிவன் என்றும் இசையை விரும்பி ஏற்பவன் என்றும் பல இடங்களில் குறிப்பிடுகின்றார்.

| | |
|---|---|
| பூத இனப்படை நின்று இசை பாடவும் ஆடுவர் | 136:1 |
| இசை கேட்டன்றருள் செய்த சடையான் | 2:8 |
| இராவணன் வீழ்தர விடுத்தருள் செய்து இசைகேட்பவர் | 267:8 |

**இசையும் தொண்டர்களும்**

பெரிது பெரிது தொண்டர் தம் பெருமை பெரிது என்ற வகையில் தொண்டர்தம் பெருமையைச் சைவ நாயன்மார்கள் கூறுவர். தொண்டர் கூடி இறைவனை வழிபடல் உண்டு. இதனைப் பஜனை என்பர். இத்தகு தொண்டர்கள் இசையோடு ஆடிப்பாடி இறைவனை வணங்குவதைப் பாடியுள்ளனர்.

| | |
|---|---|
| இனமலிந்திசை பாட வல்லார்கள் | 240:11 |
| தொண்டர்கள் இசை பாடியும் கூடிக்கொண்டு துதிசெய் | 38:6 |
| முறைமுறையால் இசை பாடுவாராடி முன் தொண்டர்கள் | 267:5 |

**இசையும் வேதமும்**

வேதத்தை இசையோடு பாடுவர். இவ்வாறு பாடுவது வேதகீதம் (ப. 308) இதனைத் திருஞானசம்பந்தர் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளார்.

| | |
|---|---|
| உள்ளங்கலந்திசையால் எழுந்த வேதம் | 39:3 |
| சாமவேத மோர் கீதம் ஓதி | 228:8 |
| பண்ணமரும் நான் மறை | 193:1 |
| பண்ணொளிசேர் நான்மறையான் | 178:6 |
| வேதத்தின் இசைப்படி | 217:1 |

**வண்டினம் பாடிய பண்கள்**

வண்டினங்கள் பாடிய ஓசை இசைப்பண்கள் பலவற்றை நினைவூட்டுவனவாக உள்ளன. காரடைந்த சோலை சூழ்ந்த காமரம் வண்டிசைப்ப 47:8 என்ற சீகாமரப் பண்ணை (நாதநாம கிரியை) வண்டினம் பாடியதனைக் குறிப்பிடுகின்றார் வண்டினங்கள் செவ்வழிப்பண் பாடியதனையும் குறிப்பிடுகிறார்.

| | |
|---|---|
| சேறொடு செங்கழு நீர்த் தாடிதாடி மதுவுண்டு சிவந்த<br>வண்டு வேறாய உருவாகிச் செவ்வழி நற்பண்பாடும் | 132:7 |
| பெருந்தன சாரல்வாழ் சிறைவண்டு பெடைபுல்கிக்<br>குருந்தம் ஏறிச் செவ்வழி பாடும் குற்றலாம் | 99:10 |

வண்டினம் பஞ்சுரப்பண் பாடியதனைக் குறிப்பிடுகிறார்.

அஞ்சுரும்பு தேன் பஞ்சுரம் பயிற்று 272:3
பஞ்சுரம் பாடி வண்டியாழ்முரலும் பரிதிந்தியமே 36:4

வண்டினங்கள் செந்திசை, நேரிசை பாடின என்கிறார்.

குளிர் வண்டு செந்திசை பாடும் 101:2
வண்டினம் நேரிசை பாணில் யாழ் முரலும் 189:10

குரல், துத்தம், கைகிளை, விளரி, தாரம் என்ற சுரங்களில் துத்தச்சுரத்தை வண்டினம் பாடின என்கிறார்.

துத்த நல்லின்னிசை வண்ட பாடும் 353:3
வண்டினம் துத்த நின்று பண்செய்யும் 243:10

**இசைக்கருவிகள்**

இசையை இசைப்பதற்கும், இசைக்கு மெலும் செறிவூட்டவும் பல்வகைக் கருவிகள் துணைக்கருவிகளாகப் பயன்படுத்தப்பெற்றன இசையின் பல புதிய பாணிகள் தோன்றியதே இசைக்கருவிகளால் தான் என்றால் மிகையாகாது. கோயில்களில் இறைவழிபாட்டில் முக்கிய இடம் பெற்றன.

திருஞானசம்பந்தர் தாளத்தைக் கையாற்போட்டுப் பாடினார். பிஞ்சுக்கரங்களால் தாளம் போட்டதால் கைகள் சிவந்தமையால் இறைவன் பொற்றாளம் நல்கினான். இறைவி தாளத்திற்கு ஓசை கொடுத்தார். இதனால் இவர் ஓசைகொடுத்த நாயகி என்று கூறப்படுகிறார். திருஞானசம்பந்தருடன் திருநீலகண்ட யாழ்ப்பாணர்தலயாத்திரை செய்தார். ஞானசம்பந்தர் பாடியவற்றை யாழிலிட்டு வாசித்தார். எனவே இசைக்கு மாதாபிதாவாக விளங்கும் இலயமும் சுரமும் இவரின் பாடல்களில் சிறப்புடன் விளங்குகின்றன.

திருஞானசம்பந்தரின் பாடல்களில் பல வகையான இசைக்கருவிகளும், ஆடலின் போது பயன்படுத்தப்பட்ட இசைக்கருவிகள் பாடுகையில் பயன்படுத்தப்பட்ட இசைக்கருவிகள் இறை வழிபாட்டில் பயன்படுத்தப்பெற்ற இசைக்கருவிகள் மாதர்கள் பயிலும் இசைக் கருவிகள் வேறுவகையான இசைக்கருவிகள் இசைக்கருவி இசைப்போர் சிவனோடு தொடர்பு படுத்திக் கூறப்படும் செய்திகள் கூறப்பட்டுள்ளன.

**முழவு**

முழவு பற்றிப்பல இடங்களில் பல நிலைகளில் குறிப்பிட்டுள்ளார். முரசின் ஒன்றான மணமுரசு பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

மணமுரசென கடலின தொலி 243:11
முரசார் வருமன மொய்ம்பு 12:4

**யாழ்வீணை**

யாழ்க்கருவி பற்றிச் சிறப்பாகக் குறிப்பிடுகிறார். யாழ்முரி என்ற இசைபாடும் முறையை இதன்மூலம் தந்துள்ளார்.

சம்பந்தன் தமிழ்பத்தும் யாழின்னிசை வல்லார்
சொலக்கேட்டார் அவரெல்லாம் – வினைபோயி... 11:11

**பல்வகை இசைக்கருவிகள்**

பல இசைக்கருவிகள் இணைத்து இசைக்கப்பட்டமையைப் பற்றி பல இடங்களில் குறிப்பிட்டுள்ளார். யாழும் குழலும் இசைத்தமையைக் குறிப்பிட்டுள்ளார்.

குழல்யாழ் முரலத் துன்னிய இன்னிசை 5:6

வலம்டினம் குழலொடி யாழ்செய் கோவலூர் 236:2

மேலும் சங்கும் பறையும் சேர்ந்து ஒலித்தமையைக் குறிப்பிடுகிறார்.

பறையும் சங்கும் ஒலிசெய் 135:6

இக்கருவிகள் இறைவழிபாட்டிற்குரியது என்பதனைப் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளன.

காலையொரு துந்திபிகள் சங்குகுழல் யாழ்முழவு 330:3
தொளைபயலுங் குழல் யாழ் முறுலத் துன்னிய
இசையார் அல்லலறுக்க லாமே 5:6 என்கிறார்.

**பண்ணமைத்த வரலாறு**

103 பண்களுள் 23 பண்கள் தேவாரத்தில் வழங்கப்படுகின்றன. கி.பி 7 ஆம் நூற்றாண்டில் அப்பர், சம்பந்தர் ஆகியோராலும், கி.பி 9ஆம் நூற்றாண்டில் சுந்தரராலும் அமைக்கப்பெற்றவை. இயற்றப்பெற்ற பின் சிறிது காலத்தில் இப்பாடல்களும், அவற்றைப் பாடும் முறையும் மறைந்தனவென்றும், நம்பியாண்டார் நம்பியின் முயற்சியினால் பாடல்கள் சிதம்பரம் கோயிலிருந்து கிடைக்கப்பெற்றன என்றும் கூறப்படுகிறது.

பாடல்கள் கிடைத்ததும் பாடும் முறையானது தெரியாது போகவே, திருநீலகண்ட யாழ்ப்பாணர் மரபில் வந்த ஒரு பெண்மணியினால் இவைகளுக்கு இசை அமைத்துக் கொடுக்கப்பட்டன. தற்பொழுது ஓதுவார்கள் பாடும் முறையானது பெரும் பாலும் அவர் அமைத்துக் கொடுத்த இசையின் அடிப்படையில்தான் பாடப்பெறுகின்றன. சில இம்முறையிலிருந்து மாறியும் வந்துள்ளன. கொல்லி, கொல்லிக்கௌவானம், பியந்தை, பியந்தை காந்தாரம் என்ற நான்கு பண்களும் நவரோசு என்ற ஒரே இராகத்தில் பாடப்பட்டு வருகின்றன.

**தேவாரப் பண்கள்**

தேவாரத்தில் வழங்கப்பெறும் பண்களைப் பற்றிய பல கருத்து வேற்றுமைகள் நிலவி வந்தன. தேவாரப்பண்கள் 24 என்று கூறுவர். இவற்றில் யாழ்மூரி என்பதனைப் பண்ணின் பெயராகக் குறிப்பிடுவர். யாழ்மூரி என்பது பண்ணின் பெயரல்ல பதிகத்தின் பெயர் என்றும் கருதுவர். இந்தப்பதிகம் மேகராகக் குறிஞ்சி என்று அழைக்கப்படுகின்ற நீலாம்பரி இராகத்தில் அமைந்துள்ளது. ஆனால் தற்பொழுது அடாணா இராகத்தில் பாடப்படுகிறது. இதனைப் பண்ணாகக் கருதாமல் பதிகமாகக் கருதினால் தற்கால 23 பண்கள் ஆகும்.

**பண்களும், தற்கால இராகங்களும்**

| | | | |
|---|---|---|---|
| 1. | இந்தளம் | - | மாயாமாளவகௌளை |
| 2. | காந்தாரம் | - | நவரோசு |
| 3. | காந்தாரபஞ்சமம் | - | கெதாரகௌளம் |
| 4. | குறிஞ்சி | - | குறிஞ்சி |
| 5. | கொல்லி | - | நவரோசு |
| 6. | கொல்லிக்கௌவாணம் | - | நவரோசு |
| 7. | கௌசிகம் | - | பைரவி |
| 8. | சாதாரி | - | பந்துவராளி |
| 9. | சீகாமரம் | - | நாதநாமக்கிரியா |
| 10. | செந்துருத்தி | - | மத்தியமாவதி |
| 11. | செவ்வழி | - | யதுகுலகாம்போதி |
| 12. | தக்கராகம் | - | காம்போதி |
| 13. | தக்கேசி | - | காம்போதி |
| 14. | நட்டபாடை | - | நாட்டை |

| | | | |
|---|---|---|---|
| 15. | நட்டராகம் | - | பந்துவராளி |
| 16. | பஞ்சமம் | - | ஆகிரி |
| 17. | பழந்தக்கராகம் | - | சுத்தசாவேரி |
| 18. | பழம்பஞ்சுரம் | - | சங்கராபரணம் |
| 19. | பியந்தைக்காந்தாரம் | - | நவரோசு |
| 20. | புறநீர்மை | - | பௌளி இராகத்தின் சாயலுடைய அந்தர காந்தாரத்துடன் கூடிய பூபாளம் |
| 21. | மேகராகக்குறிஞ்சி | - | நீலாம்பரி |
| 22. | வியாழக்குறிஞ்சி | - | சௌராஷ்டிரம் |
| 23. | அந்தாளிக்குறிஞ்சி | - | சாமா |

இந்த 23 பண்களும் மேற்கூறப்பட்ட இராகங்களுக்கு பொருந்தும் என்று பண் ஆராய்ச்சி மாநாட்டில் முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் ஒரு இராகங்கள் ஒன்றிற்கு மேற்பட்ட பண்களைப் பெற்றுள்ளன. உதாரணமாக, நவரோசு என்ற இராகமானது கொல்லி, கொல்லிக்கௌவானம், காந்தாரம், பியந்தைக்காந்தாரம் போன்ற பண்களையும், தக்கேசி, தக்கராகம் ஆகிய இரண்டு பண்களையும் காம்போதி இராகத்தில் பாடிவருகின்றனர். நட்டராகம், சாதாரி ஆகிய இரண்டுப் பண்களையும் பந்துவராளி இராகத்தில் பாடிவருகின்றனர். எட்டுப்பண்களும் வெவ்வேறாகப் பிங்கல நிகண்டில் குறிக்கப்பெற்றுள்ளன. யாழ் நூலாசிரியர் விபுலானந்த அடிகளார் நூற்று மூன்று பண்களையும் வரிசைப்படுத்தி காந்தாரம் - 33, கொல்லிக் கௌவாணம் - 49, கொல்லி - 70, பியந்தை - 81 என்று எண்கள் கொடுத்துள்ளார். ஆகவே இந்தப் பண்கள் வெவ்வேறு இராகங்களாக இருக்க வேண்டும் என்று கருத இடமுள்ளது.

**தனிச்சிறப்புப் பதிகங்கள்**

திருஞானசம்பந்தர் இயற்றியருளிய பதிகங்கள் பெரும்பாலும் தனிச்சிறப்புடன் விளங்குவன. இப்பதிகங்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம். 1. பொருள் நிலையில் சிறப்பு வாய்ந்தவை, 2. அமைப்பு நிலையில் சிறப்பு வாய்ந்தவை, 3. இசை நிலையில் சிறப்பு வாய்ந்தவை.

அமைப்பு நிலையில் சிறப்பு வாய்ந்தவை என்ற பிரிவின்கீழ் . இருக்கக்குறள், மாலை மாற்று, கூடற்சதுக்கம், திருக்கோமூத்திரி, ஏகபாதம், திருஎழுகூற்றிருக்கை, திருச்சக்கரமாற்று, நலடிமேல் வைப்பு, ஈரடிமேல்வைப்பு, திருமுக்கால், ஈரடி ஆகியவற்றை அடக்கிக்காட்டலாம்.

இவற்றில் ஒரு சிலப்பதிகாரங்கள், பிற்கால இசைப்பாடல்களுக்கு முன்னோடியாகத் திகழ்ந்தன என்றால் மிகையாகாது.

இவ்வாறு சம்பந்தரின் பாடல்கள் முழுவதும் இசைப்பாடல்களாகும். ஞானசம்பந்தரின் பாடல்களை வெளிக்கொணர வேண்டும் என்ற நிலையில் பல அமைப்புகள் முயற்சி செய்து வருகின்றன. அவற்றில் இராமலிங்கர் பணிமன்றம், அண்ணாமலை பல்கலைக்கழகம், குடந்தை ப. சுந்தரேசனார் நாடுகாண் குழு போன்றவை முக்கிய இடம் பெற்றுத் திகழ்கின்றன. மேலும் தமிழ்பல்கலைக்கழகத்தின் மூலம் தேவார இசைப்பாடல்களை சுரப்படுத்தியும், கருத்தரங்குகளை அமைத்தும் வருகின்றது. இவ்வாறு இயற்றமிழ்ப் பயில்வார்க்கு ஆழ்ந்த புலமையும், இசைவாய்வாளர்களுக்குப் பல்வேறு வழிமுறைகளையும், நாடகத் தமிழ் பயில்வார்களுக்கு ஆழ்ந்த புலமையும் இசைவாய்வாளர்களுக்குப் பல்வேறு வழிமுறைகளையும், நாடகத் தமிழ் பயில்வார்க்கு வழிகாட்டியாகவும், இவர்தம் பாடல்கள் விளங்குகின்றன. இசைஞானியாகவும், தாளச் செல்வராகவும் இவர் விளங்குகின்ற நுட்பத்தை இவர்தம் பாடல்கள் வாயிலாக அறிய முடிகின்றன.



# தேவாரத்தில் இலக்கணக் கூறுபாடுகள்

**தேவாரம்** என்பது சிவபெருமானைப் பரம்பொருளாகக் கொண்டு திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், திருநம்பியாரூர் என்னும் மூவரான் பாடப்பெற்ற சைவ சமயச் சார்புடைய இசை இலக்கியங்களைக் குறிக்கும். அவருள் திருநாவுக்கரசர் அருளிச் செயல்களுள் ஒரு பகுதி தேவாரம், மற்றையவை திருநேரிசை, திருக்குறுந்தொகை, திருத்தாண்டகம் என்பன.

இலக்கணம் என்பது ஓர் இலக்கியம் அமையவெண்டிய வடிவங்களின் உறுப்புக்களைப் பற்றி அவ் இலக்கியங்களின் அடிப்படையில் ஆராய்ந்து வரையறை செய்து கூறும் அளவியல் நூலகம். இங்கே எடுத்துக்கொள்ளப் பெற்ற தேவாரம் என்பது தமிழ்மொழி இலக்கியத்துள் ஒரு கூறாகிய இசைத் தமிழ் இலக்கிய வகையைச் சார்ந்த தாகும். தமிழ் மொழி இலக்கியம் இயல், இசை, நாடகம் என்னும் மூன்று பகுப்புடையது. இவற்றுள் ஒவ்வொன்றனுள்ளும் இம் மூன்று கூறுகளும் தனித்தும் கலந்தும் அமைந்திருக்கும். இம்மூன்றும் தனித்தனிச் சிறப்பிலக்கணங்களை உடையவை.

இயற்றமிழ் இலக்கணம் எழுத்து, சொல், பொருள் என்னும் மூன்று பகுப்பினையுடையது. பொருளின் கூறுகளாகிய யாப்பு, அணி ஆகிய இரண்டையும் பிரித்து ஐந்து கூறுகளாகச் சொல்வது பிற்கால மரபாகும். இசைத்தமிழ் இலக்கணம் ஓசை (சுருதி) இசை (பண்) தாளம் என்னும் மூன்று கூறுகளையுடையது. தாளத்தை ஆளத்தி எனவும் கூறுவர். காலத்தால் அளவிடப்படுவது ஆளத்தி. நாடக இலக்கணத்தைக் காணுமிடத்து அது வினைய நாடகம் (நடம்) என்றும் பொருத நாடகம் (கூத்து - வேடமிட்டு நடிப்பது) என்றும் இருவகைப்படும். வினைய நாடகம் பண்ணமைபாட்டு, தாளம், வினையம் (அபிநயம்) என்னும் மூன்று கூறுகளை உடையது. கூத்து நாடகம் ஒப்பனை, உரைப்பாட்டு, மெய்ப்பாடு என்னும் மூன்று கூறுகளை உடையது.

தேவாரத்தின் கருப்பொருள் பரம்பொருளாகிய சிவபெருமான் இயற்றும் ஐந்தொழில்களை உலகியலோடு இணைத்து வன்னித்துக் கூறுவது ஆதலின் இயல் இசை இருவகை நாடகம் என்னும் முக்கூறுகளும் அமைந்து விளங்குகின்றன. தேவாரப்பாக்கள் செம்பாதி இயற்றமிழும் செம்பாதி இசைத்தமிழுமாக அமைந்தவையாகும். நாடகக் கூறுகள் அவற்றுள் அடங்கி நிற்கும் அவற்றை எல்லாம் சுட்டி விளக்குவது இக்கட்டுரைத் தலைப்பின் நோக்கமன்று. தேவாரப் பாக்களின் இயற்றமிழ்க் கூறுகளான எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய வற்றுள் எழுத்திலக்கண அமைப்பும் அமைந்துள்ள பாங்கினுள் நுட்பமாக உள்ள ஓரிரு இடங்களைச் சுட்டிக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

மூவர் தேவாரங்களுள் காலத்தால் முற்பட்டவை திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் தேவாரங்களாகும். இவர்கள் காலத்தில் ஐந்திலக்கணமும் நிறைந்து வழக்கிலிருந்த இலக்கண நூல் தொல்காப்பியமாகும். இறையனார் அகப்பொருள்நூல், அவிநயம், மகேச்சுரர் யாப்பு முதலிய நூல்கள் இவர் காலத்தில் தோன்றியவை யாகும். வடமொழிச் செய்யுள் இலக்கணநூல்களும் பாலிமொழி யாப்பில க்கண நூல்களும் சமண, பவுத்த சமயச் சான்றோர்கள் நூல்களும் வழக்கிலிருந்தன. அப்பரடிகள் அந்நூல்களில் தேர்ச்சி பெற்றவர்.

தொல்காப்பியச் செய்யுளில் கூறும் பாவகையுள் கலிப்பாவும் பரிபாடலும் பண்ணும் தாளமும் அமையப்பாடுவதற்கேற்றவையாகும். கலிப்பா, தரவு தாழிசை அராகம் அம்போதரங்கள் சுரிதகம் என்னும் உறுப்புக்களையும் தேவபாணி சௌச்சகம் ஒருபோகு சௌச்சகம் டிஎன்னும் களிப்பா வகைகளையும் உடையதாகும். கலிவகைப்பாக்கள் ஒத்த நான்கடிகளான் அமையின் அவை மண்டிலப்பா எனப்படும். மண்டிலம் என்பது வடமொழி விருத்தயாப்பினை ஒத்ததாகும். மேலும் தொல்காபபியம் கூறும் அறுவகைப்பாக்களும் வண்ணம் என்னும் உறுப்புக்கள் அமையப்பாடப்பெற்றனவாகும். வண்ணங்களைத் தொல்காப்பியம் இருபது வகைகளாக வகுத்துக் கூறுகின்றது. அவற்றுள் சில வண்ணங்கள் பண்ணும் தாளமும் பற்றி அமைந்தவையாகும்.

இடைக்காலத்தில் வடமொழி பாலிமொழி மரபுகளைப் பின்பற்றிப் பா இனங்கள் பற்றி இலக்கணங்கள் சில தோன்றின. பாவினங்கள் கூறும் இலக்கண முறைகள் பல தேவாரங்களில் அமைந்திருப்பதைக் காணலாம். எனினும் தேவாரப்பாக்கள் பழந்தமிழ் இசை நூல்களின் அடிப்படையில் அமைந்தவையே. அந்நூல்கள் இற்றைக்குக் கிடைக்கப் பெறாமையான் தேவாரப்பாக்களின் யாப்பமைதிகளை முழுமையாக விளங்கிக் கொள்ள இயலவில்லை. அணியிலக்கணமும் பொருளிலக்கணமும்

தொல்காப்பியக் கோட்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு தேவாரப்பாக்களில் வளங்குவதைக் காணலாம். வடமொழியிலும் தமிழிலும் தண்டியலங்கார நூல்கள் தோன்றுவதற்குச் சில நூற்றாண்டுகளுக்கு முன்பே திருஞானசம்பந்தர் பாடல்களுள் ஒரடிமேல்வைப்பு, ஈரடிமேல்வைப்பு, திருவியமகம், ஏகபாதம், மாலை மாற்று முதலிய அணியமைப்புப் பாக்கள் அமைந்துள்ளன. ஆதலின் பொருளணி, சொல்லணி பற்றி பழந்தமிழ் நூல் இருந்திருத்தல் வேண்டுமென்பதில் ஐயமில்லை. இக்கட்டுரையின் நோக்கம் தேவாரத்தில் அமைந்துள்ள எழுத்திலக்கணங்களையும் சொல்லிலக்கணங் களையும் பற்றிய நுணுக்கங்கள் சிலவற்றை எடுத்துக் பாட்டுவதேயாகலின் யாப்பமைதிகள் பற்றிய செய்தி ஈண்டு ஆராயப்படவில்லை.

இனித் தேவாரத்துள் அமைந்துள்ள எழுத்திலக்கணச் சொல்லிலக்கண நுட்பங்களுள் ஒண்றிரண்டைக் காண்போம். ஆளுடைய பிள்ளையார் அவர்கள் தோடுடைய செவியன் எனத் தொடங்கும் பாடலின் இறுதியடி பீடுடைய பிரமாபுரம் மேவிய பெம்மானிவனன்றே என்பது. இதன்கண் ஓசையும் தாளமும் கருதி நீட்டும் வழி நீட்டல் என்னும் செய்யுள் விகாரத்தை ஒட்டிப் பிரமபுரம் என்பதனைப் பிரமாபுரம் என அமைத்துள்ளார். மேலும் பெருமகன் என்னம் இரு சொற்களில் இடை எழுத்துக்களை நீக்கி பெம்மான் என ஒரு சொல் நீர்மையாக அமைத்துள்ளார். (பெரும் - பெம், மகன் - மான் = பெம்மான்) மெய் என்பது உடம்பு, உருப்படி என்னும் பொருளது. அது மை எனத் திரிந்தும் வரும் என்பதனை ஒருமை பெண்மையுடையன் சடையன் விடையூரும் இவன் என அமைத்துள்ளார். ஈரெழுத்தொருமொழியீருறு வல்லின உகரம் வருமொழி உயிர் வரின் இரட்டாது உடம்படுமெய்பெற்று நடு + இனிது = நடுவினிது, கடு + அழகு = கடுவழகு, பொது + அறம்=பொதுவறம் எனவரும். சிறுபான்மை புது + ஒளி = புத்தொளி என வரும். இந்நுணுக்கம் அமைய நடு + இருள் என்பவற்றை நடுவிருள் என இயைக்காமல் நட்டிருட்கண் நடமாடிய நாதன் என புணர்த்துக் கூறுகின்றார்.

ஞகரமும் நகரமும் ஒன்றற் கொன்று போலியாக வரும் நேயம் - ஞேயம் என வரும். அம்முறையில் ஞாயிறு என்பது நாயிறு எனவரும். வரினும் எது செஞ்சொல் எது போலி எனல் விளங்குவதில்லை. நாயிறு என்பதே செஞ்சொல் என்பதனை உணர்த்துவாராய் நாயிறும் திங்களும் கூடி வந்தாரும் நாகேச்சுரம் என்று பாடுகின்றார். நாயிறு என்பது நயத்தற்குரியது என்பது பொருளாகும். மற்றுச் செய்யுள் வழக்கையும் தவிர்க்காமல் கோளாறு பதிகத்தில் ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி சனி பாம்பிரண்டுமுடனே எனவும் கூறுகின்றார்.

திருவீழிமிழலை - காழிநகர் என்னும் ஊர்ப்பெயர்களைத் தாளமும் இசையும் கருதி விடையார் கொடி உடையானிடம் வீழிம்மிழலையே எனவும் காழிந்நகர் கலைஞானன் சம்பந்தன் என்றும் விரித்தல் விகாரமாக மகர ஒற்றை விரித்துப் பாடுகின்றார்.

யாப்பினுள் எதுகை மோனைகளுக்கு அநுஎழுத்துக்கள் வரும் த - ச - என்பனவும் ம - வ என்பனவும் அநுவெழுத்தாக வரும். யகரத்திற்கு வகரம் அநுவாக வருமென்று யாப்பிலக் கண நூலார் குறிப்பிடவில்லை எனினும் அவை இரண்டும் அரை உயிர்களாதலின் அநுவாக வருதற்குரியனவே என்பதை உணர்த்துவராய்

அவ்வினைக் கிவ்வினை யாமென்று சொல்லும் அஃதறிவீர்
உய்வினை நாடா திருப்பதும் உந்தமக் கூனமன்றே
கைவினை செய்தெம் பிரான்கழல் போற்றுதும்நாம் அடியோம்
செய்வினை வந்தெம்மைத் தீண்டப்பெறா திருநீலகண்டம்

என்றமைக்கின்றார். (இப்பாடலில் கைவினை என்பது கைவினை என விரிந்திருத்தல் வேண்டும்.)

இனி வேற்றுமை உருபுகள் ஒருமை பன்மை காட்டுவது தமிழ் இலக்கண நெறியன்று அது வடமொழிக்கொள்கை.இதனைக் கருதாத தொல்காப்பிய உரையாளரும் நன்னூல் முதலிய பின்னூல்களும், ஆறாம் வேற்றுமையில் அது என்பது ஒருமைக்கும் அ பன்மைக்கும் வரும் என்று கூறிச் சென்றனர். அகரம் அதுவென்பதன் கடைக்குறையேயன்றித் தனிவேறு உருபன்று. அது என்பது முழுமையாகவோ ஈறு குறைந்தோ உடைமைப் பொருளுக்குரிய உருபாகவரும். இத் தொல்காப்பிய மரபினைப் பின்பற்றி ஞானசம்பந்தப் பெருமான் இவ்விருப்பை ஆளுகின்றார்.

பவனமாய்ச் சோடையாய் என்னும் பதிகத்தில்,

சிவனதாள் சிந்தியாப் பேதைமார் போலநீ வெள்கினாயே

எனப் பன்மையிலும்

சந்தமார் முலையாள் தன கூறனார் என

ஒருமையிலும்

மாழையங்கயல் ஒண்கண் மலைமகள் கணவனது

அடியின் எனப் பன்மையிலும் அமைந்திருத்தலைக் காணலாம். இவ்வாறே ஆறாம் வேற்றுமைச் சொல்லுருபாகிய உடைய என்பது ஒருமையிலும் பன்மையிலும் வரும்.

விண்டொழிந்த நம்முடைய வல்வினை என

ஈறுகெட்டும் வருதலைக் காணலாம்.

இனிச் சுட்டிடைச் சொற்கள் பகுதிப் பொருள் விகுதியாக வருதலை

விடையது ஏறி அக்கரவார்த்த அமலனார்

படையதாகப் பரசு தரித்தார்க் கிடமாவது என்றும், கனல்எரி அனல்புகு கையவனே

என்றும் வழங்குதலைக் காணலாம். மகர ஈறு அத்துச்சாரியையின்றியும் வருதலை, சந்தமார் அகிலொடு சாதித் தேக்கம்மரம் என வந்துள்ளமை காணலாம். (மனத்தினை எனற்பாலது மனவினை என நின்றது) இவ்வாறே இடம் பண்பு உடைமைப் பொருளில் வரும் அம் என்னும் விகுதி சாரியையாகவும் வருதலை.


சந்தமார் அகிலொடு சாதித் தேக்கமரம்

என வந்தள்ளமை காணலாம். தேக்குமரம் என்பது தேக்கமரம் என வந்துள்ளது. அம் விகுதி தொழிற் பெயரிலும் வருதலை,

நன்னெஞ்சே உனையிரந்தேன் நம்பெருமான் திருவடியே
உன்னஞ்செய் திருகண்டாய்

என வந்துள்ளமையைக் காணலாம் (உன்னுதல் - நினைத்தல்)

மேற்கூறிய எடுத்துக்காட்டுக்கள் யாவும் திருஞானசம்பந்தர் தேவாரத்தில் இருந்து காட்டப்பெற்றவை ஏனைய திருநாவுக்கரசர் - சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாக்களிலும் பல அரிய இலக்கண நுணுக்கங்கள் அமைந்துள்ளன. கில் என்னும் வினையடிச்சொல் - செய்தல் செய்ய மாட்டுதல் என்னும் பொருளுடையது. இச்சொல்லை அப்பரடிகள் கூற்றாயினவாறு விலக்ககிலீர் (கிலீர் - செய்யமாட்டீர்) என ஆள்கின்றார். எதிர்கால வினை இடைநிலைகளாக நன்னூலார் பகரத்தையும் வகரத்தையும் மட்டுமே கூறிச் சென்றார். ககரமும் எதிர்கால இடைநிலையாக வரும் என்று கூறிச் சேனாவரையர் காண்பதும் உண்பதும் என்பனவற்றை எடுத்துக்காட்டுவார். இதனை நாவுக்கரசர் பத்தனாய்ப் பாடமாட்டேன் பரமனே பரமயோகி எத்தினாற் பத்தி செய்கேன் என்னை நீஇகழ வேண்டாம் என ஆறாதலைக் காணலாம். வாய் என்பதொரு தொழிற்பெயர் விகுதி உண்டு என்பதனை ஏழுவாய் இறுவாய் இலாதன........ காண்க ஐயாறன் அடித்தலமே என எடுத்துக் காட்டுகின்றார். இவ்வாறே யாப்பிலக்கணம் பொருளிலக்கணம் பற்றி நுண்மைகளும் அமைந்திருப்பதை அன்பர்கள் கண்டறிவார்களாக.





**“கலைவர்ணன்” கந்தசாமி ரதீஸ் (ராஜு)**
**காளி கோவிலடி,**
**திருநெல்வேலி,**
**யாழ்ப்பாணம்.**

ஆலயத்தினது இராஜகோபுரம், மூலவர், ஷண்முகர் விமானம், தூலஜஸ்தம்ப மணிமண்டபம் என்பவற்றிற்கான வர்ண வேலைகளை மேற்கொண்டவர்.

## அட்டவீரட்டத்தலங்கள்

| | | |
|---|---|---|
| 1. திருவிற்குடி | - | ஜலத்தர வாதம் |
| 2. திருவதிகை | - | முப்புரம் எரித்தல் |
| 3. திருப்பறியலூர் | - | தக்கன் யாகம் அழித்தல் |
| 4. திருக்கண்டியூர் | - | பிரமன் சிரம் கொய்தல் |
| 5. திருக்குறுக்கை | - | மன்மதனை எரித்தல் |
| 6. திருவழுவூர் | - | கஜசம்ஹாரம் |
| 7. திருக்கடவூர் | - | எமனை வீழ்த்தியது |
| 8. திருக்கோவிலூர் | - | அந்தகனை அழித்தது |

ச.ஷண்மதுரசர்மா

சுழிபுரம்

## ஸ்ரீ சிவசுப்பிரமணிய கோவில் கும்பாபிஷேக
## கிரியாகால விபரம்

| | | |
|---|---|---|
| **பங்குனிமாதம் 9ம் நாள் 22.03.2004 திங்கட்கிழமை** | **காலை 10 மணிக்கு** | விநாயகர் வழிபாடு, முகூர்த்தக்கால் நாட்டுதல், கும்பாபிஷேகப் பத்திரிகை வாசித்தல், மயூரக் கொடி ஏற்றல் |
| **பங்குனிமாதம் 14ம் நாள் 27.03.2004 சனிக்கிழமை** | **காலை 05 மணிக்கு**<br>**மாலை 06 மணிக்கு** | ஆசார்ய வரணம், விநாயக வழிபாடு, புண்யாஹம், தேவபிராமண அனுஞ்ஞை, ஸ்தல விருஷ பிரார்த்தனை, மூலமூர்த்தி அனுஞ்ஞை, திரவியசுத்தி, திரவியபாகம், தனபூஜை, கணபதிஹோமம், தனாகர்ஷண லஷ்மி பூஜை, லஷ்மி ஹோமம்.<br>பேரீதாடனம், கிராமசாந்தி, பிரவேசபலி, ரஷோக்ன ஹொமம். |
| **பங்குனிமாதம் 15ம் நாள் 28.03.2004 ஞாயிற்றுக்கிழமை** | **காலை 09 மணிக்கு**<br>**மாலை 05 மணிக்கு** | நவக்கிரக மகம்<br>திசா ஹோமம் |
| **பங்குனிமாதம் 16ம் நாள் 29.03.2004 திங்கட்கிழமை** | **காலை 09 மணிக்கு**<br>**மாலை 05 மணிக்கு** | யந்திர அபிஷேகம், பூஜை, ஸஹஸ்ரநாம அர்ச்சனை<br>யந்திர அபிஷேகம், பூஜை, ஸஹஸ்ரநாம அர்ச்சனை |
| **பங்குனிமாதம் 17ம் நாள் 30.03.2004 செவ்வாய்க்கிழமை** | **காலை 09 மணிக்கு**<br>**காலை 05 மணிக்கு** | யந்திர அபிஷேகம், பூஜை, ஸஹஸ்ரநாம அர்ச்சனை<br>வாஸ்துசாந்தி, யந்திரபூஜை, அர்ச்சனை |
| **பங்குனிமாதம் 18ம் நாள் 31.03.2004 புதன்கிழமை** | **காலை 09 மணிக்கு**<br>**காலை 05 மணிக்கு** | மிருத்சங்கிரஹணம், பிரசன்னாபிஷேகம், பூஜை, ந.ப.12 மணிக்கு ஸ்தூபி ஸ்தாபனம், கோவாசம், தீபஸ்தானம் அங்குராப்பணம்,ஆசார்யர்கள், ரஷபந்தனம், மூர்த்தி ரஷபந்தனம், கடஸ்தாபனம், கலாகர்ஷணம், பிரதான கும்பம் யாகசாலை பிரவேசம், யாக பரிவார பூஜை, வேதிகா பூஜை, அக்னி உத்பவம், நவாக்னி விபஜனம், யாகதீபாராதனை, வேதஸ்தோத்திர தேவார பாராயணம், பிரசாதம் வழங்குதல். |
| **பங்குனிமாதம் 19ம் நாள் 01.04.2004 வியாழக்கிழமை** | **காலை 09 மணிக்கு**<br>**காலை 05 மணிக்கு** | புண்ணியாஹம், விஷேச சந்தி, யாகபூஜை, நியாசாதிகள், மூலமந்திர திரிசதி நாம ஹோமம், தீபாராதனை, திரிசதி நாம அர்ச்சனை, வேதஸ்தோத்திர தேவார பாராயணம், பிரசாதம் வழங்குதல்.<br>புண்ணியாஹம், யாகபூஜை, அஷ்டோத்திர சதநாம ஹோமம், தீபாராதனை, ஷண்முகார்ச்சனை, வேதஸ்தோத்திர தேவார பாராயணம், பிரசாதம் வழங்குதல். |
| **பங்குனிமாதம் 20ம் நாள் 02.04.2004 வெள்ளிக்கிழமை** | அதிகாலை 4.30மணி முதல் 6 மணிக்குள் வரும் கும்ப லக்கினத்தில்<br>**காலை 09 மணிக்கு**<br>**காலை 05 மணிக்கு** | யந்திரஸ்தாபனம், பிம்பஸ்தாபனம், அஷ்டபந்தனம் தொடர்ந்து அடியார்கள் எண்ணெய்க்காப்பு சாத்துதல்<br>புண்ணியாஹம், விஷேசசாந்தி, யாகபூஜை, பாவனமபிஷேகம், விஷேச ஹோமம், தீபாராதனை, திரிசதி நாம ஷண்முகார்ச்சனை, புஸ்பாஞ்சலி, வேதஸ்தோத்திர தேவார பாராயணம், பிரசாதம் வழங்குதல்.<br>புண்ணியாஹம், யாகபூஜை, ஹோமம், ஸகஸ்ரநாம ஹோமம், தீபாராதனை, ஷண்முகார்ச்சனை, வேதஸ்தோத்திர தேவார பாராயணம், பிரசாதம் வழங்குதல். |

| | | |
|---|---|---|
| **பங்குனிமாதம் 21ம் நாள் 03.04.2004 சனிக்கிழமை** | **காலை 09 மணிக்கு** | புண்ணியாஹம், விஷேச சந்தி, யாகபூஜை, நவாக்னி வழிபாடு, விஷேட திரவியஹோமம், யாக தீபாராதனை, ஷண்முகார்ச்சனை, வேதஸ்தோத்திர தேவார பாராயணம், பிரசாதம் வழங்குதல். |
| | **காலை 06 மணிக்கு** | புண்ணியாஹம், விஷேட பஞ்சகவ்வியம், பிம்பசுத்தி, கலசஸ்நபனபூஜை, சூக்தாதிகள் ஜபம், யாகபூஜை, பிம்பசுத்தி கலச தீர்த்த அபிஷேகம், கௌதுகபந்தனம், பூர்வபச்சிம சந்தானம், பூர்ணாகுதி, யாக தீபாராதனை, ஷண்முகார்ச்சனை, வேதஸ்தோத்திர தேவார பாராயணம், நாதாஞ்சலி, பிரசாதம் வழங்குதல், ஆசார்ய பஞ்ச உபசாரம் வழங்குதல். |
| **பங்குனிமாதம் 22ம் நாள் 04.04.2004 ஞாயிற்றுக்கிழமை** | **அதிகாலை 04 மணிக்கு** | விக்னேஸ்வர பூஜை, புண்ணியாஹம், யாகபூஜை, மஹா பூர்ணாகுதி, நவாக்னி சம்யோஜனம், அந்தர்பலி, பகிர்பலி, யாக விஷேச தீபாராதனை, வேதஸ்தோத்திர பாராயணம், ஆசீர்வாதம், தேவார பாராயணம், நாதாஞ்சலி, யாத்திராதானம், காலை 5.30 மணிக்கு இராஜகோபுரம் ஸ்தூபிகள் கும்பாபிஷேகம், பிரதான கும்பங்கள், வேதமங்கள வாத்திய சகிதம் வீதி பிரதஷணம், பஷ்பாஞ்சலி, மூலாலயப் பிரவேசம், தத்வநியாசம், நவதூதிகை மூர்த்தி ஆவாஹணம், கிரஹப்பிரீதி காலை 6.40 முதல் 7.12 மணிக்குள் மஹாகும்பாபிஷேகம், ஹவிர் நிவேதனம், பஞ்சாலார்த்தி, திருக்காப்பு இடுதல், பதிகம் பாடி திருக்கதவு திறத்தல், கோதர்சனாதி மங்களதரிசனம், விஷேச பிரார்த்தனை, யாக உத்வாசனம், யஜமான், அபிஷேகம், கும்பாபிஷேக பல சமர்ப்பணம், தீர்த்தவிபூதி பிரசாதம் வழங்குதல், கந்தரனுபூதி ஓதுதல், அருள் ஆசியுரை மஹாபிஷேகம், பூஜை, விபூதிப்பிரசாதம் வழங்குதல், மஹேஸ்வரப்பூஜை (அன்னதானம்) |
| | **பகல் 10 மணிக்கு** | |
| | **மாலை 05 மணிக்கு** | சாயரஷ்சை பூஜை, இரவு 7 மணிக்கு திரக்கல்யாணம், தீபாராதனை, சுவாமி திருவீதியுலா வருதல், விஷேச நாதஸ்வர தவில் கலைஞர்களின் கச்சேரியுடன் விழா நடைபெறும். தொடர்ந்து 45 தினங்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும். |

ஒரு வழிப்போக்கன் தான் அடையவேண்டிய இடத்திலேயே கண்ணுள்ளவனாய் அதையே எண்ணிக் கொண்டு போவானாகில், அவனுக்குப் பின்னே துணையாகப் போகின்றவனை முற்றாக மறந்து விடுவான். அவன் சேரும் இடத்தை எண்ணானாயின், தன்னுடைய துனையை அறிந்து, துணைவன் என்று மகிழ்வான். அது போல சில ஆண்மாக்களுக்குத் திருவருளை உணரும் அறிவிருக்கவும், அவை உலக இன்பங்களிலே கண்ணாயிருத்தலால் திருவருளை நினைப்பதில்லை. இந்த ஆண்மாக்கள் ஒருவகையானவை. ஐம்பொறிகள் ஆண்மாவை அறியும் சக்தி இல்லாதன. அவைபோல வேறுஒருவகை ஆண்மாக்கள் திருவருளை அறியும் சக்தி இல்லாமல் இருக்கின்றன. சில காலஞ் சென்றபின் ஆவணப்பீடை வேண்டியஅளவுகெட இவை திருவருளை அறியும் ஆற்றலைப் பெறும்.

# கும்பாபிஷேக நிகழ்வுகள்

















# கும்பாபிஷேக நிகழ்வுகள்












# கும்பாபிஷேக நிகழ்வுகள்










# கும்பாபிஷேக நிகழ்வுகள்














# ஆலய வளர்ச்சியில் பெரும்பணியாற்றிய குருமார்கள்



பிரம்மஸ்ரீ சுப்பையா குருக்கள்



பிரம்மஸ்ரீ வேதாராண்யேஸ்வர குருக்கள்



பிரம்மஸ்ரீ முத்துசாமி ஐயர்



பிரம்மஸ்ரீ சண்முகரத்ந சர்மா



பிரம்மஸ்ரீ நடராஜ குருக்கள்


# உற்சவ கால நிகழ்வுகள்



பன்னீர் செம்புடன் பிரம்மஸ்ரீ வேதாரண்யேஸ்வரக்குருக்கள்




தீர்த்தகேணியில் பிரம்மஸ்ரீமுத்துசாமி ஐயர்



பிரம்மஸ்ரீ நடராஜக்குருக்கள், பிரம்மஸ்ரீ சோமஸ்கந்த குருக்கள்
அராலி பிரம்மஸ்ரீ குகசாமி குருக்கள், மட்டுவில் சிவஸ்ரீ
சிதம்பரநாதக்குருக்கள், கொழும்புத்துறை பிரம்மஸ்ரீ பாலா குருக்கள்,
அளவெட்டி பிரம்மஸ்ரீ பரமேஸ்வரக்குருக்கள்,
பிரம்மஸ்ரீ சி.பாலசண்முகக் குருக்கள்



பிரம்மஸ்ரீ சபாரட்ண குருக்கள்




அளவெட்டி பிரம்மஸ்ரீ சண்முக ஐயா குருக்கள்,
மருகடி பிரம்மஸ்ரீ இரத்தின குருக்கள்
பிரம்மஸ்ரீ ச.சுப்பிரமணிய குருக்கள்
பிரம்மஸ்ரீ இராமசாமி குருக்கள்
பிரம்மஸ்ரீ சபாரட்ன குருக்கள்





சுழிபுரம் பிரம்மஸ்ரீ சோமஸ்கந்த குருக்கள்,
பிரம்மஸ்ரீ தியாகராஜ குருக்கள்
பிரம்மஸ்ரீ முத்துகுமாரசாமி குருக்கள்

# உற்சவ கால நிகழ்வுகள்



பிரம்மஸ்ரீ செல்லத்துரை குருக்கள், பிரம்மஸ்ரீ சபாரட்ன குருக்கள்
மட்டுவில் பிரம்மஸ்ரீ சோமசுந்தர குருக்கள்
பிரம்மஸ்ரீ தியாகராஜ குருக்கள்,
நாயன்மார்கட்டு பிரம்மஸ்ரீ சாம்பசிவகுருக்கள்











# கும்பாபிஷேகத்தினை நடாத்திவைத்த சிவாச்சாரியார்கள்

**பிரதிஷ்டா குரு**

"பிரதிஷ்டா சிரோண்மணி" பிரம்மஸ்ரீசாமி விஸ்வநாத குருக்கள் - (நவாலியூர்)

**ஆலய அர்ச்சகர்கள்**

வே.சிவசுப்பிரமணியக் குருக்கள், மு.பாலகுருசாமிசர்மா
ந.இராமச்சந்திர சர்மா, ச.ஜெயந்திநாத சுப்பிரமணியசர்மா - (பறாளாய்)

**சர்வ போதகம்**

பிரம்மஸ்ரீ வே.சிவசுப்பிரமணியக்குருக்கள் - (பறாளாய்)

**கும்பாபிஷேக குருமார்கள்**


| | | |
|---|---|---|
| பிரம்மஸ்ரீ சி.தியாகராஜக் குருக்கள் | - | (வத்தளை) |
| பிரம்மஸ்ரீ சி.தியாகராஜக் குருக்கள் | - | (கொழும்பு) |
| பிரம்மஸ்ரீ ந.சுதாகரக் குருக்கள் | - | (அல்வாய்) |
| பிரம்மஸ்ரீ வை.கனகசபாபதிக் குருக்கள் | - | (அச்சுவேலி) |
| பிரம்மஸ்ரீ ந.ஞானசம்பந்தக் குருக்கள் | - | (காரைநகர்) |
| பிரம்மஸ்ரீ ந.சஹஸ்ரநாதக் குருக்கள் | - | (கொழும்பு) |
| பிரம்மஸ்ரீ ந.சந்திரமௌலீஸ்வர குருக்கள் | - | (காரைநகர்) |
| பிரம்மஸ்ரீ மு.பாஸ்கர ரவீக் குருக்கள் | - | (விசுவத்தனை) |
| பிரம்மஸ்ரீ கௌரீஸ்வரக் குருக்கள் | - | (நவாலி) |
| பிரம்மஸ்ரீ துரைசாமிக் குருக்கள் | - | (மாவிட்டபுரம்) |

**சர்வ சாதகம்**

| | | |
|---|---|---|
| பிரம்மஸ்ரீ வீ.றீ.காளிதாஸ் சிவாச்சாரியார் | - | (சென்னை) |
| பிரம்மஸ்ரீ சித்த நாத சிவாச்சாரியார் | - | (சென்னை) |
| பிரம்மஸ்ரீ ரமேஷ் சிவாச்சாரியார் | - | (சென்னை) |
| பிரம்மஸ்ரீ வே.முத்துக்குமாரசுவாமிக் குருக்கள் | - | (பறாளாய்) |
| பிரம்மஸ்ரீ சி.பாலஷண்முகக் குருக்கள் | - | (சீரணி) |
| பிரம்மஸ்ரீ த.செல்லத்துரைக் குருக்கள் | - | (கட்டுடை) |
| பிரம்மஸ்ரீ சு.முரளிதரக் குருக்கள் | - | (அரியாலை) |




பிரதம சிவாச்சாரியார் பிரதிஷ்டா சிரோண்மணி பிரம்மஸ்ரீ சாமி விஸ்வநாதக்குருக்கள் அவர்களுக்கும் ஏனைய அனைத்து சிவாசார்யர்களுக்கும் திருப்பணி வேலைகளில் ஈடுபட்ட பாலகுமார சர்மாவுக்கும் அவரது குழுவினருக்கும், எம்பெருமானது கும்பாபிஷேக விழாவினை சிறப்பாக நடத்துவதற்கு ஊண் உறக்கமின்றி முருகன் பணி செய்த பிரம்மஸ்ரீ மு.பாலகுருசாமி சர்மா அவர்களுக்கும், அவரது புதல்வர்களுக்கும், திருப்பணிகளின் வளர்ச்சிக்கு பெரும்பங்காற்றி நேரில் வந்து பார்வையிட்டு நிதியளித்து இங்கு பணிபுரிந்த இந்திய திருநாட்டின் சிற்பவல்லுனர்களின் பணிபுரியும் காலஎல்லையை நீடிப்பதற்கும் பேர் உதவி புரிந்து தமது தார்மீக ஆதரவை வழங்கி ஊக்கமளித்தவர் முன்னால் இந்து கலாசார அமைச்சர் தியாகராஜா மகேஸ்வரன் பா.உ அவர்கட்கும் ஆலய கட்டுமான நிர்மான வேலைகளில் ஈடுபட்ட அனைத்து தொழிலாளர்களுக்கும் சுற்றுக் கொட்டகை மரவேலைகளை பொறுப்புடன் செய்து கொடுத்த பொன்னுத்துரை மாஸ்டர் குழுவினருக்கும், எம்பெருமானது திருப்பணிகளுக்கு பக்கபலமாக இருந்து இரவுபகல் பாராது உழைத்தவர்கள் சுழிபுரம் கிழக்கு திரு.வைத்திலிங்கம் அவர்களின் தலைமையில் இயங்கும் தொண்டர் சபை இளைஞர்கள், இவர்கள் வயதில் சிறியவர்களாக இருந்தாலும் இவர்களது உணர்வு பூர்வமான முருகபக்தியுடன் கூடிய தொண்டார்வமும், எடுத்தகருமத்தை விரைவாக நிறைவேற்ற வேண்டும் என்ற விடா முயற்சியினையும் நன்றியுடன் நினைவுகூறவேண்டும். கும்பாபிஷேக வைபவங்களின் போது கலைநிகழ்ச்சிகளில் கலந்து சிறப்பித்த அனைத்து கலைஞர்களுக்கும், கும்பாபிஷேக கிரியாகால நிகழ்ச்சிகளில் வருகை தந்து மங்கள இசை விருந்தளித்த அனைத்து தவில் நாதஸ்வரக் கலைஞர்களுக்கும், கும்பாபிஷேகத்திற்கு தேவையான திரவியங்கள், வஸ்திரம், பட்டு வேட்டி போன்ற பொருட்களை கொள்வனவு செய்து அனுப்பி வைத்த பிரம்மஸ்ரீ சி.பாலகுமாரசர்மா அவர்களுக்கும் அதனை சுங்க இலாக்காவில் இருந்து வெளியேற்றி அனுப்பி வைத்த ந.சண்முகநாதசர்மா அவர்களுக்கும் இத்திருப் பணிகளுக்கும் கும்பாபிஷேக விழாவுக்கும் பெருந்நிதிகளை வழங்கிய அனைத்து முருகன் அடியார்களுக்கும் இம் மலரை சிறப்பாக அச்சேற்றிய வாக்மி அச்சகத்தாருக்கும், எம் நன்றிகளைத் தெரிவிப்பதுடன் மற்றும் பல வழிகளில் உதவி புரிந்த சகலருக்கும், சகல வழங்களும் கிடைக்க முருகன் அருள்புரிய வேண்டுகிறோம்.



**அர்ச்சகர்கள் - தர்மகர்த்தா சபை - கும்பாபிஷேக திருப்பணி சபை**

சுழிபுரம் பறாளாய்

## ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்

**தர்மகர்த்தா சபை**

தலைவர் - திரு.வே.நாகராசா

செயலாளர் - திரு.கி.பூபாலசிங்கம்

தனாதிகாரி - திரு.வே.இரத்தினசபாபதி

**தேவஸ்தான அர்ச்சகர்கள் -**

**பரம்பரை பூஜை உரிமையாளர்கள்**

பிரம்மஸ்ரீ வே.சிவசுப்பிரமணிய குருக்கள்

பிரம்மஸ்ரீ மு.பாலகுமாரசாமி சர்மா

பிரம்மஸ்ரீ ந.இராமச்சந்திர சர்மா

பிரம்மஸ்ரீ ச.ஜெயந்திநாத சர்மா



Design & Printed by: Vakmee Printer - 258/3, Dam Street, Colombo-12, Sri Lanka. Tel/Fax: +94 11 2421987 - e-mail: vakmin@sltnet.lk